வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2022

செலவுத் தலைப்பு இலக்கம் - 118

கமத்தொழில் அமைச்சு

இல. 80/5, கொவிஜன மந்திரய, ரஜ்மல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2022

செலவுத் தலைப்பு இலக்கம் - 118

கமத்தொழில் அமைச்சு

(தற்போதைய அமைச்சர்கள்)

1. கௌரவ கமத்தொழில் அமைச்சர் - திரு. மஹிந்த அமரவீர

2. கௌரவ இராஜாங்க அமைச்சர்கள்

- *கமத்தொழில் இராஜாங்க அமைச்சர் - திரு. மொஹான் பிரியதர்ஷன டி சில்வா*
- *கால்நடை வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் - திரு. டி.பி. ஹேரத்*
- *கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் - திரு. கே. காதர் மஸ்தான்*

அமைச்சின் செயலாளர் - திரு.குணதாச சமரசிங்க

கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள்

- *விவசாயப் பிரிவு – (செலவுத் தலைப்பு எண். 118)*
- *கால்நடை வளப் பிரிவு - (செலவுத் தலைப்பு எண். 427)*
- *உரப் பிரிவு - (செலவுத் தலைப்பு எண். 426)*
- *கிராமியப் பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு - (செலவுத் தலைப்பு எண். 407)*

தொலைபேசி	*011-2034300*
தொலைநகல்	*011-2868910*
மின்னஞ்சல் முகவரி	*info@agrimin.gov.lk*
	pmeagri@gmail.com
இணையத்தளம்	*www.agrimin.gov.lk*

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

கமத்தொழில் அமைச்சு

செலவுத் தலைப்பு இலக்கம் - 118

உள்ளடக்கம்

பொருளடக்கம்

அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு……13-19

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு……20-134

அத்தியாயம் 03 – வருடத்தின் ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை……135-174

அத்தியாயம் 04 - செயலாற்றுகை குறிகாட்டிகள்……175-176

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வது……177-181
தொடர்பான செயலாற்றுகை

அத்தியாயம் 06 - மனிதவள விபரம்……182-192

அத்தியாயம் 07 - இணக்கப்பாட்டு அறிக்கை……193-200

சுருக்கங்கள் மற்றும் குறுஞ்சொற்கள்

MOA	*கமத்தொழில் அமைச்சு*
PPE	*கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீட்டு அலகு - கமத்தொழில் அமைச்சு*
DOA	*விவசாயத் திணைக்களம்*
HORDI	*பூங்கனியியல் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்*
NRMC	*இயற்கை வள முகாமைத்துவ நிலையம்*
FCRDI	*களப் பயிர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்*
ETC	*விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிறுவனம்*
NPQS	*தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை*
RRDI	*நெல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்*
NAICC	*தேசிய விவசாய தகவல் மற்றும் தொலைத்தொடர்பு மையம்*
DOAD	*கமநல அபிவிருத்தித் திணைக்களம்*
PDOA	*மாகாண விவசாயத் திணைக்களம்*
DS	*மாவட்ட செயலகம்*
AI	*விவசாய ஆலோசகர்*
ARPAS	*விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்*
AAIB	*கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை*
PMB	*நெல் சந்தைப்படுத்தும் சபை*
CARP	*இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை*
NIPHM	*தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம்*
CFC	*வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி*
CCF	*வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி*
HADABIMA	*இலங்கை ஹதபிம அதிகார சபை*
HARTI	*ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்*
NFS	*தேசிய உரச் செயலகம்*
ASMP	*விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம்*
CSIAP	*காலநிலைக்குச் சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டம்*
FMT	*விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம்*
SAPP	*சிறிய அளவிலான விவசாய வியாபார கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம்*
CERC	*அவசர நிலைமையில் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் களஞ்சிய வசதிகளை உருவாக்குதல்*
ICDP	*இடைத் தொடர்பாற்றல் அபிவிருத்தி செயற்திட்டம்*
4P	*அரச-தனியார்-உற்பத்தியாளர்-கூட்டாண்மை (4P)*
GAP	*சிறந்த விவசாய நடைமுறைகள்*
EU	*ஐரோப்பிய ஒன்றியம்*
FAO	*ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய அமைப்பு*
AARDO	*ஆசிய ஆபிரிக்க கிராமிய அபிவிருத்தி நிறுவனம்*
JICA	*ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்*
KOICA	*கொரிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம்*
WFP	*உலக உணவுத் திட்டம்*
KOPIA	*சர்வதேச விவசாயத்திற்கான கொரியச் செயற்திட்டம்*
AFASI	*ஆசிய உணவு விவசாய ஒத்துழைப்புக்கான முன்னெடுப்பு*
WB	*உலக வங்கி*
UNDP	*ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்*
NARP/NUS	*பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படும் தேசிய விவசாயக் கொள்கைத் திட்டம் பற்றிய ஆராய்ச்சிகள்*

கமத்தொழில் அமைச்சு

- **அறிமுகம்**

கமத்தொழில் அமைச்சின் கீழ் முன்பு காணப்பட்ட சேதன உர உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் விநியோகத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் நெல் மற்றும் தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சு; கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார் தொழில் இராஜாங்க அமைச்சு மற்றும் பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு ஆகிய இராஜாங்க அமைச்சுகளின் கீழ் செயற்பட்ட நிறுவனங்கள் 2022 மே 27 ஆம் திகதியிடப்பட்ட, 2281/41 ஆம் இலக்க விஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கமத்தொழில் அமைச்சின் இணைக்கப்பட்டன.

2022 ஆம் ஆண்டின் கமத்தொழில் அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையின் கீழ் விவசாயப் பிரிவு, கால்நடை வளப் பிரிவு, உரப் பிரிவு மற்றும் கிராமியப் பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு ஆகிய பிரிவுகளின் கீழ் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

i). விவசாயப் பிரிவு

விவசாயத் திணைக்களம், விவசாயம் மற்றும் விவசாய காப்புறுதிச் சபை, இலங்கை பொசுபேற்று நிறுவனம், நெல் சந்தைப்படுத்தல் சபை, ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபை மற்றும் விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் ஆகியவற்றின் அறிக்கைகளின் மூலம் வழங்கப்பட்ட முன்னேற்றம் விவசாயப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ii). கால்நடை வள அபிவிருத்திப் பிரிவு

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை, மில்கோ (தனியார்) லிமிடெட், வரையறுக்கப்பட்ட மகாவலி விலங்கு வர்த்தக நிறுவனம் ஆகியவை விவசாய அமைச்சின் கால்நடை அபிவிருத்திப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களாகும். மேலும் 2022 ஆம் ஆண்டில் அந்த நிறுவனங்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை இந்த முன்னேற்ற அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

iii) உரப் பிரிவு

கமநல அபிவிருத்தித் திணைக்களம், தேசிய உரச் செயலகம், வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி, இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை (தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை) மற்றும் தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம் ஆகிய நிறுவனங்களின் முன்னேற்றம் பற்றிய அறிக்கை கமத்தொழில் அமைச்சின் உரப் பிரிவின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

iv). கிராமியப் பொருளாதாரப் பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு

தேசிய இலங்கை விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை கமத்தொழில் அமைச்சின் கிராமியப் பொருளாதார பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவின் கீழ் இணைக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில் அந்த நிறுவனங்கள் அடைந்த முன்னேற்றம் பற்றிய அறிக்கை இந்த முன்னேற்ற அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

- **அமைச்சின் தொலைநோக்கு**

உணவுப் பாதுகாப்பையும் தேசிய சுபீட்சத்தையும் நோக்காகக் கொண்ட வினைத்திறன் மிக்கதும், விளைவுப் பெருக்கமுடையதும், பலமானதுமான விவசாயத்துறையொன்றை உருவாக்குதல்.

- **செயற்பணி**

இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமை செய்வதினூடாக சமூக ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட புதுவடிவமுடையதும் வர்த்தக நோக்கத்துடன் கூடியதுமான, பூகோள ரீதியில் போட்டிமிகு உற்பத்திகளை மேற்கொள்ளும் தொழில்முயற்சி விவசாயத்துறையொன்றை அடைதல்.

- **நோக்கங்கள்**

i.) *உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய உணவு மற்றும் மேலதிக உணவு இருப்புகளை முறையாக முகாமை செய்வதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.*

ii.) *உணவு உற்பத்தியில் இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிகொல்லிகள் மற்றும் நச்சுப்பொருட்களின் பயன்பாட்டைக் குறைத்து, அகற்றப்படும் கழிவுப் பொருட்களை முறையாக முகாமை செய்வதன் ஊடாக நச்சுத்தன்மையற்ற, சூழல் நட்புமிக்க மற்றும் ஆரோக்கியமான விவசாய உற்பத்திகளை மக்களுக்கு வழங்குதல். இரசாயன உரங்களின் பயன்பாட்டை ஒழுங்குபடுத்துதல்.*

iii.) *இயந்திரமயமாக்கல், புதிய தொழில்நுட்பங்கள், வினைத்திறன்மிக்க நீர் முகாமைத்துவம், பயிர் பல்வகைப்படுத்தல், மண் காப்பு முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் பயிர்களின் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரித்தல் மற்றும் உற்பத்திச் செலவுகளை குறைத்தல்.*

iv.) *உயர் தரத்தைக்கொண்ட சுய விதைகளை உற்பத்தி செய்தல், பெறுமதி சேர்க்கப்பட்ட தயாரிப்புகளை உற்பத்தி செய்யும் முறைகளை விவசாயிகள் மத்தியில் பிரபல்யப்படுத்துதல், சிறந்த விவசாய நடைமுறைகள் (GAP) மற்றும் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தரத்தில் சிறந்த விவசாய உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு உற்பத்தியாளர்களை வழிநடத்துதல்.*

v.) *சிதைவடைந்த குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் கால்வாய்கள் அனைத்தையும் புனரமைத்தல், தரிசு நிலங்களில் விவசாயம் செய்து நெல் உற்பத்தியை அதிகரிக்க பங்களிப்பு செலுத்துதல்.*

பணிகளும் செயற்பாடுகளும்

i. *அரசாங்கத்தால் செயல்படுத்தப்படும் தேசியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு விவசாயத் துறையுடன் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் அமைப்புச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசு கூட்டுத்தாபனங்களின் செயற்பாடுகளுடன் தொடர்பான கொள்கைகள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களைத் உருவாக்குதல், செயற்படுத்துதல், பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் மதிப்பீடு செய்தல்.*

ii. *அமைச்சின் விடயப் பரப்பின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள பொது மக்கள் சேவைகளை வினைத்திறனாகவும் பொதுமக்களுக்கு உவப்பான முறையிலும் வழங்குதல்*

iii. *வீண்விரயம் மற்றும் ஊழலைத் தவிர்த்து அமைச்சின் கடமைகள் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்ய உதவும் வகையில் நவீன முகாமைத்துவ முறைகள் மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி அனைத்து முறைகள் மற்றும் நடைமுறைகளையும் மறுசீரமைத்தல்.*

iv. *உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதமான உணவு உற்பத்தி*

v. *இருப்புக்களை பேணுவதற்கும், வழங்கல் நடவடிக்கைகளை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளவும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தல்.*

vi. *பயிர் பல்வகைப்படுத்தலின் அடிப்படையில் விவசாய உற்பத்தியை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்*

vii. *உள்நாட்டு விவசாய உற்பத்திகளின் தரப்பண்புகளை நுகர்வுச் சமூகத்திற்கு உறுதி செய்யத் தேவையான உத்திகளை உருவாக்குதல்.*

viii. பாரம்பரிய விவசாயிகள், இளைஞர்கள் மற்றும் மாணவ மாணவிகளை நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய விவசாயக் கல்வி வாய்ப்புகளை நோக்கி வழிகாட்டல்.

ix. இளம் விவசாய தொழில் முனைவோர் உருவாக்கத்தை ஊக்குவித்தல்

x. இரசாயன பீடைகொல்லிகள் மற்றும் இதர இரசாயனப் பொருட்களை உரிய தரநிர்ணயங்களுக்கு அமைவாகப் பயன்படுத்தப்படுவதை ஒழுங்குபடுத்துதல்

xi. விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு பயிர் காப்பீட்டு முறைகள் மற்றும் உழவர் ஓய்வூதிய முறைகளை விரிவுபடுத்துதல்

xii. நேரடி உற்பத்தியாளர்கள், பதனிடும் நிறுவனங்கள், மொத்த வியாபர நிறுவனங்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களிடையே வழங்கல் தொடர்புகளை வலுப்படுத்துவதன் மூலம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு அதிக விலையைப் பெற்றுக்கொடுத்தல்.

xiii. காலநிலை மாற்றம், தினசரி வானிலை தகவல்கள் என்பவற்றை விவசாயிகளுக்கு உரிய முறையில் அறிவிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்களைக் குறைத்தல்

xiv. விவசாயிகளுக்கு தரமான விதைகள் மற்றும் நாற்றுகளை வழங்கும் வழிமுறைகளை செயல்படுத்துதல்.

xv. நீர் முகாமைத்துவம் மற்றும் விவசாயிகளின் பயிர்ச் செய்கைத் தேவைகளுக்கு ஏற்ப நீர் வழங்கல் மேலாண்மை முகாமைத்துவத்தை மேற்கொள்ளல்.

xvi. விவசாய அபிவிருத்தி வலயங்கள், விவசாய கிராமங்கள் மற்றும் நிலைபேறான வீட்டுத் தோட்டச் செய்கை அபிவிருத்தி திட்டங்களை பிரபல்யப்படுத்தல்

xvii. இலங்கை விவசாய சேவையின் நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்

xviii. சிறிய அளவிலான விவசாய வியாபர முயற்சிகள் மற்றும் நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்கான திட்டங்களை செயல்படுத்துதல்.

xix. சேதன உரங்களின் பயன்பாடு மற்றும் நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை நோக்கி படிப்படியாக நகர்வதற்கான திட்டங்களை விரிவுபடுத்துதல் மற்றும் ஊக்குவித்தல்.

xx. தரத்தில் சிறந்த உர வகைகளை இறக்குமதி செய்து விநியோகித்தலை அரசு மானியக் கொள்கைக்கு அமைவாக வினைத்திறனாக செயல்படுத்தல்.

xxi. உரிய தரநிர்ணயங்களைக் கொண்ட இரசாயன உரங்கள் மற்றும் சூழல் நட்பு சேதன உர வகைகளை உரிய காலத்தில் விநியோகிப்பதற்கான நடைமுறைகளை உருவாக்குதல்.

xxii. உள்நாட்டு மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சர்வதேச தரத்திற்கு ஏற்ப சேதன உரங்களின் உற்பத்தியை ஊக்குவித்தல்.

xxiii. உள்நாட்டு விவசாயி மற்றும் நுகர்வோரை திருப்திப்படுத்தும் வகையிலான நியாயமான விலைக் கொள்கை மற்றும் பயிர் பல்வகைப்படுத்தல் திட்டம் என்பவற்றை செயல்படுத்துதல்.

xxiv. வீட்டுத்தோட்டச் செய்கை செயற்திட்டங்களை செயல்படுத்துதல்

xxv. மேலதிக உற்பத்திப் பொருட்களை களஞ்சியப்படுத்தி சேமிப்பதற்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்.

xxvi. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு பெறுமதி சேர்த்து ஏற்றுமதி செய்வதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்.

xxvii. சர்வதேச தரத்திலான சிறந்த விதைகளை உற்பத்தி செய்வதற்கான உள்நாட்டு விதைக் கொள்கையை அறிமுகப்படுத்துதல்.

xxviii. தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்வதற்கு தனியார் துறையை ஊக்குவித்தல்.

xxix. அரச பண்ணைகள் மற்றும் விதை உற்பத்தி பண்ணைகளை அபிவிருத்தி செய்தல்.

xxx. உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவுப் பயிர்களின் இறக்குமதியைக் குறைத்தல்

xxxi. கால்நடை வளப் பிரிவின் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான வசதிகளை வழங்குதல்.

xxxii. விலங்கு நலன்புரித் திட்டங்கள் மற்றும் அது தொடர்பான நடவடிக்கைகள்

xxxiii. நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கால்நடை வளங்கள் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவை விரிவுபடுத்தல்.

xxxiv. கால்நடைத் துறையில் விலங்குகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு விஞ்ஞான ரீதியான இனப்பெருக்க முறைகளை ஊக்குவித்தல், அந்த விலங்குகளை

நோய்களிலிருந்து விலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் தனிமைப்படுத்துதல் நடவடிக்கைகள்.

xxxv. பல்வேறுபட்ட புவியியல் தேவைகளுக்கு ஏற்ப சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பண்ணைகளின் அபிவிருத்தியை ஊக்குவித்தல்

xxxvi. கால்நடைகள் தொடர்பான உற்பத்திப் பொருட்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றின் ஏற்றுமதியை ஊக்குவித்தல்

xxxvii. நடுத்தர மற்றும் பெரிய அளவிலான கால்நடை பண்ணைகளை உருவாக்குவதற்குத் தேவையான காணி வசதிகள் மற்றும் முதலீட்டு வசதிகளை வழங்குதல்.

xxxviii. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் உள்நாட்டு உற்பத்தி மற்றும் நுகர்வு வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்.

xxxix. இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் நிர்வாகம் மற்றும் ஆளணி முகாமைத்துவம்

xl. நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஏனைய அனைத்து விடயங்களுடனும் தொடர்பான செயற்பாடுகள்

xli. கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களினதும் மேற்பார்வை நடவடிக்கை

- **கமத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்கள், நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் (2022.07.22 ஆம் திகதிக்குப் பின்னர் நடைமுறைக்கு வந்த பிரகாரம்)**

i. விவசாயத் திணைக்களம்
ii. கமநல அபிவிருத்தித் திணைக்களம்
iii. விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்
iv. கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை
v. நெல் சந்தைப்படுத்தும் சபை
vi. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்
vii. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை *(SLCARP)*
viii. இலங்கை விவசாய பல்வகைப்படுத்தல் மற்றும் குடியேற்ற அதிகாரசபை *(இலங்கை ஹதபிம அதிகார சபை)*
ix. தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் *(NIPHM)*
x. வரையறுக்கப்பட்ட இலங்கை பொசுபேற் நிறுவனம்
xi. தேசிய உரச் செயலகம்
xii. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி
xiii. வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி
xiv. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை *(தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)*
xv. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை *(NLDB)*
xvi. மில்கோ தனியார் நிறுவனம் *(Milco)*
xvii. வரையறுக்கப்பட்ட மகாவலி லைவ்ஸ்டொக் எண்டர்பிரைசஸ் நிறுவனம்

- **நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள்**

i. இலங்கை கமநலக் காப்புறுதிச் சட்டம் *(1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க)*
ii. கமநல அபிவிருத்திச் சட்டம் *(2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)*
iii. கிராமோதய சபைச் சட்டம் *(1982 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க)*
iv. மரங்களை வெட்டி வீழ்த்தல் *(கட்டுப்படுத்தும்)* சட்டம் *(1951 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க)*
v. விதைச் சட்டம் *(2003 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க)*
vi. மண் பாதுகாப்புத் தொடர்பான சட்டம் *(1996 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க)*
vii. நெல் சந்தைப்படுத்தல் சபைச் சட்டம் *(1971 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க)*
viii. கமநல நடவடிக்கைகள் தொடர்பான கட்டளைச் சட்டம் *(1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க)*
ix. விவசாய ஆராய்ச்சிக் கொள்கைகளுக்கான இலங்கை சபைச் சட்டம் *(1987 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க)*
x. அரச விவசாய கூட்டுத்தாபனச் சட்டம் *(1972 ஆம் ஆண்டின் 11 இலக்க)*

xi. பீடைக் கொல்லிகள் கட்டுப்பாட்டுச் சட்டம் *(1980 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க)*
xii. தாவரப் பாதுகாப்புச் சட்டம் *(1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க)*
xiii. உர ஒழுங்குபடுத்தற் சட்டம் *(1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க)*
xiv. இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சட்டம் *(1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)*
xv. விலங்கு நோய்ச் சட்டம் *(1992 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க)*
xvi. விலங்கு உணவுச் சட்டம் *(1986 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க)*
xvii. விலங்குச் சட்டம் *(1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க)*
xviii. கால்நடை மருத்துவத் தொழில் சட்டம் *(1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க)*
xix. வேறொரு அமைச்சர் ஒருவருக்கு குறிப்பாக வழங்கப்படாத, விடய எல்லைக்குள் அடங்கும் ஏனைய அனைத்து அமைப்புச் சட்டங்களும்

அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள்

i. இலக்கு *2:* பட்டினியை ஒழித்தல், உணவுப் பாதுகாப்பு மற்றும் உயர் போசணை நிலையை அடைதல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவித்தல்
ii. இலக்கு *12* - நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி செய்தல்.

பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் - பொழிப்பு

2022 ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சின் பிரிவுகளினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் அப் பிரிவுகளின் நிதிசார் முன்னேற்றம் தொடர்பான பொழிப்பு

- *கமத்தொழில் அமைச்சின் நிதிசார் முன்னேற்றம் - பொழிப்பு*

தொ/ இல	விபரம்	நடைமுறைப்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
1.	மொத்த வரவுசெலவு	*MOA*	*123,052.38*	*95,151.01*	*77.33*
1.1	மூலதன		*31,464.16*	*28,254.44*	*89.80*
1.2	மீண்டுவரும்		*91,588.21*	*66,896.57*	*73.04*

01. விவசாயப் பிரிவு (செலவுத் தலைப்பு இலக்கம் 118)

- *அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்*

தொ/ இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நடைமுறைப்படுத்தும் நிறுவனம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
1	விவசாயத் தொழில் இளைஞர் முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	*MOA*	*45.00*	*37.01*	*82.25*
2	புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்		*610.00*	*483.78*	*80.63*
3	விவசாயம் மற்றும் விலங்கு உற்பத்திகளுக்கான இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்		*50.00*	-	-
4	*JICA* செயற்திட்டம்		*5.94*	*5.94*	*100*
5	*118-2-3-81-2202-0/13* கீழ்		*0.04*	*0.04*	*100*
உப கூட்டுத்தொகை - i			***710.98***	***526.77***	***74.10***
1	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயச் செயற்திட்டம் *(CSIAP)* - உலக வங்கிக் கடன்	*MOA*	*3,950.00*	*3,849.68*	*97.46*
2	சிறிய அளவிலான விவசாய வியாபர பங்குடைமை நிகழ்ச்சித் திட்டம் *(SAPP)* - விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம்		*2,000.00*	*1,522.99*	*76.15*
3	விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் *(ASMP)* - கூறு 2 உலக வங்கிக் கடன்		*4,190.00*	*3,685.12*	*87.95*
4.	சிறிய அளவிலான விவசாய வியாபார நடவடிக்கைகளுக்குக் காணப்படும் தடைகளை நீக்கும் செயற்திட்டம் *(SARP)*		*450.00*	*8.11*	*1.80*
5	படல்கமவில் பால் பதப்படுத்தும் தொழிற்சாலையை நிறுவுதல் - டென்மார்க் நிதியுதவி		*215.00*	*72.81*	*33.87*
6	சிறிய அளவிலான பால் உற்பத்திக் கூட்டுறவு சங்கங்களை அபிவிருத்தி செய்தல் - பிரான்ஸ் அரசு		*760.00*	*381.16*	*50.16*

தொ/ இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	நடைமுறைப் படுத்தும் நிறுவனம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
7	உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு உதவுதல் (ஐரோப்பிய யூனியன்)		65.00	0.00	0.00
8	தேசிய தாவர பாதுகாப்பு சேவைக்கான உபகரணங்களை வழங்குதல் (KOICA)		75.00	3.86	5.15
உப கூட்டுத்தொகை -ii			**11,705.00**	**9,523.82**	**81.37**
1	விவசாயிகளுக்கான பங்களிப்புக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல்	AAIB	600.00	600	100
2	விவசாய மற்றும் கமநலக் காப்புறுதி சபை		10.00	-	-
உப கூட்டுத்தொகை - iii			**610.00**	**600**	**82.99**
1	ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம்	HARTI	20.00	14	70.00
2	பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தேசிய விவசாய ஆராய்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்	SLCARP	20.00	8.10	40.50
3	நெல் சந்தைப்படுத்தும் சபை	PMB	3,150.00	2,928.99	92.98
உப கூட்டுத்தொகை -iv			**3,190.00**	**2,951.09**	**92.51**
மொத்த கூட்டுத்தொகை - (i+ii+iii+iv)			**16,215.98**	**13,601.68**	**83.88**

02. கால்நடை அபிவிருத்தி பிரிவு (செலவுத் தலைப்பு இலக்கம் - 427)

- நிதி முன்னேற்றம் – சாராம்சம்

இல	விபரம்	2022 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி)	செலவழிக்கப்பட்ட தொகை (ரூ.மி)	நிதி முன்னேற்றம் (%)
1.	**மொத்த வரவு செலவு**	728.65	523.20	71.80
1.1	**மீண்டுவரும் செலவு**	417.82	388.33	92.90
1.2	**மூலதனம்**	310.83	134.88	43.40

- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

இல	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	2022 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி)	செலவழிக்கப்பட்ட தொகை (ரூ.மி)	நிதி முன்னேற்றம் (%)
01.	திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்துதல்	25.00	14.29	57.16
02.	கால்நடை இனப்பெருக்க பண்ணைகளை நிறுவுதல்	25.00	4.37	17.48
03.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணை தொழில் முனைவோர் அபிவிருத்தி மற்றும் பால் பண்ணை கூட்டு கிராமங்கள் அபிவிருத்தி	32.00	29.73	92.91

இல	அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	2022 ஆம் வருடத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை (ரூ.மி)	செலவழிக்கப்பட்ட தொகை (ரூ.மி)	நிதி முன்னேற்றம் (%)
04.	கால்நடை அபிவிருத்தி நடுத்தர கால திட்டம்	40.00	13.21	33.03
05.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணை	37.00	12.94	34.97
06.	பன்றி தொழில் வளர்ச்சி திட்டம்	30.00	4.72	15.73
07.	உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணையை ஊக்குவித்தல்	98.00	48.73	49.72
08.	ஆடு கூட்டு கிராம அபிவிருத்தி திட்டம்	15.00	4.99	33.27
	மொத்தம்	**302.00**	**132.98**	**44.03**

03. உரப் பிரிவு (செலவுத் தலைப்பு இலக்கம் - 426)

- **நிதிசார் முன்னேற்றம் - பொழிப்பு**

தொ/ இல	விபரம்	2022 ஆம் ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில் ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
1.	மொத்த வரவுசெலவு	99,717.54	75,163.79	75
1.1	மூலதன செலவுகள்	14,445.72	14,289.27	99
1.2	மீண்டுவரும் செலவுகள்	85,271.82	60,874.52	71
மீண்டுவரும்				
1	உர மானிய வேலைத்திட்டம்	98,400.00	74,039.41	75.24

- **அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்**

தொ/ இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில் ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
மூலதன				
1.	தேசிய உரச் செயலகத்தின் முகாமைத்துவ தகவல் அமைப்பு	20.00	7.06	35.30
2.	இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வுகூடத்தை விருத்தி செய்தல்	20.00*	-	-
3.	உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்	500.00	414.31	82.86
4.	தேசிய உணவு ஊக்குவிப்பு சபை (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை)	5.00	-	திறைசேரியினால் நிதி எதுவும் வழங்கப்படவில்லை.
5.	அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம்	30.00	5.00	16.67
6.	பொருளாதார மத்திய நிலையங்கள்	25.00**	-	-

தொ/ இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில் ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
	மொத்தம்	600.00	426.37	71.06

* உர ஆய்வுகூடத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களுக்கான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள போதும் 31.12.2022 வரை அதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படவில்லை.

** வர்த்தக அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

04. கிராமியப் பொருளாதார பயிர்ச் செய்கை ஊக்குவிப்புப் பிரிவு (செலவுத் தலைப்பு இலக்கம் - 407)

- நிதிசார் முன்னேற்றம் - பொழிப்பு

தொ/இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில் ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
1	மூலதன	253.36	211.93	83.65
2	மீண்டுவரும்	223.84	199.11	88.95

- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

தொ/இல	அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	2022 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை (மில் ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (%)
01	பயிர்ச் செய்கை செயற்திட்டம்	100.00	91.65	91.65
02	ஆடு வளர்ப்புச் செயற்திட்டம்	40.00	39.05	97.63
இலங்கை ஹதபிம அதிகார சபை		100.00	76.70	76.70
மொத்த கூட்டுத்தொகை		240.000	207.40	86.00

அத்தியாயம் 01 - நிறுவன விபரம் / நடைமுறைப்படுத்தல் தொடர்பான பொழிப்பு

i.) விவசாயப் பிரிவு

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலிற்கு அமைவாக, உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை) அடைவதற்கும் தேசிய உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குமான அபிவிருத்தி இலக்குகளை விவசாயப் பிரிவு செயற்படுத்தியுள்ளது.

அதன் பிரகாரம், விவசாய அமைச்சின் பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் விவசாய இளைஞர் தொழில்முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 45.00 மில். ரூபாவும், புதிய தொழில்நுட்ப உள்ளீடுகளுக்கு 610.00 மில். ரூபா நிதியும், விவசாய கால்நடை உற்பத்தி தொடர்பான இளைஞர் தொழில் முனைவோர் நிகழ்ச்சித் திட்டத்திற்கு 50.00 மில். ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வெளிநாட்டுக் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள மொத்த முதலீடு 11,705.00 மில். ரூபா ஆகும்.

மேலும், கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும் விவசாயத் துறை தொடர்பான சமூகப் பொருளாதார ஆராய்ச்சிகளுக்காக 20.00 மில். ரூபாவும், மற்றும் பல்கலைக்கழகங்களுடன் தேசிய விவசாயக் கொள்கையைத் தயாரிப்பதற்காக 20.00 மில். ரூபாவும், நெல் சந்தைப்படுத்தல் சபையின் நெல் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக 3,150.00 மில். ரூபாவும் விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் விவசாய சமூகத்தின் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 610.00 மில். ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

ii.) கால்நடை பிரிவு

கால்நடைத் துறையின் முன்னேற்றத்திற்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களை தயாரிப்பதில் முன்னணி அரச நிறுவனமாக விளங்கும் விவசாய அமைச்சின் கால்நடைப் பிரிவு, உள்ளூர் பால் உற்பத்தியில் தன்னிறைவு அடைவதன் நோக்கத்தில், உள்ளூர்; பால் உற்பத்தியாளரை ஊக்கப்படுத்துவதன் மூலம் உள்ளூர் பாற் கைத்தொழிலை உயர்த்துவதுடன், ஆடு, கோழி, பன்றி போன்ற பிற உப பிரிவுகளை வலுப்படுத்தி, உயர்தர விலங்கு தயாரிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலம் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

நிலையான கால்நடை வளர்ச்சி மூலம் தன்னிறைவு அடைவதே கால்நடைத் துறையின் நோக்கமாகும். மேலும், சிறந்த வள முகாமைத்துவம் மற்றும் உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளில் போட்டியை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய கால்நடைத் துறையில் ஈடுபட்டுள்ள உள்ளூர் தொழில்முனைவோரை உருவாக்குவதன் மூலம் உள்ளூர் தேவையை பூர்த்தி செய்ய உயர்தர கால்நடை தயாரிப்புகளை உருவாக்குவது இத்துறையின் நோக்கமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதிக உற்பத்தித்திறன் கொண்ட ஆரோக்கியமான விலங்குகளின் எண்ணிக்கையைப் பேணுவதற்காக, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் திறமையான கால்நடை சுகாதார சேவைகளுக்காக தொழில்நுட்ப வழிகாட்டல்கள், மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களங்கள் மற்றும் நாடு முழுவதும் காணப்படும் பிராந்திய கால்நடை அலுவலகங்கள் மூலம் கால்நடை அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

உள்ளூர் உற்பத்தி மூலம் நாட்டின் பால் தேவையை அடைவது, உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் கோழி இறைச்சி மற்றும் முட்டை உள்ளிட்ட பிற விலங்கு பொருட்களை அதிகரிப்பது, சுற்றுச்சூழலுக்கு உகந்த கால்நடை வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவது, நிலையான மற்றும் சமமான பொருளாதார மற்றும் சமூக நன்மைகளை கால்நடை வளர்ப்பு

விவசாயிகளுக்கு வழங்குதல் மற்றும் கால்நடை உணவு உற்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை வழங்குதல் மற்றும் உள்ளூர் அளவில் கிடைப்பதாகும்.

iii.) உரப் பிரிவு

விவசாய அமைச்சின் உரப் பிரிவினால் நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம், உலகளாவிய அபிவிருத்தி இலக்குகளை (நிலையான அபிவிருத்தி இலக்குகள்) அடைதல் மற்றும் உரிய தரநிர்ணயங்களைக் கொண்ட உர வகைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், அவற்றை சரியான நேரத்தில் விநியோகிப்பதற்கான வழிமுறைகளை உருவாக்குதல் மற்றும் சூழல் நட்பு தாவரப் போசணைப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் ஆகியவற்றை இலக்காககொண்டு 2022 ஆம் ஆண்டில் அதன் அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

2022 ஆம் ஆண்டில், உரப் பிரிவு 04 முக்கிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது. அவை, தேசிய உர முகாமைத்துவ தகவல் அமைப்பின் (National Fertilizer Management Information System) உருவாக்கம், இலங்கை உரக் கம்பனியின் உரப் பரிசோதனை ஆய்வகத்தை விருத்தி செய்தல், உணவுப் பாதுகாப்புத் திட்டம் மற்றும் இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி ஆகியவற்றினை ஒருங்கிணைத்தல் ஆகிய நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகும். இவற்றுக்கு மேலதிகமாக, உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல் மற்றும் நிலைபேறான விவசாயத்தை ஊக்குவிக்கும் விஷேட நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றின் கீழ் உர மானியத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக நெற் செய்கைக்குத் தேவையான உர வகைகளை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதுடன் ஏனைய பயிர்களுக்குத் தேவையான உர வகைகளை மானிய விலைக்கு வழங்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 2022ல் விவசாயிகளுக்கு மத்தியில் மானிய உர விநியோக மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2022 சிறு போகத்தில், 164,335.11 மெற்றிக் தொன் சேதன திண்ம உரமும் (கூட்டுப்பசளை), 6,098,290.43 லீட்டர் சேதன திரவ உர வகைகளும், 6,339,084.48 லீட்டர் உயிரியல் திரவ உர வகைகளும் 5,372.93 லீட்டர் விஷேட திரவ உர வகைகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2022ம் ஆண்டில் 224,419 மெற்றிக் தொன் இரசாயன உர வகைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 160,972 மெற்றிக் தொன் இரசாயன உர வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.


2022 ஆம் ஆண்டு உரப் பிரிவுக்கு, இரசாயன மற்றும் சேதன உர வகைகளை விநியோகம் செய்வதற்கான உர மானிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு 98,400.00 மில். ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் தேசிய உரச் செயலகத்தின் முகாமைத்துவ தகவல் அமைப்புக்கு 20.00 மில். ரூபா நிதியும் மற்றும் இலங்கை உரக் கம்பனியின் உர ஆய்வகத்தை அபிவிருத்தி செய்வதற்கு 20.00 மில் ரூபாவும் உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு 500.00 மில். ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தவிர, இராஜாங்க அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனமான உணவு ஊக்குவிப்புச் சபைக்கு மூலதனச் செலவாக 05.00 மில். ரூபாவும் அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 30.00 மில். ரூபா நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், ஆரம்பத்தில் இந்த அமைச்சின் கீழ் செயற்பட்டு பின்னர் வர்த்தக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்ட, பொருளாதார மையங்களுக்காக 25.00 மில். ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கமத்தொழில் அமைச்சின் உரப் பிரிவின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களும் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தல், விவசாயிகளுக்கு உரிய தரத்திலான உர வகைகளை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம் விவசாயத் துறையின் முன்னேற்றத்திற்காக கருமமாற்றும் பொருட்டு அமைச்சுடன் ஒருங்கிணைந்து 2022 ஆம் ஆண்டில் அவற்றின் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளன.


iv.) கிராமியப் பொருளாதார பிரிவு

பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு எனும் பெயரில் 2196/27 ஆம் இலக்க 2020.10.06 திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதான அமைச்சான கமத்தொழில் அமைச்சின் கீழ் நிறுவப்பட்ட இந்தப் பிரிவு, பின்னர் 2277/53 ஆம் இலக்க 2022.04.28 திகதியிடப்பட்ட அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைவாக கிராமிய பொருளாதார பயிர்ச்செய்கை மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு என மாற்றியமைக்கப்பட்டது. தற்போது இது கமத்தொழில் அமைச்சின் கீழ் கிராமியப் பொருளாதார பிரிவாக செயற்பாட்டு வருகின்றது.


நிறுவனக் கட்டமைப்பு – விவசாயப் பிரிவு



1.4. அமைப்பு விளக்கப்படம்




நிறுவனக் கட்டமைப்பு – உரப் பிரிவு



நிரு. அ – நிருவாக அதிகாரி ப.உ - பதவிநிலை உதவியாளர் அபி. உ - அபிவிருத்தி உதவியாளர் வி.ஆ – விவசாய ஆலோசகர் முகா. உ – முகாமைத்துவ உதவியாளர் அ.உ - அலுவலக உதவியாளர்

இ.நி.சே - இலங்கை நிருவாக சேவை
இ.வி.சே - இலங்கை விவசாய சேவை
இ.தி.சே - இலங்கை திட்டமிடல் சேவை
இ.க.சே - இலங்கை கணக்காளர் சேவை

நிறுவனக் கட்டமைப்பு : கிராமியப் பொருளாதார பயிர்ச் செய்கை மற்றும் ஊக்குவிப்புப் பிரிவு, கமத்தொழில் அமைச்சு



(2022.12.31 ஆம் திகதிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனக் கட்டமைப்பு காட்டப்பட்டுள்ளது)

அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு, விஷேட அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

01. விவசாயப் பிரிவு

2022 ஆம் ஆண்டில் விவசாயப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

1. விவசாய இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

1.1. அறிமுகம்

வேலையற்ற இளைஞர் சமுதாயம் மற்றும் பாரம்பரிய விவசாயத்தில் இருந்து விலகிச் சென்று சமூகத்தில் தனிமைப்படுத்தப்படும் பல்வேறு கல்வித் தரங்களைக் கொண்ட இளைஞர் சமூகம் என்பவற்றுக்கு வர்த்தக ரீதியான விவசாய வியாபாரங்களுக்கான வாய்ப்புகளை அறிமுகம் செய்தல் மற்றும் பிரதேச ரீதியாக இளம் தொழில்முனைவோரை விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்புபடுத்துவதன் மூலம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பை மேலும் அதிகரிக்கச் செய்தல் என்பன விவசாய இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்குகளாகக் காணப்படுகின்றன.

1.2. விவசாய இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு 118-02-03-062-2509 எனும் செலவுத் தலைப்பு இலக்கத்தின் கீழ் 45.00 மில். ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 37.01 மில். ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதன் நிதிசார் முன்னேற்றம் 82.25% ஆகும்.

1.3. விவசாய இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

1.3.1. 'தேசிய விவசாய கொள்கையைத் ' தயாரித்தல்

சுபீட்சத்தின் நோக்கு அரச கொள்கை பிரகடனத்தின் நோக்கங்களுக்கு இணங்க, தங்கி வாழும் பொருளாதாரத்திற்குப் பதிலாக உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்கும் பொருட்டு விவசாயத் துறையின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் தேசிய விவசாய கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவுத் தொகுதிகளை நிலைபேறான விதத்தில் பாதுகாத்தல், பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல், இரசாயன உரங்களின் பயன்பாட்டைக் குறைத்தல், பயிர்கள் மற்றும் விளைச்சலைப் பாதுகாத்தல் மற்றும் உள்நாட்டில் தன்னிறைவடைந்து ஏற்றுமதியைப் பிரதானமாகக் கொண்ட விவசாய தொழில்முனைவோரை கட்டியெழுப்புவதற்காக இளைஞர் சமூகத்தை விவசாயத்தின் பல்வேறு துறைகளை நோக்கி ஈர்ப்பதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

- **பௌதீக முன்னேற்றம் (2022.12.31 ஆம் திகதிக்கு)**

10 பிரதான தலைப்புகளின் கீழ் 13 பிரதான இலக்குகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்ட "தேசிய விவசாய கொள்கை" 2022.12.31 ஆம் திகதியளவில் அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1.3.2. மாகாண மற்றும் மாவட்ட ரீதியிலான வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

2022 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்கு 28.60 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, இதில் 2.90 மில். ரூபா 2021 ஆம் ஆண்டிற்கான பொறுப்புகளாகும். அதன் கீழ் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

i.) இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2022

- அறிமுகம் மற்றும் நோக்கம்

இந்த செயற்திட்டத்தின் மூலம் நாடளாவிய ரீதியில் பரந்து காணப்படும் இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல் மற்றும் அதன் மூலம் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல் என்பன எதிர்பார்க்கப்படுவதுடன், மாவட்ட ரீதியாக இளைஞர் சமூகத்தை இலக்காகக் கொண்ட இளம் விவசாய தொழில் முயற்சியாளர்களை உருவாக்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இதன் நோக்கமாகும்.

- நிதிசார் முன்னேற்றம்

இந்த செயற்திட்டத்திற்கு 22.14 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அத்தொகை முழுமையாக செலவிடப்பட்டுள்ளது.

- பௌதீக முன்னேற்றம்

தொ / இ ல	செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1.	பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட இல்லங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதை ஊக்குவித்தல் என்பவற்றின் ஊடாக இளைஞர் விவசாய தொழில் முனைவோர் அபிவிருத்தி செயற்திட்டம் (களுத்துறை மாவட்டம்)	தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் உபகரணங்களை வழங்குதல்.	11 பயனாளிகளுக்கு ஒரு பயிற்சித் திட்டத்தைச் செயல்படுத்துதல். 6 பாதுகாக்கப்பட்ட இல்லங்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளும் 5 அலகுகள் வழங்குதல்
2.	சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைப்பதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை ஊக்குவித்தல் மற்றும் கைவிடப்பட்ட நெற் காணிகளில் "சோஜன் பயிர்ச் செய்கை முறையை" அறிமுகம் செய்தல். (களுத்துறை மாவட்டம்)	28 பயனாளிகளுக்கு 2 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் மற்றும் களச் சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்.	28 பயனாளிகளுக்கு 2 பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் இரண்டு களச் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.
3.	சிறந்த விவசாய முறைகளின் கீழ் கிரிந்த புஹுல்வல்லப் பிரிவில் அம்பன் வாழை செய்கையில் இளைஞர் சமூகத்தை ஈடுபடுத்துதல். (மாத்தறை மாவட்டம்)	80 விவசாயிகளுக்கு 4 பயிற்சித் திட்டங்களை செயல்படுத்துதல்.	20 பயனாளிகளுக்கு 50 அம்புன் வாழைச் செடிகள் நட்டு ஒவ்வொருவருக்கும் 7,500 வழங்கப்பட்டது.
4.	தேனீ வளர்ப்புக் கிராமங்களை ஸ்தாபிப்பதன் ஊடாக இளைஞர் தொழில்முனைவோர்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் (பதுளை மாவட்டம்)	20 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் 20 தேனீ வளர்ப்புப் பெட்டிகளை விநியோகித்தல்.	பண்டாரவளை, வெலிமடை, எல்ல, ஹல்துமுல்ல பிரதேச செயலகப் பிரிவுகளில் இது முன்னெடுக்கப்பட்டது.
5.	விவசாய துறைசார்ந்தோர் மற்றும் விவசாயிகளின் டிஜிட்டல் கல்வியறிவை மேம்படுத்தும் பொருட்டு இலத்திரனியல் - விவசாயத் தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல் (கொழும்பு மாவட்டம்)	விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல்.	விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.
6.	உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு சிறிய அளவிலான இளைஞர்கள் விவசாய தொழில்	30 பயனாளிகளுக்கு 2 பயிற்சி நிகழ்ச்சிகள் , 10 பாதுகாக்கப்பட்ட	பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நிறைவடைந்துள்ளது. கள

தொ / இல	செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
	முயற்சியை விருத்தி செய்வதற்கு உதவி வழங்கல் (களுத்துறை மாவட்டம்)	வளர்ப்பு இல்லங்கள் மற்றும் 20 பெறுமதி சேர்க்கும் அலகுகள் என்பவற்றை விநியோகம் செய்தல்.	ஆய்வுகளுடன் கூடிய பயனாளிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு செயற்திட்டத்தின் நிதிப் பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்ட உரிய நிதிசார் ஆவணங்கள் மற்றும் உரிய அதிகாரிகளின் பரிந்துரைகளை வழங்கிய பின்னர் பகரிந்தளிக்கப்படும். செயற்திட்டக் குழுவின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான செலவில் 50% மீளச் செலுத்தப்படும்.
7.	உணவுப் பாதுகாப்பிற்காக குறைந்த மற்றும் பயன்படுத்தப்படாத நிலங்களில் உள்நாட்டு கிழங்குப் பயிர் வகைகளின் செய்கையை விரிவுபடுத்துதல். (களுத்துறை மாவட்டம்)	180 அதிகாரிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை செயல்படுத்துதல் மற்றும் விவசாயிகளுக்கு 280 ஏக்கருக்குத் தேவையான நடுகைப் பொருட்களுக்கான மானியத்தை வழங்கல்.	280 பயனாளிகள் நிதியுதவி பெற்றுள்ளனர். 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் 13 கள தினங்கள் நடாத்தப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான ஒரு கள தினம் நடத்தப்பட்டது.
8.	சேதன விவசாய முறைகளின் கீழ் வாழைச் செய்கையை பிரபல்யப்படுத்த இளம் தொழில்முனைவோரை ஊக்குவித்தல். (மாத்தறை மாவட்டம்)	20 பயனாளிகளுக்கு 1000 வாழை செடிகள் வழங்குதல்.	20 பயனாளிகளுக்கு, 50 அம்புன் வாழை செடிகளை நட்டதன் பின்னர், ஒருவருக்கு 7500.00 ரூபா வீதம் வழங்கப்பட்டது.
9.	இளைஞர் தொழில்முனைவுத் திட்டத்தின் கீழ் சோஜான் முறையில் தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்வதைப் பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் (கொழும்பு மாவட்டம்)	விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல்.	2 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 2 ஏக்கருக்குத் தேவையான நடுகைப் பொருட்கள் மற்றும் உரங்களை வழங்கல் .
10.	வீட்டுத்தோட்ட மிளகாய் மிளகாய் (Capsicum chinense) செய்கையை அறிமுகம் செய்தல்.	48 விவசாயிகளுக்கு ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடாத்தல் 4800 மிளகாய் மிளகாய் செடிகளை விநியோகம் செய்தல்.	50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டனர். 2022 நவம்பர் மாதம் பயிற்சி நிகழ்ச்சி நடாத்தப்பட்டதுடன், 5000 விதைகள் (ஸ்காட்ச் பானெட்) மற்றும் 5000 பொலித்தீன் நடுகை உறைகள் வழங்கப்பட்டன.
11.	அக்குரஸ்ஸ பிரதேச இளைஞர் சமூகத்திற்கு ஏற்கனவே உள்ள பழச் செய்கையிலிருந்து மேலதிக வருமானத்தை அறிமுகப்படுத்தும் செயற்திட்டம்.	30 விவசாயிகளுக்கான ஒரு பயிற்சி நிகழ்ச்சியை நடாத்தல் மற்றும் 30 கவாத்து வெட்டும் கருவித் தொகுதிகளை விநியோகித்தல்.	இதில் 25 விவசாயிகள் பங்கு கொண்டனர். 2022 நவம்பரில் பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது. 25 கவாத்து வாள்கள், செக்கடியர்கள், பாதுகாப்பு பட்டிகள், தலைக்கவசம் மற்றும் ஒட்டுக் கத்திகள் என்பன

தொ / இ ல	செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
			வழங்கப்பட்டன. 42 மீட்டர் நீளமுள்ள 11 கயிறுகள் வழங்கப்பட்டன.
12.	பேரிக்காய் (பெயார்ஸ்) செய்கையை ஊக்குவித்தல்	பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல் மற்றும் பேரிக்காய் நாற்றுகளை விநியோகித்தல்.	உவாபரணகம, வெலிமடை, ஹப்புத்தளை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இது மேற்கொள்ளப்பட்டது. விவசாயத் திணைக்களத்தின் உதவியுடன் விவசாயிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. பொருட்கள் கொள்வனவுக்கு கேள்விப்பத்திரம் கோரப்பட்டு வருகிறது. கட்டுநிதியைப் பெறுவதற்காக திறைசேரிக்கு அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.
13.	தேனீ வளர்ப்புக் கிராமங்களை ஸ்தாபிப்பதன் மூலம் இளைஞர் தொழில் முனைவோர் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல். (பதுளை மாவட்டம்)	10 பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் மற்றும் 50% பங்களிப்பின் கீழ் 500 தேனீ பெட்டிகள், பாதுகாப்பு உடைகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை விநியோகித்தல்.	பண்டாரவளை, வெலிமடை, எல்ல, ஹல்துமுல்ல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் இது நடைமுறைப்படுத்தப்பட்டது.
14.	காளான் வளர்ப்புச் செயற்திட்டம் (இரத்தினபுரி மாவட்டம்).	13 காளான் வளர்ப்பு இல்லங்களை வழங்கல்.	12 காளான் வளர்ப்பு இல்லங்கள் வழங்கப்பட்டன.
15.	கீரைச் செய்கை செயற்திட்டம் தோட்டத் திட்டம் (கேகாலை மாவட்டம்).	100 வலைச் சுருள்கள், மண்வெட்டிகள், முள்ளுகள், இரப்பர் குழாய்கள், பிளாஸ்டிக் கூடைகள் ஆகியவற்றை கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல். பயிற்சி திட்டமொன்றை நடாத்துதல் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிகழ்ச்சியொன்றை செயற்படுத்துதல் மற்றும் 200 கிலோ சேதன உரத்தை வழங்குதல்.	பிரிவு ரீதியாக 10 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கான தரைப் பண்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கபட்டுள்ளன. 100 வலைச் சுருள்கள், மண்வெட்டிகள், முள்ளுகள், இரப்பர் குழாய்கள், பிளாஸ்டிக் கூடைகள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்வதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.
16.	கன்னோருவையில் உள்ள சேவைப் பயிற்சி நிறுவனத்தின் பிரதான கேட்போர்கூடத்தில் நிகழ்நிலை பயிற்சி வசதிகளை விருத்தி செய்தல். ஆடிட்டோரியம் சீரமைப்பு. கன்னோருவ கேட்போர் கூடத்தில் இது தொடர்பான புனரமைப்புகளை மேற்கொள்வது.	கேட்போர்கூடத்தை புனர்நிர்மாணம் செய்தல்.	கன்னோருவை கேட்போர்கூடத்தில் உரிய புனர்நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

தொ / இ ல	செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
17.	இளம் விவசாய சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தொழில் முனைவு அபிவிருத்திப் பயிற்சி வழங்கல் (கமத்தொழில் அமைச்சு)	பொலித்தீன், நடுகைத் தட்டுகள் மற்றும் நடுகை உறைகள் வழங்குதல். 50 தேனீ வளர்ப்புப் பெட்டிகளை விநியோகம் செய்தல். பாடசாலை இளைஞர் விவசாய சங்கங்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு 50 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் விதைப் பொதிகளை வழங்குதல்.	1000 கிலோ கிராம் பொலித்தீன், 1000 நடுகைத் தட்டுகள் மற்றும் 3000 நடுகை உறைகள் வழங்குதல். 50 தேனீ வளர்ப்புப் பெட்டிகளை விநியோகம் செய்தல். 25 . பாடசாலை இளைஞர் விவசாய மன்றங்களை உருவாக்கும் பொருட்டு 50 தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் விதைப் பொதிகளை வழங்குதல்.

ii.) அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித் திட்டம் - 2022

- நோக்கம்

கமத்தொழில் அமைச்சின் கீழ் மாவட்ட செயலகங்களில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் விவசாய அறிவை விருத்தி செய்யும் பொருட்டு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல் .

- நிதிசார் முன்னேற்றம்

இந்த செயற்திட்டத்திற்கு 0.94 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அத்தொகை முழுமையாக செலவிடப்பட்டுள்ளது.

- பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்த பௌதீக முன்னேற்றம்	குறிப்பு
அபிவிருத்தி அதிகாரிகளுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்	1000 அபிவிருத்தி அதிகாரிகளுக்கு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்	அபிவிருத்தி அதிகாரிகளின் அறிவு, ஆற்றலை விருத்தி செய்தல். பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்ற அபிவிருத்தி அதிகாரிகளின் எண்ணிக்கை - 57 அபிவிருத்தி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்ட பிரதேசங்கள் - கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில்	நாடளாவிய ரீதியில் நிலவிய தொற்றுநோய் பரவல் நிலை காரணமாக அனைத்து மாவட்டங்களிலும் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதில் சிரமம் ஏற்பட்டது.

iii.) வருடாந்த பயிர் உற்பத்தி திட்டத்தை சமர்ப்பித்தல்

- அறிமுகம்

அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் கமநல சேவை நிலைய ரீதியாக மாகாண விவசாய பணிப்பாளர்கள் மற்றும் மாவட்ட விவசாய பணிப்பாளர்களின் தலைமையில் விவசாய தரவுகளின் அடிப்படையில் அமைந்த வருடாந்த பயிர் உற்பத்தி திட்டம் தயாரிக்கப்படுகிறது. இந்த அறிக்கையின் ஊடாக குறித்த வருடத்திற்கான அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய பயிர் உற்பத்தித் தகவல்கள், அதாவது, பயிர்களின் இலக்கு செய்கைப் பரப்பு, எதிர்பார்க்கப்படும் விளைச்சல், விதைத் தேவை, உரத் தேவை மற்றும் பிற இலக்குகள் கமநல சேவைப் பிரிவு மட்டத்தில் தயாரிக்கப்பட்டு, உரிய விவசாய அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களுக்கு அவை இலக்குகளாக வழங்கப்படுகின்றன.

- நோக்கம்

2023 சிறு போகம் மற்றும் 2023 பெரும் போகங்கள் தொடர்பாக மாவட்ட ரீதியாக செய்கை பண்ண எதிர்பார்க்கப்படும் பயிர்ச் செய்கைப் பரப்புகள் பற்றிய தரவுகளைப் பெற்றுக்கொள்ளல்.

- நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

இந்த செயற்திட்டத்திற்காக 0.30 மில். ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் முழுத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. மேலும், இதன் கீழ் வருடாந்த பயிர்த் திட்ட அறிக்கையின் 250 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

புகைப்பட எண். 01 - பக்கம் எண். 78

v). மாத்தளை அழுவிகாரை ரஜ மஹா விகாரை வளாகத்தில் ஹெல பொஜுன் விற்பனை நிலையமொன்றை நிறுவுவதற்கான ஒதுக்கீட்டைப் பெற்றுக்கொள்ளல்.

- அறிமுகம் மற்றும் நோக்கம்

மாத்தளை மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் அழுவிகாரை ரஜ மஹா விகாரை வளாகத்தில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட ஹெல பொஜுன் விற்பனை நிலையத்தை பொதுமக்கள் பாவனைக்காக திறந்து வைப்பதற்காக பெறப்பட வேண்டிய 10 பிளாஸ்டிக் மேசைகள் மற்றும் 50 கதிரைகளை கொள்வனவு செய்வதற்குத் தேவையான 0.35 மில். ரூபா நிதியைப் பெற்றுக் கொடுப்பதே இந்த செயற்திட்டத்தின் நோக்கமாகும். மேலும், அலுவிஹார விகாரைக்கு வருகை தரும் பக்தர்களுக்கும், உள்ளூர்வாசிகளுக்கும் ஆரோக்கியமான உணவு மற்றும் பானங்களைக் பெற்றுக் கொள்வதற்கு இது ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. மேலும், தெரிவு செய்யப்பட்ட விவசாயக் குழுக்களின் வாழ்வாதாரத்தை விருத்தி செய்வதில் உயர் பங்களிப்பை வழங்குவதற்கான வாய்ப்பை இந்த செயற்திட்டம் உருவாக்கியுள்ளது.

- நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

இந்த செயற்திட்டத்திற்காக 0.35 மில். ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் அதன் முழுத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் ஹெல பொஜுன் விற்பனை நிலையத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான 10 மேசைகள் மற்றும் 50 கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

iv.) மாவட்ட விவசாயக் குழுக்கள்

- அறிமுகம் மற்றும் நோக்கம்

இக்கூட்டம் மாவட்ட செயலாளர் தலைமையில் அந்தந்த மாவட்டத்தில் விவசாயப் பிரிவில் பணிபுரியும் அலுவலர்களின் பங்கேற்புடன் மாவட்ட ரீதியான விவசாய நடவடிக்கைகள்

தொடர்பான செயற்பாடுகள், செயற்திட்டங்கள் மற்றும் பிரச்சனைகள் போன்றவை குறித்து கலந்துரையாடும் பொருட்டு மாதந்தோறும் நடைபெறுகிறது.

- நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

மாவட்ட அளவில் மாதாந்தம் மாவட்ட செயலகத்தில் நடைபெறும் விவசாயக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்குத் தேவையான 2.00 மில். ரூபா ஒதுக்கீடு விடுவிக்கப்பட்டதுடன் அம்முழுத் தொகையும் செலவிடப்பட்டது. இந்தக் கூட்டம் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறுவதற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.3.3. பல்வேறு தரப்பினரின் உதவியுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுவதற்கான செயற்திட்டம்

- அறிமுகம்

விவசாயத்தை ஒரு புதிய வழியில் நோக்குவதில் இந்தத் திட்டத்தை ஒரு மைல்கல் என்று சொல்லலாம். புதுமைகளை அறிமுகப்படுத்துவதற்கு மாற்று வழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் அதிலிருந்து எழும் விவசாயப் பிரச்சினைகளுக்கு பதில்களைக் கண்டறிதல், அந்த வடிவமைப்புகளை மதிப்பீடு செய்தல் மற்றும் வணிகமயமாக்குதல்.

- நோக்கம்

கண்டுபிடிப்பாளருக்கு உள்ளூர் சந்தை உருவாகி, விவசாயத் துறையில் உள்ள பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகளை வழங்குவதன் மூலம் இருதரப்பினருக்கும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறையை உருவாக்குதல்.

- நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்
- நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
பல்வேறு தரப்பினரின் உதவியுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுவதற்கான வலுவூட்டும் செயற்திட்டம்	4.01	3.10

- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. முந்தைய ஆண்டிற்கான (2021) நிலுவைத் தொகையைத் தீர்த்தல்.	-	100% 2021 ஆம் ஆண்டிற்கான செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் செலுத்தி முடிக்கப்பட்டது.
2. விண்ணப்பங் கோரல் மற்றும் ஆரம்ப சுற்று பகுப்பாய்வை மேற்கொள்ளல்	ஆரம்ப சுற்று பகுப்பாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள விண்ணப்பங் கோரல் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட சுமார் 150 விண்ணப்பங்கள் தொடர்பான மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	100% சிலுமின, சண்டே ஒப்சர்வர், தினகரன் ஆகிய நாளிதழ்களில் உரிய அளவுகோல்களுடன் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுதல். விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 31.03.2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. 144 விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
3. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்புகளை சம்பந்தப்பட்ட துறையில் உள்ள நிபுணர்கள் குழுவால் மதிப்பீடு செய்தல்.	சுமார் 125 கண்டுபிடிப்பாளர்களை தெரிவு செய்தல்.	90% • கிடைக்கப்பெற்ற 144 விண்ணப்பங்களில் தகுதிகளை பூர்த்தி செய்த 121 விண்ணப்பங்களின் மதிப்பீட்டை நடத்துதல். • இதில் 109 கண்டுபிடிப்புகள் துறை சார்ந்த நிபுணர்களால் வணிகமயமாக்கலுக்குள்ளானவை, வணிகமயமாக்கல் சாத்தியம் உள்ளவை மற்றும் மேலும் விருத்தி செய்யப்பட வேண்டியவை எனும் பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டன. • பல வடிவமைப்புகளுக்கு தயாரிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் மேலும் விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளுக்குப் பரிந்துரை செய்தல்.
4. குழுவின் பரிந்துரைகளின்படி, நிறுவன அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு உட்படுத்தல்	45 வெற்றிகரமான கண்டுபிடிப்புகளை மேலதிக விருத்தி நடவடிக்கைகளுக்காகத் தேர்ந்தெடுத்தல்.	7% மதிப்பீட்டுக் குழுவானது விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள 09 புத்தாக்கங்களை தெரிவு செய்ததுடன், அவற்றில் 04 புத்தாக்கங்கள் தொடர்பான கண்டுபிடிப்பளர்கள் மேலதிக விருத்தி நடவடிக்கைகளில் பங்கேற்க விரும்பவில்லை. மேலும் 02 புத்தாக்கங்கள் தொடர்பில், விருத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 03 புத்தாக்கங்கள் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விவசாயத் திணைக்களத்தின் பொறியியல் பிரிவு மற்றும் பண்ணை இயந்திரவியல் ஆராய்ச்சி நிலையத்திற்கு வழங்குதல்.
5. குழுவின் பரிந்துரைகளின் பேரில் தயாரிப்புகளுக்கான பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.	மதிப்பீட்டுக் குழுக்களால் பரிந்துரைக்கப்படும் கண்டுபிடிப்புகளைப் பரிசோதனை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தல்.	மின் எனஜய்சர் மற்றும் உணவு உற்பத்தியுடன் தொடர்பான கண்டுபிடிப்புகளான Green Tea with water, Green Tea wine, Green Tea powder with Bee honey, நீல சங்குப்பூப் பானம், அரிசி மா கேக் மற்றும் அரிசி மா பிஸ்கட் ஆகியவை தொடர்பான பரிசோதனை நடவடிக்கைகள் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.
6. தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகளை தனியார் அல்லது வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயல்படும் செயற்திட்டங்களுடன் தொடர்புபடுத்தல்.	தெரிவு செய்யப்பட்ட 20 வெற்றிகரமான கண்டுபிடிப்புகளை தனியார் அல்லது வெளிநாட்டு உதவிகளின் கீழ் செயல்படும் செயற்திட்டங்களுடன் தொடர்புபடுத்தல்.	55% தெரிவு செய்யப்பட்ட கண்டுபிடிப்புகளில், 11 வணிகமயமாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் சிறிய அளவிலான விவசாய வர்த்தக பங்குடைமை செயற்திட்டத்துடனும் விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்துடனும் தொடர்புபடுத்தல்.
7. பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்	10 பயிற்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.	70% • 12.02.2022 அன்று, கண்டுபிடிப்புகளை மதிப்பீடு செய்வதுடன் தொடர்பான அளவுகோல்களைத் தயாரிப்பது தொடர்பான கூட்டம் நடைபெற்றது.

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
		• கண்டுபிடிப்பாளர்களுக்கு மாகந்துற நிலைபேறான விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் மூலம் சேதன உர உற்பத்தி மற்றும் அதற்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் தொடர்பாகவும், பண்ணை இயந்திர ஆராய்ச்சி நிலையத்தினால் விவசாய இயந்திரவியல் பற்றிய அறிமுகமும் மற்றும் விவசாய இயந்திரங்களின் நடைமுறை பயன்பாட்டை நிரூபிக்கும் பயிற்சி பட்டறையொன்றும், விவசாயத் திணைக்களத்தினால் நீருலர்த்தும் இயந்திரம் மற்றும் உணவுத் தொழில்நுட்பம் பற்றியும், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால், செலவைக் குறைத்து அதிக வினைத்திறன்மிக்க விவசாய இயந்திரங்களை தயாரிப்பது தொடர்பான பயிற்சி பட்டறையும், ஆதர் சீ கிளார்க் நிறுவனத்தினால் இலத்திரனியல் பயிற்சி பட்டறையொன்றும் நடாத்தப்பட்டது. • நிகழ்நிலை முறையில் கண்டுபிடிப்பாளர்கள் சபை மூலம் கண்டுபிடிப்பாளர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடாத்தல். • பயிற்சி பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மொத்த எண்ணிக்கை 07 ஆகும்.
8. கண்டுபிடிப்பளர்கள் மற்றும் மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்களுக்கான சான்றிதழ் அச்சிடுதல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தை நடாத்தல்.	-	100% 165 சான்றிதழ்கள் அச்சிடப்பட்டன. முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் மற்றும் தயாரிப்புக் கண்காட்சி என்பன 19.12.2022 அன்று கமத்தொழில் அமைச்சில் நடைபெற்றன.
9. கள செயல்விளக்கங்கள் மற்றும் களச் சுற்றுலாக்களை மேற்கொள்ளல்.	தெரிவு செய்யப்பட்ட அனைத்து விண்ணப்பதாரர்களின் கண்டுபிடிப்புகளை களத்தில் பரீட்சித்தல்.	03 கள விஜயங்கள் நடத்தப்பட்டன. மொரட்டுவ பல்கலைக்கழக இலகுரக கை உழவு இயந்திரம், பத்தலேகொட அரிசி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் பல்நோக்கு விவசாய ஆளில்லா விமானம் (Multipurpose agriculture drone) மற்றும் காலி பிரதேச சதுப்பு நிலங்களை உழவு செய்யும் இலகுரக உழவு இயந்திரம் ஆகிய கண்டுபிடிப்புகளின் செயற்பாடுகளை பரிசோதிக்க களப் பரிசோதனைகளை நடாத்துதல்.
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசம் (மாவட்டம்/ கிராம சேவகர் பிரிவு)	நாடளாவிய ரீதியாக	
பயனாளர் எண்ணிக்கை	109	
மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள், கள	பயிற்சி நிகழ்ச்சிகள் - 07 கள மேற்பார்வைகள் - 03	

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
மேற்பார்வைகளின் எண்ணிக்கை		
கள மேற்பார்வை தொடர்பான புகைப்படங்கள்	புகைப்பட இலக்கம் 02 மற்றும் 03 – பக்க இலக்கம் 78	

1.3.4. விவசாய செயற்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு

- நோக்கம்

கமத்தொழில் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை செயற்படுத்தல் மற்றும் மதிப்பீடு.

- செயற்பாடுகள்

கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் உள்ள விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களைக் மேற்பார்வை செய்வதற்கும், பல்வேறு தரப்பினரின் உதவியுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக வலுவூட்டுவதற்கான செயற்திட்டத்தில் 50 கண்டுபிடிப்பாளர்களின் கண்டுபிடிப்புகளை உரிய இடங்களில் மேற்பார்வை செய்து உரிய பிரிவுகளுக்கு முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

- நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
விவசாய செயற்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு	2.45	1.31

- அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
மாவட்டத்தின் கள அலுவலர்களால் விவசாய அபிவிருத்தி செயற்திட்டங்களின் கள மேற்பார்வை மற்றும் மதிப்பீடு	விவசாய அபிவிருத்தி அதிகாரிகளைக் கொண்டு மேற்பார்வை செய்து அறிக்கைகளைப் பெறல்.	முன்னேற்றம் 70%
அமைச்சின் அதிகாரிகளின் ஊடாக கள மேற்பார்வை மேற்கொள்ளல்	11 மாவட்டத்தில் 11 கள விஜயங்கள்	முன்னேற்றம் 73% கள விஜயங்கள் 08
நிலைபேறான விவசாய குழுவுடன் தொடர்பான அனைத்து செலவுகளும்	09 குழுக் கூட்டங்கள்	முன்னேற்றம் 22% 02 குழுக் கூட்டங்களை நடாத்தல்
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிரதேசம் (மாவட்டம்/ கிராம அதிகாரி பிரிவு)	அனுராதபுரம், மட்டக்களப்பு, திருகோணமலை, களுத்துறை, புத்தளம், மனுவர, குருநாகல், யாழ்ப்பாணம்	

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள், கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை - 08	
கள மேற்பார்வை தொடர்பான புகைப்படங்கள்	புகைப்பட எண். 04, 05, 06 - பக்கம் எண். 79	

1.3.5. பல்கலைக்கழகங்களுடன் மேற்கொள்ளும் தேசிய விவசாயக் கொள்கைத் திட்டம் பற்றிய ஆராய்ச்சி (NARP/NUS)

இந்த செயற்திட்டத்திற்காக 2022ல் 9.30 மில். ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் செயற்திட்டத்தின் முன்னேற்றம் இலங்கை விவசாய ஆராய்ச்சிக் கொள்கைக்கான சபையினால் (SLCARP) மதிப்பாய்வு செய்யப்படுகின்றமையால் செயற்திட்டத்தின் விவரங்கள் அந்த நிறுவனத்தின் கீழ் தரப்பட்டுள்ளன.

2. புதிய தொழில்நுட்பங்களை அறிமுகம் செய்தல்.

2.1. அறிமுகம்

இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு, செலவுத் தலைப்பு இலக்கம் 118-02-03-068-2509 இன் கீழ் 610.00 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் 483.78 மில். ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இதன் நிதிசார் முன்னேற்றம் 79.31% ஆகும்.

2.2 புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் புதிய தொழில்நுட்பச் செயற்திட்டங்களின் அறிமுகம் மற்றும் நிதிசார் முன்னேற்றம்.

2.2.1. கமநல சேவை நிலையங்கள் ரீதியாக மண் மாதிரிப் பரிசோதனை வசதிகளை உருவாக்குதல்

- நோக்கம்

வயல்வெளி ரீதியாக மண்ணை பரிசோதித்து, மண்ணின் போசணைப் பொருட்களின் அளவின் அடிப்படையில் உரங்களை வழங்குதல், அதன் மூலம் உரங்களின் தவறான பயன்பாட்டை நிர்வகித்தல் மற்றும் உரங்களின் பயன்பாட்டை முறைப்படுத்துதல் மற்றும் உரங்களின் தேவையற்ற இறக்குமதியைக் குறைத்தல் என்பனவே இந்த செயற்திட்டத்தின் நோக்கங்களாகும்.

செயற்பாடுகள் மற்றும் பௌதீக முன்னேற்றம்

தொ/ இல	செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்
1.	கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு விநியோகிப்பதற்காக 50 மண் பரிசோதனைத் தொகுதிகளைக் கொள்வனவு செய்தல் மற்றும் விநியோகித்தல்.	50 மண் பரிசோதனைத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டன.
2.	மண் சுகாதார அட்டைகளை விநியோகிக்கும் நிகழ்ச்சித் திட்டம்	19,750 மண் சுகாதார அட்டைகளை அனுராதபுர மாவட்டத்தில் விநியோகிக்கப்பட்டன.

தொ/ இல	செயற்பாடுகள்	பௌதீக முன்னேற்றம்
3.	மண் பரிசோதனைத் தொகுதிகளின் பயன்பாட்டை மேற்பார்வை செய்தல் மற்றும் செயற்படுத்தல்	அனுராதபுரம், கண்டி மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் செயற்படுத்தல் மற்றும் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.
4.	மாவட்ட ரீதியாக மண் மாதிரிகளைப் பரிசோதித்தல்.	கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் 456 மண் பரிசோதனைத் தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2022.12.31 ஆம் திகதி வரை அவற்றைக் கொண்டு 14,950 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.
5.	562 நடமாடும் மண் பரிசோதனைத் தொகுதிகள் மீள் நிரப்புவதற்காக நிரப்பும் திரவத்தை கொள்வனவு செய்தல்.	562 நடமாடும் மண் பரிசோதனைத் தொகுதிகள் மீள் நிரப்புவதற்காக நிரப்பும் திரவம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.
6.	மண் பரிசோதனைத் தரவுகள் இணைய வழியாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு மென்பொருள் பிரயோகம் ஒன்றை உருவாக்குதல்.	2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

- நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
மூலதன	49.00	0*
மீண்டுவரும்	0.65	0.32
கூட்டுத்தொகை	**49.65**	**0.32**

*** குறிப்பு**

2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இந்த செயற்திட்டத்திற்கு 50.00 மில். ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்போது நிலவிய சிக்கல் நிறைந்த நிலைமைகள் காரணமாக முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுகளில் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமல் போனதுடன் நான்காவது காலாண்டில், இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மீண்டும் செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் குறித்த கொள்வனவுகள் தொடர்பான பெறுகை நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டு, 50 மண் பரிசோதனைத் தொகுதிகள் மற்றும் 362 நிரப்புக் கரைசல்கள் என்பவற்றைக் கொள்வனவு செய்வதற்கு அனலிட்டிகல் இன்ஸ்ட்ருமன்ட் நிறுவனத்துக்கும் 200 நிரப்புக் கரைசல்கள் கொள்வனவு செய்வதற்கு ப்ரோகெயார் நிறுவனத்துக்கும் 2022 அக்டோபர் மாதம் 20 ஆம் திகதி கொள்வனவுக் கட்டளைகள் வழங்கப்பட்டன.

ஆனால் அனைத்து கொள்முதல்களும் இறக்குமதியை அடிப்படையாகக் கொண்டதால், இறக்குமதிக்குத் தேவையான டொலர்களை (USD) உரிய தனியார் நிறுவனங்கள் பெறத் தவறியமையால் குறித்த பொருட்களின் இறக்குமதி தாமதமானது.

அனலிட்டிகல் இன்ஸ்ட்ருமன்ட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்களின் இருப்பு 2022 டிசம்பர் மாதம் மூன்றாவது வாரத்தில் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்

விலைப்பட்டியல்கள் டிசம்பர் மாத இறுதி வாரத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. எனினும் உரிய முற்பணம் இல்லாததால் அவை செலுத்தப்படவில்லை.

ப்ரோகேயா ஹோல்டிங் நிறுவனத்திடமிருந்து குறித்த பொருட்கள் 2023 ஜனவரி மாத மூன்றாவது வாரத்தில் கிடைக்கப்பெற்றமையால், அந்தக் கொடுப்பனவும் அந்த வருடத்திற்கான பொறுப்புகளாக முன்கொண்டு செல்ல வேண்டியுள்ளது. மேற்கூறிய நிலைமைகளின் அடிப்படையில், இச்செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை அடையப்பெற்று இருப்பினும் உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ள தவறியமையால், நிதி முன்னேற்றத்தை அடைய முடியாமல் உள்ளது.

மண் பரிசோதனைத் திட்டத்தின் செயல்பாடுகள் மேற்கொள்ளப்படும் விதத்தின் புகைப்படங்கள்
புகைப்பட எண். 07 - பக்கம் எண். 79

2.2.2. அமைச்சின் ஊடாக செலவுத் தலைப்பு இலக்கம் 118-02-03-068-2509 இன் கீழ் ஒதுக்கீடு வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் ஏனைய செயற்திட்டங்கள்

தொ/இல	செயற்திட்டத்தின் பெயர்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	பௌதீக முன்னேற்றம்
1.	நவீன தொழில்நுட்பத்தை நிறுவுதல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் - 2022	182.28	163.03	93% 07 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
2.	பயிர் நிறுவுதல் மற்றும் புன்னில முகாமைத்துவம் போன்றவற்றுக்கு ஏற்ற விவசாய இயந்திரங்களை அறிமுகப்படுத்துதல்.	4.07	4.02	95% 03செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
3.	விவசாயத் தகவல் முகாமைத்துவ அமைப்பு (AIMS)	0.11	0.11	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
4.	மாதிரி விவசாய உற்பத்தி கிராம அபிவிருத்தி (Development of Model Agricultural Production Villages)	1.74	1.74	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
5.	சூழல் நட்பு பசுமை விவசாயத் தொகுதிகளை ஊக்குவிக்கும் பொருட்டு பயிர் வகைகள் மற்றும் உள்ளீட்டு முகாமைத்துவ தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல்.	62.62	55.20	பயிர் ஊக்குவிப்பு மற்றும் அணு விதை உற்பத்தி 90% பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.1 புதிய விவசாய தொழில்நுட்பத்தை அறிமுகம் செய்தல்	1.96	1.59	அனைத்து வகையான விதைகளையும் உற்பத்தி செய்வதற்கு காய்கறிப் பயிர்களை விருத்தி செய்தல், புதிய பயிர்களை உற்பத்தி செய்யத் தேவையான தாய் நடுகைப் பொருட்களை பாதுகாத்தல் (crop improvement of vegetables & nuclear seed, breeder seed and parental lines and hybrid seed production of vegetables and germplasm conservation 97% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
	5.2 பயிர் வர்க்க இனப்பெருக்கம் மற்றும் உள்நாட்டு விதை உற்பத்தி	7.85	6.10	95% 05 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.3 சோளம், அவரையினப் பயிர்கள், எண்ணெய்ப் பயிர் வகைகள், மிளகாய் மற்றும் வெங்காயம் ஆகியவற்றில் விருத்தி செய்யப்பட்ட வகைகளை இனப்பெருக்கம் செய்தல்	15.93	13.79	90% 04 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.4 பழ பயிர்களின் தொகை வளர்ச்சி மதிப்பீடு மற்றும் தேர்வு	8.2	7.66	95% 04 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.5 தரத்தில் சிறந்த அடிப்படை விதைகளின் உற்பத்தியை அதிகரித்தல்	0.81	0.81	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தொ/இல	செயற்திட்டத்தின் பெயர்		ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	பௌதிக முன்னேற்றம்
	5.6	பயிர் வகைகள் மற்றும் விதை உற்பத்தியை விருத்தி செய்தல்	5.5	3.56	64% 04 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.7	விவசாய இரசாயனப் பொருட்களின் குறைந்தளவு பயன்பாட்டின் மூலம் உணவுப் பயிர்களுக்கான சூழல் நட்புமிக்க நிலைபேறான தாவரப் பாதுகாப்பு மற்றும் போசணை முகாமைத்துவத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல்.	14.40	14.20	82% 03 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
	5.8	சேதன உர வகைகளின் தரத்தை விருத்தி செய்தல் மற்றும் பசுமை விவசாயத்தை ஊக்குவித்தல்	7.97	7.49	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
6.	சிறந்த விவசாய வழிமுறைகளை சான்றுப்படுத்தல் தொடர்பான செயற்திட்டம் -2022		15.47	12.90	85% 08 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
7.	நிலைபேறான விவசாய பயிர் உற்பத்திக்கான சூழல் நட்பு உரப் பாவனையை முகாமைத்துவம் செய்தல் *(Environmental friendly fertilizer management for input use efficiency and sustainable crop production)*		27.17	27.00	85% 03 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
8.	"சௌபாக்கியா " தேசிய வீட்டுத் தோட்டச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்		107.31	107.31	10,149 நாற்றுமேடையாலர்களுக்குப் பயிற்சி அளித்தல், 1,030,000 வீட்டுத் தோட்டச் செய்கைப் பயனாளிகளுக்கு வீட்டுத்தோட்ட விதைப் பொதிகள் மற்றும் நாற்றுமேடைச் செடிகளை வழங்கல், 4,400,000 துண்டுப் பிரசுரங்கள், 2,200,000 விதை உறைகள் மற்றும் 160,000 சுவரொட்டிகள் அச்சிடல், இரண்டாம் கட்டமாக மீதமாகவுள்ள 1,170,000 பயனாளர்களுக்குத் தேவையான வீட்டுத் தோட்ட விதைப் பொதிகளை விவசாயத் திணைக்களத்தின் ஊடாக வழங்கல்.
9.	இலங்கையின் சர்வதேச வர்த்தகம் மற்றும் விவசாயத் துறையின் பாதுகாப்பதை நோக்காக் கொண்டு தாவர சுகாதார நடைமுறைகளை விருத்தி செய்தல்		22.82	16.10	60% 08 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
10.	சூழல் நட்பு விவசாயத்தை ஊக்குவித்தல்.		29.16	20.10	**1. சேதன உரங்களின் உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவித்தல்** 2430 சிறிய அளவிலான கொம்போஸ்ட் உற்பத்தி அலகுகள் மற்றும் மண்புழு உர உற்பத்தி அலகுகளுக்கு 52 தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளன. **2. சூழல் நட்பு பூச்சிக்கொல்லிகள் மற்றும் திரவ உர வகைளின் உற்பத்தி** 327 செயல்விளக்க மாதிரிகள் நிறுவப்பட்டுள்ளன.

தொ/இல	செயற்திட்டத்தின் பெயர்		ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	பௌதிக முன்னேற்றம்
					3. உயிரியல் உரங்கள் மற்றும் இலை உர உற்பத்தியை ஊக்குவித்தல் *20 ஹெக்டயர் நிலப்பரப்புக்குத் தேவையான உர உற்பத்தியை மேற்கொள்வதற்குரிய காட்டு சூரியகாந்தி மற்றும் பாசிப்பயறு விதைகள் என்பவற்றை வழங்குதல், 1570 அசொல்லா செயல்விளக்க மாதிரிகள் மற்றும் கிளிரிசிடியா செய்கை தொடர்பான 518 செயல்விளக்க மாதிரிகள் என்பவற்றை நிறுவுதல்.* ***4. பாரம்பரிய வர்க்கங்களின் இனப்பெருக்கம்*** *2 ஹெக்டர் நிலப்பரப்பளவில் 30 பாரம்பரிய கொடிக் கிழங்கு வர்க்கங்களைப் பெருக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.* ***5. விளம்பர நடவடிக்கைகள்*** *சேதன நெற் செய்கை தொடர்பான 6000 துண்டு பிரசுரங்கள் அச்சிடப்பட்டதுடன் 3810 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.*
11.	போகங்களுக்கு இடைப்பட்ட பருவத்தில் பாசிப்பயறு செய்கை மேற்கொள்ளல்		*21.83*	*21.83*	*100%* பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
12.	விரிவாக்க செயலெல்லை மற்றும் தரத்தை அதிகரிக்கும் பொருட்டு சமூக வலைப்பின்னல் அடிப்படையிலான விவசாய விரிவாக்க முறைமையை நிறுவுதல்		*0.29*	*0.29*	*100%* பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
13.	நிர்மாணிக்கப்பட்ட *GAP Mini Super Market* இன் விற்பனை நடவடிக்கைகளை ஆரம்பித்தல் *(சப்ரகமுவ மாகாணம்)*		*10.00*	*10.00*	*100%* பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
14.	இளைஞர் தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	சோளம் மற்றும் கௌபிச் செய்கைகளில் இயந்திரமயமாக்கலை ஊக்குவித்தல்	*22.60*	*22.60*	*75%* *02* செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
		அனுராதபுர உடமளுவைப் பிரதேசத்தில் புதிய ஹெல பொஜுன் விற்பனை நிலையத்தின் உள்ளக நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளல் - இரண்டாம் கட்டம்	*10.70*	*10.70*	*86%* *02* செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
		பழப் பயிர்களின் பெறுமதிச் சங்கிலி அபிவிருத்தி - கட்டம் *I - 2022*	*2.32*	*2.32*	பழ வழங்கல் சங்கிலியின் பங்குதாரர்களின் தகவல்களைத் திரட்டல் *90%* பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

தொ/இல	செயற்திட்டத்தின் பெயர்		ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	பௌதீக முன்னேற்றம்
		உள்நாட்டு கலப்பின சோள வர்க்கங்களை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்	23.17	23.17	80% 02 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
		அடர்த்தியான, அதிக விளைச்சல் தரக்கூடிய சோள கள விளக்க மாதிரிகளை நிறுவுதல்.	7.21	7.21	80% 04 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
		சோஜான் திட்டத்தின் (கட்டம் - II) கீழ் தரிசு வயல் நிலங்களில் விவசாயப் பயிர்கள் நடுவதைப் பரவலாக்கும் நிகழ்ச்சித் திட்டம் .	5.00	5.00	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது
		விவசாய இளைஞர் புதிய தொழில் முனைவோரை உருவாக்கும் பொருட்டு தொழில் முனைவு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதன் மூலம் சிறிய அளவிலான விவசாய வியாபாரங்களை அபிவிருத்தி செய்தல் - கட்டம் - II	0.46	0.46	100% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது

விவசாயப் பிரிவின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் விஷேட செயற்திட்டங்கள்

1. விவசாயிகளுக்கு எரிபொருள் வழங்குவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளல்

2022 சிறு போகத்தில் நெற் செய்கை மற்றும் சோளச் செய்கை என்பவற்றின் அறுவடை நடவடிக்கைகளுக்கும் 2022/23 பெரும் போகத்திற்கான நிலப் பண்படுத்தல் நடவடிக்கைகளுக்கும் அவசியமான மாவட்ட ரீதியான எரிபொருள் தேவைகளைப் பெற்று அவற்றை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சிற்கு வழங்கி விவசாயிகளுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

சீன மக்கள் குடியரசு இலங்கைக்கு அவசரகால உதவிகளின் கீழ் 9000 மெட்ரிக் தொன் டீசலை வழங்கியது. இதில் 6800 மெட்ரிக் தொன் நெல் அறுவடைக்கு 2022 ஆம் ஆண்டுக்கான நெல் அறுவடைக்காக ஒதுக்கப்பட்டுள்ளதுடன், கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரையின் பேரில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு இந்த டீசல் கையிருப்பு இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடனுதவியின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களின் முன்னேற்றம்

1. விவசாயப் பிரிவை நவீனமயப்படுத்தும் செயற்திட்டம் (ASMP)

1.1. அறிமுகம்

உலக வங்கியினால் 29 ஜூன் 2016 ஆம் திகதி அங்கீகாரம் அளிக்கப்பட்ட இச்செயற்திட்டத்திற்கு சர்வதேச அபிவிருத்தி முகவர் நிறுவனம் (IDA) நிதி ஒதுக்கீட்டை வழங்கியுள்ளது.

1.2. தொலைநோக்கு

நவீனமயமாக்கல் மூலம் உணவுப் பாதுகாப்பு மற்றும் தேசிய சுபீட்சம் என்பவற்றுக்கு செழிப்புக்கான உயிரோட்டமுள்ள, ஆற்றல்மிக்க மற்றும் பயனுறுதிமிக்க விவசாயத் துறையை உருவாக்கல்

1.3. செயற்பணி

"செயற்திட்டக் களங்களில் இயற்கை வளங்களை நிலைபேறான விதத்தில் முகாமைத்துவம் செய்வதன் ஊடாக, சமூக ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய, புதுமையான, சந்தை வாய்ப்புக்கூடிய மற்றும் நவீன விவசாயத் துறையின் ஊடாக உலகளாவிய ரீதியில் போட்டித்தன்மைமிக்க உற்பத்தி, பதனிடல் மற்றும் சந்தைப்படுத்தல் துணிவாண்மைகளை அடைதல்"

1.4. நோக்கங்கள்

- *நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி போட்டித்தன்மைமிக்க மற்றும் சந்தைப்படுத்தக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்தல் (உற்பத்தித்திறனை அதிகரித்தல்).*
- *சந்தை வாய்ப்புகளுக்கு சிறப்பாக பதிலளிப்பதற்காக அவர்களின் திறன்களை விருத்தி செய்தல் (உற்பத்தி மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல்).*
  விவசாய வணிகமயமாக்கலை நோக்கி நகர்தல். (விவசாயம் ஒரு வணிகமாக).

1.5. செயற்திட்ட தகவல்கள்

கமத்தொழில் அமைச்சுக்கான செலவு	*64.23 மில்லியன் அமெரிக்க டொலர், 9374.37 மில்லியன் ரூபாய் (நாணயம் = இலங்கை ரூபாய் (LKR) 1 USD = 145.95 ரூபாய்)*
நடைமுறைத் துறை (முதன்மை)	*விவசாயம்*
பொறுப்பான நிறுவனம்	*கமத்தொழில் அமைச்சு*
இலக்காக் கொள்ளப்பட்ட பிரதேசங்கள்	*மாகாண சபைகள்* *வடக்கு - யாழ்ப்பாணம், முலத்தீவு* *கிழக்கு - மட்டக்களப்பு* *வட மத்திய - அனுராதபுரம், பொலன்னறுவை* *மத்திய - மாத்தளை* *ஊவா - மொனராகலை*
பயனாளர்கள்	*விவசாய உற்பத்தி அமைப்புகள்,* *சிறிய பண்ணை குடும்பங்கள் மற்றும் பிற பண்ணைக் குடும்பங்கள்,* *கமத்தொழில் அமைச்சு (MOA),* *05 உரிய மாகாண கமத்தொழில் அமைச்சுகள்.* *மறைமுக : வணிக வங்கிகள்*
கூறுகள்	*கூறுகளின் பெயர்கள்* — *செலவுகள் (அமெ. டொலர்)* *1. உற்பத்தித் திறன் விருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் மாதிரிகள்* — *57.73* *2. செயற்திட்ட முகாமைத்துவம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு* — *6.50*

இரண்டாவது கூறு கீழ்வரும் துணைக் கூறுகள் மற்றும் செயற்பாடுகளைக் கொண்டுள்ளது.
அ). 2.1: விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி - (3.20 மில். அமெ. டொலர்)
ஆ). 2.2: நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா - (38.39 மில். அமெ. டொலர்)
இ). 2.3: உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் - (15.14 மில். அமெ. டொலர்)
ஈ). 2.4: பகுப்பாய்வு மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி - (1.00 மில். அமெ. டொலர்)

1.6. செயற்பாடுகள்

கூறு	செயற்பாடுகள்
2. உற்பத்தித் திறன் விருத்தி மற்றும் பல்வகைப்படுத்தல் மாதிரிகள்	2.1. விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி
	2.2. நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா
	2.3. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள்
	2.4. பகுப்பாய்வு மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி
3. செயற்திட்ட முகாமைத்துவம் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு	

1.7. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)
மூலதன	4,190.00	3,746.20

செயற்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு 4190.00 மில். ரூபா ஆகும். 31.12.2022 ஆம் திகதிக்கான மொத்த செலவு 3,696.2 மில். ரூபா ஆகும்.

	உலக வங்கி (மில். ரூபா)	ஐரோப்பிய ஒன்றியம் (மில். ரூபா)	இலங்கை அரசு (மில். ரூபா)
ஒதுக்கீடு	2,350.00	1,800.00	40.00
செலவு	2,253.19	1,443.01	

இந்த நிதி முன்னேற்றத்துடன், செயற்திட்டத்தின் ஊடாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மொனராகலை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மாத்தளை ஆகிய பிரதேசங்களில் 16 பயிர்க் கொத்தணிகள் நிறுவப்பட்டுள்ளதுடன், வவுனியா, கிளிநொச்சி, அம்பாறை, பதுளை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் ஏனைய 15 பயிர் வகைகளின் கொத்தணிகள் நிறுவப்படும். இந்தக் கொத்தணிகளை உள்ளடக்கும் வகையில் 8 விவசாயிகள் அமைப்புகள் விவசாய நிறுவனங்களாக மாற்றப்பட்டு, கம்பனிப் பதிவாளர் சட்டத்தின் கீழ் பொது பட்டியலிடப்படாத நிறுவனமாக (PUC) பதிவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றன. நீர்ப்பாசனக் கட்டமைப்புகள், பண்ணை மற்றும் சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் உற்பத்திகளைக் கையாளும் வசதிகளை விருத்தி செய்ய மற்றும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியிருப்பதால், மேற்கூறிய கொத்தணி உற்பத்திகளை விவசாயிகள் தங்கள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளை முறையாக மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் 27 உள்கட்டமைப்பு செயற்பாடுகள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன. கள ரீதியாக செயற்பாடுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் உள்ள சிக்கல்கள் மற்றும் தடைகளை கண்டறிந்து கொள்கை ரீதியான 10 ஆராய்ச்சி தலைப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மேலும் அவை தொடர்பாக மேலதிக ஆய்வுகளை மேற்கொள்ள ஒப்பந்தங்களை வழங்குவதற்கான விதிமுறைகள் (Terms of reference) அடையாளம் காணப்பட்டுள்ளன.

துணைக் கூறு 2.1: விவசாயிகளுக்கான பயிற்சிகள் மற்றும் திறன் விருத்தி		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) முன்னோடி செயற்திட்டங்களுக்கு தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.	ISP ஆல் உருவாக்கப்பட்ட முன்னோடி செயற்திட்டங்களுக்கான பாடத்திட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.	நிறைவு செய்யப்பட்டுள்ளது.
ICT தளத்தில் விளம்பரம் - Farm Business School (FBS) பயிற்சிகள்.	தனிப்பட்ட விவசாயிகளின் பயிற்சிகளுடன் பயிற்சிகளை வழங்க ICT தளமொன்றை உருவாக்கும் நோக்கில் சேவை வழங்குனர் ஒருவரை இணைத்துக் கொள்ளல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. வெவ்வேறாக விவசாயிகளின் பயிற்சி மற்றும் திறன் விருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் FBS பயிற்சி	புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் FBS பயிற்சிகளை பூர்த்தி செய்தல்.	பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா	விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா	உள்நாட்டு சுற்றுலாக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன
புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களின் Farmer Producer Organization (FPO) பயிற்சி	நிலைபேறான விவசாய அமைப்புகளின் FPO பயிற்சி	சேவை வழங்குநர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு, முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.
முன்னோடி செயற்திட்டங்களுக்கான FPOக்களை நிறுவுதல் மற்றும் பதிவு செய்தல்	முன்னோடி செயற்திட்டங்களுக்கான 20 FPO கள்.	ஆலோசகர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டு முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன

துணைக் கூறு 2.2 : நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
ISP இனால் 09 கொத்தணி அபிவிருத்தி திட்டங் (CDP) களை சமர்ப்பித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளல்.	09 கொத்தணி அபிவிருத்தித் திட்டம் (CDP)	16 கொத்தணி அபிவிருத்தித் திட்டங்கள் (CDP) அங்கீகரிக்கப்பட்டுள்ளன.
ISP யின் ஊடாக 7 செயற்திட்ட மாவட்டங்களில் 16 பயிர் கொத்தணிகளை நிறுவுதல்.	16 ISP கொத்தணிகளில் பயிர்களை நிறுவுதல்	சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) செயற்படுத்தப்பட்டுள்ள 16 கொத்தணிகளில் பயிர்கள் நடும் பணி ஆரம்பிக்கப்பட்டு, உள்ளீட்டுப் பொருட்களின் பெறுகை நடவடிக்கைகள் பெரும்பாலும் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
13 முன்னோடிச் செயற்திட்டங்களை தொடர்ச்சியாக செயல்படுத்தல்	பயிற்சி வழங்கல் மற்றும் விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா.	திட்டமிட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
7 செயற்திட்ட மாவட்டங்களில் 12 புதிய மற்றும் விரிவடையும் செயற்திட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் மற்றும் நிறைவு செய்தல்.	பயிற்சி வழங்கல் மற்றும் விவசாயிகளுக்கான கள அனுபவச் சுற்றுலா. உள்ளீடுகளை	திட்டமிட்ட பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

துணைக் கூறு 2.2 : நவீன விவசாய தொழில்நுட்ப பூங்கா		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
	விநியோகித்தல்.	
5 புதிய மாவட்டங்களில் 12 முன்னோடி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்	12 முன்னோடிச் செயற்திட்டங்கள்	பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது.
புதிய மாவட்டங்களுக்கான 20 பயிர்ச் செய்கைக் கொத்தணிகளை நிறுவுதல்.	12 முன்னோடிச் செயற்திட்டங்கள்	(i) சாத்தியக்கூறு ஆய்வுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. பதுளை, வவுனியா, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் 3 சோள உற்பத்திக் கொத்தணிகள் நிறுவப்பட்டுள்ளன. (ii) ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மிளகாய் உற்பத்திக் கொத்தணிகளை நிறுவுதல் (iii) ஏனைய பயிர்களுக்கான கொத்தணி அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன

2.3. உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்பு வசதிகள்		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
சிறிய அளவிலான நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தற்போதுள்ள நீர் தாங்கிகள் மற்றும் நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல் / விருத்தி செய்தல். உற்பத்தி மற்றும் சந்தை அணுகல் பாதைகள் மற்றும் புதிய களங்களுக்கான நுழைவுப் பாதைகளை நிர்மாணித்தல், உலர்த்தும் தளங்கள் மற்றும் பரண்கள், பயிர் கழிவுகளை கொம்போஸ்ட் உரமாக்கும் வசதிகள், களஞ்சிய வசதிகள் மற்றும் ஏனையவை உள்ளடங்கலான கிராம மட்ட களஞ்சிய மற்றும் உற்பத்திகளைக் கையாளும் வசதிகள்	-	வழங்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்பான 114 செயற்பாடுகளில் 14 செயற்பாடுகள் நடைபெற்று வருவதுடன், ஏனைய 100 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன (2018 இலிருந்து 2021 வரை) வழங்கப்பட்ட 27 உட்கட்டமைப்பு வசதிகளில் ஒரு செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு காரணமாக நிர்மாணப் பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

2.4. பகுப்பாய்வு மற்றும் கொள்கைகள் ஆலோசனை உதவி		
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**இலக்குகள்**	**பௌதீக அடைவுகள்**
தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் கொள்கை ஆராய்ச்சிகளுக்கு மானியங்கள் மற்றும் வசதிகளை வழங்கல்	2 ஆராய்ச்சிகள்	வழங்கப்பட்ட 9 ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 4 நிகழ்நிலை கொள்கை ஆராய்ச்சிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1.8. சர்வதேச சேவை வழங்குநரால் (ISP) நிறுவப்பட்டுள்ள உற்பத்திக் கொத்தணி மற்றும் முன்னேற்றம்

மாவட்டம்	கொத்தணியின் பெயர்	பௌதீக முன்னேற்றம்
யாழ்ப்பாணம்	உருளைக்கிழங்கு மற்றும் சிறிய வெங்காய உற்பத்தி	இந்த செயற்திட்டம் ஆரம்பத்தில் 100 பயனாளர்கள் மற்றும் அவர்களுக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலப் பரப்பை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பிக்கபட்டதுடன் பின்னர் அது பயனாளர்கள் 500 வரை விரிவடைந்தது. அதன் கீழ் சிறிய வெங்காயம் 02 போகங்களும் உருளைக்கிழங்கு ஒரு போகமும் வெற்றிகரமாக செய்கை செய்யப்பட்டதுடன் இரண்டாவது உருளைக்கிழங்குப் போகம் தற்போது களத்தில் நிறுவப்பட்டுள்ளது.
	சிறிய வாழை உற்பத்திக் கொத்தணி	400 விவசாயிகளுக்கு அறுவடைக்கு முந்தைய தொழில்நுட்பம் தொடர்பான தொகுப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் 50 பயனாளர்களில் 06 பேர் புதிய செய்கையை ஆரம்பித்ததுடன் 34 பேர் பயிர் நாற்றுமேடைகளை ஆரம்பித்தனர்.
முல்லைத்தீவு	மாதுளை உற்பத்திக் கொத்தணியில் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை	50விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் பயனாளர்களுக்கு 50 நீர்ப்பாசனத் தொகுதிகள் நிறுவப்பட்டதுடன் இதுவரை 24 பயனாளர்கள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர். மீதமுள்ள பயனர்கள் பயிர்ச் செய்கைக்கு தயாராகி வருகின்றனர்.
	கோலிகுட்டு வாழை உற்பத்திக் கொத்தணியின் கீழ் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை	50 ஏக்கர் கொண்ட 100 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். 07 பயனாளிகளுக்கு பயிர்ச் செய்கை பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் ஒரு செயல்விளக்க செய்கை மாதிரி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
	பப்பாளி உற்பத்திக் கொத்தணி	434பயனாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விதைகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் 2023 பெப்ரவரி மாதமளவில் செய்கையை ஆரம்பிப்பார்கள்.
மொனராகலை	கவெண்டிஷ் வாழை உற்பத்திக் கொத்தணியின் கீழ் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை	500 விவசாயிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கை நடைபெற்று வருகிறது. 92 விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைப் பொருட்களும் 23 பயனாளர்களுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களும் மற்றும் 38 நுண் தெளிப்பான் தொகுதிகளும் நிறுவப்பட்டுள்ளன. 200 விவசாயிகளுக்கு ஊடுபயிர்ச் செய்கைக்கு நுண் நீர்ப்பாசனப் பாகங்கள் (சொட்டு நீர்ப்பாசன நாடாக்கள்) வழங்கப்பட்டுள்ளன.
	மாம்பழ உற்பத்திக் கொத்தணியின் கீழ் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை	200 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் பயிர்ச் செய்கைக்குத் தேவையான பொருட்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், 126 நீர் இறைக்கும் இயந்திரங்கள், 40 சிறிய நீர் தெளிப்பான் தொகுதிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. ஒரு செயல்விளக்கப் பயிர்ச் செய்கை மாதிரி நிறுவப்பட்டுள்ளதுடன் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
	MD2 அன்னாசி உற்பத்திக் கொத்தணி	01 ஹெக்டயர் நிலப் பரப்பில் ஒரு முன்னோடி பயிர்ச் செய்கை திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாத தொடக்கத்தில் 500 அன்னாசி நாற்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன அது CIC நிறுவனத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. உத்தேச அன்னாசிப் பழக் கொத்தணி 2023 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.
மட்டக்களப்பு	மாதுளை உற்பத்திக் கொத்தணியில் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச்	50 பயனர்கள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.

மாவட்டம்	கொத்தணியின் பெயர்	பௌதீக முன்னேற்றம்
	செய்கை – களுவாஞ்சிக்குடி	
	மாதுளை உற்பத்திக் கொத்தணியில் செத்தல் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை - செங்கலடி	50பயனர்கள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளனர்.
	கவெண்டிஷ் வாழைச் செய்கை கொத்தணியின் கீழ் மிளகாய் ஊடு பயிர்ச் செய்கை	பயனாளர் தெரிவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அவர்களில், 120 பயனர்கள் நிலப் பண்படுத்தலை நிறைவு செய்துள்ளதுடன் மற்றும் 58 பயனர்கள் நாற்றுகளை நட்டுள்ளனர். 40 நீர்ப்பாசனத் தொகுதிகள் நிறுவப்பட்டுள்ளன.
அனுராதபுரம்	சிறிய வாழை உற்பத்திக் கொத்தணி	72,388 கிலோ கிராம் வாழைப்பழம் துபாய் இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதுடன் 128,600 கிலோ கிராம் உள்நாட்டு பல்பொருள் அங்காடிகளுக்கு விற்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட 50 ஏக்கரில் 38.5 ஏக்கர் நிலப் பரப்பில் புதிய பயிர்ச் செய்கை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
	செத்தல் மிளகாய் உற்பத்திக் கொத்தணி	2021ஆம் ஆண்டில், 100 விவசாயிகளினால் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 5000 கிலோ கிராம் ஒரு கிலோ கிராம் 850 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டது. மேலும் 200 விவசாயிகள் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ளதுடன் அவற்றின் அறுவடை நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. 2023 ஜனவரி மாதமளவில் 300 விவசாயிகளால் 150 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பயிர்கள் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் அதற்கான நிலப் பண்படுத்தல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகிறன.
	கொய்யா உற்பத்திக் கொத்தணி	45விவசாயிகளுக்கு 82500 பழக் காப்பு உறைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. 1000 கழிவு சேர்க்கும் பைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ½ ஏக்கர் செயல்விளக்க பயிர்ச் செய்கை நிலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அது 50 புதிய விவசாயிகளுடன் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும். நீர் வடிகால் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக, பொருத்தமான நீர் வடிகால் அமைப்பை உருவாக்கும் நடவடிக்கைளை ISP நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.
பொலன்னறுவை	செத்தல் மிளகாய் உற்பத்திக் கொத்தணி	முதல் பயிர்ச் செய்கை 2021 ஆம் ஆண்டு மே மாதம் 87 விவசாயிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 300 விவசாயிகள் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பித்துள்ளனர்.
	பப்பாளி உற்பத்திக் கொத்தணி	அபிவிருத்தித் திட்டம் ISP நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
	சேதன மரக்கறிக் கொத்தணி	அபிவிருத்தித் திட்டம் ISP நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.
மாத்தளை	மாம்பழ உற்பத்திக் கொத்தணியின் கீழ் பெரிய வெங்காயத்தை ஊடு பயிர்ச் செய்கை	178 விவசாயிகளுக்கு 53020 மாம்பழச் செடிகள் வழங்கப்பட்டுள்ளன.
	கொய்யா உற்பத்திக் கொத்தணி	½ ஏக்கர் மாதிரி செய்கை நிலப் பரப்பொன்று நிலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 20600 கொய்யா செடிகள் கிடைத்துள்ளதுடன் 44 விவசாயிகளால் பயிர்கள் நிறுவப்பட்டுள்ளன.

மாவட்டம்	கொத்தணியின் பெயர்	பௌதீக முன்னேற்றம்
	MD2 அன்னாசி உற்பத்திக் கொத்தணி	*01 ஹெக்டயர் நிலப் பரப்பில் ஒரு முன்னோடி பயிர்ச் செய்கை திட்டமிடப்பட்டுள்ளது. அதற்காக 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாத தொடக்கத்தில் 500 அன்னாசி நாற்றுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அது CIC நிறுவனத்தினால் பராமரிக்கப்படுகின்றது. உத்தேச அன்னாசிப் பழக் கொத்தணி 2023 இல் ஆரம்பிக்கப்படவுள்ளது.*

- ***சிறிய வாழை உற்பத்திக் கொத்தணி கிராமம் (சிறிய அளவிலான செயற்திட்டம்), அனுராதபுரம்***

  புகைப்பட இலக்கம் 08 - பக்க இலக்கம் 80

- ***அனுராதபுர மிளகாய் உற்பத்திக் கொத்தணி***

  புகைப்பட இலக்கம் 09 - பக்க இலக்கம் 80

2. காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்திட்டம்

2.1. அறிமுகம்

இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட காலநிலைத் தாக்கங்களால் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களைக் கொண்ட வலயங்களில் சிறிய காணிகளைக் கொண்டுள்ள விவசாய சமூகங்களின் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் ஆற்றல் மற்றும் நீர்ப்பாசன விவசாயத்தின் உற்பத்தித்திறன் என்பவற்றை விருத்தி செய்வதை பிரதான இலக்குகளாகக் கொண்டு, கமத்தொழில் அமைச்சினால் உலக வங்கியின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் கீழ் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் செயற்திட்டத்தை 125 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுடன் திட்டமிட்டு, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

காலநிலைக்கு ஏற்ற விவசாய முறைகளின் பாவனை மற்றும் தொழில்நுட்பம் என்பவற்றின் ஊடாக, விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் இலக்கு வைக்கப்பட்ட சிறு விவசாய உற்பத்திச் சமூகங்களின் சந்தைகளுக்கான அணுகலை விருத்தி செய்தல் ஆகியவற்றின் மூலம் இந்த நோக்கங்களை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இச்செயற்திட்டம் இலங்கையின் வட மாகாணம் (கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு), கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை), வடமத்திய மாகாணம் (அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை), வடமேல் மாகாணம் (குருணாகல் மற்றும் புத்தளம்), தென் மாகாணம் (ஹம்பாந்தோட்டை) மற்றும் ஊவா மாகாணம் (மொனராகலை) ஆகிய 6 மாகாணங்களின் 11 நிருவாக மாவட்டங்களில் உள்ள காலநிலை மாற்றத்தின் தாக்கங்களினால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களைச் சேர்ந்த 470,000 இற்கும் அதிகமான சிறு விவசாயிகள் மற்றும் 57,838 விவசாயக் குடும்பங்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையிலும், சுமார் 375,000 ஹெக்டயர் பயிர்ச் செய்கை நிலப்பரப்பை உள்ளடக்கும் விதத்திலும் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. உலக உணவுத் திட்டம் (WFP), சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் (IWMI) மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் (DAD) ஆகியவை ஒன்றிணைந்து நடாத்திய கூட்டுப் பயிற்சியின் விளைவாகக் கிடைத்த, மிகவும் நம்பகமான தரவுகளின் அடிப்படையிலான அணுகுமுறையின் மூலம் காலநிலை மாற்றங்களின் பாரிய பாதிப்புகளை எதிர்கொள்ளும் பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு இம்மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

- ***தொலைநோக்கு***

  காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் மற்றும் வினைத்திறன்மிக்க நீர் உற்பத்தித்திறன் என்பவற்றின் மூலம் நம்பகமான நீர் வழங்களை உறுதி செய்வதன் ஊடாக நீர் உற்பத்தித்திறனை விருத்தி செய்தல்.

- **செயற்பணி** *காலநிலை மாற்றத்தின் பாதகமான தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் விவசாய உற்பத்தியில் அதிக காலநிலை வேறுபாட்டின் தாக்கத்தை குறைப்பதற்கு குள அடுக்கைத் தொகுதிகளை மறுசீரமைத்தல் மற்றும் காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகளை பின்பற்றுவதன் மூலம் விவசாய உற்பத்திக்கான நீர்ப்பாசன நீர் வழங்கலை உறுதி செய்யதல்.*

- **நோக்கங்கள்** *காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் பாதிக்கப்படக்கூடிய பிரதேசங்களில் விவசாய சமூகத்தின் விவசாயத்தின் உற்பத்தித்திறன் மற்றும் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மை என்பவற்றை விருத்தி செய்தல்.*

- **கூறு** *செயற்திட்ட செயற்பாடுகள் 04 பிரதான கூறுகளின் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.*
  கூறு - 1 : விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்
  கூறு - 2 : விவசாயத்துக்கான நீர்
  கூறு - 3 : செயற்திட்ட முகாமைத்துவம்
  கூறு - 4 எதிர்பாராத/ அவசர எதிர்வினையாற்றல்

2.2. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவிடப்பட்ட தொகை (மில். ரூபா)	முன்னேற்றம் (%)	ஏனையவை
மூலதன செலவுகள்	*3,950 .00 (2500+1450)*	*3,852.00*	*97.46*	*2022 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டப் பெறுமதி 2500 மில். ரூபா ஆகும். மேலதிக ஒதுக்கீடான 1450 மில். ரூபா 2022 டிசம்பர் மாத இறுதியில் கிடைத்தது.*
மீண்டுவரும் செலவுகள்	-			

2.3. பௌதிக முன்னேற்றம் (செயல் திட்டத்திற்கு அமைவாக பிரதான கூறுகளின் கீழ்)

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
1. விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்	*காலநிலைக்கு சீரமைவான விவசாய செயற்பாடுகளைப் பின்பற்றல் மற்றும் பண்ணை நீர் முகாமைத்துவத்தை விருத்தி செய்வதன் மூலம் விவசாய உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் மற்றும் பல்வகைப்படுத்தல்*	**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் தொழில்நுட்பப் பயன்பாடுகள்** - *விவசாய ஆலோசகர்களுக்கான காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.* - *செயற்திட்ட பயனாளிகளுக்கு காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் விவசாய தொழில்நுட்பம் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை*	*- இந்த வருடத்தில், 03 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு, ஆலோசகர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 2614 ஆலோசகர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.* *- காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் மற்றும் தொழில்நுட்பம் குறித்த 492 நிகழ்ச்சிகள் மூலம் 17,451 பயனாளி விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.* *- ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்ட அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான 33 சுற்றுலாக்களில் 22 சுற்றுலாக்கள் 2022 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதுடன் அவற்றின் மூலம் 863 பயனாளி விவசாயிகளுக்கு காலநிலைக்கு சீரமைவான மற்றும் தொழில்நுட்பம் என்பன தொடர்பான அனுபவ ரீதியான*

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
		நடாத்தல். - பயனாளிகளுக்கான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கான சுற்றுலாக்கள். - மாதிரிக் கிராமங்கள் மற்றும் செயற்பாட்டு மாதிரிகளை நிறுவுதல் - கொத்தணி கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் - காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி சிறு போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல் - -காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி இடைப் போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். - வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் - காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய முறைகளைப் பயன்படுத்தி பெரும் போக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். - அனுராதபுர திறப்பனை பண்ணை பயிற்சிக் கல்லூரியை நிறுவுதல் - கொம்போஸ்ட் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்	பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. - 03 மாதிரிக் கிராமங்களில் 35 செயல்விளக்கக் மாதிரிப் பயிர்ச் செய்கைகளை நிறுவுவதன் மூலம், 293 பயனர்கள் காலநிலைக்கு ஏற்ற நீர்ப்பாசன விவசாயம் தொடர்பான பயிற்சிகளைப் பெற்றுள்ளதுடன், இதுவரை மொத்தம் 456 செயல்விளக்கக் மாதிரிப் பயிர் செய்கைகள் நிறுவப்பட்டுள்ளன. -சிறு போகத்தில் 883.8 ஹெக்டேர் நெல் (44.8 ஹெக்டேர்) மற்றும் மேலதிக உணவுப் பயிர்கள் (839 ஹெக்டேர்) பயிரிடப்பட்டு, 1095 மெ. தொன் அறுவடையைப் பெறல். (நெல்= 215 மெ. தொன். மற்றும் ஏனைய களப் பயிர்கள்= 880 மெ. தொன்.) (2868 பயனாளர் விவசாயிகள்) - இடைப் போகத்தில் 587 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளல். பாசிப்பயறு - 413 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 136 மெ. தொன். அறுவடை, கௌப்பி - 64 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 8.5 மெ. தொன் அறுவடை. எள்ளு -47 ஹெக்டேரில் பயிரிடப்பட்டு 28 மெ. தொன். அறுவடை - எதிர்கால உணவு நெருக்கடிகளுக்குத் தீர்வாகவும், உணவுப் பாதுகாப்பு மற்றும் போசணைத் தேவைகளை உறுதி செய்யும் நோக்கத்துடன், 66,015 குடும்பங்களை இலக்காகக் கொண்டு விவசாய இடுபொருட்களை வழங்கி நடைமுறைப்படுத்தப்பட்ட துரித வீட்டுத் தோட்டச் செய்கை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் 58,378 குடும்பங்கள் பங்கேற்றதுடன் 3,652 ஹெக்டேர் நிலப்பரப்பில் காய்கறிகள் மற்றும் பழங்கள் பயிரிடப்பட்டு 839 மெ. தொன் அறுவடை பெறப்பட்டது. - 2021/22 பெரும் போகத்திற்கு 8084 விவசாயிகளுக்கு 166,569 கிலோ கிராம் விதைகள் வழங்கப்பட்டு மேலதிகப் பயிர் வகைகள் 3723 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிட்டு 5928 மெ. தொன். அறுவடை பெறப்பட்டது. 262.8 ஹெக்டேர் நிலப்பரப்பிலிருந்து நெல் அறுவடை 721.79 மெ. தொன், 381.54 ஹெக்டேர் இருந்து பாசிப்பயறு 173.68 மெ. தொன், மற்றும் 2515 ஹெக்டேரில் இருந்து சோளம் 4096 மெ. தொன் என்பன அறுவடையாகப் பெற்றுக்

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
			கொள்ளப்பட்டுள்ளன.
			- 2022 டிசம்பர் 04 ஆம் திகதி அனுராதபுரம், திறப்பனைப் பண்ணை பயிற்சிப் பாடசாலை திறக்கப்பட்டதுடன் 2023 ஜனவாரி 13 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அதில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயம் தொடர்பான பயிற்சிகளை ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
		1.2: விவசாய சந்தைப்படுத்தல் - உற்பத்திக் கழகங்கள் மற்றும் உற்பத்தி சங்கங்கள் என்பவற்றை நிறுவி அவற்றின் திறன்களை விருத்தி செய்தல். - சந்தையுடன் உற்பத்தி சங்கங்களை இணைத்தல் - அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்தல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடத்துதல் - கமநல சேவை நிலையங்களின் நவீனமயமாக்கல்/ மறுசீரமைப்பை மேற்கொள்ளல் - கமநல சேவை நிலையங்களை தொழில்நுட்ப ரீதியாக விருத்தி செய்தல் - கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய உபகரணங்களை வழங்குதல் - கமநல சேவை நிலையங்களுக்கு மண் பரிசோதனைக் கருவிகளை வழங்குதல் - கமநல சேவை நிலைய அலுவலர்களுக்கான பயிற்சி - விவசாய பாதைகளை புனரமைத்தல் - விவசாய கிணறுகளை புனரமைத்தல் - சிறிய அளவிலான தானியக் களஞ்சியங்கள் மற்றும் நடுத்தர அளவிலான தானியக் களஞ்சியங்களை நிர்மாணித்தல் - வன விலங்கு பாதுகாப்பு	- 18,854 விவசாயிகள்/ விவசாயக் குடும்பங்களினால் 12184 மெ. தொன் திண்ம உரம் மற்றும் 7661 விவசாயிகளால் 24,697 லிட்டர் திரவ உரம் என்பன உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன் அத்திண்ம மற்றும் திரவ உரங்கள் முறையே 3698 ஹெக்டேர் மற்றும் 2114 ஹெக்டேர்களுக்கு பயன்படுத்தப்பட்டன. - இந்த ஆண்டில் 139 உற்பத்திச் சங்கங்கள், 7 உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கான பயிற்சிகள் வழங்கபட்டுள்ளன. தற்போது 575 உற்பத்தி சங்கங்களும் 25 உற்பத்தி நிறுவனங்களும் உள்ளன. 30 உற்பத்திச் சங்கங்களை சந்தையுடன் தொடர்புபடுத்தும் திட்டத்தின் கீல்ஸ், கார்கில்ஸ், கோல்டன் ஃபுட், மலிபன், பிரிமா ஆகிய 09 பிரதான வர்த்தக நிறுவனங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. - அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவம் , சந்தைப்படுத்தல் தொடர்பான 5 பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. - இதுவரை 47 கமநல சேவை நிலையங்களில் 40 புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன் 05 நிலையங்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. - கமநல சேவை நிலையங்களின் தொழில்நுட்ப அபிவிருத்திக்காக துணை செயற்திட்ட முன்மொழிவு நிறைவு செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களம் தனியானதொரு மென்பொருளை உருவாக்கி வருவதால், அந்த திட்டத்துடன் தொடர்பான தொழில்நுட்பக் கருவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
		வேலிகளை அமைத்தல்	கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. - 47 கமநல சேவை நிலையங்களுக்கு விவசாய உபகரணங்கள், விவசாய ஆலோசகர்களுக்கான மண் பரிசோதனை கருவிகள் என்பன வழங்கப்பட்டுள்ளன. - 09 விவசாயப் பாதைகள் (6.39 கி.மீ.) புனரமைக்கப்பட்டுள்ளன. 300 பாதைகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 55 பாதைகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது, 24 பாதைகளுக்கு ஒப்பந்தம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், 89 பாதைகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. - 377 விவசாய கிணறுகளின் புனரமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன. மேலும் 124 கிணறுகளின் பணிகள் நடைபெற்று வருகின்றன. விவசாய கிணறுகள் அமைப்பதற்காக சம்பந்தப்பட்ட விவசாய அமைப்புகளுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கபட்டுள்ளன. - 11 சிறிய அளவிலான தானியக் களஞ்சியங்களின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன், முல்லைத்தீவில் நடுத்தர அளவிலான களஞ்சியசாலையை அமைப்பதற்கான ஒப்பந்தமும் வழங்கப்பட்டுள்ளது. - 275 பாதுகாப்பு வேலி அலகுகளை (1292 கிமீ) அமைப்பதற்கு அடையாளம் காணப்பட்டுள்ளது. இதன் மூலம் 4202 ஹெக்டேர் நெல் வயல்களுக்கான பாதுகாப்பு வழங்கப்படுவதுடன் இதன் மூலம் பயன்பெறும் விவசாயிகளின் எண்ணிக்கை 16724 ஆகும். (8929 ஆண்கள் மற்றும் 7795 பெண்கள்).
2. **விவசாயத்துக்கான நீர்**	காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய நடவடிக்கைகளுக்கு நீர் மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகளை திட்டமிடுவதற்கு உதவுதல். மத்திய மற்றும்	2.1 நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல்: - 932 குளங்களுக்கான நீர் திறன் ஆய்வுகள் - பங்கேற்பு கிராமிய அணுகுமுறைகள் மூலம் அதிக முன்னுரிமைப்படுத்த வேண்டிய வலய விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் - குளங்களுக்கான பொறியியல் ஆய்வுகள்	- இதுவரை குளங்களின் நீர்ச் சமநிலை பற்றிய 786 ஆய்வுகள், 14 நீர் சாத்தியக்கூறு ஆய்வுகள் மற்றும் 154 குள அடுக்கைத் தொகுதிகள் மற்றும் 14 ஆற்றுப் படுகைகளின் நீரியல் ஆய்வுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. - 47 கமநல சேவை நிலையங்களையும் உள்ளடக்கும் வகையில் முன்னுரிமைப்படுத்த வேண்டிய வலயங்களின் விவசாய அபிவிருத்தித் திட்டங்களை

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
	மாகாண அரசுகளுடன் இணைந்து நிர்மாணிக்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை பிரதேச மக்களுடன் இணைந்து கூட்டாகப் பராமரிப்பதற்கும் மற்றும் செயற்படுத்துவதற்கும் உதவுதல்.	- நீர்ப்பாசனத் தொகுதிகளை மறுசீரமைத்தல் 2.2 நீர்ப்பாசனத் தொகுதிகளின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு: - சமூக கணக்காய்வுக் குழுக்களை நிறுவுதல் மற்றும் அவற்றின் திறன் விருத்தி - அனைத்து முன்னுரிமைப்படுத்த வேண்டிய வலயங்களிலும் குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ குழுக்களை நிறுவுதல் மற்றும் பயிற்சி - விவசாய அமைப்புகளின் திறன் விருத்தி - நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தாவரங்களைப் பாதுகாப்பதற்கும், மண் அரிப்பு மற்றும் ஏரிகளின் வண்டல் மண் படிவதைத் தடுப்பதற்கும் குள அடுக்கைத் தொகுதி முகாமைத்துவ குழுக்கள் மூலம் துணைச் செயற்திட்டங்களைச் செயல்படுத்துதல். - சூழல், சமூக மற்றும் பாலினம் என்பவற்றுடன் தொடர்பான செயற்திட்ட செயற்பாடுகளுக்கான மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்	தயாரித்து நிறைவு செய்தல் - 803 குளங்களுக்கான பொறியியல் ஆய்வுகளை நிறைவு செய்தல் - 42 நீர்ப்பாசனத் தொகுதிகளின் பௌதீக மறுசீரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் புனரமைக்க வேண்டிய நிலையில் உள்ள 224 களில் 38 தொகுதிகள் இறுதி கட்டத்தில் உள்ளன. - 2022 ஆம் ஆண்டில் 132 சமூக கணக்காய்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை உருவாக்கப்பட்டுள்ள மொத்த குழுக்களின் எண்ணிக்கை 268 ஆகும். - 04 குள அடுக்கை முகாமைத்துவக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன. - விவசாய அமைப்புகளின் திறன் விருத்தித் திட்டங்கள் குளங்களின் மறுசீரமைப்பு செயல்முறையுடன் ஆரம்பமாகும். - நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தாவரங்களைப் பாதுகாக்கவும், மண் அரிப்பைத் தடுக்கவும் மர நடுகைத் செயற்திட்டம் நடைபெற்று வருகிறது. இதுவரை இச்செயற்த்திட்டம் செயற்படுத்தப்படும் பகுதிகளில், 800க்கும் மேற்பட்ட மரங்கள் நடப்பட்டுள்ளன. - குளங்கள், விவசாய பாதைகள், விவசாய கிணறுகள் மற்றும் பயிர்ச் செய்கைகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டதும் சூழல், சமூக மற்றும் பாலின சமூகநிலை என்பவற்றை உள்ளடக்கும் வகையிலுமான செயற்திட்ட செயற்பாடுகளை சரிபார்க்கும் மதிப்பீட்டை தொழில்நுட்ப அதிகாரிகள் மேற்கொண்டு, இதுவரை 69 அறிக்கைகளைத் தயாரித்து சமர்ப்பித்துள்ளனர்.
3. செயற்திட்ட முகாமைத்துவம்	தேசிய மற்றும் மாகாண ரீதியிலான செயற்திட்ட செயற்பாடுகளை வினைத்திறனான முறையில் ஒருங்கிணைப்பதன் மூலம் செயற்திட்ட முகாமைத்துவத்தின் தரத்தை உறுதிப்படுத்தல்.	- தகவல், கல்வி, தொலைத்தொடர்பு நிகழ்ச்சித் திட்டங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு வரல். - செயற்திட்டத்தை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சிகள், செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை (காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன	- இதுவரை 735 நிகழ்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் 26731 பயனாளர்கள் பங்கேற்றுள்ளனர். - தேசிய மற்றும் மாகாண மட்டங்களில், நிகழ்ச்சித் திட்ட அறிமுக நிகழ்ச்சிகள், சமூகப் பாதுகாப்பு, சூழல் முதலிய விடயத்துடன் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளும், பாலினத்துடன் தொடர்புடைய 99 பயிற்சி நிகழ்ச்சிகளும் சமூக கணக்காய்வுக் குழுக்களுக்கான 76 பயிற்சி நிகழ்ச்சிகளும்

கூறு	நோக்கம்	செயற்பாடு	2022 ஆம் ஆண்டின் முன்னேற்றம்
		விவசாயம், ஒழுங்குறுத்துகை மற்றும் மதிப்பீடு, சமூக மற்றும் சூழல், நீரியல், கொள்வனவு, புவியியல் தகவல் முறைமை) நடாத்துதல். - தேசிய, மாகாண மற்றும் மாவட்ட ரீதியிலான வருடாந்த செயல் திட்டங்கள் (மதிப்பீடுகளுடன்) தயாரித்தல் மற்றும் முன்னேற்ற அறிக்கை தயாரித்தல் - செயற்திட்டம் தொடர்பாக அடிப்படை கருத்துக்கணிப்பை நடாத்தல் - பயனாளிகளின் தரவுத்தளத்தை தயாரித்தல் - முகாமைத்துவ தரவுத் தளத்தை உருவாக்குதல் - செயற்திட்ட விளைவுக் காட்டிப் பெறுமானங்களை மதிப்பீடு செய்வதற்கான ஆய்வுகள் - இடைக்கால மீளாய்வை நடத்துதல்	நடத்தப்பட்டுள்ளன. - 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மீதமுள்ள செயற்திட்டக் கால எல்லைக்குள் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்யும் பொருட்டு 02 நாள் செயலமர்வொன்றும், ஆண்டின் இறுதியில், 2023 ஆண்டுக்கான வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரிப்பதற்கான செயலமர்வு ஒன்றும் நடாத்தப்பட்டு திட்டத்திற்கான அங்கீரத்தைப் பெறுவதற்காக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மாதாந்த மற்றும் காலாண்டு முன்னேற்ற அறிக்கைகள் உரிய முறையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. - அடிப்படை கணிப்பீடு நடத்தப்பட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. - 65,000 செயற்திட்டப் பயனாளர்களின் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. - முகாமைத்துவ தரவுத் தொகுதி தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், தென் மாகாணத்திலுள்ள செயற்திட்ட உத்தியோகத்தர்களுக்கு தரவுத் தொகுதியை செயற்படுத்துவது தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டின் முதல் வாரத்தில் இந்தப் பயிர்ச் நிகழ்ச்சியை ஏனைய மாகாணங்களிலும் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. - செயற்திட்ட பெறுபேறுகளின் குறிகாட்டி மதிப்புகளை மதிப்பிடுவதற்கு ஆலோசனைக் குழுவினால் ஒரு இடைக்கால மீளாய்வு நடத்தப்பட்டு, அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. - உலக வங்கி இடைக்கால மீளாய்வை நடாத்தி அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

புகைப்பட இலக்கம் 10,11,12 மற்றும் 13 - பக்க இலக்கம் 81

3. சிறிய அளவிலான விவசாய வியாபர கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டம் (SAPP)

3.1. அறிமுகம்

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் இலங்கை அரசு (GOSL) என்பன இணைந்து சிறிய அளவிலான விவசாய வியாபார கூட்டாண்மை நிகழ்ச்சித் திட்டத்திற்கான (SAPP) நிதியுதவியை வழங்குகின்றன. இந்த நிகழ்ச்சித் திட்டம் 4P அணுகுமுறை (பொது, தனியார், உற்பத்தியாளர் மற்றும் கூட்டாண்மை) மூலம் தெரிவு செய்யப்பட்ட விவசாயத் துறைகளில் பெறுமதிச் சங்கிலியை வலுப்படுத்துவதற்கு பங்குதாரர்களுக்கு (தனியார் நிறுவனங்கள், விவசாயிகள் அமைப்புகள் மற்றும் சிறிய அளவிலான விவசாயப் பயனாளர்கள்)

மானியங்கள் மற்றும் கடன் உதவிகளை சலுகை வட்டி விகிதத்தில் வழங்குகிறது. இந்த செயற்திட்டமானது உரிய பங்குதாரர்களின் உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தல், வணிக ரீதியான கூட்டாண்மையை உருவாக்கல் மற்றும் உத்தரவாதமான சந்தை வாய்ப்புளுக்கான இணைப்புகளை ஏற்படுத்தல் என்பவற்றுக்கு ஒத்துழைப்புகளை வழங்குகிறது. மேலும், SAPP செயற்திட்டமானது சிறிய அளவிலான விவசாயிகளுக்கு அவர்களின் விவசாய சங்கங்களை பலப்படுத்துவதற்கான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குதல் மற்றும் விவசாய பாதைகள் மற்றும் அணைக்கட்டுகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் சாதகமான கொள்கை ரீதியான சூழலை உருவாக்குதல் என்பவற்றுக்கு உதவுகின்றது.

3.2. சுருக்கமான முன்னேற்றம்

மானியங்கள் மற்றும் கடன் உதவிகள் என்பவற்றின் ஊடாக நாடு முழுவதும் காணப்படும் 57,500 சிறிய அளவிலான விவசாயப் பாவனையாளர்களை சென்றடைவதே இச்செயற்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில், SAPP நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 32,774 பயனாளிகள் பயனடைந்துள்ளனர் (4P, இளைஞர்கள் மற்றும் வருமானப் பிறப்பாக்கல் கடன்களின் கீழ் பயனாளிகள்). இது மொத்த செயற்திட்ட இலக்கில் 57% ஆகும்.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் 4P மாதிரியின் கீழ் 36 துணைச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் தற்போது 37,445 பயனாளிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை அதில் 27,207 பேர் பயனடைந்துள்ளனர். இந்த துணைச் செயற்திட்டங்கள் பால் உற்பத்தி, தேயிலை, வாசனைப் பொருட்கள், தானியங்கள் மற்றும் அவரையினப் பயிர்கள், மலர்ச் செய்கை, மற்றும் காய்கறி உற்பத்தி ஆகிய விவசாயத் துறையின் பிரதான பிரிவுகளை உள்ளடக்கியுள்ளன.

கடன்கள் மற்றும் மானியங்கள் இரண்டும் உள்ளடங்களாக 4P இன் கீழ் இதுவரை 6,715 ரூபா. மொத்த முதலீடாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதில் 4P இன் கீழ் 2,896 மில். ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு மேலதிகமாக, 2,500 இளைஞர்களை இலக்காகக் கொண்ட இளைஞர் தொழில் முனைவோர் செயற்திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் அதிலிருந்து இதுவரை 1,600 பேர் பயனடைந்துள்ளனர், இதற்காக 1,120 மில்லியன் ரூபா மானியம் மற்றும் கடனுதவியின் கீழ் முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வருமானப் பிறப்பாக்கக் கடன் திட்டப் (Income Generation Loans) பிரிவின் கீழ் SAPP இனூடாக இதுவரை 3,967 பயனாளிகளுக்கு 467.1 மில். ரூபா பெறுமதியான கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பண்ணைக்கு வெளியேயான அபிவிருத்தி நடவடிக்கைகள் (பிரவேசிக்கும் பாதைகள், நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு) அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றின் ஊடாக 21 செயற்திட்டங்களுக்காக 105 மில்லியன் ரூபா செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை அதிலிருந்து 39 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

2022 டிசம்பர் மாத 31 ஆம் திகதி வரையில், 2022 ஆம் ஆண்டிற்கான நிதி இலக்குடன் (2,000 மில். ரூபாய்) ஒப்பிடுகையில், 76% பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சித் திட்டத்தின் திட்ட வரவுசெலவுக்கு அமைவாக, (அதாவது 12,056 மில். ரூபா.), 2022 டிசம்பர் மாத 31 ஆம் திகதி வரையில், 45% ஒட்டுமொத்த நிதி முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

3.3. தொலைநோக்கு

சிறிய அளவிலான விவசாயிகளின் வறுமையை இல்லாதொழிக்கவும் போட்டியிடும் ஆற்றலை அதிகரிக்கவும் பங்களிப்பு செலுத்துதல்.

3.4. செயற்பணி

வர்த்தக ரீதியாக உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள சிறிய அளவிலான விவசாயிகளின் (57,000 குடும்ப அலகுகள்) வருமானத்தை (20% -30% வீதத்தால்) மற்றும் உண்ணும் உணவின் தரத்தை நிலைபேறான விதத்தில் அதிகரித்தல்.

3.5. நோக்கங்கள்

i.) தனியார் துறையுடன் இணைந்து சிறிய அளவிலான விவசாயிகள் மற்றும் அவர்களது நிறுவனங்களுக்கான சந்தை வாய்ப்புகளுக்கு அணுகும் திறனை அதிகரித்தல்.

ii.) SAPP இன் கீழ் சிறிய அளவிலான விவசாயிகளுக்கு நிலைபேறான விதத்தில் மற்றும் ஈடுகொடுக்கக்கூடிய பெறுமானத்தில் கிராமப்புற நிதிச் சேவைகளின் கிடைக்கும் தன்மையை அதிகரித்தல்.

iii.) சிறிய விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட சமமான மற்றும் நிலைபேறான விவசாய வியாபார அபிவிருத்திக்கான கொள்கை சூழலை விருத்தி செய்தல்.

3.6. செயற்திட்டத்தின் விபரங்கள்

செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த தினம்	2017 ஜூன் 26	
உத்தேச செயற்திட்ட காலஎல்லை	06 வருடங்கள்	
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த தினம்	2017 ஜூன் 26	
செயற்திட்ட காலஎல்லை நீட்சி	2 ஆண்டுகள் (IFAD அங்கீகாரம் கிடைத்துள்ளது / அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது)	
நிதி வழங்கல் மூலம் (வெளிநாட்டு நிதியுதவு)	விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) – 54.4 மில்லியன் அமெரிக்க டொலர்	
நிதி வழங்கல் மூலம் (இலங்கை அரசின் நிதி/ சமவலு நிதி)	திறைசேரி, இலங்கை அரசு (19.3 மில்லியன் அமெரிக்க டொலர்)	திரட்டு நிதி (வரி மற்றும் ஊழியர்களின் சம்பளத்திற்கு)
		Revolving fund (for Credit) சுழற்சி நிதி (கடன் வழங்க)
சம்பத்தப்பட்ட துறை	விவசாய அபிவிருத்தி	
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	செயற்திட்ட முகாமைத்துவ அலகு - கமத்தொழில் அமைச்சின் கீழ் SAPP	

3.7. செயற்திட்ட கூறு

கூறு	செலவு மதிப்பீடு (மில். ரூபா)
கூறு 1. வர்த்தக கூட்டாண்மைகளுக்கான அணுகல்	5,966.00
கூறு 2. கிராமிய நிதி வசதிகளுக்கான அணுகல்	5,086.00
கூறு 3. நிகழ்ச்சித் திட்ட முகாமைத்துவம் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல்	1,004.00

3.8. கூறுகளுக்கு அமைவாக முன்னேற்றம் - 2022

கூறு	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)
கூறு-1	1,006.20	625.67
கூறு-2	750.40	737.42
கூறு-3	243.40	159.90
மொத்தம்	**2000.00**	**1,522.99**

4. சிறிய அளவிலான விவசாய வர்த்தக முயற்சிகளுக்குப் பாதகமான தாக்கங்களைக் குறைப்பதற்கான செயற்திட்டம் (SARP)

4.1 அறிமுகம்

காலநிலை மாற்றம் இன்று இலங்கைக்கு ஒரு பாரிய சவாலாக மாறியுள்ளது. மேலும் அதிக மற்றும் குறுகிய கால மழை வீழ்ச்சி, இடையிடையே ஏற்படும் அதிக வெப்பமான கால எல்லைகள் மற்றும் நீண்ட வறட்சியான காலங்கள் போன்ற நிலைமைகள் உருவாகும் தன்மை படிப்படியாக அதிகரித்துள்ளது.

நிலைபேறாற்ற நிலப் பயன்பாட்டு வழிமுறைகள் காரணமாக ஏற்பட்டுள்ள சூழல் மற்றும் விவசாய நில அழிவுகள், காலநிலை மாற்றங்களின் தாக்கங்கள் காரணமாக காலநிலை மாற்றத்தின் விளைவுகளால் ஏற்படும் அதிக மழைவீழ்ச்சி, வெள்ளப் பெருக்கு மற்றும் வறட்சி ஆகியவற்றால் மேலும் தீவிரமடைந்துள்ளது. இந்த நிலை உலர் வலயத்தில் பிரதான நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளை விட, கிராமப்புற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களின் கீழ் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் மற்றும் மானாவாரி பயிர்ச் செய்கை முறையில் பிரதானமாக தங்கியிருக்கும் சிறிய அளவிலான விவசாயிகளை அதிகளவில் பாதித்துள்ளது. மேலும், தீவிர நிகழ்வுகளின் விளைவாக உற்பத்தித்திறன் மற்றும் பயிர் விளைச்சல் என்பவற்றில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன் சிறிய அளவிலான விவசாயிகள் உணவுப் பற்றாக்குறையையும் எதிர்கொண்டுள்ளனர். இவை அவர்களை கடன் சுமையில் சிக்கவைத்து விடுகிறது. இது அவர்களை வறுமையின் ஆழத்திற்குக் கொண்டுசெல்ல வழிவகுப்பதுடன் காலநிலை அபாய நேர்வுகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கும் அவர்களின் ஆற்றலை அது மேலும் குறைத்து விடுகிறது.

எனவே, இலங்கையின் புத்தளம், குருநாகல், மத்தளை, அனுராதபுரம், வவுனியா மற்றும் மன்னார் ஆகிய ஆறு உலர் வலய மாவட்டங்களில் விவசாய வணிகமயமாக்கலை ஊக்குவிக்கும் அதே வேளையில், 40,000 சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் அல்லது 180,000 தனிநபர்களுக்கு காலநிலை மாற்றத்தின் பதிப்புகளால் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதே இந்தச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD), இலங்கை அரசாங்கம் மற்றும் ஏனைய அபிவிருத்தி முகவர் நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட இந்த செயற்திட்டத்திற்கு சுமார் 30,000 மில்லியன் ரூபாவை முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் இதன் செயற்திட்ட காலஎல்லை 2021 முதல் 2026 வரை ஆகும்.

4.2. தொலைநோக்கு

இலங்கையின் உலர் வலய சிறிய அளவிலான காணி உரிமையாளர்களின் வறுமை ஒழிப்பு மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பு செலுத்தல்.

4.3. செயற்பணி

காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை குறைக்கும் பொருட்டு, உலர் வலய சிறிய அளவிலான விவசாய காணி உரிமையாளர்கள், பெறுமதிச் சங்கிலியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் அவர்களுக்கு சேவை வழங்கும் நிறுவனங்கள் என்பவற்றின் திறன் விருத்தி மற்றும் செயற்திட்ட பயனாளிகளின் காலநிலை மாற்றத்தை எதிர்க்கும் தன்மையை அதிகரித்தல் மற்றும் பெறுமதிச் சங்கிலிக்கு உதவி வழங்கல் என்பவற்றுக்கு முதலீடு செய்தல்.

4.4. நோக்கங்கள்

40,000 உலர் வலய சிறிய காணி உரிமையாளர் குடும்பங்களுக்கு (180,000 பேருக்கு) காலநிலை மாற்றத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை எதிர்கொள்ளும் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் பெறுமதி சங்கிலி அபிவிருத்தி என்பவற்றின் ஊடாக சந்தைப் பங்கேற்பைக் மேம்படுத்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சுமார் 28,000 குடும்பங்களின் வருமானத்தை 30% உயர்த்துதல்.

4.5. செயற்திட்டத்தின் விபரங்கள்

விடயங்கள்	செயற்திட்டத்தின் விபரங்கள்
செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆரம்பித்த தினம்	2021 ஜூன் 10
உத்தேச செயற்திட்ட காலஎல்லை	2021-2026
செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்த தினம்	2022 செப்டம்பர் 30 ஆம் திகதி செயற்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

செயற்திட்ட காலஎல்லை நீட்சி	பொருந்தாது	
நிதி வழங்கல் மூலம்	**மூலம்**	**மில்லியம் அமெரிக்க டொலர்**
	விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD)	42.7
	இலங்கை அரசாங்கம்	12.7
	பயனாளர்கள்	13.2
	தனியார் துறை	1.7
	UNDP, UNOPS, WFP	11.7
	மொத்தம்	**82.0**
சம்பத்தப்பட்ட துறை	விவசாயப் பிரிவு	
பொறுப்பாகவுள்ள நிறுவனங்கள்	செயற்திட்ட முகாமைத்துவ அலகு, கமத்தொழில் அமைச்சு	

4.6. செயற்திட்ட கூறுகள்

கூறு	**செலவு மதிப்பீடு (மில். ரூபா)**
செயற்திட்டம் இரண்டு தொழில்நுட்ப கூறுகள் மற்றும் ஒரு முகாமைத்துவ கூறை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அதன் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளும். மொத்த செயற்திட்டச் செலவு எதிர்பாரா செலவினம் உள்ளடங்களாக 29,923.07 மில். ரூபா ஆகும்.	
கூறு 1 காலநிலைக்கு ஈடுகொடுக்கும் ஆற்றல் மற்றும் பெறுமதி சங்கிலிகள் மற்றும் காலநிலைக்கு உணர்திறன் என்பன தொடர்பான முதலீடுகளுக்கான திறனை உருவாக்குதல்.	3,846.74
கூறு 2 காலநிலைக்கு ஈடுகொடுக்கும் ஆற்றலை அதிகரிக்கும் பொருட்டு உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் பெறுமதி சங்கிலி அபிவிருத்திக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கான முதலீடுகளை மேற்கொள்ளல்	21,274.39
கூறு 3 செயற்திட்ட முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு.	1,612.21

4.7. கூறுகளுக்கு ஏற்ப முன்னேற்றம் / 2021

கூறு	**ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)**	**செலவு (மில். ரூபா)**
கூறு-1	ஒதுக்கீடு பற்றி குறிப்பிடப்படவில்லை	செலவு பற்றி குறிப்பிடப்படவில்லை *.
கூறு-2		
கூறு-3	34.45	8.11**
மொத்தம்	**34.45**	**8.11**
குறிப்பு - * இந்த செயற்திட்டம் 2022 செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதன் காரணமாக கூறு - 1 மற்றும் 2 இன் கீழ் செலவுகள் குறிப்பிடப்படவில்லை. ** 8.11 மில். ரூபா என்று குறிப்பிடப்பட்டுள்ள செலவு சம்பளம், இயக்கச் செயற்பாடு, அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் பெறுகை நடவடிக்கை என்பவற்றுக்கான செலவுகளாகும்.		

5. இலங்கையின் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையை நவீனமயப்படுத்தல் *(Modernization of Plant National Plant Quarantine Service (KOICA)*

5.1. அறிமுகம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் தரச் சான்றுப்படுத்தும் செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்யும் பொருட்டு கட்டுநாயக்க தாவர தனிமைப்படுத்தல் சேவை தலைமையகம் *(National Plant Quarantine Service Headquarter),* பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் தாவர தனிமைப்படுத்தல் நிலையம் *(Bandaranayaka International Airport)* மற்றும் கொழும்புத் துறைமுக தாவர தனிமைப்படுத்தல் நிலையம் *(Seaport Quarantine Station)* ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்கில் கொரிய அரசாங்கத்தின் நிதியுதவியாக *6.00* மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது. *2009* முதல் *2022* வரையிலான *13* ஆண்டு செயற்திட்ட கால எல்லைக்குள் இந்த செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. தாவர தனிமைப்படுத்தும் திறனை விருத்தி செய்வதே இதன் பிரதான நோக்கமாகும்.

தாவர தனிமைப்படுத்தல் தொடர்பான ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு வழிமுறைகளுக்கு அமைவாக செயற்படுத்துவதற்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல், தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் நிபுணர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான திறன் விருத்தி, கொழும்புத் துறைமுக தாவரத் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு தேவையான கட்டிடங்களை நிர்மாணித்தல், ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல் மற்றும் சிறந்த விவசாய நடைமுறைகள் *(GAP)* சான்றுப்படுத்தலுக்கான உதவிகளை வழங்குதல் என்பன இந்த செயற்திட்டத்தின் பிரதான இலக்குகளாகக் காணப்படுகின்றன.

5.2. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
KOICA நிதியுதவியின் கீழ் தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையை விருத்தி செய்தல்	தேசிய தாவரத் தனிமைப்படுத்தல் சேவையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு *KOICA* நிறுவனத்தினால் ஒதுக்கப்பட்ட மொத்த உதவித் தொகை *6.00* மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும். *2022* ஆம் ஆண்டிற்கான *KOICA* நிறுவனத்தின் நிதியுதவி *(FF) 15.00* மில். ரூபா மற்றும் உள்நாட்டு நிதி *(CF) 15.00* மில். ரூபாவும் ஆகும். அதாவது, செலவுத் தலைப்பு இலக்கங்கள் *118-2-3-046-2509-17* மற்றும் *118-2-3-046-2509-13* ஆகியவற்றின் கீழ் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து *2022* ஆம் ஆண்டிற்காக மொத்தம் *30.00* மில். ரூபா நிதியானது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.	*2022* டிசம்பர் மாத இறுதியில் *(CF)* செலவிடப்பட்ட தொகை *0.12* மில் ரூபாய் ஆகும். செலுத்த வேண்டிய விலைப்பட்டியல்களின் பெறுமதி *3.76* மில். ரூபாய் ஆகும். கட்டிட நிர்மாணப் பணிகள் கொரிய அரசின் மேற்பார்வையில் கீழ் நடைபெறுகிறன.

5.3. பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்த பௌதீக முன்னேற்றம்
i.VAT for construction	கட்டிட நிர்மாணத்திற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	கட்டணம் செலுத்தப்பட்டது.
ii.VAT for Procurement of Equipment		கட்டணம் செலுத்தப்பட்டது.
iii. Payment for UDA Approval		அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.
iv. Miscellaneous		செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்பான ஏனைய பணிகளுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

6. தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் உபகரணங்களை புதுப்பித்தல் மற்றும் பெறுகை நடவடிக்கைகளுக்கான திட்டமிடல் (Plan for Repairing and Procurement of Equipment for National Plant Quarantine Service (JICA)

6.1. அறிமுகம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்யப்படும் தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திகளின் தரத்தை *(Phytosanitary)* சான்றுப்படுத்தும் பொறுப்பைச் சுமந்த நிறுவனமாக தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவை *(NPQS)* காணப்படுகிறது. அதன் அடிப்படையில், *NPQS* நிறுவனம் நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை அதிகரிப்பதில் இன்றியமையாத ஒரு பங்களிப்பை வழங்கும் ஒரு அத்தியாவசியப் பணியை செய்கிறது.

சர்வதேச தாவர பாதுகாப்பு உடன்படிக்கையில் *(IPPC)* கைச்சாத்திட்டுள்ள ஒரு பங்காளராக இலங்கை காணப்பட்டுவதன் காரணமாக, குறித்த உடன்படிக்கையின் பிரகாரம், *IPPC* நிர்ணயித்த தரநிலைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்வது இலங்கை அரசின் பொறுப்பாகும். எனவே, இலங்கை அரசாங்கம் இறக்குமதி செய்யும் தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களின் தாவரச் சுகாதார தரநிர்ணயங்கள் *(Phytosanitary Standards)* தொடர்பாக பிற நாடுகளின் சான்றுப்படுத்தும் தேவையை புரிந்துகொண்டு, இலங்கையிலிருந்து பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு முன்னர் அந்த தரநிலைகள் பூர்த்தி செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதன்படி, *NPQS* என்பது பிற நாடுகளின் இறக்குமதித் தேவைகளுக்கு ஏற்ப தயாரிப்புகளின் தாவர பாதுகாப்பு தர நிர்ணயங்களை சான்றளிப்பதற்குப் பொறுப்பான ஒரு நிறுவனமாகும்.

இந்தப் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் *1994* ஆம் ஆண்டு ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியின் கீழ் *NPQS* நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இந்த சேவையை அபிவிருத்தி செய்வதற்காக தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு *JICA* நிறுவனம் மீண்டும் இலங்கை நாணயப்படி *259.60* மில். ரூபாய் நிதியுதவி வழங்கியது.

6.2. நிதி முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
தேசிய தாவர தனிமைப்படுத்தல் சேவையின் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்தல் *(JICA* நிறுவனத்தின் ஊடாக நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.*)*	*JICA* நிறுவனத்தின் ஊடாக தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு நிதியுதவியாக கிடைத்த மொத்தத் தொகை *259.60* மில். ரூபா ஆகும். *2022* ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு மதிப்பீட்டில் இதற்கான ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை. மேலும் *2021* ஆம் ஆண்டில் கொள்வனவுக் கட்டளைப் பிறப்பிக்கப்பட்ட உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு *5.94* மில். ரூபா நிதி உரிய செலவுத் தலைப்புக்கு மாற்றம் செய்யப்பட்டது.	*2022* ஆண்டு டிசம்பர் மாத இறுதி வரை செலவழிக்கப்பட்ட ஒட்டுமொத்த தொகை *225.40* மில். ரூபாய் ஆகும். *2022* ஆண்டு டிசம்பர் மாத இறுதி வரை செலவழிக்கப்பட்ட *5.94* மில். ரூபாய் ஆகும்.

6.3. பௌதீக முன்னேற்றம்

செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்த பௌதீக முன்னேற்றம்
1. செயல்திறன் பிணையைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் தேசிய போட்டி விலைமனுக் கோரும் நடைமுறையின் கீழ் உரிய வழங்குநர்களுடன் கேள்விப்பத்திர ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் *(Obtaining performance bond and the Agreement with Tender offered suppliers under National competitive Bidding Procedure)*	*17* ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்	கொள்வனவுக் கட்டளை பிறப்பிக்கப்பட்ட ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்து நிறுவுதல் *(*உபகரணங்கள் *- 17)*
2. கொள்வனவு செய்த ஆய்வுகூட உபகரணங்களை நிறுவுதல் மற்றும் அவற்றை செயற்படுத்தல் *(Supply Instaliation & Commisioning of Laboratory equipments)*		

7. படல்கம புதிய பால் பதப்படுத்தும் நிலையத்தை நிறுவுதல்

7.1. அறிமுகம்

மில்கோ நிறுவனத்திற்குரிய கொழும்பு, நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள பால் பதப்படுத்தும் தொழிற்சாலையை படல்கமவில் உள்ள தேசிய கால்நடை அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான சிரிங்கபாத பண்ணையில் நிர்மாணிப்பதற்குத் தீர்மானித்துள்ளது. இத்திட்டம் டென்மார்க் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுத்தப்பட்டு அதன் முதற்கட்டமாக கடந்த 18.05.2016 அன்று தொழிற்சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மீளாய்வு காலத்தின் முடிவில், மொத்த பௌதீக முன்னேற்றம் 97 % மற்றும் ஒவ்வொரு பணியின் முன்னேற்றம் பின்வருமாறு.

பணிகள்	பௌதீக முன்னேற்றம்(%)	முதலீடு
பால்தொழிற்சாலை கட்டிடத்தை நிர்மாணித்தல்	99	
நிருவாக மற்றும் அலுவலக கட்டிடம்	99	
சிற்றுண்டிச்சாலை கட்டிடம், தொழிலாளர் வசதிகளை உருவாக்குதல்	99	
பணியாளர் குடியிருப்புகள் மற்றும் பாதுகாப்பு சாவடிகள் கட்டுதல்	99	
மின் உற்பத்தி அலகுகளை நிர்மாணித்தல்	100	
இயந்திர மற்றும் மின்பொருத்துதல் தொடர்பான நடவடிக்கை	96	
இயந்திரப் பாகங்கள் மற்றும் கட்டுமாணப் பொருட்களின் 55 கொள்கலன்களை இறக்குமதி செய்தல்		யூரோ மில்லியன் 69.41
இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கு உள்ளூர் நிதியிலிருந்து வரி செலுத்துதல்		ரூ.மி.3.41

புகைப்படம் இல 14,15 மற்றும் 16- பக்க எண் 81

8. சிறிய அளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்ளை அமைத்தல்

8.1. அறிமுகம்

இலங்கையில் பால் உற்பத்தியினை மேம்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்தப்படும் இக்கருத்திட்டத்தின் முதன்மை நோக்கமானது உரிய பிரதேசங்களில் பெறுமதி சேர் பால் உற்பத்திப் பொருட்களினை உற்பத்தி செய்வதனூடாக சமூகத்தின் ஊட்டச்சத்து மட்டத்தினை அதிகரிப்பதுடன் பால் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டது. இதன்கீழ், 06 தெரிவு செய்யப்பட்ட சிறியளவிலான பால் உற்பத்தி நிலையங்களினை விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் இதற்காக 13.9 மில்லியன் யூரோவினை முதலீடு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒப்பந்த உடன்படிக்கையானது 2019.02.27 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் பால் சங்கம் 06 ல் நாளாந்தம் பாலுற்பத்தி 5,000 லீட்டர் ஆகும். 06 சிறியளவிலான பால் பதப்படுத்தும் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வாரியபொல சிறிய அளவிலான பால்தொழுவம் அபிவிருத்தி அறக்கட்டளை மற்றும் அத்தனகல்ல பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் ஆகிய பயனாளி அமைப்புகளுக்கு சொந்தமான தொழிற்சாலைகளில் முழுமையான ஆய்வு பணிகள் (Commissioning) ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த தொழிற்சாலையின் உற்பத்தி 2023 முதல் காலாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பணிகள் 2023 ஆம் ஆண்டில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது மற்றும் இதுவரை அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் பின்வருமாறு.

பால் பதப்படுத்தும் நிலையம்		பௌதீக முன்னேற்றம் (%)	விசேட குறிப்புகள்
01.	சிறியளவிலான பால் தொழுவம் அபிவிருத்தி அமைப்பு, வாரியபொல	98	முதற்கட்ட ஆய்வுகள் தொடங்கப்பட்டுள்ளன
02.	அத்தனகல்ல பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்	98	
03.	வ/ப மாவட்ட பால் வழங்குநர் கூட்டுறவு சங்கம், பொலன்னறுவை	97	இயந்திரங்கள் பொருத்தும் பணி முடிந்துள்ளது
04.	சக்சீட் இன்டர் நெஷனல் (தனியார்) நிறுவனம், வென்னப்புவ	95	
05.	வ/ப பல்நோக்கு கூட்டுறவு சங்கம்- நாவலப்பிட்டிய	95	
06.	ஹெரிடேஜ் அபிவிருத்தி சங்கம் –கெப்பட்டிபொல	50	இயந்திரங்கள் பொருத்தும் பணி ஆரம்பித்துள்ளது
கருத்திட்டத்துக்குரிய இயந்திரம் இறக்குமதிக்கான செலவு			2,627.85 ரூ.மி

புகைப்படம் இல 17,18,19,20,21 மற்றும் 22- பக்க எண் 82

விவசாயப் பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்

1. விவசாயத் திணைக்களம் (DOA)

1.1. தொலைநோக்கு

சிறந்த விவசாயத்தின் மூலம் தேசிய நல்லதிஷ்டத்தை அடைதல்.

1.2. செயற்பணி மற்றும் நோக்கங்கள்

புதிய மேம்படுத்திய விவசாய தொழில்நுட்பங்களை உருவாக்கி விரிவாக்கம் செய்வதனூடாக குறித்த சேவைகளை கூடிய முக்கியத்துவத்துடன், குறிப்பாக, விவசாயிகளுக்கும் பொதுவாக அனைத்துப் பங்குதாரார்களுக்கும் பெற்றுக்கொடுப்பதன் மூலம் தேசிய உணவு மற்றும் போசணைப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக உகந்த மற்றும் நிலைபேறான விவசாய அபிவிருத்தியொன்றை அடைந்து கொள்ளல்.

இந்தத் திணைக்களத்தின் பிரதான நோக்கங்களாக உணவுப் பயிர்ச் செய்கையில் உற்பத்திச் சாத்தியப்பாடுகளை அதிகரித்தல், நிலைபேறான விவசாயத்தைப் பாதுகாத்தல, உழைப்பு மற்றும் நிலத்தின் செயல்திறனை விருத்தி செய்தல், விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினரையும் பலப்படுத்தல், விவசாயத் துறையில் மனித வளத் திறன்களை விருத்தி செய்தல், பங்குதாரர்களுக்கு தரமான விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்தல், நிலம் மற்றும் நீர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தல், திட்டமிடல், கொள்கை முடிவுகள் மற்றும் கொள்கை வழிகாட்டுதல் ஆகியவற்றை வழங்குதல், விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் மற்றும் விவசாய உற்பத்திகளின் தர நிர்ணயங்களை பாதுகாத்தல், தீங்கு விளைவிக்கும் வெளிநாட்டு இனங்களிலிருந்து உள்நாட்டு தாவர இனங்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளல், விவசாய உற்பத்திகள் மூலம் அந்நியச் செலாவணியை அதிகரிக்க ஆரோக்கியமான தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு உதவி வழங்கல், பீடைகொல்லிகளின் பாதகமான விளைவுகளிலிருந்து பொதுமக்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளல், தாவர மரபியல் வளங்களின் நிலைபேறான பயன்பாட்டை உறுதி செய்தல் என்பன காணப்படுகின்றன.

மேலும், இந்த திணைக்களத்தின் பிரதான பணிகளாக ஆராய்ச்சிகளுக்கு ஊடாக பொருத்தமான புதிய வர்க்கங்களை மற்றும் விவசாயத் தொழில்நுட்பங்களை உருவாக்குதல், புதிய மேம்படுத்தப்பட்ட விவசாய தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு மத்தியில் விரிவாக்கம் செய்தல், உயர் குணாதிசயங்களைக் கொண்ட விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களை உற்பத்தி செய்து விநியோகித்தல், தாவர மரபணு வளங்களைப் பாதுகாத்தல், விதைச் சட்டம், தாவரப் பாதுகாப்பு சட்டம், பீடைநாசினி காட்டுப்பாட்டு சட்டம் மற்றும் மண் பாதுகாப்பு சட்டம் என்பவற்றை நடைமுறைப்படுத்தல், விவசாயக் கல்வியின் மூலம் விவசாயம் தொடர்பான தேசிய தொழிற் தகைமை (NVQ) 5 மற்றும் 6 ஆம் தரங்களுக்கான டிப்ளோமா பாடநெறிகளை நடாத்தல் மற்றும் விவசாயிகள் மற்றும் அதிகாரிகளின் திறன் விருத்திக்குத் தேவையான பயிற்சி நெறிகளை நடாத்தல் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன.

1.3. நிதிசார் முன்னேற்றம்

- 2022 ஆம் ஆண்டுக்கு விவசாயத் திணைக்கத்துக்குக் கிடைத்த ஒதுக்கீடுகள் மற்றும் 2022 டிசம்பர் மாதம் 31 வரையிலான செலவுகள்

செயற்திட்டம்	மீண்டுவரும்		மூலதன	
	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)
1. நிருவாக மற்றும் தாபனச் சேவைகள்	563.30	530.52	61.50	28.68
2. விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி	1,850.00	1,757.59	300.00	238.02
3. விரிவாக்கம் மற்றும் பயிற்சி	1,539.50	1,475.33	358.50	197.38
4. விதை சான்றுப்படுத்தல் மற்றும் தாவரப் பாதுகாப்பு	1,415.00	1,373.30	900.00	801.11

செயற்திட்டம்	மீண்டுவரும்		மூலதன	
	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)	ஒதுக்கீடு (மில். ரூபா)	செலவு (மில். ரூபா)
மொத்தம்	5,367.80	5,136.75	1,620.00	1,265.18

1.4. விவசாயத் திணைக்களத்தின் முன்னேற்றம் பற்றிய பொழிப்பு

i.) விவசாய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

- 2022 ஆம் ஆண்டில் 4 புதிய நெல் வர்க்கங்கள், 9 மரக்கறி வர்க்கங்கள், ஒரு காளான் வர்க்கம் மற்றும் ஒரு மரவள்ளி வர்க்கம் என்பன அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 6 மரக்கறி வர்க்கங்கள் கலப்பின (Hybrid) வர்க்கங்கள் ஆகும்
- நெற் செய்கையில் கபிலநிறத் தாவரத் தத்தியின் சேதத்தைக் கட்டுப்படுத்த ஒரு உயிரியல் கட்டுப்பாட்டு முகவர் கண்டறியப்பட்டது.
- சோளத்தின் மரபணுத் தூய்மைத் தன்மையை உடனடியாகப் பரிசோதிப்பதற்கான ஒரு வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. (SSR குறிப்பான்களை உருவாக்குதல்).
- பாசிப்பயறு மற்றும் கௌப்பி பயிர்களின் வளர்ச்சி மற்றும் விளைச்சலை அதிகரிக்கும் பொருட்டு புதிய முறை தழையிடும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- சிறிய விதைகளுக்கான புதிய விதை பூச்சு முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- நிலக்கடலை விதைகளின் விதை உறங்குநிலையை குறுகிய காலத்தில் நீக்கும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- காய்கறிச் செய்கையில் அசுவினியை கட்டுப்படுத்த, ஒரு அட்டை வடிவில் அசுவினிக்கான ஒட்டுண்ணியொன்றை 'அசுவினி கொல்லி' எனும் பெயரில் விவசாயக் களங்களுக்கு வழங்குவதன் மூலம் பீடை கொல்லிகளின் அதிகளவான பயன்பாட்டை தவிர்க்க முடிந்தது.
- சோளச் செய்கையில் படைப்புளு, மரக்கறிகள் மற்றும் ஏனைய பயிர்ச் செய்கைகளில் மயிர்க்கொட்டியின் சேதம் என்பவற்றை உயிரியல் ரீதியாக கட்டுப்படுத்துவதற்கு ஒட்டுண்ணிகள் பெருக்கம் செய்யப்பட்டு, அவை கண்டி, ஹம்பாந்தோட்டை, பதுளை, குருநாகல் மற்றும் அனுராதபுரம் மாவட்ட விவசாய களங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளன.
- காய்கறிப் பயிர்களில் பீடைகொல்லிகளின் எச்சங்களைப் பரிசோதிப்பதற்கான நொதியங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் துரித உயிரியக்கவியல் தொழில்நுட்பம் (Rapid bioassay technology) அறிமுகப்படுத்தப்பட்டது.
- மாம்பழங்களின் அறுவடைக்குப் பிந்தைய நோய்களை (பூஞ்சை நோய்கள்) கட்டுப்படுத்த இலக்டிக் அமில நொதித்தல் செயற்பாட்டின் மூலம் உருவாகும் இயற்கையான துணை விளைபொருட்களைப் பயன்படுத்தும் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- பலா மரத்தை ஒட்டுவதற்கான மிகவும் வெற்றிகரமான புதிய வழிமுறையொன்றும், இழைய வளர்ப்பு முறையின் மூலம் ஈரப்பலா நாற்றுகளை உற்பத்தி செய்யும் முறை யொன்றும் கண்டறியப்பட்டன.
- பயிர்ச் செய்கைக் களங்களில் காணப்படும் 'வெல் அனோதா' தாவரத்தின் வேர்களை ஒட்டுக்கட்டையாகப் பயன்படுத்தி முள்சீத்தாப் பழத்தை வெற்றிகரமாக ஒட்டும் முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- சேதன அன்னாசி உற்பத்திக்கு உகந்த மண் போசணை முகாமைத்துவ முறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது
- ஆய்வுகூட நிலைமைகளின் கீழ் 5% CaCl2 இனைப் பயன்படுத்துவன் மூலம் முள்சீத்தாப் பழத்தில் ஏற்படும் அந்தரக்னோஸ் நோயை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் எனவும் ஆய்வுகூட நிலைமைகளின் கீழ் கறுவா இலை மற்றும் கிராம்பு என்பவற்றின் பிரிதெடுப்புச் சாற்றைப் பயன்படுத்துவதன் மூலம் பனாமா நோயின் நோய்க் காரணியான Fusarium oxysporum ஐக் கட்டுப்படுத்த முடியும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.
- மாதுளைச் செய்கையில் பழ அழுகலை ஏற்படுத்தும் பூஞ்சன நோய்க் காரணி மற்றும் ட்ரைகோடோமா பூஞ்சனம் ஆகியவற்றினைப் பெருக்கம் செய்யும் முறை கண்டறியப்பட்டது.
- கொய்யா நாற்றுமேடைச் சாடிகளில் காணப்படும் நூற்புழுப் பாதிப்பை 1 மில்லி லீட்டர் ப்ளுவோபிராம் நூற்புழு நாசினியைப் பயன்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்த முடியும் எனக் கண்டறியப்பட்டது.
- அதிக அடர்த்தி கொண்ட அன்னாசி நடுகை முறையொன்று கண்டறியப்பட்டுள்ளது. (60x20cm).

- *30% பலாச் சுளை மா மற்றும் 70% கோதுமை மா என்பவற்றைப் பயன்படுத்தி நூடுல்ஸ் உற்பத்தி செய்ய முடியும் எனக் கண்டறியப்பட்டது.*
- *சலிசிலிக் அமிலத்தை (400 ppm) தாவரத்தின் இலைகளுக்குத் தெளிப்பதன் மூலம் முள்சீத்தாப் பழத்தில் பூத்தலைத் தூண்டலாம் முடியும் எனக் கண்டறியப்பட்டது.*
- *நாப்தலீன் அசிட்டிக் அமிலத்தை (5000 ppm) தெளிப்பதன் மூலம் முள்சீத்தாப் பழத்தின் மிக நீண்ட உறங்குநிலையை குறைக்க முடியும் என்று கண்டறியப்பட்டது.*
- *கொத்மலை பலா வர்க்கத்தின் சுளைகளில் இருந்து பெற்றுக்கொள்ளும் மா மற்றும் உளுஃபிட்டி வர்க்க ஈரப்பலாவின் மா ஆகியவற்றை பெறுமதி சேர்க்கும் உற்பத்திகளைத் தயாரிக்க வெற்றிகரமாகப் பயன்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டது.*
- *கவென்டிஷ் வாழை ஏற்றுமதிக்கான தொழில்நுட்பம் வழங்கப்பட்டது.*
- *2022 ஆம் ஆண்டில் "மண் மற்றும் நீர் பாதுகாப்பு தொழில்நுட்ப சஞ்சிகை" வெளியிடப்பட்டது.*
- *தேசிய விவசாய வானிலை தரவு கண்காணிப்பு வலையமைப்பு வெற்றிகரமாக பராமரிக்கப்பட்டு வருவதுடன், திருகோணமலை மாவட்ட விவசாய பயிற்சி நிலைய வளாகத்தில் ஒரு புதிய விவசாய வானிலை அலகு நிறுவப்பட்டது.*
- *மொரகஹகந்த புதிய விஷேட சேதன வலயத்திற்கு (3410 ஹெக்டயர்) மண் பகுப்பாய்வை அடிப்படையாகக் கொண்ட நிலப் பொருத்தபாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் வரைபடமாக்கல் மற்றும் ஒவ்வொரு வலயத்துக்கும் உகந்த பயிர் சிபாரிசு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.*
- *மா, மாதுளை, ரம்புட்டான், மாங்கோஸ்டீன், தூரியன் மற்றும் வாழை ஆகிய பழ வர்க்கங்களுக்கு இலங்கையில் காணப்படும் சாத்தியக்கூறுகள் வரைபடமாக்கப்பட்டுள்ளது.*
- *மண் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், உணர்திறன்கூடிய வலயங்களில் உள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான மண் பாதுகாப்புத் திட்டங்கள், மழைநீர் வடிகால் திட்டங்களைத் தாயரித்தல், காணி அபிவிருத்தி வரைபடங்களைத் தாயரித்தல், பொறியியல் வரைபடங்களைத் தாயரித்தல் மற்றும் விவசாய ஆலோசனை வலயங்களை அடையாளப்படுத்துவதற்கான வரைபடங்களைத் தயாரித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டன.*
- *காய்கறிச் செய்கை தொடர்பான முன்னறிவிப்பு முறைமையை (Vegetable early warning system) அறிமுகப்படுத்தியதன் மூலம், விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்குத் உகந்த மரக்கறி வகைகளைத் தெரிவு செய்வதற்கான சேவை வழங்கப்பட்டது.*
- *அறுவடை செய்வதற்கு முன் உணவுப் பயிர் உற்பத்தியை கணிப்பதன் மூலம் பயிர் உற்பத்தியைக் எதிர்வுகூற (Forecasting crop production) முடியுமாக இருந்தது.*
- *10 பயிர் எதிர்வுகூறல் வெளியீடுகள் வெளியிடப்பட்டன.*
- *உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்கான செலவுகள் (Cost of cultivation) தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டதுடன் போகங்களின் அடிப்படையிலான பயிர் உற்பத்திச் செலவுகள் (Cost of production) மற்றும் உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கையின் போது பெறக்கூடிய வருமானங்களும் (Food crop income) கணிக்கப்பட்டன.*

ii.) விதை உற்பத்தி மற்றும் தரம் என்பவற்றை விருத்தி செய்தல்

- *2022 ஆம் ஆண்டு சான்றளிக்கப்பட்ட விதை நெல்லின் தேசியத் தேவை 6.5 மில்லியன் பூசல் ஆகும். அந்த அளவு விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு 162,500 பூசல் பதிவு செய்யப்பட்ட விதை நெல் தேவைப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில் நிலவிய பல்வேறு தடைகளுக்கு மத்தியிலும், அரச விதை உற்பத்திப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்ட 142,500 பூசல் பதிவு செய்யப்பட்ட விதை நெல்லை அந்த ஆண்டில் வெளியிட முடிந்ததுடன் அந்த அளவானது 5.7 மில்லியன் பூசல் உத்தரவாதமளிக்கப்பட்ட விதை நெல்லை உற்பத்தி செய்வதற்கு போதுமானதாக இருந்தது. இது தேசிய விதைத் தேவையின் 88% ஆகும். எவ்வாறாயினும், இவ்வாறு வெளியிடப்பட்ட பதிவுசெய்த விதை நெல் தொகையில் விவசாயத் திணைக்களத்தின் விதைச் சான்றளிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 1.25 மில்லியன் பூசல் உற்பத்தி செய்வதற்கு உள்வாங்கப்பட்டிருந்தது. மீதியுள்ள விதையை, தரமான சுய சான்றளிப்பு செய்யும் மற்றும் சுய விதை உற்பத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் உற்பத்தி செய்ய முடியுமாக இருந்தது. இதன் காரணமாக, அந்த ஆண்டில் விதைத் தட்டுப்பாடுகள் எதுவுமின்றி விவசாயிகளின் விதை நெல் தேவையை பூர்த்தி செய்ய முடிந்தது.*

- சான்றளிக்கப்பட்ட விதைகளை விவசாயிகள் மத்தியில் பரவலாக்கும் நோக்கத்துடன் 650 மில். ரூபாய் பெறுமதியான ஒப்பந்த விதை நிகழ்ச்சித் திட்டம் நிறைவு செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ், பாசிப்பயறு, நிலக்கடலை, சோயா போஞ்சி, மிளகாய், கௌப்பி, உளுந்து, எள் மற்றும் குரக்கன் போன்ற மேலதிக உணவுப் பயிர் வகைகளின் சுமார் 650 மெ. தொன் விதைகள் உற்பத்தி செய்ய முடியமாக இருந்ததுடன் ஏராளமான பயிர்களில் இந்த உற்பத்தி தேசியத் தேவையின் 25% இற்கும் அதிகமானதாகக் காணப்பட்டது.
- 20 மெ. தொன் கலப்பின சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன் இதுவரையில் 12 மெ. தொன் அளவு விதைகள் விவசாயிகள் மத்தியில் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.
- 2022 ஆம் ஆண்டில், விதைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் விற்பனை மூலம் (விதை நெல், காய்கறி விதைகள், மேலதிக உணவுப் பயிர் விதைகள், உருளைக்கிழங்கு விதைகள் மற்றும் பழ நாற்றுகள்) 1.65 பில்லியன் ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.
- சௌபாக்யா 'ஹரித்த தெயக்' வீட்டுத் தோட்டச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு 10 இலட்சம் வீட்டுத் தோட்டச் செய்கைப் பொதிகள் மற்றும் அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் என்பவற்றுக்கு 5 இலட்சம் வீட்டுத் தோட்டச் செய்கைப் பொதிகளும் வழங்கப்பட்டன.
- புதிய பாதுகாக்கப்பட்ட இல்லங்களை நிர்மாணிப்பதன் மூலம் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் மரக்கறி விதைகளின் அளவைக் குறைப்பதற்காக உள்நாட்டு கலப்பின மரக்கறி விதை உற்பத்தி அதிகரிக்கப்பட்டது.
- தெரிவு செய்யப்பட்ட விதைப் பண்ணைகளில் (அலுத்தறை, பொலன்னறுவை, கரடியனாறு மற்றும் பட்டஅத்த) விதைத் பதப்படுதல் மற்றும் விதை உலர்த்தல் நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கதாக மாற்ற முடிந்தது.
- கொழும்பு துறைமுக நுழைவாயிலின் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளை மிகவும் விரிவான முறையில் மேற்கொள்வதற்காக கொரிய நிதியுதவியின் கீழ் புதிய மூன்று மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு 19.07.2022 அன்று அடிக்கல் நடப்பட்டது.
- கொழும்பு சர்வதேச விமான நிலையத்தில் (இரத்மலானை) தாவரத் தனிமைப்படுத்தும் அலகொன்று நிறுவப்பட்டது.
- தாவரங்கள் மற்றும் தாவரப் பொருட்களை தபால் மூலம் பரிமாற்றம் செய்யும் போது பீடைகள் காரணமாக ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளை குறைப்பதற்காக கொழும்பு மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் தாவர தனிமைப்படுத்தல் பிரிவொன்றை நிறுவுவதற்குரிய நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவதற்கு மேலதிகமாக, யாழ்ப்பாணம், காலி, திருகோணமலை மற்றும் கண்டி ஆகிய தபால் நிலையங்களிலும் தாவர தனிமைப்படுத்தல் அலகுகளை நிறுவுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- 27 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தனிமைப்படுத்தல் நோய்க் காரணியாக இனங் காணப்பட்டுள்ள *Xylella fastidiosa* இன் விருந்து வழங்கித் தாவரங்களின் ஏற்றுமதி மீதான தடைகளை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
- இலத்திரனியல் தாவரச் சுகாதாரச் சான்றிதழ் மூலம் 12 நாடுகளுடனான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான செயற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதுடன் ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள 27 நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டு, அவற்றை நடைமுறைப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- நெல், மேலதிக உணவுப் பயிர்கள், காய்கறி வகைகள் மற்றும் பழங்கள் என்பவற்றின், 101 வர்க்கங்களின் 10.17 மெ. தொன் இனவிருத்தி விதைகள் சான்றளிக்கப்பட்டன. ஏனைய தலைமுறைகளின் சான்றளிக்கப்பட்ட 6500 மெ. தொன் விதை நெல், 666 மெ. தொன் மேலதிக உணவுப் பயிர்கள் மற்றும் 32 மெ. தொன் காய்கறி விதைகள் மற்றும் 589 மெ. தொன் உருளைக்கிழங்கு விதைகள் சான்றளிக்கப்பட்டதுடன் 20 மெ. தொன் மைக்ரோ நுண் விதை உருளைக்கிழங்கு (மினிடியுபர்ஸ்) சான்றளிக்கப்பட்டது.
- பல்லாண்டுப் பழத் தாவரங்களைச் சான்றளிக்கும் திட்டத்தின் கீழ் 684,185 நாற்றுகள் சான்றளிக்கப்பட்டன.
- சான்றளிக்கும் திட்டத்தின் கீழ் 11,325 விதைப் பரிசோதனை மாதிரிகள் மற்றும் 886 விதைச் சுகாதாரப் பரிசோதனைகள், 1229 பிந்தைய கட்டுப்பாட்டுப் பரிசோதனை மாதிரிகள் என்பன பரிசோதிக்கப்பட்டன.
- 1,266 விதை கையாளுபவர்கள் பதிவு செய்யப்பட்டதுடன் 1,227 பதிவுப் புதுப்பித்தல்கள் மற்றும் 1,469 வளாக விதைகள் என்பன விதை சட்டத்தின் கீழ் பரிசோதிக்கப்பட்டன.

- *710 புதிய பண்ணைகள் சிறந்த விவசாய நடைமுறைகளின் (GAP) கீழ் சான்றளிக்கப்பட்டன. மேலும் 808 பண்ணைகளுக்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.*
- *தாவர மரபியல் வள மையத்தில் பாதுகாக்கப்பட்ட ஹொண்டரவாலு பாரம்பரிய நெல் வர்க்கத்தின் தொடர் உருவவியல் பண்புகள் மற்றும் தோற்றவமைப்பு பண்புகள் என்பவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் அவற்றை வகைப்படுத்தி அதிகம் ஒற்றுமையான பண்புகளின் அடிப்படையில் வகைப்படுத்துவது குறித்த ஆராய்ச்சிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.*
- *பீடைக் கண்காணிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு தேவையான தரவுகளை சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

iii.) விவசாய விரிவாக்கம் மற்றும் தகவல் தொடர்பாடல்

- *2022 ஆம் ஆண்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் பரவல் நிலைமை மற்றும் உர இறக்குமதி தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்கள் காணப்பட்ட போதிலும், கள மட்டத்தில் வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப அறிவை வழங்குவதன் மூலம், 1,300,798 ஹெக்டேயர் நிலப் பரப்பில் நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டு 3,564,000 மெ. தொன் நெல் உற்பத்தி செய்யப்பட்டது. இது தேசிய தேவையின் சுமார் 83.3% ஆகும்.*
- *2022ல் நிலவிய பொருளாதார நெருக்கடியில் இருந்து விவசாயிகளின் பொருளாதார நிலையை உயர்த்தவும், சோள உற்பத்தியை அதிகரித்து கோழி மற்றும் முட்டை உற்பத்திச் செலவைக் குறைக்கவும் JICA நிறுவனம் மற்றும் தாய்லாந்து தூதரகம் என்பவற்றின் நிதியுதவியின் கீழ் விரிவாக்க மற்றும் பயிற்சி நிலையத்தின் நேரடித் தலையீட்டுடன் 67,000 ஹெக். நிலப் பரப்பில் சோளம் பயிரிடப்பட்டது. அதன் மூலம் 220,000 மெ. தொன் சோள விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. இதன் போது, 34,000 ஏக்கரில் சோளம் பயிரிட 34,000 விவசாயிகளுக்கு இலவசமாக விதைகள் வழங்கப்பட்டன.*
- *அப்போது நிலவிய அந்நியச் செலாவணி பற்றாக்குறையின் காரணமாக சவாலாக காணப்பட்ட விதை இறக்குமதிக்கு ஒரு தீர்வாக, 2022 சிறு போகத்திற்கான விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தால் செயல்படுத்தப்பட்டதுடன் இதன் மூலம் 35 மெ. தொன் உள்நாட்டு MI Maize HY 05 கலப்பின வகை சோள விதைகள் உற்பத்தி செய்யப்பட்டன. அந்த விதைகளை விவசாயிகள் மத்தியில் பரீட்சிக்கும் முகமாக ஒரு ஏக்கர் அளவிலான 1,700 செயல்விளக்க மாதிரிகள் உருவாக்க முடிந்தது. மேலும், உள்நாட்டு திறந்த மகரந்தச் சேர்க்கை செய்யப்பட்ட சோள வர்க்கங்களின் இளம் கதிர்களை விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்தும் நோக்கில் ஒரு ஏக்கர் அளவிலான 1,300 செயல்விளக்க மாதிரிகள் நிறுவப்பட்டன.*
- *சோளச் செய்கையை இயந்திரமயமாக்குவதன் மூலம் உற்பத்தித்திறனை அதிகரிக்கும் பொருட்டு, விரிவாக்கம் மற்றும் பயிற்சி நிலையத்தினால் லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் மட்டப்படுத்தும் 04 இயந்திரங்களை கொள்வனவு செய்து அனுராதபுரம், அம்பாறை, ஹசலக்க மற்றும் மொனராகலை ஆகிய பகுதிகளில் 40 செயல்விளக்கங்களை அமைப்பதன் மூலம் விவசாயிகளுக்கு உரிய தொழில்நுட்பம் பகிப்பட்டது.*
- *விரிவாக்க மற்றும் பயிற்சி நிலையத்தின் தலையீட்டின் ஊடாக ஒருங்கிணைந்த பீடை முகாமைத்துவ முறைகளை விவசாயிகளிடையே பிரபல்யப்படுத்தியதன் மூலம் சோள உற்பத்தியில், 2022/23 பெரும் போகத்தில் தொற்றுநோயாக பரவிய படைப்புழு பாதிப்பை 3% க்கும் குறைவாகக் கட்டுப்படுத்த முடியுமாக இருந்தது.*
- *2022 சிறு போகத்தில் 4,958 ஹெக். மிளகாய் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் மூலம் 49,578 மெ. தொன் பச்சை மிளகாய் அறுவடையாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இதன் போது உள்நாட்டு கலப்பின MI CH 01 வர்க்கத்தை செய்கை செய்தல் உள்ளிட்ட ஏனைய தொழில்நுட்ப தொகுப்புகளை விவசாயிகள் மத்தியில் கொண்டு செல்ல முடியுமாக இருந்தமை காரணமாக, ஓரலகு விளைச்சலாக ஒரு ஹெக்டயருக்கு 10 மெ. தொன் வரை அதிகரிக்க முடிந்தது.*
- *அந்த ஆண்டு நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் பரவல், பொருளாதார மந்தநிலை மற்றும் உரத் தட்டுப்பாடு என்பன காரணமாக 2022 ஆம் ஆண்டில் தேசியத் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான ஏனைய மேலதிக உணவுப் பயிர் வகைளை செய்கை செய்த சிறு மற்றும் பெரும் போக நிலப் பரப்புகளை, 8,824 ஹெக். மிளகாய், 2,365 ஹெக். பெரிய வெங்காயம், 2,995 ஹெக். சின்ன வெங்காயம், 6,046 ஹெக். சோயா போஞ்சி, 10,577 ஹெக். பாசிப்பயறு, 9,206 ஹெக். கௌப்பி, 10,547 ஹெக். எள்ளு, 15,906 ஹெக். நிலக்கடலை மற்றும் 2,388 ஹெக். உருளைக்கிழங்கு எனப் பேணுவதற்கு முடிந்ததுடன் மேற்படி செய்கைகளை உரிய முறையில் பராமரிக்கத் தேவையான தொழில்நுட்பங்களை வழங்குவதற்கும் முடிந்தது.*

- சிறந்த விவசாய வழிமுறைகளை விவசாயிகளுக்கு மத்தியில் பிரபல்யப்படுத்தவும், தரத்தில் சிறந்த ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் பழங்கள் உள்ளிட்ட விவசாயப் பொருட்களை சந்தைக்கு வழங்கவும் GAP சான்றிதழ்களைப் பெற்ற 710 பண்ணைகளை பதிவு செய்யக்கூடியதாக இருந்தது. மேலும், ஆரோக்கியமான அரிசி உற்பத்திக்காக 400 ஏக்கர் GAP சான்றிதழ் பெற்ற நெற் பண்ணைகள் பதிவு செய்யப்பட்டன.
- விவசாய தொழில்நுட்பத்தை இளைஞர்களுக்கு மத்தியில் கொண்டு செல்லவும் புதிய விவசாய தொழில்முனைவோரை உருவாக்கவும் 2022 ஆம் ஆண்டில் விவசாய கல்லூரிகளுக்கு ஊடாக 203 NVQ 05 தர தேசிய டிப்ளோமாதாரர்கள் மற்றும் 351 NVQ 06 தர உயர் தேசிய டிப்ளோமாதாரர்களும் உருவாக்கப்பட்டனர்.
- மத்திய மற்றும் ஊவா மாகாணங்களை உள்ளடக்கிய 400 அரச பாடசாலைகளில் 400 தொழில்முனைவோர் பாடசாலை தோட்ட நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
- சப்ரகமுவ மாகாணத்தில் இளம் விவசாயிகளின் 50 குழுக்களின் பங்குபற்றுதலுடன் விவசாயிகளுக்கான வினா விடைப் போட்டிகள் நடாத்தப்பட்டன.
- நுகர்வோருக்கு விவசாய தொழில்நுட்பம் மற்றும் போசாக்குமிக்க உணவுகளை வழங்குவதற்காக அலுவிஹார மற்றும் தெளுல்ல பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் ஹெல பொஜுன் விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபவத்தில், பட்டஅத்த விவசாய தொழில்நுட்பப் பூங்காவுக்குப் பாராட்டுச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள முடிந்தது.
- Best web.lk domain ஊடாக நடாத்தபட்ட 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த இணையதளத்தைத் தெரிவு செய்யும் போட்டியில் விவசாயத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு தகுதிச் சான்றிதழைப் பெறுக்கொள்ள முடிந்தது.
- 2022 ஏப்ரல் 26 ஆம் திகதி நடைபெற்ற தேசிய உற்பத்தித்திறன் விருது வழங்கும் வைபவத்தில், வானொலி விவசாய சேவையின் கொழும்புப் பிரிவுக்கு பாராட்டுச் சான்றிதழ் கிடைத்தது.
- இந்த ஆண்டில் விவசாய சமூகம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுக்கு புதிய விவசாய தொழில்நுட்பத்தைப் பரப்பும் நோக்கில் 225 தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மற்றும் 13 குறும்பட வீடியோ செய்திகள் ஒளிபரப்பப்பட்டதுடன் 281 குறும்பட யூடியூப் வீடியோக்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டன. மேலும் 2,509 வானொலி நிகழ்ச்சிகளும் 756 குறுஞ்செய்திகளும் இந்த ஆண்டில் ஒளிபரப்பப்பட்டன.
- விவசாயம் தொடர்பான புதிய புத்தகங்களின் 259,394 பிரதிகள், 78,000 துண்டுப்பிரசுரங்கள் மற்றும் 1,280 சுவரொட்டிப் பிரதிகள் என்பன பூர்த்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டன.
- கன்னோருவை மற்றும் பட்டஅத்த விவசாயப் பூங்காக்களுக்கு வருகை தந்தவர்களின் மூலம் ஈட்டிய வருமானம் 7.24 மில்லியன் ரூபாவாகும் மற்றும் விவசாய வெளியீடுகளின் விற்பனை மூலம் கிடைத்த வருமானம் 389,989 ரூபாவாகும்.

குறிப்பு - ஆண்டுதோறும் இந்த நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2. விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை (AAIB)

2.1. தொலைநோக்கு

உள்நாட்டு விவசாயத்துறையின் உன்னதமான பாதுகாவலனாக மாறுவதன் ஊடாக தெற்காசியாவின் மிகச்சிறந்த முன்னுதாரணமாகத் திகழும் கமத்தொழில் காப்புறுதி நிறுவனமாதல் .

2.2. செயற்பணி

விவசாய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்வதற்கும் சமூக, பொருளாதார ரீதியாக திருப்திகரமான விவசாய மற்றும் மீனவ சமூகத்தை கட்டியெழுப்புவதற்கும் உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய சிறந்த விவசாய காப்புறுதி மற்றும் சமூக பாதுகாப்பு சேவைகளை வழங்குதல்.

2.3. நோக்கங்கள்

விவசாயப் பயிர்ச் செய்கையுடன் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல், விவசாயிகளுக்குச் சொந்தமான ஏனைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களுக்கு உள்ள இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல், விவசாயிகளின் கால்நடை வளங்கள் தொடர்பான இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல், சமூகப் பாதுகாப்பு மற்றும் ஆயுள் காப்பீட்டு முறைகள் மூலம் விவசாய மற்றும் மீனவ சமூகத்தைப் பாதுகாத்தல், நிறுவனத்துடன் தொடர்பான உள்ளூர் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களைப் பெறுதல், அபிவிருத்தி, செயற்படுத்தல், மற்றும் சந்தைப்படுத்தல் ஊக்குவிப்பு, மாவட்ட நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் வெளி நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு, நிறுவனத்தின் மனித மற்றும் பௌதீக வளங்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பெறுகை மற்றும் வழங்கல் முகாமைத்துவம், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்பான சட்ட ரீதியான உதவிகளை வழங்கல், நிறுவன நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு திட்டமிடல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை மேற்கொள்ளல், சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறையொன்றை உருவாக்குதல் மற்றும் நிருவாக செயற்பாடுகளில் காணப்படும் குறைபாடுகளைக் குறைத்தல், இலாபகரமான வளர்ச்சியின் ஊடாக நிலைபேறான நிதிசார் ஸ்திரத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் நிறுவன செயல்முறைகளை சீராக்க தகவல் தொழில்நுட்ப வழிமுறைகள் மற்றும் GIS தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

2.4. அமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நிறுவனம்

விவசாயப் பொருளாதாரமொன்றுக்கு உரிமைகோரும் இலங்கையில், அவசர அனர்த்த நிலைமைகளின் போது உள்நாட்டு விவசாயத் துறை மற்றும் விவசாய சமூகம் ஆகியவற்றைப் பாதுகாத்தல் எனும் அரசின் மீதுள்ள கடமையை நிறைவேற்றும் நோக்கில் 1973 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க கமத்தொழில் காப்புறுதிச் சட்டத்தின் மூலம் கமத்தொழில் காப்புறுதிக்காகக் காணப்பட்ட ஒரே அரச காப்புறுதி நிறுவனமாக கமத்தொழில் காப்புறுதிச் சபை நிறுவப்பட்டது. 1999 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சட்டத்தினால் கமத்தொழில் காப்புறுதிச் சபை, கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை எனும் பெயரில் மீள நிறுவப்பட்டது.

2.5. பணிகள்

i.) விவசாய இடர்நேர்வுகளை முகாமைத்துவம் செய்தல்

இடர்நேர்வுக முகாமைத்துவ வழிமுறையாக இலங்கையின் விவசாயத் துறைக்கு பயிர், கால்நடை மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய துறைகளின் கீழ் விவசாயக் காப்புறுதி முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் விவசாய இடர்நேர்வு முகாமைத்துவத்திற்கு பங்களிப்புச் செலுத்துதல், அவசர அனர்த்தங்களின் போது விவசாயிகளின் பொருளாதாரத்தில் ஏற்படும் வீழ்ச்சிகளைக் குறைக்க உதவுதல் மற்றும் விவசாயக் கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் நிதிசார் ஸ்திரத்தன்மையை அதிகரித்தலுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ள்ளப்படுவதுடன் பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் (நெல் மற்றும் ஏனைய பயிர்கள்), கால்நடை வளக் காப்புறுதித் திட்டங்கள், ஆயுள் காப்புறுதித் திட்டங்கள், விவசாய உபகரணக் காப்புறுதித் திட்டம், களஞ்சியக் காப்புறுதித் திட்டம் மற்றும் துவிச்சக்கர, நான்கு சக்கர டிராக்டர்கள் மற்றும் எனைய மூன்றாம் தரப்பு காப்புறுதித் திட்டங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ii.) சமூக நலனோம்பல்

சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கையின் விவசாயத் துறையுடன் தொடர்புபட்டுள்ள விவசாயிகளின் ஓய்வுநிலை காலத்தில் பாதுகாப்பு வழங்குதல் மற்றும் மருத்துவ உதவித் திட்டங்களின் மூலம் மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் வழங்குதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை, விவசாயிகளின் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், மீனவர் ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நலன்புரித் திட்டம், சுவசெத்த சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் மற்றும் விபத்துக் காப்பீட்டுத் திட்டம் என்பன இதன் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2.6. நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

- *நிதிசார் முன்னேற்றம் - 118 செலவுத் தலைப்பு - பொழிப்பு (2022 டிசம்பர் மாதம் 31 வரையிலான வரவுசெலவு ஒதுக்கீடு)*

31.12.2022 ஆம் திகதி வரையிலான இடைக்காலக் கணக்கறிக்கையின் கீழான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய நிதிசார் இலக்குகள் மற்றும் முன்னேற்றம் - மீண்டுவரும் மற்றும் மூலதன செலவுகளை உள்ளடக்கிய செலவு அறிக்கையின் பொழிப்பு

தொ/ இல	***செயற்திட்டம் / நிகழ்ச்சித் திட்டம்***	***2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)***	***2022 ஆம் ஆண்டில் செலவு செய்த தொகை (மில். ரூபா)***
மீண்டுவரும்			
01.	*விவசாய மற்றும் மீனவ ஓய்வூதியங்களை வழங்குவதற்கு (118-02-03-049-1509)*	*4220.00*	*4220.00*
மூலதன			
02.	*மூலதன செலவு (2201-049-03-02-118)*	*10.00*	*10.00*
03.	*கட்டாயப் பயிர்க் காப்புறுதி* (118-02-03-43-2202)*	*600.00*	*600.00*

குறிப்பு *- * 2020 ஆம் ஆண்டில் கட்டாயப் பயிர்க் காப்புறுதித் திட்டத்தின் கீழ் 1,950 மில். ரூபாய் நிதி கோரப்பட்டது. அதற்காக 2021 ஆம் ஆண்டில் சுமார் 1000 மில். ரூபாய் நிதி வருடாந்த வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும், 2021 ஆம் ஆண்டின் இழப்பீடுகளுக்குச் செலுத்த சுமார் 1950 மில். ரூபாய் தேவைப்பட்டது. அதற்கமைவாக, 2022 ஆம் ஆண்டில் மேலதிக ஒதுக்கீடாக 2900 மில். ரூபாய் நிதி தேவைப்படுகின்றது.*

- ***பௌதீக முன்னேற்றம்***

a.) விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

சமூக மற்றும் பொருளாதார ரீதியாக திருப்தியடைந்த விவசாயிகள் மற்றும் மீனவ சமூகங்களைக் கட்டியெழுப்பும் நோக்கில் விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலன்புரித் திட்டமானது நடைமுறைப்படுத்தடுகிறது. அதற்கமைவாக, 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் விவசாயிகள்/ மீனவ ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை 174,982 ஆகக் காணப்பட்டதுடன் 4,299 மில். ரூபாய் ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கப்பட்டது.

புகைப்பட இலக்கம் 23 - பக்க இலக்கம் 83

b.) விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் 6 பயிர் வகைகளுக்கான கட்டாய பயிர் காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தல்

அரச பங்களிப்பின் கீழ் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படும் 6 பயிர் வகைகளுக்கான கட்டாய பயிர் காப்பீட்டு முறையை நடைமுறைப்படுத்தல் எனும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படை நோக்கம் இலங்கைக்கு மிகவும் பொருத்தமான விவசாய இடர்நேர்வு முகாமைத்துவ முறையை நடைமுறைப்படுத்துவதாகும். அதற்கமைவாக, 2022 ஆம் ஆண்டில், நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில், 2020/21 பெரும் போகம் மற்றும் 2022 சிறு போகம் ஆகியவற்றின் போதான பயிர் இழப்புகள் மற்றும் 2018 சிறு போகம், 2018/19 பெரும் போகம், 2019 சிறு போகம், 2019/20 பெரும் போகம், 2020 சிறு போகம் ஆகியவற்றுடன் தொடர்பான முறையீடுகள் என்பவற்றுக்கு 67,555 விவசாயிகளின் 98,952 ஏக்கர் நிலப் பரப்புக்கு 1,578 மில். ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டது.

3. நெல் சந்தைப்படுத்தல் சபை

3.1. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான பிரதான அரச மத்தியஸ்தராக செயற்படுதல் என்பதே இந்நிறுவனத்தின் தொலைநோக்கு ஆகும்.

உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு சாராரும் திருப்திப்படும் விதத்தில் நெல் மற்றும் அரிசியைக் கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தும் செயற்பாடுகளை அறிவும், திறமையும் உள்ள பதவியணி ஒன்றினூடாக சிறப்பாக மேற்கொள்ளுதல் என்பது இதன் செயற்பணியாகக் காணப்படுகின்றது.

அத்துடன், நிறுவனத்தின் நோக்கங்களில் சந்தையில் நெல்லுக்கான நிலையான உயர்ந்த விலையைப் பெற்றுக் கொடுத்தல், அரிசி இடித்தல் மற்றும் களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்தல், நியாயமான விலைக்கு அரிசி வகைகளைப் பெற்றுக்கொடுத்தல், களஞ்சியங்களின் கொள்ளளவுகளை அதிகரித்தல் மற்றும் பாதுகாப்பு இருப்பை முறையாக சேமித்து வைக்கக்கூடிய பொருத்தமான களஞ்சியங்களை உருவாக்குதல் மற்றும் விஞ்ஞான ரீதியாக நெல் களஞ்சியப்படுத்தக்கூடிய நவீன தொழிநுட்ப வசதிகளுடன்கூடிய களஞ்சியங்களை நிர்மாணித்தல் என்பன பிரதானமானவையாகும்.

3.2. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா) (அங்கீகரிக்கப்பட்ட)	செலவு செய்த தொகை (மில். ரூபா) (உண்மையான)
மூலதன	250.00	0.00*
மீண்டுவரும்	140.00	144.90
உரிமைப் பங்களிப்பு	2,900.00	2,929.00**

* நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாக, நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு மூலதன ஒதுக்கீட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட 250.00 மில். ரூபாய் நிதி கிடைக்கவில்லை.

** உரிமை பங்களிப்புக்கான 2,900.0 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும், செலுத்த வேண்டிய மொத்த ஒதுக்கீடு 2,929.0 மில். ரூபாய் ஆகும். இங்கு பற்றாக்குறையாகக் காணப்பட்ட 29.0 மில். ரூபாய் ஒதுக்கீடும் 2022 ஆம் ஆண்டுக்கான மூலதனச் செலவுத் தலைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகையிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

3.3. விஷேட துறை

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்1	நெல் கொள்வனவு
ஒதுக்கப்பட்ட தொகை :- 2021/22 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்தல் - - 21,950.00 மில். ரூபா செயற்பாட்டுச் செலவு (2021/22 பெரும் போகம்) - 705.00 மில். ரூபா 2022 சிறு போகத்தில் நெல் கொள்வனவு செய்தல் - 7,350.00 மில். ரூபா செயற்பாட்டுச் செலவு (2022 சிறு போகம்) - 235.00 மில். ரூபா கிடைத்த தொகை 6500.00 மில். ரூபாய் * (*அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கடன் தொகை)	செலவு செய்த தொகை மில். ரூபாய் 6,443.10
நோக்கங்கள்	உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் ஆகிய இரு தரப்பினரும் திருப்தியுறும் வகையில் நெல் மற்றும் அரிசியை கொள்வனவு செய்தல், களஞ்சியப்படுத்தல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை செய்தல்,

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்1	நெல் கொள்வனவு	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்	**அடைய வேண்டிய இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்**
1. 2021/22 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்தல். *2. செயற்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ளல்* *3. 2022 சிறு போகத்தில் நெல் கொள்வனவு செய்தல்.* *4. செயற்பாட்டுச் செலவுகளை மேற்கொள்ளல்*	*2021/22 பெரும் போகத்தின் மொத்த நெல் அறுவடையில் 300,000 மெ. தொன் நெல்லைக் கொள்வனவு செய்தல்.* *2022 சிறு போகத்தின் மொத்த நெல் அறுவடையில் 100,000 மெ. தொன் நெல்லைக் கொள்வனவு செய்தல்.*	*2021/22 பெரும் போகத்தில் 63,375.91 மெ. தொன் நாட்டு அரிசி நெல், 7,598.57 மெ. தொன் சம்பா அரிசி நெல் மற்றும் 303.60 மெ. தொன் கீரி சம்பா நெல் என்ற அடிப்படையில் மொத்தமாக 71,278.08 மெ. தொன், நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.* *பௌதீக முன்னேற்றம் 23.75%* ** நெல் சந்தைப்படுத்தும் சபையின் ஊடாக நெல் கொள்வனவு செய்யும் நடைவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது முதல் பெரும்பாலான உற்பத்திப் பிரதேசங்களில் நிலவிய கட்டுப்பாட்டு விலையையும் தாண்டிய விலை அதிகரிப்பு காரணமாக இலக்காகக் கொள்ளப்பட்ட அளவு நெல் கொள்வனவை மேற்கொள்ள முடியாமல் போனது. எனினும், இதன் பிரகாரம், நெல் விவசாயிகளுக்கு நியாயமான விலையைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கம் நிறைவேறியுள்ளது.* *2022 சிறு போகத்தில் 4,632.09 மெ. தொன் நாட்டு அரிசி நெல், 406.18 மெ. தொன் சம்பா அரிசி நெல் மற்றும் 2044.34 மெ. தொன் கீரி சம்பா நெல் என்ற அடிப்படையில் மொத்தமாக 7,082.61 மெ. தொன் நெல் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.* *பௌதீக முன்னேற்றம் 7%* *1. அரச வர்த்தக வங்கிகளில் இருந்து எதிர்பார்த்த கடன் தொகை கிடைக்கப் பெறாமையால், நெல் கொள்முதல் செய்யும் பணிகள் இடைநடுவே நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட்ட பிரதேசங்கள் (மாவட்டம் / கிராம அலுவலகர் பிரிவு)	*அம்பாறை, அனுராதபுரம், பொலன்னறுவை, குருணாகலை, மட்டக்களப்பு, புத்தளம், திருகோணமலை, முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், பதுளை, கம்பஹா, மாத்தளை, ஹம்பந்தோட்டை, மொனராகலை, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில்*	
பயனாளர் எண்ணிக்கை	*நாடளாவிய ரீதியில் உள்ள விவசாயிகள்*	
கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை	*07*	

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2	உரிமைப் பங்களிப்பு	
ஒதுக்கப்பட்ட தொகை மில். ரூபாய் 2,900.00 மேலதிக தொகை 29.00 மில். ரூபாய் * (* 2022 ஆம் ஆண்டின் மூலதன செலவுத் தலைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட தொகையில் 29.0 மில். ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.)	செலவு செய்த தொகை மில். ரூபாய் 2,929.00	
நோக்கங்கள்	2012 ஆம் ஆண்டு முதல் 2019 வரை நெல் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கி ஆகியவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட பழைய கடன்களை நடைமுறைக் கடனாக தவணை அடிப்படையில் செலுத்தல்.	
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் 1. இலங்கை வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தல். 2. மக்கள் வங்கித் தவணைக் கட்டணம் செலுத்தல்.	அடைய வேண்டிய இலக்குகள் நெல் கொள்வனவுக்காக பெற்றுக்கொண்ட வங்கிக் கடன்களை மீளச் செலுத்தல்.	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம் 100%
பயனாளர் எண்ணிக்கை	நாடளாவிய ரீதியில் உள்ள விவசாயிகள்	

4. ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகம் (HARTI)

4.1. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

நிலைபேறான விவசாய மற்றும் கிராமிய அபிவிருத்திக்கான அறிவை உற்பத்தி செய்து விநியோகிப்பதில் முன்னணி நிறுவனமாக திகழ்தல் இந்த நிறுவனத்தின் தொலைநோக்காகக் காணப்படும் அதேவேளை, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கு ஊடாக விவசாய மற்றும் கிராமியத் துறைகளைப் பலப்படுத்துதல் இதன் செயற்பணியாகக் காணப்படுகிறது.

4.2. நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம்

நிறுவனம் 95% பௌதீக முன்னேற்றத்தையும் 92% நிதிசார் முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது.

பிரதான செயற்பாடுகள்	அடையவேண்டிய இலக்கு	அடைந்துள்ள இலக்கு	நிதிசார் முன்னேற்றம்)மில். ரூபா(		
			ஒதுக்கப்பட்ட தொகை	முன்னேற்றம்	%
ஆராய்ச்சிகள் 01. உரம் மற்றும் ஏனைய விவசாய இரசாயனங்கள் தொடர்பான சமீபத்திய கொள்கை மாற்றங்கள் காரணமாக விவசாயத் துறை மீதான அவற்றின் தாக்கங்கள்	கொள்கை அறிக்கை மற்றும் இறுதி வரைவு அறிக்கை	வரைவு அறிக்கை கொள்கை அறிக்கை	3.59	2.86	80
02. உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பின் காரணமாக வீட்டு அலகுகளின் உணவுப் பாதுகாப்பின் மீது ஏற்பட்டுள்ள தாக்கங்கள்	இறுதி வரைவு அறிக்கை	வரைவு அறிக்கை கொள்கை அறிக்கை	2.77	2.88	103
03. கிராமிய அபிவிருத்திக்கு நிலைபேறான வாழ்வாதார பாதையாக வருமான பல்வகைப்படுத்தல்: உகந்த நிலைமைகளை கண்டறிதல்	இறுதி வரைவு அறிக்கை	வரைவு அறிக்கை	0.76	1.60	210
04. மனித-வனவிலங்கு மோதலின் தன்மை மற்றும் விவசாய சமூகங்களில் அதனால் ஏற்படும் தாக்கங்கள்: அடிப்படை தரவு சேகரிப்பு மற்றும் தகவல் பரப்புதல்	இறுதி அறிக்கை	இறுதி அறிக்கை	0.42	0.49	115
05. இலங்கையின் உலர் வலயத்தில் காலநிலையால் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் காலநிலைக்கு ஈடுகொடுக்கும் தன்மை மற்றும் காலநிலைக்கு ஏற்ற விவசாய நடைமுறைகள் பற்றிய ஆய்வு	World Vision Lanka நிதியுதவியின் கீழான நிகழ்ச்சித் திட்டம் ஆகும். முதல் கட்ட தரவு (சிறு போகத்திற்கு) திரட்டல் 2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்.		5.00	4.98	99
06. காலநிலை அதிர்ச்சிகளுக்கு இலங்கையின் விவசாயத் துறையின் பாதிப்பைக் குறைப்பதற்காக ஒருங்கிணைந்த இலத்திரனியல் - விரிவாக்க சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பான ஆய்வு (FAO).	FAO நிதியுதவியின் கீழான நிகழ்ச்சித் திட்டம் ஆகும். அடிப்படை கணக்கெடுப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளது.		24.00	23.78	99

07. சந்தை செயற்பாட்டுக் குறிகாட்டியைத் தயாரித்தல் (WFP)	WFP நிதியுதவியின் கீழான நிகழ்ச்சித் திட்டம் ஆகும். மாதாந்த தரவு சேகரிப்பு (2023 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும்).		7.55	3.11	41
08. விவசாய விரிவாக்கக் கட்டமைப்பின் செயற்திறன் மற்றும் உற்பத்தித் திறனை விருத்தி செய்தல், தேசிய விவசாய சேவையின் பணியாளர்களின் திறன் விருத்தி தொடர்பான இரண்டு நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சி (FAO)	FAO நிதியுதவியின் கீழான நிகழ்ச்சித் திட்டம் ஆகும். கமத்தொழில் அமைச்சின் கீழ் பணியாற்றும் அதிகாரிகளுக்கான TOT நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்		5.50	2.59	47
<u>பயிற்சி</u> .01 வீட்டு அலகுகளில் உணவுப் பாதுகாப்பைப் பேணுவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் குறித்து புறநகர்ப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்.	நிகழ்ச்சித் திட்டங்கள் 30	நிகழ்ச்சித் திட்டங்கள் 30 03 மாவட்டங்களில்	1.48	1.87	126
.02 விவசாய தொழில்முனைவோராக உருவாகுவதற்கு காணப்படும் வாய்ப்புகள் குறித்து கிராமப்புற விவசாயப் பெண்கள் மற்றும் இளைஞர் சமுதாயத்தை அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டம்	நிகழ்ச்சித் திட்டங்கள் 30	30 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. மூன்று மாவட்டங்களுக்கு	1.52	1.57	100
<u>ஏனையவை</u> 01. செயலமர்வுகள், விரிவுரை, பகிரங்க உரைகள்	-	Zoom தொழில்நுட்பத்தின் வழியாக 7 பகிரங்க சொற்பொழிவுகள் நடாத்தப்பட்டன.	0.34	0.26	76
02. நிறுவன வெளியீடுகள்	-	கல்விசார் வெளியீடுகள்	2.00	0.47	23
03. ஊடக நிகழ்ச்சிகள்	-	வீடியோ நிகழ்ச்சிகள் மற்றும் புகைப்பட நூலகம்	1.35	1.48	109

4.3 பூர்த்தி செய்துள்ள பிரதான செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் அடைந்துள்ள அளவுகள்

சந்தை தகவல் சேகரிப்பு மற்றும் விநியோக செயற்திட்டத்தின் கீழ் தினசரி, வாராந்த மற்றும் மாதாந்த தகவல் விநியோக நடைவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்த காலப் பகுதியில் இதன் பௌதீக முன்னேற்றம் 100% ஆகப் பதிவாகியுள்ளது. 52 வாராந்த உணவுப் பொருட்கள் தொடர்பான பிரசுரங்கள் (சிங்களம் மற்றும் ஆங்கிலம்) மற்றும் பத்து மாதாந்த தகவல் கையேடுகள் (ஆங்கிலம்) என்பன வெளியிடப்பட்டன. இந்த ஆண்டில், கல்வி மற்றும் பயிற்சிப் பிரிவு கிராமப்புற மற்றும் புறநகர்ப் பிரதேச சமூகங்களுக்கு 30 பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளதுடன் இவற்றில் 770 பேர் பங்குபற்றினர். கிராமிய விவசாயப் பெண்கள் மற்றும் இளைஞர் சமூகத்துக்கான 30 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

2022 ஆம் ஆண்டில், 18 ஆய்வு அறிக்கைகள் (16 ஆங்கிலம் மற்றும் 2 சிங்களம்) வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 10 செயற்பாட்டு அறிக்கைகள் (9 ஆங்கிலம், 1 சிங்களம்) மற்றும் 06 பருவகால இதழ்கள் (ஆங்கிலம்) என்பவற்றையும் இந்நிறுவனம் வெளியிட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டில், கமநல நடவைக்கைகள் தொடர்பான ஒரு ஆய்விதழ் வீதம் வெளியிடப்பட்டன. விவசாயிகள், நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களை இலக்காகக் கொண்டு, 'கொவி ஜனதா' சஞ்சிகையின் 2 இதழ்கள், 'கொவிமின' விவசாய தேசிய

செய்தித்தாளின் 6 இதழ்கள் மற்றும் ஹதபிம அதிகார சபையுடன் இணைந்து வெளியிடப்படும் 'ஹதபிம பத்திரிகை' யின் முதலாம் இதழ் என்பன வெளியிடப்பட்டன.

நிறுவனத்திற்குச் சொந்தமான பழைய புகைப்படங்கள் மற்றும் களத்தில் இருந்து பெறப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை உள்ளடக்கிய புகைப்பட நூலகத்தை உருவாக்குதல், 15 குறுகிய கால வீடியோக்களை சமூக ஊடகங்களில் வெளியிடுவதன் மூலம் பரந்த அளவிலான விளம்பர நடவடிக்கையை மேற்கொள்ளல் என்பன 2022 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் மேற்கொண்ட பணிகளாகும். இலங்கைப் பல்கலைக்கழகத் தொகுதியின் விவசாயப் பீடங்கள் மற்றும் சமூக விஞ்ஞான பீடங்கள் என்பவற்றுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டமையும் 2022 இல் நிறுவனம் அடைந்த வெற்றிகளின் ஒன்றாகும்.

4.3. ஒட்டுமொத்த நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திறன் பற்றிய அவதானிப்புகள்

2022 ஆம் ஆண்டில், ஆராய்ச்சி அறிக்கைகள், பயிற்சி நடவடிக்கைகள், செயலமர்வுகள் மற்றும் பொது விரிவுரைகள், பத்திரிகைகள் மற்றும் செய்திமடல்கள் என்பவற்றை வெளியிடும் செயற்பாடுகள் திருப்திகரமான மட்டத்தில் பேணப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயம் ஆகும். இவை அனைத்தின் ஊடாகவும் பகிரப்பட்ட விவசாயம் மற்றும் விவசாயத் துறை சார்ந்த புதிய அறிவின் மூலம் இத்துறையில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு இது சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.

5. இலங்கை விவசாய ஆராய்ச்சி கொள்கை சபை (SLCARP)

5.1. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

இலங்கையின் சமூக-பொருளாதார அபிவிருத்தியை உறுதி செய்ய ஏற்புடைய நிலைபேறான விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திகள் மற்றும் நவீனமயப்படுத்தும் தொகுதியொன்றை உருவாக்கல் என்பதே இந்த நிறுவனத்தின் தொலைநோக்காகும். கொள்கை உருவாக்க வசதிகளை வழங்கல், ஒருங்கிணைத்தல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு என்பவற்றின் ஊடாக விவசாய ஆராய்ச்சி அபிவிருத்திகள் மற்றும் நவீனமயப்படுத்தல் தொடர்பான தேசிய அபிவிருத்தி இலக்குகளை நோக்கி நகர்வதை உறுதி செய்தல் என்பது இந்த நிறுவனத்தின் செயற்பணியாகும்

நிறுவனத்தின் பிரதான நோக்கங்களாக விவசாய ஆராய்ச்சிகள், அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல் என்பவற்றின் சிறப்பு நிலையை அடைதல், தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் சிறப்பு நிலையை அடைவதற்காக விவசாய ஆராய்ச்சிகள் மற்றும் நவீனமயப்படுத்தலை திசைப்படுத்தல், தேசிய விவசாய ஆராய்ச்சி மற்றும் நவீனமயப்படுத்தல் கட்டமைப்பில் (விஞ்ஞான ரீதியான மற்றும் தொழில்நுட்ப) திறன் விருத்தியை ஏற்படுத்தல், விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்குவதற்கு உயர்தர கேள்விகளை அடிப்படையாகக் கொண்ட ஆராய்ச்சியை ஊக்குவித்தல், உலகத்தரம் வாய்ந்த ஆராய்ச்சிகள், அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தல்களை வெற்றிகொள்ளும் பொருட்டு சர்வதேச, பிராந்திய மற்றும் தேசிய ரீதியான ஒத்துழைப்புகளை ஊக்குவித்தல், தேசிய ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் நிறுவனங்களின் முன்னேற்றத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல், தேசிய ஆராய்ச்சி, அபிவிருத்தி மற்றும் நவீனமயப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களை பரவலாக்கல் மற்றும் அவை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை வெற்றிகொள்வதற்கு ஏற்றவகையில் இலங்கையின் விவசாய ஆராய்ச்சிக் கொள்கை சபையின் நிறுவனக் கொள்ளளவை வலுவூட்டல், என்பனவாகும்.

பிரதான பணிகளாக விவசாய ஆராய்ச்சி முகாமைத்துவம், ஆராய்ச்சிகள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்தல், விவசாய ஆராய்ச்சிக் கொள்கை மற்றும் முன்னுரிமைகளைத் தயாரித்தல், விவசாய ஆராய்ச்சியாளர்களுக்கு

தன்முனைப்பாற்றல் அளித்தல், விவசாய ஆராய்ச்சிகளுக்கான நிதியுதவிகளை வழங்கல், விவசாய மனித வள அபிவிருத்தி என்பன காணப்படுகின்றன.

5.2. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
மூலதன செலவுகள்*	20.00	8.10
ஆராய்ச்சிகளுக்கு	12.00	5.60
மீண்டுவரும் செலவுகள்	200.00	126.16

- நிறுவனத்துக்குக் கிடைத்த மொத்த மூலதன நிதி 8.1 மில். ரூபாய் ஆகும். அந்த முழுத் தொகையும் செலவிடப்பட்டுள்ளது.

5.3. விஷேட துறை

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	8.1	செலவு செய்த தொகை (மில். ரூபா)	7.2
நோக்கங்கள்			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
1. 2022 ஆம் ஆண்டிற்கு NARS நிறுவனங்களில் இருந்து ஆராய்ச்சி செயல் திட்டங்களைச் சேகரித்தல் மற்றும் விவசாய ஆராய்ச்சி முன்னுரிமைகளை அடிப்படையாகக் கொண்டு செயல் திட்டங்களை பகுப்பாய்வு செய்தல்		25 நிறுவனங்களின் ஆராய்ச்சிச் செயல் திட்டங்களை சேகரித்தல்.	24 நிறுவனங்களின் ஆராய்ச்சிச் செயல் திட்டங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. தாவர பாதுகாப்பு சேவை நிறுவனத்தில் சேவைகள் நடைபெற்று வருவதால், அதன் ஆராய்ச்சி செயல் திட்டம் சமர்ப்பிக்கப்படவில்லை.
2. தேசிய விவசாய ஆராய்ச்சி திட்டத்தின் (NARP) கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முன்னேற்றங்களை மீளாய்வு செய்தல்.		முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய செயற்திட்டங்களின் எண்ணிக்கை - 49	முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்ட செயற்திட்டங்களின் எண்ணிக்கை - 42
3. தேசிய விவசாய ஆராய்ச்சி நிலையங்களின் (NARS) ஆராய்ச்சி செயல் திட்டங்களின் 2021 ஆம் ஆண்டிறுதி முன்னேற்ற மீளாய்வுகளை மேற்கொள்ளல்.		25 நிறுவனங்களின் ஆராய்ச்சிச் செயல் திட்டங்களின் முன்னேற்றங்களை மதிப்பீடு செய்தல்.	25 நிறுவனங்களின் ஆராய்ச்சிச் செயல் திட்டங்களின் முன்னேற்றங்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
4. நிறுவனங்களுக்கு இடையிலான ஆராய்ச்சிகளுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலம் தேசிய விவசாய ஆராய்ச்சிகளின் தரம் மற்றும் முக்கியத்துவம் என்பவற்றை மேம்படுத்தல்		முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை – 5	நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்டங்களின் எண்ணிக்கை - 5
5. 2023 ஆம் ஆண்டுக்கு நிதியுதவிகளுக்கு பரிந்துரை செய்வதற்கு புதிய ஆராய்ச்சி எண்ணக்கரு முன்மொழிவுகளைக் கோரல்		100 புதிய ஆராய்ச்சி எண்ணக்கரு முன்மொழிவுகளைக் கோரல் மற்றும் அவற்றில் 50 முன்மொழிவுகளைத் தெரிவு செய்தல்.	புதிய ஆராய்ச்சி எண்ணக்கரு முன்மொழிவுகள் கிடைக்கப்பெறவில்லை. 2021 இன் புதிய ஆராய்ச்சிகளில் இருந்து 18 ஆராய்ச்சிகள் 2023 ஆம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	8.1	செலவு செய்த தொகை (மில். ரூபா)	7.2
நோக்கங்கள்			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		அடைய வேண்டிய இலக்குகள்	அடைந்துள்ள பௌதீக முன்னேற்றம்
6. ஆராய்ச்சி இறுதி அறிக்கைகளை (Terminal Reports) மதிப்பீடு செய்தல்.		20 ஆராய்ச்சி இறுதி அறிக்கைகளை சேகரித்தல். 20 ஆராய்ச்சி இறுதி அறிக்கைகளை மதிப்பீடு செய்தல்.	20 ஆராய்ச்சி இறுதி அறிக்கைகளில் 19 அறிக்கைகள் வெளிப்புற மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
7. சர்வதேச விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சிகள் மற்றும் பட்டப் பின்படிப்பு வாய்ப்புகளுக்காக உள்நாட்டு விவசாய ஆராய்ச்சியாளர்களுக்கு சந்தர்ப்பம் அளித்தல்.		APAARI அங்கத்துவ கட்டணம் செலுத்தல் மற்றும் பயிற்சி வழங்கல் எண்ணிக்கை - 4 வழங்க வேண்டிய பட்டப் பின்படிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை - 79	செயலாளர்/ பணிப்பாளரினால் நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை தொடர்பாக விளக்கமளித்ததன் காரணமாக APAARI அங்கத்துவ கட்டணம் செலுத்துவது தொடர்பாக சாதகமான முடிவு கிடைத்தது. அதன்படி, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான அங்கத்துவம் தொடர்ந்தும் வழங்கப்பட்டதுடன் அதற்கான அங்கத்துவக் கட்டணம் (12,000.00 அமெ. டொலர்) செலுத்துவதிலிருந்தும் விடுவிக்கப்பட்டது. வழங்கிய பட்டப் பின்படிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை – 79 பயிற்சிகளை நிறைவு செய்தவர்களின் எண்ணிக்கை - 12
8. NARS நிறுவனங்களின் வெளிப்புற விசாரணைகள்		NRMC நிறுவனம் தொடர்பான வெளிப்புற விசாரணைகளை மேற்கொள்ளல். கடந்த வருடங்களில் வெளிப்புற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்ட இரு நிறுவனங்கள் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.	NARS நிறுவனங்களின் வெளிப்புற விசாரணைக்கான வழிகாட்டியைத் தயாரிக்கும் பணி நிறைவுற்றுள்ளது. SEPC மற்றும் NRMC ஆகிய நிறுவனங்கள் தொடர்பான வெளிப்புற விசாரணைகளுக்கான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. அந்தக் குழுக்களின் முதல் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. ஒரு நிறுவனம் அதன் விசாரணைப் பரிந்துரைகளை செயல்படுத்துவது தொடர்பான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்துள்ளது.
9. இலங்கை உணவு மற்றும் விவசாயத்திற்கான சஞ்சிகை		2021 வருடத்தில் வெளியிடப்பட வேண்டிய சஞ்சிகைகள் எண்ணிக்கை - 2 (இதழ் 6 வெளியீடு 2 மற்றும் (இதழ் 7 வெளியீடு 1)	இதழ் 6 வெளியீடு 2 மற்றும் இதழ் 7 வெளியீடு 1 என்பன இலத்திரனியல் ஊடகம் வாயிலாக வெளியிடப்பட்டுள்ளன. 7.2 இற்கான ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பெற்றுக்கொள்ளல்.
10. 11.NARS நிறுவனங்களின் நிதி, பௌதீக மற்றும் மனித வளங்கள் மற்றும் ஆராய்ச்சித் தகவல்கள் அடங்கிய INFORM		தகவல் வழங்க வேண்டிய NARS நிறுவனங்களின் எண்ணிக்கை - 31 பகுப்பாய்வு	தகவல் வழங்கிய NARS நிறுவனங்களின் எண்ணிக்கை - 26 பகுப்பாய்வு செய்த தகவல் களஞ்சிய எண்ணிக்கை - 1

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	*8.1*	**செலவு செய்த தொகை (மில். ரூபா)**	*7.2*
நோக்கங்கள்			
செயல் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள்		**அடைய வேண்டிய இலக்குகள்**	**அடைந்துள்ள பௌதிக முன்னேற்றம்**
தகவல் தளம்		செய்யவேண்டிய தகவல் களஞ்சிய எண்ணிக்கை - *1*	
12. சிறந்த விவசாயத்துக்கான SLCARP விருது வழங்கல் நிகழ்வு		எதிபார்க்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் /விண்ணப்பங்கள் எண்ணிக்கை - *20* நடாத்தப்பட வேண்டிய விருது வழங்கும் நிகழ்வுகளின் எண்ணிக்கை - *1*	கிடைக்கப்பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைகள் /விண்ணப்பங்களின் எண்ணிக்கை - *44* தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கை - *13* நடாத்தப்பட்ட விருது வழங்கும் நிகழ்வுகளின் எண்ணிக்கை - *0 (நாட்டில் நிலவிய அசாதாரண சுகாதார நிலமைகள் காரணமாக இந்த விழா பிற்போடப்பட்டது).*
11. திறன் விருத்தி விரிவுரைகளின் ஊடாக ஆராய்ச்சியாளர்களுக்கு ஊக்கமளித்தல்.		வழங்க வேண்டிய பட்டப் பின்படிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை - *05*	வழங்கிய பட்டப் பின்படிப்பு பயிற்சி நிகழ்ச்சிகள் எண்ணிக்கை - *02*
12. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை இலக்கம் 2/2014 இன் படி விவசாயத் துறை ஆராய்ச்சியாளர்களுக்கான ஆராய்ச்சிக் கொடுப்பனவுக்கான அங்கீகாரத்தை வழங்கல்		எதிர்பார்க்கப்படும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை - *65*	அங்கீகாரம் வழங்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை – *56*
13. விவசாயத் துறையின் புதிய முன்னுரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான கருத்தரங்குகளை நடாத்துதல்		ஏற்பாடு செய்யப்பட வேண்டிய கருத்தரங்குகள் / செயலமர்வுகளின் எண்ணிக்கை - *3*	ஏற்பாடு செய்யப்பட்ட கருத்தரங்குகள் / செயலமர்வுகளின் எண்ணிக்கை - *1 (மலர்ச் செய்கை பற்றிய தேசிய மாநாடு)*
அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொண்ட பிரதேசங்கள்		நாடாளாவிய ரீதியில்	
பயனாளர் எண்ணிக்கை		நேரடி பயனாளிகள் *500 (ஆராய்ச்சியாளர்கள்)* மறைமுக பயனாளிகள் – விவசாய சமூகம்	
நடாத்தப்பட்ட பயிற்சிச் செயலமர்வுகள், மேற்கொண்ட கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை		*02* செயலமர்வுகள் கள மேற்பார்வைகளின் எண்ணிக்கை - *42*	

6. விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

6.1. ஆரம்பம்

விவசாயிகள் நம்பிக்கை பொறுப்பு நிதியம் 1994 மார்ச் மாதம் 09 ஆந் திகதி அரசின் சார்பில் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் நிதியத்தின் சார்பில் அப்போதைய விவசாய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் செயலாளர், அந்த அமைச்சின் இராஜாங்க செயலாளர், விவசாய உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான அமைச்சின் செயலாளர், கமநல சேவை ஆணையாளர் மற்றும் திறைசேரியின் பிரதிச் செயலாளர் ஆகியோரை உள்ளடக்கிய சபையொன்று கைச்சாத்திட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதியொன்றின் மூலம் தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனம் பணிப்பாளர் சபையொன்றினால் நிர்வகிக்கப்படுவதுடன் கமத்தொழில் அமைச்சின் செயலாளர் தலைவராகவும், உறுப்பினர்களாக கமநல அபிவிருத்தி ஆணையர் நாயகம், தலைமை கணக்காளர் (கமத்தொழில் அமைச்சு) மற்றும் திறைசேரியின் சிறப்புப் பிரதிநிதியும் உள்ளனர்.

6.2. செயற்பணி

சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்குத் தேவையான பின்னணியை உருவாக்கி சிறு விவசாயிகளின் செயலூக்கமிக்க பங்களிப்புடன் விவசாய ரீதியில் தன்னிறைவடைந்த இலங்கையை உருவாக்குதல்.

6.3. நோக்கங்கள்

1994 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட நம்பிக்கை உறுதியில் குறிப்பிட்டுள்ள விதத்திலும் 2002 ஆம் ஆண்டில் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றின் மூலமாக நோக்கங்கள் விரிவுபடுத்தப்பட்டதுடன், அதற்கமைவாக நம்பிக்கை பொறுப்பு நிதியம் பின்வரும் குறிக்கோள்களுடன் இயங்கி வருகின்றது. இலங்கையில் விவசாய அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் நலனோம்பலை மேம்படுத்துதல், சிறு விவசாயிகளுக்கு குறுகிய கால விவசாயக் கடன் வசதிகளை வழங்குதல், சிறு விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகளை வழங்குதல், சிறு விவசாயிகளின் நிதிசார் சிக்கல்களை போக்கிக் கொள்ளும் பொருட்டு சிறு விவசாயிகளுக்கு சந்தைக் கடன் வசதிகளை வழங்குதல், சிறு விவசாயிகளின் விவசாய அபிவிருத்தி மற்றும் நலனோம்பலுக்கான அறிவூட்டல் நிகழ்ச்சிகளை நடாத்துதல், பயிர் மற்றும் விலங்கு உற்பத்தி செயற்பாடுகள் மற்றும் உற்பத்தித் தயாரிப்பு என்பவற்றுக்கு சிறு விவசாயிகளுக்குத் தேவையான ஏனைய உதவிகளை வழங்குதல் மற்றும் விவசாய அபிவிருத்திக்கு உதவி வழங்கும் நோக்கில் விசேட விவசாய நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

6.4. செயற்படும் முறை

ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாகாண சபைகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள், விவசாயம் நடவடிக்கைகள் தொடர்பான உரிய அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் அபிவிருத்தி முன்மொழிவுகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன, அதற்காக சபை பொருத்தமான உரிய செயற்திட்டங்களை பரிசீலித்து பொருத்தமானவற்றுக்கு அங்கீகாரம் வழங்குகின்றது. அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் வரவுசெலவுத் திட்ட அறிக்கையில் சேர்க்கப்படுகின்றன.

6.5. நிதியத்தின் பிரதான வருமான மூலம்

நிதியாத்தின் பிரதான வருமான மூலங்கள் கொவிசெத்த லொத்தர் சீட்டு விற்பனையின் மூலம் பெறப்படும் தொகையின் குறிப்பிட்ட ஒரு வீதம் மற்றும் இந்நிதியத்தின் மேலதிக நிதியை முதலீடு செய்வதன் மூலம் பெறப்படும் வட்டி என்பனவாகும்.

மானியம், முற்பணம் மற்றும் கடனுதவி எனும் வகையில் இந்த நிதியத்தின் வேலைத்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

i.) மானியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

- ***தேசிய புத்தரிசி விழா – 2022***

இந்தக் கலாச்சார நிகழ்வை நடாத்துவதற்கு இந்த நிதியத்தின் மூலம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி மானியம் வழங்கப்படுகிறது. அந்த வகையில், தேசிய புத்தரிசித் திருவிழா - 2022 இற்கு 4.00 மில்லியன் ரூபாய் விவசாயி நம்பிக்கை நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதன் நிதிசார் முன்னேற்றம் 100% ஆகும்.

- ***ஏனைய விவசாய செயற்திட்டங்கள் (கமநல அபிவிருத்தித் திணைக்களம்)***

செயற்திட்டம்	***மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா.)***	***உண்மையான தொகை (மில். ரூபா.)***	***நிதிசார் முன்னேற்றம்***
மல்வருஷா கால்வாயின் புனர்நிர்மாணம் - தெஹிஓவிட்ட பிரதேச செயலகப் பிரிவில் திம்பிரிபொல கிராம உத்தியோகத்தர் பிரிவின் 15 விவசாயக் குடும்பங்களுக்கு சொந்தமான 10 ஏக்கர் அளவிலான நெற் காணிகள் மற்றும் சுமார் 20 ஏக்கர் அளவிலான மேட்டுநிலக் காணிகள் என்பவற்றை மல்வருஷா கால்வாய் போஷிக்கின்றது.	*1.08*	*0.22*	*20%*
வேவல்தெனிய கால்வாய் புனர்நிர்மாணம் - கேகாலை மாவட்டத்தின் கரண்டுபொன கிராம சேவகர்ப் பிரிவின் 40 விவசாயக் குடும்பங்களுக்குச் சொந்தமான `சுமார் 27 ஏக்கர் நெற் காணிகள் வேவல்தெனிய கால்வாயினால் போஷிக்கப்படுகின்றன.	*0.70*	*0.14*	*20%*
ஜயவிந்தாகம முருத்த கஹபேல அணைக்கட்டு நிர்மாணம் - யட்டியந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் ஜயவிந்தாகம கிராம உத்தியோகத்தர் பிரிவின் 25 விவசாயக் குடும்பங்களுக்கு சொந்தமான 11 ஏக்கர் நெற் காணிகள் ஜயவிந்தாகம முருத்த கஹபேல அணைக்கட்டு மூலம் போஷிக்கப்படுகின்றன.	*1.35*	*0.27*	*20%*

ii.) முற்பணக் கொடுப்பனவுகளைக் கொண்டு செயல்படுத்தப்படும் செயற்திட்டங்கள்

- *விதை உற்பத்தி செயற்திட்டம்*

செயற்திட்டம்	***மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா.)***	***உண்மையான தொகை (மில். ரூபா.)***	***நிதிசார் முன்னேற்றம்***
a.) தேசிய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் (விவசாயத் திணைக்களம்)	*120.00*	*120.00*	*%100*
b.) 2022/23 பெரும் போகத்தில் விதை நெல்லைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம் (கமநல அபிவிருத்தித் திணைக்களம்)	*50.00*	*13.34*	*26%*

a.) தேசிய விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம்

விவசாயத் திணைக்களத்தினால் விவசாயிகளின் விதைத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் தேசிய விதை உற்பத்தி மற்றும் விதை கொள்வனவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. 2022 ஆம் ஆண்டுக்கான விதைத் தேவை 2,490 மெ. தொன் வரை அதிகரிக்க வேண்டியுள்ளதுடன் அதற்கு 574.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு தேவைப்படுகிறது. அதில் 120.00 மில். ரூபாய் நிதி விவசாயிகளின் நம்பிக்கை நிதியத்தின் ஊடாக கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் மூலம் நெல், தானியம், மிளகாய், சோளம், சோயா போஞ்சி மற்றும் காய்கறி வகைகள் என்பவற்றின் 204,297.00 கி. கிராம் விதைகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

b.) 2022-23 பெரும் போகத்திற்கு விதை நெல்லைக் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டம்

2022-23 பெரும் போகத்தின் போது தேசிய விதை நெல் தேவையைப் பூர்த்தி செய்யும் பணிகளை துரிதமாக ஆரம்பிக்கத் தேவையான 24.6 மில். ரூபாய் ஒதுக்கீட்டை விவசாயிகள் நம்பிக்கை நிதியம் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வழங்கியுள்ளது. அந்த செயற்திட்டற்கு ஊடாக 123,033.00 கிலோ கிராம் விதை நெல் கொள்வனவு செய்யப்பட்டு ஹம்பந்தோட்டை, பதுளை, கேகாலை, மன்னார் ஆகிய மாவட்டங்களின் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது.

- ***ஏனைய விவசாய செயற்திட்டங்கள்***

விவசாயத் திணைக்களத்தின் பிந்துனுவெவ தேனீ வளர்ப்பு அபிவிருத்தி அலகினால் நடைமுறைப்படுத்தப்படும் தேனி வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டத்திற்கு வருடாந்தம் வழங்கப்படும் 1.00 மில். ரூபாய் முற்பண நிதியை இந்த வருடம் 2.00 மில். ரூபாய் வரை அதிகரித்து வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த செயற்திட்டத்தின் மூலம் 750 தேனி வளர்ப்புப் பெட்டிகள், 500 புகையடிக்கும் கருவிகள் மற்றும் தேனி வளர்ப்புப் பெட்டிகளுக்கான 5000 வாயில் தட்டுகள் என்பன உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அந்த உதிரிப் பாகங்கள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

செயற்திட்டம்	***மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா.)***	***உண்மையான தொகை (மில். ரூபா.)***	***நிதிசார் முன்னேற்றம்***
தேனி வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டம் (விவசாயத் திணைக்களம்)	*2.00*	*0.44*	*22.18%*

iii.) விவசாய கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- ***உள்நாட்டு கலப்பின சோள விதை உற்பத்திக் கடன் திட்டம்***

உள்நாட்டு கலப்பின சோள விதை உற்பத்திக்கு 9.37 மில். ரூபாய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

செயற்திட்டம்	***மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா.)***	***உண்மையான தொகை (மில். ரூபா.)***	***நிதிசார் முன்னேற்றம்***
பொலன்னறுவை பகமூன கமநல சேவை நிலையம் (விவசாயத் திணைக்களம்)	*6.68*	*6.68*	*மீளச் செலுத்தும் நிவாரணக் காலப்பகுதியில் உள்ளது.*
மொனராகலை மாவட்டத்தின் ஒக்கம்பிட்டிய கமநல சேவை நிலையம் (விவசாயத் திணைக்களம்)	*2.70*	*2.70*	*மீளச் செலுத்தும் நிவாரணக் காலப்பகுதியில் உள்ளது.*

இலங்கையின் வருடாந்த சோளச் செய்கைக்குத் தேவையான சுமார் 1,350.00 மெ. தொன் கலப்பின சோள விதைகளை இறக்குமதி செய்ய வேண்டியேற்படுகிறது. இதற்காக செலவிடப்படும் தொகை அண்ணளவாக 3,780.00 மில். ரூபாய் ஆகும். தற்போது விவசாயத் திணைக்களத்தினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள ஒரு உள்நாட்டு கலப்பின சோள வர்க்கம் (MI Maize Hybrid 4 மற்றும் 5) 2022/23 பெரும் போகத்தின் விதைத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இந்த விதை உற்பத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயன்படுத்தப்படுகிறது.

பொலன்னறுவை பகமூன கமநல சேவை நிலையத்தின் 52 விவசாயிகளின் 44.75 ஏக்கருக்கு 6.67 மில். ரூபாய் நிதி மற்றும் மொனராகலை மாவட்டத்தின் ஒக்கம்பிட்டிய கமநல சேவை நிலையத்தின் 15 விவசாயிகளின் 25 ஏக்கருக்கு 2.70 மில். ரூபாய் மூலதன நிதி என்பன வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் பெற்றுக்கொண்ட அறுவடை 36.2 மெ. தொன் ஆகும்.

புகைப்பட இலக்கம் 24, 25 மற்றும் 26 - பக்க இலக்கம் 83

புகைப்பட இலக்கம் 27 மற்றும் 28 – பக்க இலக்கம் 84

7. இலங்கை பொஸ்பேட் கம்பனி (LPC)

7.1. நிறுவனத்தை நிறுவுதல் மற்றும் சட்ட ரீதிச் சட்டகம்

1987ஆம் வருடத்தின் 33 இலக்கம் பொதுக் கூட்டுத்தாபன அல்லது அரசுக்கு சொந்தமான வியாபராங்களை பொறுப்பேற்கும் பொது கம்பனிகளாக மாற்றும் சட்டத்தின் பிரகாரம் 1982ஆம் வருட இலக்கம் 17 கொண்ட கம்பனிகள் சட்டத்தின் கீழ் வ/பட்ட லங்கா பொஸ்பேட் நிறுவனம் 1992 ஆம் வருடம் ஜூலை மாதம் 10 ஆந் திகதி ஒரு மட்டுப்படுத்தப்பட்ட கம்பனியாக நிறுவப்பட்டது. அதற்கமைய இது அரச அகழ்வு மற்றும் கனிப்பொருள் அபிவிருத்தி கூட்டுத் தாபனத்தின் எப்பாவல பொஸ்பேட் செயற்திட்டத்தை பொறுப்பேற்றுக் கொண்டது. எனினும் 2007ஆம் வருட 07 இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட கம்பனி மீள்-பதிவு செய்யப்பட்டது. மேலும், நிறுவனத்தின் வெளியிடப்பட்ட பங்குகள் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக திறைசேரிச் செயலாளருக்கு முழுமையாகச் சொந்தமானவையாகும்.

7.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

எப்பாவல பொஸ்பேட் சேர்மானத்தை உகந்த அளவில் பயன்படுத்தி போசணைமிக்க பொஸ்பரசைக் கொண்டு எமது தாய் நாட்டு மண் வளத்தை வளப்படுத்தல் என்பதுவே நிறுவனத்தின் தொலைநோக்காகக் காணப்படுகிறது. மேலும், சூழல் நட்பு மற்றும் புதிய முறைகளின் ஊடாக பொசுபரஸில் தன்னிறைவடைந்து தேசிய பொசுபரஸ் உரத்தின் தேவையினை நிறைவு செய்தல் என்பது நிறுவனத்தின் செயற்பணியாகக் காணப்படுகிறது.

7.3. நிறுவனத்தின் பணிகள்

நிறுவனத்தின் பிரதான பணியாக விவசாயப் பயிர்களுக்குப் பயன்படுத்தப்படும் பொஸ்பேட் சேர்மானங்களின் அகழ்வு நடவடிக்கை, பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் காணப்படுகின்றது.

7.4. நிதிசார் மற்றும் பௌதீக நிலைமைகள்

01.01.2022 முதல் 31.12.2022 ஆம் திகதி வரை நிறுவனத்தின் ERP மற்றும் HERP உரங்களின் உற்பத்தி, விற்பனை மற்றும் வருமானம் தொடர்பான தரவுகள்:

உர வகை	உற்பத்தி செய்த அளவு (மெ. தொன்)	விற்பனை (மெ. தொன்)	வருமானம் (மில். ரூபாய்)
ERP	31,158	29,102	447.46
HERP	3,638	3,281	72.32
மொத்தம்	**34,796**	**32,383**	**519.78**

விவசாயப் பிரிவின் நிகழ்ச்சித் திட்டங்களுடன் தொடர்பான புகைப்படங்கள்

- **வருடாந்த பயிர் உற்பத்தித் திட்டத்தை சமர்ப்பித்தல்**



புகைப்படம் 01 : வருடாந்த பயிர் உற்பத்தித் திட்டத்தை சமர்ப்பித்தல்

- **பல்வேறு தரப்பினரின் உதவியுடன் கண்டுபிடிப்பாளர்களை வெற்றிகரமான தொழில்முனைவோராக மாற்றுவதற்கான செயற்திட்டம்**





புகைப்பட 02 : கள மேற்பார்வைகள்

பங்குபற்றிய அதிகாரிகள் - *பணிப்பாளர் (கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு, கமத்தொழில் அமைச்சு)*
பணிப்பாளர் (தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்)
அபிவிருத்தி அதிகாரிகள்(கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு , கமத்தொழில் அமைச்சு)
அவதானிப்பு - *திரு. ஆர் குணசேன அவர்களால் உற்பத்தி தயாரிக்கப்பட்ட இலகுரக சிறிய டிராக்டர் இயந்திரத்தின் செயற்பாட்டை பரீட்சித்தல்*
பிரதேசம் - *மொரட்டுவ பல்கலைக்கழகம், கொழும்பு மாவட்டம்*
திகதி - *2022.11.01*





புகைப்பட 03 : கள மேற்பார்வைகள்

பங்குபற்றிய அதிகாரிகள் - *பணிப்பாளர் (கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு - கமத்தொழில் அமைச்சு)*
பணிப்பாளர் (தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்)
இயந்திரப் பொறியியலாளர் (பொறியியல் பிரிவு - கமத்தொழில் அமைச்சு)
அபிவிருத்தி அதிகாரிகள் (கொள்கை மற்றும் செயற்திட்ட மதிப்பீடு - விவசாய அமைச்சு)

அவதானிப்புகள் – திரு. I.G ரவீந்திர சுதர்ஷன உற்பத்தி செய்த சதுப்பு நிலப் பண்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படும் இலகுரக இயந்திரத்தின் செயற்பாட்டை பரீட்சித்தல்
பிரதேசம் - இஹல அல்பிட்டிய (காலி மாவட்டம்)
திகதி - 2022.11.25

- **விவசாய செயற்திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு**



புகைப்படம் 04 : அவதானிப்பு - ASMP மிளகாய்ச் செய்கை (12.11.2022 ஆம் திகதி கண்டியில்)



புகைப்படம் 05 : கோப்பாய் SAPP கீல்ஸ் செயற்திட்டத்தின் கத்தரிச் செய்கையை அவதானிக்கும் பணிகள் (23.11.2022 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்டத்தில்)





புகைப்பட 06 : 02.11.2022 ஆம் திகதி குருநாகல் மாவட்டத்தில் திரவ பால் உற்பத்தியை அவதானித்தல் (SAPP வொன்ரிச் தனியார் நிறுவனத்துடன் இணைந்த செயற்திட்டம்)

- **கமநல சேவை நிலையங்கள் ரீதியாக மண் மாதிரிப் பரிசோதனை வசதிகளை உருவாக்குதல்**









புகைப்பட 07 : மண் பரிசோதனை நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகள் நடைபெறும் விதம்

- **விவசாயத் துறையை நவீனமயமாக்கும் செயற்திட்டம் *(ASMP)***



புகைப்பட 08 : ASMP திட்டத்தின் மூலம் புளிப்பு வாழை ஏற்றுமதி



புகைப்பட 09 : அனுராதபுர மிளகாய் உற்பத்திக் கொத்தணி

- **காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் செயற்திட்டம்**



புகைப்படம் 10 : 2022 பெரும்போக நெற் செய்கையில் இயந்திரம் மூலம் நாற்று நடல் – கிழக்கு மாகாணம்



புகைப்படம் 11 : கல்லிக்குளம் குளத்தின் மறுசீரமைப்புப் பணிகளை உலக வங்கி கண்காணிப்புக் குழு அவதானித்தல் - வட மாகாணம்



புகைப்படம் 12 : வீட்டுத்தோட்டச் செய்கையை அவதானிக்கும் மாகாண விவசாய அதிகாரிகள் - தென் மாகாணம்



புகைப்படம் 13 : காலநிலைக்கு சீரமைவான விவசாய நடைமுறைகள் பற்றிய அனுபவப் பரிமாற்றம் - வட மத்திய மாகாணம்

- **படல்கமவில் புதிய பால் பதனிடும் நிலையத்தை நிறுவுதல்**



புகைப்படம் 14 : தொழிற்சாலைக் கட்டிடம்



புகைப்படம் 15 : நிருவாகக் கட்டிடம்





புகைப்படம் 16 : பால் பதனிடும் இயந்திரம்





புகைப்படம் 17: சிறிய அளவிலான பால் பண்ணை அபிவிருத்தி சங்கம், வாரியப்பொல





புகைப்படம் 18: சக்ஸீட் இன்டர்நேஷனல் (தனியார்) நிறுவனம், வென்னப்புவ



புகைப்படம் 19 : அத்தனகல்ல பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்



புகைப்படம் 20 : மாவட்ட பால் விநியோக கூட்டுறவு சங்கம், பொலன்னறுவை



புகைப்படம் 21 : வ/ப நாவலப்பிட்டி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம்



புகைப்படம் 22 : ஹெரிடேஜ் ஹெல கொவி அபிவிருத்தி சங்கம், பண்டாரகம

- **விவசாய மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை *(AAIB)***



புகைப்பட 23 : புதிய ஓய்வூதியத் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு 31/ 10/2022 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ கமநல விவகார ஆராய்ச்சி மற்றும் மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

- **விவசாயிகள் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**





புகைப்பட 24 : பொலன்னறுவை பக்கமூன கமநல சேவைப் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தின் சோளச் செய்கை நிலங்கள் மற்றும் அறுவடை



புகைப்படம் 25: மல்வருஷ கால்வாய் புனரமைப்பு



புகைப்படம் 26: வெவெல்தெனிய கால்வாய் புனரமைப்பு



புகைப்படம் 27: ஜயவிந்தகம முருதகஹ பேல்ல அணைக்கட்டை நிர்மாணித்தல்



புகைப்படம் 28: பிந்துனுவெவ தேனீ வளர்ப்பு அபிவிருத்திப் பிரிவினால் நடைமுறைப்படுத்தப்படும் தேனீ வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்யும் செயற்திட்டம்

02. கால்நடை பிரிவு

2022 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் – சுருக்கம்

#	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம்	2022 திருத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஏற்பாடு (ரூ.மி.)	பௌதிக முன்னேற்றம் (%)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட குறிப்புகள்
1.	திரவ பால் நுகர்வை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம்	25.00	80.00	14.29	2021 ல் ரசீதுகளுக்காக ரூ. 989,600 மட்டும் செலுத்தப்பட்டது.
2.	கால்நடை இனப்பெருக்கம் மற்றும் பண்ணைகள் அபிவிருத்தி	25.00	47.00	4.37	2021 ல் ரசீதுகளுக்காக ரூ. 2,309,491.85 மட்டும் செலுத்தப்பட்டது.
3.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற்பண்ணை தொழில் முனைவோர் அபிவிருத்தி மற்றும் பாற்பண்ணை கிராமங்களின் அபிவிருத்தி	32.00	93.00	29.73	2022 ல் வரவு செலவு திட்டங்களின் கீழ், ரூ. 1,000 மி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.
4.	கால்நடை அபிவிருத்தி நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டம்	40.00	55.00	13.21	
5.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழி பண்ணை அபிவிருத்தி	37.00	84.00	12.94	2021 ல் ரசீதுகளுக்காக ரூ. 549,800 மட்டும் செலுத்தப்பட்டது.
6.	பன்றி கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	30.00	45.00	4.72	
7.	உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பாற் பண்ணையை ஊக்குவித்தல்	98.00	70.00	48.73	2021 ல் ரசீதுகளுக்காக ரூ. 3,485,838.33 மட்டும் செலுத்தப்பட்டது.
8.	ஆடு கூட்டம் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	15.00	80.00	4.99	
மொத்தம்		**302.00**	**69.00**	**132.98**	

**26.04.2022 ஆம் திகதி பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி, இந்த வரவு செலவுத் திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், 2022 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவசெலவுதிட்டம் மூலம் ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து கருத்திட்டத்திற்காக ரூ. 32 மி ஒதுக்கப்பட்டுள்ளது.*

ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்

1. திரவப் பால் நுகர்வினை ஊக்குவித்தல் மற்றும் பிரபல்யப்படுத்தல்

உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரித்தல், நுகர்வோர் சமூகம் மத்தியில் திரவப் பால் நுகர்வை அதிகரித்தல் மற்றும் பிரபல்யப்படுத்துவதும் இந்நிகழ்ச்சிதிட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும். மதிப்பாய்விற்கு உட்பட்ட ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 25.00 .மி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், இதன்கீழ் பின்வரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- *பாடசாலை மாணவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கிடையில் திரவப் பால் பாவனையைப் பிரபல்யப்படுத்தல்.*
- *பாடசாலை மாணவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களிடையே திரவப் பால் அருந்துவதன் முக்கியத்துவம் உள்ளடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்.*
- *பால் சேகரிப்பு மற்றும் பால் பதப்படுத்துதலுக்கான உபகரணங்களை வழங்குதல்*
- *பால் பண்ணையாளர்களுக்கடையில் பால் குளிரூட்டும் தொட்டிகள் விநியோகம்*
- *திரவப் பால் நுகர்வை பிரபல்யப்படுத்தும் நிகழ்ச்சிகளை நடத்துதல்*

பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக 26.04.2022 அன்று வெளியிடப்பட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் 2022 ல் இடைநிறுத்தப்பட்ட கருத்திட்டம் 2022 செப்டெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாகாணங்களால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் கோரிக்கைகளின்படி, கருத்திட்ட நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களிடையே வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த அனைத்து மாகாணங்களிலும் திரவப் பால் ஊக்குவிப்பு நடவடிக்கை மட்டுமே வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2021 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிதிக் கடமைகளுக்கு, 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு மூலம் ரூ. 1.00 மி செலுத்தப்பட்டுள்ளது. மீளாய்வு காலத்தின் முடிவில் ரூ. 13.30 மி செலுத்தப்பட்டு ரூ. 4.67 மி கடமைகளைச் செலுத்துவதற்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

புகைப்படம் இல 29 - பக்க எண் 100

2. விலங்கு இனப்பெருக்க மற்றும் பண்ணை அபிவிருத்தி

உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான உயர்தர கறவை மாடுகளின் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், நாடளாவியரீதியில் இனப்பெருக்கம் செய்யும் பண்ணைகளை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட 02 உப திட்டங்களை இத்திட்டம் கொண்டுள்ளது. இத்திட்டத்திற்காக ரூ. 25.00 மி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இருந்து கருத்திட்டச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2022.04.26 ஆம் திகதி பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி கருத்திட்டத்தின் அமுலாக்கம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

அப்படியே இடை நிறுத்தப்பட்ட கருத்திட்டம் 2022 திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்பட்டதுடன் 2022 செப்டெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டதுடன், 2021 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் செலுத்தப்பட்ட ரூ. 2.30 மி நிதி 2022 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியில் உரிய தரப்பினர்க்கு செலுத்தப்பட்டது.

2.1. தனியார் வளர்ப்பு இனப்பெருக்க பண்ணை அபிவிருத்தி உப கருத்திட்டம்

இதன் கீழ், மாவட்டத்திற்கு ஒரு பண்ணை வீதம் 25 தனியார் வளர்ப்பு பண்ணைகளை அபிவிருத்தி செய்ய நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்காக எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூ. 6.25 மி ஆகும். மதிப்பாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், 28 தனியார் வளர்ப்பு பண்ணைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இதற்காக ரூ. 2.06 மி செலுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன் ரூ.4.82மி முற்பணம் செலுத்தப்பட்டுள்ளது.

2.2. அரசு இனப்பெருக்க பண்ணை அபிவிருத்தி உப கருத்திட்டம்

இதன் கீழ் மாகாண மட்டத்தில் 09 அரச இனப்பெருக்க பண்ணைகளை அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டதுடன், எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூ. 15.90 மி ஆக இருந்தது. 2021 ஆம் ஆண்டில், அரசாங்கத்தின் இனவிருத்தி பண்ணை திட்டம் மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அதிகபட்சமாக ரூ. 2.00 மி கீழ், ஏனைய மாகாணங்களுக்கு அதிகபட்சமாக ரூ. 1.70 மி அடிப்டையில் தேவையான உள்ளீடுகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் 02 இனப்பெருக்க பண்ணைகள் உருவாக்கப்பட்டு, ரூ. 2.60 மி பணம் செலுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

3. கால்நடை அபிவிருத்தி நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டம்

கால்நடைப் பிரிவின் அபிவிருத்திக்காக, வடக்கு மாகாணத்தில் நிலவும் பாரிய ஆற்றலுடன் கால்நடை அலுவலகங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை நிறுவுவதன் மூலம் கால்நடைப் பிரிவில் சேவை வழங்குதலை மேம்படுத்துவதற்கு முயற்சிகள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் இத்திட்டம் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு.

விடயம்	ஒதுக்கப்பட்ட நிதிகள் (ரூ.மி)	முதலீடு செய்யப்பட்ட நிதி (ரூ.மி)	விசேட குறிப்புகள்
பருத்தித்துறை கால்நடை வைத்திய அலுவலக நிர்மாணப் பணிகள்.	*21.21*	*6.32*	*தற்போது கட்டிடம் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது.*
யாழ்ப்பாணம் (திருநெல்வேலி) பல்நோக்கு கட்டிட நிர்மாணப் பணிகள்.	*14.89*	*6.89*	*சமீபகாலமாக கட்டுமானப் பொருட்களின் தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வு காரணமாக 26.04.2022 திகதியிட்ட தேசிய வரவசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல 03/2022 இன் படி இக்கட்டுமான ஒப்பந்தம் நிறுத்தப்பட்டது.*

புகைப்படம் இல 30 - பக்க எண் 100

4. சிறிய மற்றும் நடுத்தர கோழிப்பண்ணைகளின் அபிவிருத்தி

நாட்டை தன்னிறைவு அடையச் செய்வதற்காக கோழிப்பண்ணைகளை நிறுவுதல் கோழிப்பண்ணை உற்பத்தியில் கோழிப் பொருட்களின் நுகர்வை பிரபல்யப்படுத்துதல் மற்றும் கோழிப்பண்ணை பிரிவுக்கு புதிய தொழில்முனைவோரை வழிநடத்துதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இதன்கீழ், அரசு கோழிப்பண்ணை முட்டை சேமிப்பகம் மற்றும் சிறிய அளவிலான கோழி தீவன கலப்பகம் அபிவிருத்தி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ரூ.15.00 மி ஆகும். ஆனால் தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இன் படி, இத்திட்டத்தை செயல்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மேலும் 2021 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்படவேண்டிய நிதிபொறுப்புகள் ரூ. 0.55 மி செலுத்தப்பட்டது.

இடைநிறுத்திய கருத்திட்டத்தை 2022 ல் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுடன் 2022 செப்டெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. இதனடிப்படையில், நாட்டில் நிலவும் போசாக்குக் குறைபாட்டை நீக்கும் நோக்கில், மாகாணப் பணிப்பாளர்களின் கோரிக்கைக்கு அமைய, இதற்காக ரூ. 37.00 மி நிதிகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஒருநாள் வயதுடைய கோழிக்குஞ்சுகள் 15 பெற்றுக்கொள்ளும் அடிப்டையில் 1,501 பண்ணைகளும், ஒருமாத வயதுடைய 10 குஞ்சுகள் பெற்றுக்கொள்ளும் அடிப்டையில் 2,605 பண்ணைகளும், அரசு கோழிப்பண்ணை முட்டை சேமிப்பகம் அபிவிருத்தி அடிப்டையில் 02 பண்ணைகளும், நிர்மாணிப்பதற்காக ரூ. 12.94 மி நிதிசெலுத்தப்பட்டு நிறைவடைந்துள்ளதுடன் ரூ. 11.58 மி கட்டணம் செலுத்துவதற்கான நிதிபொறுப்புகள் முன்வைக்கப்படுகின்றன.

புகைப்படம் இல 31 - பக்க எண் 100

5. பன்றி வளர்ப்பு கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும் பன்றித் தொழிலை மேம்படுத்துவதற்கும் தேவையான உள்ளீடுகளை வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்டையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த 85 பன்றி பண்ணைகளை நிறுவவும், 2 பன்றி இனப்பெருக்க பண்ணைகளை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூ. 30.00 மி ஆகும். இத்திட்டத்தின் கீழ், மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டின் முதல் காலாண்டில் சப்ரகமுவ மாகாணத்தில் உயிர்வாயு அலகு ஒன்றை நிர்மாணிப்பதன் மூலம் சூழலுக்கு உகந்த பன்றி பண்ணைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், மத்திய மாகாணத்தில் பயிற்சித் திட்டத்திற்குத் தேவையான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் அறிவுறுத்தலின்படி, இத்திட்டத்தின் மேலதிக செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

2022 இடை வரவுசெலவுத் திட்டத்தின் ஊடாக கருத்திட்டம் மீண்டும் ஆரம்பிப்பதற்கு ரூ. 30.00 மி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதனடிப்டையில் சுற்றுச்சூழலுக்கு உகந்த 110 பன்றி பண்ணைகளுக்காக ரூ. 22.00 மி கொட்தெனிய இனப்பெருக்க பன்றி பண்ணையை அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 5.00 மி பயற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்காகவும் ரூ. 2.10 மி நிருவாக செலவுக்காக்வும் ரூ. 0.90 மி ஒதுக்கப்பட்டுள்ளது. மீளாய்வு காலத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த 49 பன்றி பண்ணைகள் அபிவிருத்தி செய்வதற்காக ரூ. 4.72 மி வழங்கியுள்ளதுடன், 2023 ஆம் ஆண்டுக்கான கட்டணம் ரூ. 3.42 மி செலவிடப்பட்டுள்ளது.

6. உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பால் பண்ணைகளை ஊக்குவித்தல்

சிறிய மற்றும் நடுத்தரளவிலான பாற் பண்ணைகளின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலம் உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிப்பது பிரதான நோக்கமாகும். இந்த நோக்கத்தை அடைவதற்காக, விலங்குகளின் போஷாக்கு நிலையை மேம்படுத்தல் மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கத் திறனை மேம்படுத்துவதற்கும் மாகாண மட்டத்தில் நாடளாவிய ரீதியில் 02 முக்கிய வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதுடன், எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ரூ.120.00 மி ஆகும். தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இன் படி, இந்த திட்டத்தை செயல்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது. மீளாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், 2021 ஆம் ஆண்டின் நிதிக் கடமைகளுக்காக, ரூ. 3.49 மி செலுத்தப்பட்டுள்ளது. "பால் நிறைந்த தேசம்" கருத்திட்டத்திற்காக ரூ. 0.46 மி நிதி இக்கருத்திட்டத்தின் செலவினத்தின் ஊடாக செலுத்தப்பட்டுள்ளது.

இடைநிறுத்திய கருத்திட்டத்தை 2022 ல் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுடன் 2022 செப்டெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்பட்ட இறுதி காலப்பகுதியில் இக்கருத்திட்டம் தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு.

விபரம்	செலுத்தப்பட்ட நிதி (ரூ.மி.)	விசேட விடயங்கள்
இனப்பெருக்க நடவடிக்கைகளின் கீழ்.	9.91	ரூ 6.20 மி பணக்கட்டணம் சம்பந்தமாக செலுத்தப்பட்டுள்ளது.
கால்நடை உணவு நடவடிக்கைகளுக்காக	4.76	ரூ10.67.மி நிதிபொறுப்புகள் செலுத்துவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோசமான காலநிலை காரணமாக உயிரிழந்த விலங்குகளுக்கான இழப்பீடு பெற்றுக்கொடுத்தல்	30.57	

புகைப்படம் இல 32 மற்றும் 33 - பக்க எண் 101

7. ஆட்டு மநதை கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

ஆட்டுப் பால் மற்றும் ஆட்டு இறைச்சி நுகர்வை அதிகரிக்கும் நோக்கில், மத்திய, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமாகாணங்களை மையமாகக் கொண்டு இத்திட்டம் நடைமுறைப்படுத்த முன்மொழியப்பட்டதுடன், எதிர்பார்க்கப்படும் முதலீடு ரூ.15.00 மி ஆகும். வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இல. 03/2022 இன் படி, கருத்திட்டத்தை செயல்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இடைநிறுத்திய கருத்திட்டத்தை 2022 ல் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டுடன் 2022 செப்டெம்பர் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் கீழ் வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் 4 ஆட்டு மந்தை கிராமங்கள் நிர்மாணிக்கப்பட உள்ளன. மீளாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், ரூ. 4.99 மி செலுத்தப்பட்டு ரூ. 6.54 மி நிதிபொறுப்பு பணம் செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

புகைப்படம் இல 34 - பக்க எண் 101

2022 வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுளை செயற்படுத்தல்

i.) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணையாளர் தொழில் முனைவோரின் மேம்பாடு மற்றும் பால் கூட்டு கிராமங்களின் அபிவிருத்தி ("பால் நிறைந்த தேசம்" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்)

2022 வரவுசெலவுத் திட்டத்தின் கீழ், ரூ.1,000 மி நிதி வழங்கப்பட்டுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற் பண்ணைகளுக்கான புதிய தொழிநுட்பத்தை அறிமுகப்படுத்தலில் முறையான நிர்வாகத்தின் மூலம் திரவப்பால் உற்பத்தியை உயர்த்துதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். நோக்கத்தை அடைவதற்கு விலங்குகளுக்கு உணவு வழங்குதல், விலங்குகளின் போசனையை உயர்த்துதல், முறையான வீடுகளை வழங்குதல் , இனப்பெருக்க நடவடிக்க்களுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் அதுதொடர்பான நடவடிக்கைகள் முழு நாட்டையும் உள்ளடங்கலாக மாகாண மட்டத்தில் செயல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் உள்ள 338 கால்நடைப் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் பின்வரும் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. பொதுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக 26.04.2022 அன்று வெளியிடப்பட்ட தேசிய வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் படி, இந்த வரவுசெலவுத் திட்ட முன்மொழிவை நடைமுறைப்படுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.

இருப்பினும், 2022 இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் இக் கருத்திட்டத்திற்கான ரூ 32.00 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

மீளாய்வு செய்யப்பட்ட காலத்தின் முடிவில், முன்னேற்றம் பின்வருமாறு.

#	நிறைவேற்ற வேண்டிய பணிகள்	பௌதீக முன்னேற்றம்	முதலீடு (2022.12.31 ம்) (ரூ.மி.)
1.	பால் கறக்கக்கூடிய பசுக்கள் 5-10 வரை அல்லது தினமும் 30 லீட்டர்களுக்கு மேல் பால் பெறும் பண்ணைகளுக்கு ரூ.100,000 என்ற ஏற்பாட்டின் கீழ் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்.	நாடு முழுவதையும் உள்ளடக்கிய 162 பண்ணைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன	13.44
2.	ஒரு நாளைக்கு 11-25 கறவை மாடுகள் அல்லது 50 லீட்டர்களுக்கு மேல் பால் உள்ள பண்ணைகளுக்கு ரூ. 150,000 நிதியின் கீழ் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்.	நாடு முழுவதும் உள்ளடக்கிய 71 பண்ணைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன	7.83
3.	பால் கூட்டு கிராமங்களின் வளர்ச்சியின் கீழ் ஒரு பால் தொகுப்பு கிராமத்திற்குத் தேவையான உள்ளீடுகளுக்கு ரூ. 500,000 ஒதுக்கீடு	பால் கூட்டு கிராமங்கள் 02 க்காக தேவையான உள்ளீடுகள் மற்றும் வசதிகள் வழங்கப்பட்டுள்ளன	0.71
4.	பயிற்சி நிகழ்ச்சி திட்டத்திற்காக ஒரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ரூ.25,000 நிதி வழங்கி விவசாய தொழில்முனைவோருக்கு பயிற்சியளித்தல்	60 பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டுள்ளது.	0.75
5.	கறவை மாடு (பசு மற்றும் எருமை) இனப்பெருக்கத்திற்காக தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூ.91.5 மி நிதியின் கீழ் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளல்.	கறவை மாடு (பசு மற்றும் எருமை) இனப்பெருக்கத்திற்கு விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது.	5.70
6.	செயல்பாட்டு மதிப்பீடு மற்றும் நிர்வாக செலவுகள்		1.32
	மொத்தம்		***29.73***

புகைப்படம் இல 35 மற்றும் 36 - பக்க எண் 102

முழுமையான வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின் மூலம் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான ஒதுக்கீடுகள்

2022 இல் திருத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, உள்ளூர் பால் உற்பத்தியை அதிகரிக்க தேசிய நிகழ்ச்சித் திட்டங்களை செயல்படுத்த ரூ.*200* மி விவசாய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளது. *2022* ஆம் ஆண்டின் இறுதியில், கீழ் காணப்படும் நிகழ்ச்சித் திட்டங்ளை செயல்படுத்துவதுடன், ரூ. *39.55* மி நிதி செலுத்தி நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும் ரூ.*115.87* மி நிதிபொறுப்பு செலுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

i.) புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தின் ஊடாக செயல்படுத்தப்பட்ட சோளம் கருத்திட்டம்

புனர்வாழ்வு பணியகத்தின் ஆணையாளர் நாயகத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் சோளக் கருத்திட்டத்திற்காக கந்தகாடு சிங்கபுரத்தில் *200* ஏக்கர் காணியை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.*39.55*மி நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமைச்சுக்கும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்திற்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. சோள அறுவடையை பால் பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் தொகையை திறைசேரியில் வரவு வைக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ii.) ரிதியகம பண்ணையில் கால்நடை உணவிற்காக சோள உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளை வழங்குதல்

நாட்டில் நிலவும் கடுமையான கால்நடை தீவனப் பற்றாக்குறையின் விளைவைப் போக்கவும், தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையின் பண்ணைகளில் கால்நடைகளுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்யவும் சோள அறுவடையை பால் பண்ணையாளர்களுக்கு வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதற்காக முதலீடு செய்யப்பட்ட தொகை ரூ.*106.73* மி இதன் மூலம் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையின் ரிதியகம பண்ணையில் *700* ஏக்கர் சோளம் பயிரிடப்பட்டு, கிடைக்கும் விளைச்சலில் *50%* பால் பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் விற்பனையில் கிடைக்கும் நிதி திறைசேரியில் வைப்பு செய்யப்பட்டு இக் கருத்திட்டத்தில் கிடைக்கும் கால்நடை தீனியும் கால்நடை வள அபிவிருத்தி சபையின் பண்ணைகளுக்கு வழங்கப்பட உள்ளது. இது பால் உற்பத்தியை அதிகரித்து தேசிய பால் உற்பத்திக்கு பங்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக அமைச்சுக்கும் தேசிய கால்நடை அபிவிருத்தி சபைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. மேலும், திரவ பால் பயன்பாட்டை பிரபல்யப்படுத்தும் நோக்கில் தேசிய கால்நடை அபிவிருத்தி சபையால் நுகர்வோருக்கிடையில் விநியோகிக்கும் நடவடிக்கைக்காக *"*பால் குளிரூட்டும் தொட்டியை*" (Milk Dispenser chilling Tank)* கொள்வனவு செய்வதற்கு ரூ. *3.96* மி நிதி வழங்கப்பட்டுள்ளது.

iii.) மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்ட போசனை புல் மற்றும் சோளம் பயிரிடும் கருத்திட்டம்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பால் பண்ணையாளர்களுக்கு கால்நடை தீவன பற்றாக்குறையை சமாளிக்க மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தால் செயற்படுத்தும் போசனை புல் மற்றும் சோளம் பயிர்ச்செய்கைக்காக ரூ.*5.18* மி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய, ஊவா மற்றும் தென் மாகாணங்களை மையப்படுத்தி இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கால்நடை பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்களின் முன்னேற்றம்

விவசாய அமைச்சின் கீழ் இயங்கும் கால்நடைத் துறையைச் சேர்ந்த நிறுவனங்கள் பின்வருமாறு.

1. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்

- **அறிமுகம்**

1978 இல் தாபிக்கப்பட்ட கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களமானது இலங்கையில் கால்நடை அபிவிருத்திக்குப் பொறுப்பு வாய்ந்த பிரதான அரச நிறுவனமாகும். இத் திணைக்களம் நாட்டில் விலங்குகளுக்கு நோய்கள் தொற்றாமல் தடுத்தல் மற்றும் அவற்றினைக் குணப்படுத்தல், தொழில்நுட்ப தலைமைத்துவத்தினை வழங்குதல், விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரம் தொடர்பிலான சேவைகளின் நிபுணத்துவம் மற்றும் பின்னூட்டல் சேவைகளினை வழங்குதல் போன்ற நோக்கங்களுடன் கால்நடை மூலவளத்துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினை நடாத்துவதற்கான சட்ட ரீதியான அதிகாரத்தினைக் கொண்டுள்ள ஒரு தேசிய நிறுவகமாகும். நாடு முழுவதும் உள்ளடக்கியவாறு மேற்கொள்ளும் பிற முக்கிய நடவடிக்கைகள்; விலங்கு வளர்ப்பு பற்றிய பயிற்சியாளர்களை பயிற்றுவித்தல், கைத்தொழில் விரிவாக்கலுக்கான கருத்திட்டங்களினை வகுத்தல், பொருளாதார மதிப்பீட்டினை நடாத்துதல் மற்றும் நாடு பூராகவும் உள்ளடக்கும் வகையில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான அபிவிருத்தி நடவடிக்கைகள் உள்ளடங்கும். கால்நடை விடய அபிவிருத்தி வசதிகளைத் திட்டமிடுவதற்காக இத் திணைக்களம் மூலம் சட்டம் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாகாண சபைகள் மட்டத்தில் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கள மட்டத்திலான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் என்பன ஒன்பது *(09)* மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

தேசிய கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு தொழில்நுட்ப தலைமைத்துவம், நிபுணத்துவம் வாய்ந்த வைத்திய சேவை மற்றும் ஏனைய ஆதரவு சேவைகளினை வழங்குவதன் மூலம் கால்நடைக் கைத்தொழில் உற்பத்திக்கு பாரியளவிலான பங்களிப்பினை வழங்கி வருகின்றது. கால்நடை வைத்தியர்களினால் நிருவகிக்கப்படும் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் பிரதான அலகாக தொழிற்பட்டு வருகின்றது. மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் நாடு முழுவதும் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நிறுவப்பட்டுள்ள *338* பிராந்திய கால்நடை அலுவலகங்களினால் அனைத்து கால்நடை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

- **நோக்கு**

இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் கால்நடைத் துறையினை மிகவும் முன்னணி வாய்ந்த துறையாக நிலைநாட்டுதல்.

- **செயற்பணி**

ஆரோக்கியமான விலங்குகள் மற்றும் உற்பத்தித்தியினை அதிகரித்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல் மற்றும் உணவுப் பாதுகாப்பிற்கு பங்களிப்பதன் மூலம் கால்நடைத் துறையில் நிலையான அபிவிருத்தியை அடைய தொழில்நுட்ப வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குதல்.

- **பிரதான பகுதிகள்**

i.) பண்ணை விலங்குகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துதல்
ii.) விலங்குகளின் ஆரோக்கியம், மிருக வைத்தியம் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றினை மேம்படுத்துதல்
iii.) சர்வதேச வியாபார மற்றும் தர உறுதிப்படுத்துகை
iv.) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளினை மேம்படுத்துதல்
v.) சிறந்த கால்நடைத் துறை முகாமைத்துவம்

- **நோக்கங்கள்**

i.) விலங்கு நோய்களினைத் தடுத்தல் மற்றும் பயனுறுதி வாய்ந்ததும் வினைத்திறன் வாய்ந்ததுமான விலங்கினங்களின் கிடைப்பனவினை உறுதி செய்தல்
ii.) உயர்ந்த சாத்தியப்பாட்டு மட்டத்தில் விலங்கு மரபணு மூலவளங்களின் பயன்பாட்டினை பிரபல்யப்படுத்துதல்.

iii.) தரமான விலங்குணவு மற்றும் உணவு மூலவளங்களின் பயன்பாட்டினை ஊக்குவித்தல்
iv.) விலங்குணவு கைத்தொழில் வளர்ச்சியினை ஊக்குவித்தலும் விருத்தி செய்தலும்
v.) நிலையான கால்நடை அபிவிருத்திக்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
vi.) தொழில்நுட்ப ரீதியாக வலுப்படுத்தப்பட்ட மனித வள விருத்தி
vii.) பயனுறுதி மற்றும் வினைத்திறன் வாய்ந்ததுமான தகவல் விநியோகம் மற்றும் தொழில்நுட்ப சேவைகளை வழங்குதல்
viii.) கருத்திட்டங்ளைத் திட்டமிடல், கண்காணித்தல் மற்றும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் மதிப்பாய்வு
ix.) விலங்கு உற்பத்திகளின் பாதுகாப்பினை உறுதி செய்தல்
x.) முறையான விலங்கு வேளாண்மை முறைகளினை ஊக்குவித்தலும் அவற்றினை வசதிப்படுத்தலும்
xi.) விலங்கு வளர்ப்பின் ஆரோக்கியம் மற்றும் நலன் பேணலினை உறுதி செய்தல்
xii.) திணைக்களஞ்சார் தொழிற்பாடுகளின் வினைத்திறன் வாய்ந்த முகாமைத்துவம்

- ***பிரதான தொழிற்பாடுகள்***

i.) அதிக உற்பத்தித்திறனுடன் உயர் இன கால்நடை மற்றும் ஆடு விந்தணு உற்பத்தி உட்பட தேசிய கருத்தடை சேவையினை முறையாக நடைமுறைப்படுத்துதல்
ii.) இனவிருத்தி நோக்கங்களுக்காக விலங்குகளின் மரபு வழி மற்றும் செயல்நிறைவேற்றம் ஆகியவற்றின் பதிவுகளைப் பேணுதல்
iii.) விலங்குகளின் மரபணு மூலவளங்களை பாதுகாத்தல்
iv.) ஆடுகளின் இனவிருத்தியினை அதிகரித்தல்
v.) பசுக் கன்றுகளை வளர்க்கும் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல்
vi.) ஊட்டச்சத்து நிறைந்த புற்களை உற்பத்தி செய்தலும் புற்களின் சந்தைப்படுத்தலினை ஊக்குவித்தலும்
vii.) விலங்கு நோய்கள் வராமல் தடுப்பதற்கான தேசிய தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துதல்
viii.) உள்ளூர் தடுப்பூசி (குளம்பு மற்றும் வாய், கன்று பசுவின் மூலநோய், ரெனிகட்) மற்றும் பிற உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்தல்
ix.) மார்புப் புற்றுநோயினை குணப்படுத்தலும் வராமல் தடுத்தலும் மற்றும் உற்பத்தி
x.) சல்மொனெல்லொசிஸ் மற்றும் ரெனிகட் நோய்களினைக் கட்டுப்படுத்துதல்
xi.) மிகவும் தொற்றக்கூடிய பறவைக் காய்ச்சலுக்கு எதிராக பயனுள்ள முன் எச்சரிக்கை அமைப்பை ஏற்படுத்துதல்
xii.) விலங்கு நோய்களைக் கண்டறியும் திறனை மேம்படுத்த கால்நடை ஆராய்ச்சி நிலையங்களை வலுப்படுத்துதல்
xiii.) பாற் பண்ணைகளின் சுகாதார மட்டத்தை மேம்படுத்தல்
xiv.) ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்தல்
xv.) பால்தொழில்நுட்ப ஆய்வுகூட வசதி மற்றும் உள்ளகக் கட்டமைப்பு வசதிளை அதிகரித்தல்
xvi.) கால்நடைத் துறை தொடர்பான பகுப்பாய்வு மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல்
xvii.) கள மட்டத்தில் விலங்குகளை ஒழுங்கமைத்தல்
xviii.) உள்ளூர் சந்தையில் தரமான விலங்குணவுகளின் போதுமான கிடைப்பனவினை உறுதி செய்தல்
xix.) கால்நடை உற்பத்திகளை ஒழுங்கமைத்தல்
xx.) கோழிப் பண்ணை நடவடிக்கைகளினை ஒழுங்கமைத்தல்
xxi.) விலங்கு தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளினை அமுல்படுத்துதல்
xxii.) சர்வதேச வர்த்தகத்தை எளிதாக்கல்
xxiii.) தனிமைப்படுத்தல் அலகுகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் ஆய்வுகூட வசதிகளை மேம்படுத்தல்
xxiv.) கால்நடை ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்
xxv.) கால்நடை டிப்ளோமாதாரர்களை உருவாக்குதல் தொடர்பில் கரந்தகொல்ல மற்றும் சீப்புகுளம் விலங்கு வளர்ப்பு பயிற்சி பாடசாலையை நடாத்திச் செல்லுதல்
xxvi.) கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் தொடர் கல்வி நிறுவனத்தில் பயிற்சி மற்றும் கல்வித் திட்டங்களை நடாத்துதல்
xxvii.) இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் மற்றும் செயன்முறைகளினூடாக தகவல்களினைப் பரவச் செய்தல்
xxviii.) மாதிரிப் பண்ணைப் பிரிவு செயன்முறை நிகழ்ச்சித்திட்டம்

xxix.) கால்நடைகளின் தொழில்நுட்ப பூங்காக்களின் பல்வேறு பண்ணை பிரிவுகளினை விருத்தி செய்தலும் பேணுதலும்.

xxx.) கால்நடைத் துறை மீதான சமூக பொருளாதார தாக்கம் தொடர்பில் ஆய்வு நடாத்துதல்

xxxi.) கால்நடைகள் தொடர்பான புள்ளிவிபரங்களை வகுத்தலும் விநியோகித்தலும்

xxxii.) மிருக வைத்திய சேவையை விரிவுபடுத்துவதற்காக கால்நடை அலுவலகங்களினை தாபித்தல்

2022 இல் அமுல்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம் (2022.12.31 வரை)

#	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் செயற்பாடுகள்	2022 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மி.)	பௌதீக முன்னேற்றம் (%)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட விடயங்கள்
1.	விலங்குகளின் தொற்றுநோய்களினைத் தடுப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்	165.00	95	161.00	
2.	பாதம் மற்றும் முகத் தொற்று நோய்களுக்கான தடுப்பு மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்.		95		
3.	முலையழற்சி கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்		59		
4.	உயர்தர கால்நடைத் தடுப்பு மருந்துகளை உள்நாட்டில் உற்பத்தி செய்தல்		99		
5.	மிருக வைத்திய நிலையங்களில் கோழிகள் மற்றும் மீன்களுக்கான நோய்களினைக் கண்டறிவதற்கான வசதிகளினை மேம்படுத்துதல்		68		
6.	கால்நடை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்	40.00	85	35.90	
7.	விலங்குகள் இனவிருத்தி கருத்திட்டம்	55.00	64	54.95	
8.	உயர்தர கறவை மாடு வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம்	30.00	38	29.89	மே 2022 முதல் இக்கருத்திட்டம் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது.
9.	அரச கால்நடை வைத்திய நிலையங்களில சேவை வழங்கும் முறையை மேம்படுத்தல்	40.00	70	31.33	
10.	விலங்குகளினை அடையாளங் காணும் செயல்திட்டம்	5.00	68	5.00	
11.	விலங்குகள் தனிமைப்படுத்தல் அலகுகளை மேம்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தலும்	4.00	50	3.90	தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை 03/2022 இன் படி, நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்ட

#	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் செயற்பாடுகள்	2022 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மி.)	பௌதீக முன்னேற்றம் (%)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட விடயங்கள்
					நிலையங்கள் மற்றும் விலங்குகளை அடையாளப்படுத்தும் திட்டத்திற்கான அலுவலகப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான பணம் செலுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு நிலுவையில் உள்ள ரசீதுகளுக்கு பணம் செலுத்தப்பட்டுள்ளது.
12.	கோழிப் பண்ணை சுகாதார முகாமைத்துவத்தினூடாக கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றினை ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளினை ஏற்படுத்திக் கொடுத்தல்.	10.00	84	9.40	
13.	வனசீவராசிகளின் நோய்களைக் கண்டறிவதற்கான நிகழ்ச்சித்திட்டம்	6.00	30	5.07	சமீபத்திய அரசாங்க சுற்றறிக்கைகள் காரணமாக, VIC கள் தொடர்பான புதிய உபகரணங்கள் / இயந்திரங்கள் / தளபாடங்கள் வாங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு பணிகள் நிறுத்தப்பட்டுள்ளன.
14.	உணவுப் பாதுகாப்புக்கான விலங்குணவு மற்றும் கால்நடை உற்பத்திகளின் தர உறுதிப்படுத்துகை மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளினை இலகுபடுத்தல்.	30.00	97	28.13	
15.	விலங்கு வேளாண்மை தொடர்பில் டிப்ளோமாதாரர்களை உருவாக்கும் திறனை மேம்படுத்துதல்.	20.00	-	16.08	2021 ஆம் ஆண்டில், போதுமான ஏற்பாடுகள் இல்லாததால், அவ் ஆண்டுக்கான நிலுவைத் (commitments) ரசீதுகள் செலுத்த வேண்டியிருந்தது.
16.	சமூக பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	5.00	88	3.84	
17.	தரவுகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டம்		63		
18.	கால்நடை வளங்களை மேம்படுத்தும்		94		

#	நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் செயற்பாடுகள்	2022 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு (ரூ.மி.)	பௌதீக முன்னேற்றம் (%)	நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.)	விசேட விடயங்கள்
	நிகழ்ச்சித்திட்டம்				
19.	புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகள்		-		போதிய ஒதுக்கீடு இல்லாததால் இடைநிறுத்தப்பட்டுள்ளது
மொத்தம்		410.00		384.49	

குறிப்பு - இந்த நிறுவனம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது.

2. தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை

- **அறிமுகம்**

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இல. விவசாயக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் தேசிய வள கால்நடை அபிவிருத்திச் சபையானது 1973 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. ஆனாலும் அதன் துறைசார்ந்த நடவடிக்கைகள் 1974 இல் ஆரம்பிக்கப்பட்டது.

- **நோக்கு**

கால்நடைகள் மூலம் வளமான வாழ்வுக்கு தரமான கால்நடை மற்றும் விவசாய பொருட்களை வழங்கும் நிலத்தின் கால்நடைகளை உற்பத்தி செய்பவராக இருத்தல்.

- **செயற்பணி**

கால்நடைகள் மற்றும் பால் பொருட்கள் மூலம் நாட்டை தன்னிறைவு அடையச் செய்யும் தேசிய நோக்கத்தை ஆதரிக்கும் வகையில் நவீன தொழில்நுட்பம் மற்றும் புதுமையான முறைகள் மூலம் கால்நடைகள், விவசாயம் மற்றும் பால் பொருட்களின் தரத்தை உகந்த அளவில் பராமரிக்க தேசிய கால்நடை அபிவிருத்திச் சபை உறுதிபூண்டுள்ளது.

- **பிரதான விடயங்கள்**

i.) கால்நடை வளர்ப்புக் கருத்திட்டத்தின் கீழ் 32 பண்ணைகளிலுள்ள கால்நடை இனத்தொகுதிகளின் கலப்பு மற்றும் கலப்பில்லா குழுக்களுடன் தொடர்புடைய இனவிருத்தி விலங்குகளினைப் பேணுதலும் பண்ணையாளர்களுக்குத் தேவையான இனவிருத்தி விலங்குகளினை வழங்குதலும்

ii.) பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் கால்நடைப் பொருட்கள் மற்றும் பதப்படுத்தப்பட்ட கால்நடைத் தீவனங்களை சபைக்குச் சொந்தமான விற்பனை நிலையங்களின் வலைப்பின்னல் மூலம் நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்குதல்

iii.) தேங்காய் மற்றும் தேங்காய் தொடர்பான பொருட்களை உள்ளூர் வாங்குவோர் மற்றும் நுகர்வோருக்கு விடுவித்தல்

- **நோக்கங்கள்**

i.) தேங்காய் தொடர்பான தொழில்களில் இருந்து மேலதிகமாக கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்தி பண்ணைகளின் அனைத்து செயல்பாடுகளையும் உகந்த அளவில் பராமரித்தல்.

ii.) சந்தைப் போட்டியைச் சமாளிக்க செலவுகளைக் குறைப்பதற்கும் உற்பத்தியை அதிகரிப்பதற்கு பொருத்தமான நிர்வாகக் கொள்கைகள், புதிய தொழில்நுட்பம், நிபுணத்துவம் மற்றும் மூலதனத்தை அறிமுகப்படுத்துதல்

iii.) தனியார் துறையின் பங்கேற்புடன் இந்த பண்ணை அலகுகளை இலாபகரமான வியாபாரமாக மாற்றுவதற்கு நல்ல சந்தைப்படுத்தல் உத்திகளுடன் புதிய சந்தையை உருவாக்குவதற்கான சாத்தியக்கூறுகளில் கவனம் செலுத்துதல்.

- **தொழிற்பாடுகள்**

i.) கால்நடைகளின் இனவிருத்தி மற்றும் இனப்பெருக்க நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
ii.) இனவிருத்திக்காக நியாயமான விலையில் விவசாயிகளுக்கு தரமான விலங்குகளினை வழங்குதல்
iii.) அதிகூடிய இலாபத்தினைப் பெறுவதற்காக உச்ச மட்டத்தில் தெங்குத் தோட்டங்களினைப் பேணுதல்
iv.) சாத்தியமாக இருக்குமிடத்து, கால்நடை / பயிரிடல் சார்ந்த பண்ணை முறைமையினை நடைமுறைப்படுத்துதல்
v.) விவசாயிகள், பாடசாலை மாணவர்கள், விவசாயத்துறை தொடர்பான அதிகாரிகள் குறிப்பாக சிறிய கால்நடை பண்ணையாளர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் செயன்முறை காட்சிப்படுத்தல்களினை வழங்குதல்
vi.) நியாயமான விலைகளில் தரமான பண்ணை உற்பத்திப் பொருட்களினை வழங்குவதற்காக சந்தைப்படுத்தல் நிலையங்களினைத் தாபித்தல் மற்றும் பேணுதல்
vii.) அதி உயர் இலாப எல்லையினைப் பெறுவதற்கு பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருட்களினைப் பயன்படுத்தி பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களினை உற்பத்தி செய்தல்
viii.) பொதுமக்களுக்கிடையே தரமான புத்தம் புதிய பாலின் நுகர்வினை பிரபல்யப்படுத்துவதற்கான விற்பனை நிலைய வலையமைப்பினைப் பேணுதல்

குறிப்பு - இந்த நிறுவனம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது.

3. மில்கோ (தனியார் கம்பனி)

- **நோக்கு**

இலங்கையின் அதி உன்னதமான போஷாக்கு நிறைந்த பாலுணவினை வழங்கும் கம்பனி ஆக விளங்குதல்.

- **செயற்பணி**

உள்நாட்டு பாற் பண்ணையாளர்களை வலுப்படுத்தி பசும் பால் உற்பத்தியை இலக்காகக் கொள்ளப்பட்டு வளர்ச்சியை அடைவதில் செயலூக்கமிக்க ஒரு பங்காளராக விளங்குதலும் நுகர்வோரால் தாங்கிக் கொள்ள முடியுமான விலைகளில் போசணைமிக்க உணவுப் பானங்களை வழங்குவதில் நவீன தொழில்நுட்பத்தால் முன்னேற்றகரமான அணுகுமுறைகளைப் பின்பற்றுதல்.

- **குறிக்கோள்கள்**

i.) உயர் தரத்திலான பால் மற்றும் அதனை அடிப்படையாகக் கொண்ட பாலுணவுகளினை வழங்குல்
ii.) பசும் பாலில் நாடு தன்னிறைவடைவதற்குப் பங்களிப்புச் செய்தல்
iii.) உள்நாட்டு பாற் பண்ணையாளர்களை வலுவூட்டுதல்
iv.) உள்நாட்டுப் பாற்பண்ணைத் தொழில்துறையினதும் நிறுவனத்தினதும் இருப்பையும் வளர்ச்சியையும் உறுதிப்படுத்துதல்
v.) செயற்பணிக்குப் பங்களிப்புச் செய்பவர்களின் திருப்தியை உறுதிப்படுத்துதல்

- **தொழிற்பாடுகள்**

இந்நிறுவனம் 03 பிரதான துறைகளில் தனது தொழிற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

i.) உள்நாட்டுப் பாற் பண்ணையாளர்களின் உற்பத்திகளைச் சேகரித்தல்
ii.) பால் தொடர்பான உற்பத்திகளில் ஈடுபடுதல்
iii.) அவ் உற்பத்திகளை "ஹைலண்ட்" வர்த்தக நாமத்தின் கீழ் நாடு பூராகவும் விநியோகித்தல்.

குறிப்பு - இந்த நிறுவனம் வருடாந்தம் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது.

4. வரையறுக்கப்பட்ட மஹாவலி கால்நடை தொழில்முயற்சிகள் நிறுவனம்

- **நோக்கு**

நியாயமான விலையில் உள்ளூர் சந்தைகளில் தரமான ஒருநாள் குஞ்சுகள் மற்றும் புரொயிலர் கோழிகளின் முன்னணி உற்பத்தியாளர் மற்றும் வழங்குனராக விளங்குதல்.

- **செயற்பணி**

நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி சர்வதேச தர நியமங்களுக்கமைவாக ஒரு நாள் குஞ்சுகள் மற்றும் புரொயிலர் கோழிகளின் தரத்தினை மேம்படுத்துதல்

- **நோக்கங்கள்**

i.) சந்தையில் நிலையான விலைகளினைப் பேணுதல் மற்றும் விலங்குகளை இனவிருத்தி செய்தல் ஆகிய நோக்கங்களுடன் மனித நுகர்வுக்குத் தேவையான விலங்குகள், கோழி இறைச்சி மற்றும் முட்டைகள் போன்றவற்றினை உற்பத்தி செய்தல் மற்றும் விலங்கினங்களை இனவிருத்தி செய்தல்

ii.) மஹாவலி முறைமை "H" இலுள்ள விவசாயிகளை அவர்களின் சம்பாத்தியங்களை அதிகரித்தல், வேலைவாய்ப்பினை உருவாக்குதல் மற்றும் நலன்புரி வசதிகளை வழங்குதல் போன்றவற்றினை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் விவசாய மற்றும் கால்நடை உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தல்

- **பிரதான துறை**

உயர் தரத்திலான ஒருநாள் புரொயிலர் கோழிக் குஞ்சுகள் கோழிகளின் உற்பத்தி புரொயிலர் இறைச்சி உற்பத்தி

- **செயற்பாடுகள்**

i.) இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உள்நாட்டில் கொள்வனவு செய்யப்பட்ட விலங்குகளைக் கொண்டிருக்கின்ற தாய்க் கோழித் தொகுதியினைப் பேணுதல்

ii.) அரைத் தன்னியக்க குஞ்சு பொரிக்கும் பொறிமுறையினைப் பேணுதல்

iii.) வர்த்தகஞ்சார் புரொயிலர் அலகினைப் பேணுதல்

iv.) மஹாவலி முறைமை "H" இல் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்ற பண்ணையாளர்களின் ஒருங்கிணைப்புக்கான வெளியகப் பிரிவினைப் பேணுதல்

v.) அரைத் தன்னியக்க ஆரோக்கியமான உரிய தர நியமத்தில் கோழி இறைச்சி உற்பத்திக்கான தன்னியக்க செயல்முறைப்படுத்தல் தொழிற்சாலையினைப் பேணுதல்

vi.) கோழி உணவு உற்பத்தி

vii.) கம்பனி உற்பத்திகளினைச் சந்தைப்படுத்தலுக்காக விற்பனை நிலையங்களினைப் பேணுதல்

5. இலங்கை கோழிப் பண்ணை அபிவிருத்தி கம்பனி (தனியார்) நிறுவனம்

- **நோக்கு**

இலங்கையில் முன்னணி அபிவிருத்தி நிறுவனமாக தொழிற்படுவதனூடாக கிராமிய மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கை மட்டத்தினை மேம்படுத்துதல்.

- **செயற்பணி**

கிராம மட்டத்தில் கோழிப் பண்ணை மூலவளங்களினை விரிவாக்குவதன் மூலம் நிலையான அபிவிருத்தியினை அடைவதற்கான சாத்தியமான உயர்ந்த மட்டத்தில் கிடைக்கக்கூடிய மட்டுப்படுத்தப்பட்ட மூலவளங்களினை முகாமை செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளினை எடுத்தல்.

- **பிரதான துறைகள்**

i.) விலங்கு வளர்ப்பில் ஈடுபடுதல்

ii.) தெங்குப் பயிரிடல் முகாமைத்துவம்

iii.) இடைக்காலப் பயிர்களினைப் பயிரிடுதல்

iv.) சந்தைப்படுத்தல்

- **நோக்கங்கள்**

i.) கோழிப் பண்ணை கைத்தொழிலினை விருத்தி செய்வதுடன் தொடர்புடைய ஏனைய கருத்திட்டங்களை இனங்காணுதலும் அதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினைப் பிரயோகித்தலும்

ii.) கோழிப் பண்ணைக் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்குத் தேவையான ஆளணி வளங்கள் மற்றும் நிதி ஏற்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலிருந்தும் பெற்றுக் கொள்ளுதல்

iii.) கோழிப் பண்ணைக் கைத்தொழிலினை விருத்தி செய்வதற்குத் தேவையான உற்பத்தியாளர்கள், நுகர்வோர் மற்றும் கொள்வனவாளர்களை இனங்காணலும் கைத்தொழிலுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகள் உள்ளடங்கலான அனைத்து நிறுவனசார் ஒருங்கிணைப்புக்களையும் மேற்கொள்ளுதல்

iv.) அரச இனவிருத்திப் பண்ணைகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்

v.) கோழிப்பண்ணைத் தொழிலில் நாடளாவிய ரீதியில் ஈடுபடுகின்ற சமூக அடிப்படையிலான நிறுவனங்களினை நவீனமயப்படுத்துதலும் வலுவூட்டுதலும்

vi.) சேதன வளமாக்கி உற்பத்தி

- **தொழிற்பாடுகள்**

i.) தனியார்துறை விவசாயிகள், அரசாங்க நிறுவனங்கள் மற்றும் உரிய அமைச்சுக்களுக்கிடையில் இணைப்பினை ஏற்படுத்தும் நிறுவனமாக செயற்படுதல்

ii.) கோழிப் பண்ணையின் அனைத்து இனவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் முட்டையிடும் மற்றும் புரொயிலர் உற்பத்தி நடவடிக்கைகளினையும் தொடர்ந்து முன்னெடுத்தல்.

iii.) நியாயமான விலையில் நிறுவனத்தின் விற்பனை நிலையங்களினூடாக வாடிக்கையாளர்களுக்கு அனைத்துப் பண்ணை உற்பத்திப் பொருட்களினையும் வழங்குதல்.

iv.) நிறுவனத்திற்குத் தேவையான கோழிப்பண்ணை உணவு உற்பத்தியினை ஊக்குவித்தலும் பண்ணையிலுள்ள களஞ்சியப்படுத்தல் வசதிகளினை பூமியில் மேம்படுத்தலும்.

v.) கிராமப்புற சமூகத்தின் ஊட்டச்சத்து மேம்பாட்டிற்கு பங்களிக்கும் நியாயமான விலையில் சமூகத்திற்கு முட்டை மற்றும் கோழிகளை வழங்குதல்

vi.) சிறியளவிலான கோழிப் பண்ணையாளர்களுக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளை வழங்குதல்

vii.) பண்ணை வளாகத்தில் தெங்குப் பயிர்ச்செய்கையினைப் பேணுதல், அவற்றில் வருமானத்தினை ஈட்டுதல் மற்றும் கோழிப்பண்ணைத் துறையினை விருத்தி செய்வதற்காக அத்தகைய நிதிகளினைப் பயன்படுத்துதல்.

viii.) பண்ணை வளாகத்திலுள்ள வருமானப் பயிர்கள் மற்றும் இடைக்காலப் பயிர்கள் என்பவற்றினை விரிவாக்கம் செய்வதனூடாக ஆகக்கூடிய பொருளாதார உற்பத்தித்திறனை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

ix.) ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலை கல்வியினைத் தொடருகின்ற பிள்ளைகள் உள்ளடங்கலாக கோழி வளர்ப்பில் ஆர்வமுடையவர்களுக்கு செய்முறை மற்றும் விளக்க ரீதியான பயிற்சியினை வழங்குதல்.

x.) நிறுவனத்தின் ஊழியர்களுக்கான நலன்புரி நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்

கால்நடை பிரிவின் நிகழ்ச்சித்திட்டங்களின் புகைப்படங்கள்

- திரவபால் பாவணையை மேம்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்




புபைப்படம் 29 : பாடசலை மாணவர்களுக்கு திரவபால் வழங்குதல்- வட மாகாணம்

- **கால்நடை வள அபிவிருத்தி நடுத்தரகால நிகழ்ச்சித்திட்டம்**



புகைப்படம் 30.: யாழ்ப்பாணம் (திருநெல்வேலி) பல்நோக்கு கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு பெற்றன

- **சிறிய மற்றும் நடுத்தர கோழிப்பண்ணைகளின் அபிவிருத்தி**




புகைப்படம்31 : புகைப்படம் 31 : கோழிக்குஞ்சுகள் வழங்குதல் - வட மாகாணம்

- **உற்பத்தித்திறனை மேம்படுத்துவதன் மூலம் நடுத்தர மற்றும் சிறிய அளவிலான பாற் பண்ணையை ஊக்குவித்தல்**



புகைப்படம் 32: புல் வளர்ப்புக்காக உபகரணம்



புகைப்படம் 33 : புல் வளர்ப்பிற்கான நடுகை பொருட்களை வழங்குதல் - வட மாகாணம்

- **ஆடு கூட்ட கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**



புகைப்படம் 34 : ஆடு கூட்ட கிராமத்தை நிர்மாணித்தல் - வட மாகாணம்

- ***சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பாற் பண்ணை தொழில் முனைவோர் அபிவிருத்தி மற்றும் பால் கூட்டு கிராமங்களின் அபிவிருத்தி ("பால் நிறைந்த தேசம்" அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்)***




புகைப்படம் 35: பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்-வட மாகாணம்




புகைப்படம் 36: மாட்டுத்தொழுவம் அமைத்தல்-வட மாகாணம்

03. உரப் பிரிவு

உரப் பிரிவின் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் - பொழிப்பு

அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	நிதிசார் முன்னேற்றம் (மில். ரூபா)	பௌதீக முன்னேற்றம்
தேசிய உர முகாமைத்துவ தகவல் தொகுதி (National Fertilizer Management Information System)	20.00	7.06	80%
இலங்கை உரக் கம்பனியின் உர பரிசோதனைக்கூடத்தை அபிவிருத்தி செய்தல்.	20.00	-	60% (பரிசோதனைக்கூடத்துக்கான 6 உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.)
உணவுப் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டம்	500.00	414.31 (2021 ஆண்டின் கையிலுள்ள விலைப்பட்டியல்களைச் செலுத்தல்)	9 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் சுமார் 70% வீதமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.
தேசிய உணவு ஊக்குவிப்பு சபை (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை)	5.00		திறைசேரியிலிருந்து கட்டுநிதி வழங்கப்படவில்லை.
அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம்	30.00	5.00	நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.
பொருளாதார மையங்கள் (வர்த்தக அமைச்சின் கீழ் இணைக்கப்பட்டுள்ளதன.)	25.00	-	-
மொத்தம்	**600.00**	**426.37**	

உரப் பிரிவின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்றம்

1. கமநல அபிவிருத்தி திணைக்களம்

1.1. தொலைநோக்கு

இலங்கையின் விவசாய சமூகத்தினதும் மற்றும் அனைத்து விவசாய நிலங்களினதும் நிலைபேறான அபிவிருத்தி.

1.2. செயற்பணி

இலங்கையின் விவசாய சமுதாயத்தின் நிலைபேறான அபிவிருத்தியிலும் அனைத்து விவசாய நிலங்களின் செழுமையான அனுகூலங்கள் மற்றும் உச்ச உற்பத்தித்திறன் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நிறுவன, ஒத்துழைப்பு, சட்ட மற்றும் முகாமைத்துவ சேவைகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்தி, காலத்திற்கு ஏற்றவாறு பேணி வருதல்.

1.3. நோக்கங்கள்

- அரசாங்கத்தின் விவசாயக் கொள்கைகளுக்கு இணங்கும் வகையில் விவசாயக் காணிகளைப் பயன்படுத்துவதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளைச் செய்தல்.
- விவசாயக் காணி உரிமையாளர்கள், விவசாயக் காணி உரிமையுள்ள விவசாயிகள் மற்றும் ஆட்சியுரிமைகள் கொண்டவர்கள்/ குத்தகை விவசாயிகள் ஆகியோரின் விவசாய உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்.
- விவசாய அமைப்புக்களைப் பதிவு செய்தல் மற்றும் பேணி வருவது தொடர்பான கட்டளைகளை உருவாக்குதல் மற்றும் அந்த ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்தல்.
- கமநல அபிவிருத்திச் சபைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றின் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்.

1.4. பணிகள்

- நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கமநல அபிவிருத்திச் சபைகளினதும் அதிகாரப் பிரதேசங்களுடன் தொடர்புடையதாக விவசாயக் காணி தொடர்பான தகவல்கள் அடங்கிய விவசாயக் காணிப் பெயர்ப் பட்டியல்களை தயாரித்து திருத்தங்களைப் பேணி வருதல்.
- விவசாயக் காணிகளுடன் தொடர்புடைய குத்தகை முறை விவசாயிகளின் பிரச்சினைகள் மற்றும் ஏனைய சிக்கல்களைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் மற்றும் நீர் மூலங்களின் பயனுறுதித்தன்மை, பாதுகாப்பு, முகாமை என்பவற்றுடன் தொடர்புடைய ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்.
- கமநல அபிவிருத்திச் சட்டம் மற்றும் அரசாங்க விவசாயக் கொள்கைகளை மீறும் தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

1.5. நிதிசார் முன்னேற்றம்

விபரம்	ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)
மூலதன	1,213.50	525.73
மீண்டுவரும்	8,819.20	8,686.59

1.6. அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் (பௌதீக முன்னேற்றம் உள்ளிட்ட சுருக்கமான பொழிப்பு)

i. தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்டக் காரியாலயங்களைத் திருத்தியமைத்தல்

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்டக் காரியாலயங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் செயல்திறனை அதிகரிக்கும் நோக்கில் இந்த செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற 20.00 மில். ரூபாய் ஒதுக்கீட்டின் கீழ் 15 மாவட்ட அலுவலகங்களை

திருத்தியமைக்கும் பணிகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 3/2022 சுற்றறிக்கையில் உள்ள அறிவுரைகளின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதால், 9 மாவட்ட அலுவலகங்களில் மட்டுமே மேற்படிப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. இதற்காக 31.12.2022 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 11.21 மில். ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 60% ஆகும்

புகைப்பட எண் 37 - பக்க எண் 121

ii. தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்டக் காரியாலயங்களில் உள்ள வாகனங்களைத் திருத்தியமைத்தல்

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்டக் காரியாலயங்களில் காணப்படும் வாகனங்களை வினைத்திறனாக பயன்படுத்தும் வகையில் பழுதுபார்க்கும் பணிகள் தொடர்பாக இந்த செலவுத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 25.00 மில். ரூபாய் ஆகும். 31.12.2022 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 24.82 மில். ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

iii. பயிற்சி மற்றும் திறன் விருத்தி

தலைமைக் காரியாலயம் மற்றும் மாவட்டக் காரியாலயங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் ஆற்றல்களை விருத்தி செய்தல் மற்றும் வினைத்திறனான செயற்பாட்டை அதிகரித்தல் ஆகிய நோக்கத்தில் இந்த செலவுத் தலைப்பின் கீழ் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 3.00 மில். ரூபாய் ஆகும். இந்த ஒதுக்கீட்டின் கீழ் 15 பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 31.12.2022 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 2.62 மில். ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 100% ஆகும்.

iv. இயந்திரங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் கையகப்படுத்தல்

பயன்படுத்தக்கூடிய விவசாய இயந்திரங்களின் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய விவசாய இயந்திரங்களை கொள்வனவு செய்தல் என்பவற்றுக்கு இந்த செலவுத் தலைப்புகளின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள 29.00 மில். ரூபாய் ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி விவசாய இயந்திரங்கள் (14 அகழ்வு இயந்திரங்கள் மற்றும் 1 புல்டோசர் என்பன) பழுது பார்க்கப்பட்டதுடன் புதிய கொள்வனவுகளின் கீழ் ஒரு சிறிய அகழ்வு இயந்திரம், ஒரு கொன்கிரீட் கலவை இயந்திரம், ஒரு Poker Machine மற்றும் ஒரு Vibrating Hammer ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டன. 31.12.2022 ஆம் திகதி வரை செலவிடப்பட்ட தொகை 24.02 மில். ரூபாய் ஆகும். பௌதீக முன்னேற்றம் 84% ஆகும்.

v. புதிய உரக் களஞ்சியங்களை நிர்மாணித்தல்

2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில், உரக் களஞ்சியங்களின் கொள்ளளவுகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த செலவுத் தலைப்பின் கீழ். 180.00 மில். ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது, இதன் கீழ் 43 செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்தன. எனினும் 3/2022 சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம், நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதன் காரணமாகவும் மூன்றாம் காலாண்டில் இந்த செலவினத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு 50.00 மில். ரூபாவாகக் குறைக்கப்பட்டதன் காரணமாகவும், திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை முன்னெடுக்க முடியாமல் போனதுடன், 2021ஆம் ஆண்டு நிலுவையில் உள்ள விலைப் பட்டியல்கள் தீர்க்கப்பட்டு 2021ஆம் ஆண்டின் பொறுப்பிலிருந்து 17 செயற்திட்டங்களின் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. 31.12.2022 ஆம் திகதி வரையிலான செலவழித்த தொகை 49.35 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 94% ஆகும்.

vi. கமநல சேவை நிலையங்கள் மற்றும் உரக் களஞ்சியங்களை திருத்தியமைத்தல்

கமநல சேவை நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் செயற்திறனை விருத்தி செய்தல் மற்றும் உரக் களஞ்சியங்களின் கொள்ளளவுகளை அதிகரித்தல் ஆகியவற்றை நோக்காகக் கொண்டு இந்த செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 300.00 மில். ரூபாய் நிதியைப் பயன்படுத்தி கமநல சேவை நிலையங்கள் மற்றும் 127 உரக் களஞ்சியங்களை திருத்தியமைக்கும் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 3/2022 ஆம் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிர்மாணப் பணிகள்

இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக 9 செயற்திட்டங்களின் பணிகள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டன. 31.12.2022 ஆம் திகதி வரையில் செலவழித்த தொகை 11.21 மில். ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 24% ஆகும்.

புகைப்பட இலக்கம் 38 மற்றும் 39 - பக்க இலக்கம் 121

vii. சிறிய நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைத்தல் மற்றும் தரிசு நிலங்களில் மீண்டும் பயிரிடல்

நெற் காணிகளில் வினைத்திறனாக பயிர்ச் செய்கை மேற்கொள்வதன் மூலம் நிலத்தின் உற்பத்தித் திறன் மற்றும் நெல் விளைச்சல் என்பவற்றை அதிகரிக்கும் நோக்கத்துடன் இந்த செலவினத் தலைப்பின் கீழ் 735.00 மில். ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் 2021 ஆம் ஆண்டு நிலுவையில் உள்ள விலைப்பட்டியல்களுக்கான கொடுப்பனவுகள் உள்ளிட்ட 9 பிரிவுகளின் கீழ் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்திருந்த போதிலும், 3/2022 சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தலின்படி நிர்மாணப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக திட்டமிட்டபடி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை. எனினும், 10,000 ஏக்கர் தரிசு வயல் நிலங்களில் 1,539.27 ஏக்கர் மற்றும் 25 சிறு நீர்ப்பாசனத் திட்டங்களில் 4 செயற்திட்டங்களும் செயல்படுத்தப்பட்டன. 31.12.2022 அன்று வரை செலவிடப்பட்ட தொகை 326.40 மில் ரூபாய் ஆகும். இதன் பௌதீக முன்னேற்றம் 40% ஆகும்.

புகைப்பட இலக்கம் 40 மற்றும் 41 - பக்க இலக்கம் 121

குறிப்பு - இந்த நிறுவனம் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்பட்ட அதன் அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கிறது.

2. தேசிய உரச் செயலகம்

2.1. அறிமுகம்

1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தற் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 1988 டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக உருவாக்கப்பட்டது.

2.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

இலங்கையில் பயிர் செய்யப்படும் அனைத்து பயிர் வகைகளினதும் உற்பத்திப் பயனுறுதித் தன்மையை அதிகரிப்பதற்கு உரிய தர நிர்ணயத்துடன் கூடிய அசேதன மற்றும் சேதன உரங்களை வழங்குதல் மற்றும் அவற்றின் முறையான பாவனையை உறுதிப்படுத்தலே இந்த நிறுவனத்தின் நிறுவனத்தின் தொலைநோக்காகும். உரத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக உரிய அனைத்து பங்குதாரர்களையும் ஒருங்கிணைத்து விஞ்ஞான ரீதியான சிபாரிசுகளின் அடிப்படையில் உரத் தேவையை மதிப்பீடு செய்தல், உர இறக்குமதி மற்றும் இருப்புகளை நிர்வகித்தல், உரிய தரத்தைக் கொண்ட உர வகைகளை விநியோகம் செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் என்பவற்றை உறுதி செய்தல், சேதன மற்றும் அசேதன உரப் பாவனையின் போது சூழல் நட்புடன் கூடிய முறையிலான உரப் பாவனையை ஊக்குவித்தல், விவசாய சமூகத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கைக் கொண்ட உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்துதல் மற்றும் உரப் பாவனைத் துறையில் காணப்படும் முறைகேடுகளை தடுப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளல் என்பன இதன் செயற்பணிக்குள் உள்ளடங்கும்.

2.3. பணிகள்

- 1988 ஆம் ஆண்டின் 68 ஆம் இலக்க உரங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தினை முறையாக நடைமுறைப்படுத்தல்
- அரச உரக் கம்பனிகளுக்கு ஊடாக (இலங்கை உரக் கம்பனி மற்றும் கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி) உர இறக்குமதி, உரக் கலவைகள் தயாரிப்பு, விநியோகம், விற்பனை மற்றும் காப்பு உர இருப்பைப் பேணி வரல்

நிறுவனத்தின் செயற்பாடுகள் அடிப்படையான 10 பிரிவுகளின் கீழ் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டில், அந்தப் பிரிவுகள் அனைத்தும் சிறந்த முன்னேற்றத்தை அடைந்துள்ளன. சேதன உர ஊக்குவிப்பு பிரிவு அதன் முதலாவது பிரிவாகக் காணப்படுவதுடன் சேதன உர உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் 45 நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், உர இறக்குமதிப் பிரிவின் ஊடாக இரசாயன உர இறக்குமதி தொடர்பான ஆவணங்களைத் தயாரித்தல், சுங்க இறக்குமதி அனுமதிகளுக்கான பரிந்துரைகள் வழங்குதல், ஆய்வுகூட அறிக்கைகளை பரிசீலித்து உர வகைகளுக்கான பரிந்துரைகளை வழங்குதல் மற்றும் உர ஆலோசனைக் குழு உள்ளிட்ட 1,995 செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. உர விநியோகப் பிரிவின் கீழ் நெற் செய்கைக்கான உர விநியோக நிகழ்ச்சித் திட்டத்தின் ஊடாக 2022 சிறு போகத்திற்கு 433,225 ஹெக்டயருக்கான உர வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் 2021/22 பெரும் போகத்திற்கு 789,832 ஹெக்டயருக்கான உர வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. விசாரணைப் பிரிவினால் உரங்களின் தரக் கட்டுப்பாடு தொடர்பான 115 விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தொழில்நுட்பப் பிரிவின் ஊடாக இறக்குமதி செய்யப்படும் இரசாயன உர வகைகளின் தரக் கட்டுப்பாட்டுக்காகவும் உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்காகவும் 2,462 மாதிரிகளைப் பெற்றுக்கொள்ளும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அனுமதிப் பத்திரம் வழங்கும் பிரிவினால் உர உற்பத்தி, இறக்குமதிக்கான புதிய அனுமதிப் பத்திரம் வழங்குதல், பழைய அனுமதிப் பத்திரங்களை புதுப்பித்தல் போன்றவை தொடர்பான 314 நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன், தரவு முகாமைத்துவப் பிரிவானது, நிறுவனம் தொடர்பான அனைத்து தரவுகளையும் தயாரித்தல், அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் விநியோகித்தல் என்பன மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏனைய பிரிவுகளான கணக்குப் பிரிவு, முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு மற்றும் தாபனப் பிரிவு ஆகிய பிரிவுகள் தேசிய உர செயலகத்தின் செயற்பாடுகளுக்கு வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு விஷேட பங்களிப்புகளை செலுத்தியுள்ளன.

மாவட்ட அலுவலகங்களின் ஊடாக புதிய சேதன உர உற்பத்தியாளர்களுக்கு நிறுவனத்தின் மூலம் அனுமதிப் பத்திரம் வழங்குதல், பழைய சேதன உர உற்பத்தியாளர்களின் அனுமதிப் பத்திரங்களைப் புதுப்பித்தல், இருப்புகளை சரிபார்க்கும் நடவடிக்கைகள் மற்றும் களஞ்சியங்களை பரிசோதிக்கும் நடவடிக்கைகள், உர விற்பனை நிலையங்களைப் பதிவு செய்தல், பயிற்சி நிகழ்ச்சிகள், பயிர்ச் செய்கைக் கள ரீதியாக உர மாதிரி சோதனை மற்றும் உரங்களின் தரத்தை உறுதி செய்தல், முன்னேற்றம் மீளாய்வுக் கூட்டங்கள் மற்றும் உரக் குழுக் கூட்டங்களை நடாத்தல் போன்ற பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் அப்பணிகளின் பௌதீக முன்னேற்றம் 64% ஆகும்

மனித வள அபிவிருத்தி மற்றும் திறன் விருத்தி என்பன உள்நாட்டு பயிற்சி நிகழ்ச்சிகளின் கீழ் உதவிப் பணிப்பாளர்களின் இரண்டாவது வினைத்திறன் தடைகாண் பரீட்சை மற்றும் ஒரு பயிற்சிச் செயலமர்வு என்பன நடாத்தப்பட்டு 52 அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு மில். 0.47 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

3. வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி

3.1 நியதிச் சட்டத்திற்கு அமைய நிறுவனம்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 1964 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி 'இலங்கை உரக் கூட்டுத்தாபனம்' நிறுவப்பட்டது. அக்கூட்டுத்தாபனம் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசாங்கத்துக்கு உரித்தான வர்த்தக நிறுனங்களை வரையறுக்கப்பட்ட பொதுகம்பனிகளாக மாற்றியமைக்கின்ற சட்டத்தின் கீழ் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் வரையறுக்கப்பட்ட இலங்கை உரக் கம்பனி எனும் பெயரில் மீண்டும் நிறுவப்பட்டது. அது தற்போது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க புதிய கம்பனிச் சட்டத்தின் மீள்பதிவு செய்யப்பட்டுள்ளது.

3.2 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

இலங்கை உரச் சந்தையில் முன்னோடியாக செயற்பட்டு விவசாயத்துறை மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட புதிய உற்பத்திச் சேவைகள் மற்றும் உள்ளீடுகளை வழங்குகின்ற பல்வகைப்படுத்தலுக்குட்பட்டுள்ள புதிய உலகிற்கு பொருத்தமான முன்னணி நிறுவனமாக மாறுதல் இதன் தொலைநோக்காகும். அரசாங்க கொள்கைகளுக்கு அமைவாக லக் உரக் குடும்பத்தின் உச்ச பங்களிப்புடன் இலங்கையில் விவசாய மற்றும் கமநல சேவைகள் துறையின் உற்பத்தி, வருமானம் மற்றும் இலாபத்தை அதிகரிப்பதற்கான பல்வேறு சந்தைசார் கேள்விக்கு ஏற்றவாறு உர உற்பத்தி மற்றும் விற்பனையின் மூலம் கம்பனியின் இலாபகரமான நிலைத்திருத்தலை உறுதி செய்தல் இதன் செயற்பணி ஆகும்.

3.3. நோக்கங்கள் :-

அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட நெல் மானிய உரத்தை (60%) கமநல சேவை மையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்குதல், இரசாயன உரங்களை மீண்டும் இறக்குமதி செய்து அவற்றை நவீன தொழில்நுட்ப முறைகளுக்கு ஏற்ப மேம்படுத்தி நெல் தவிர்ந்த ஏனைய பயிர்களுக்கு கலவை உரங்களை தயாரித்தல், நாடளாவிய ரீதியில் காணப்படும் உரக் களஞ்சியங்களின் வலையமைப்பைப் பராமரித்து பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளோருக்கு தேவையான உரங்களை உரிய காலத்தில் விற்பனை செய்வதற்காக இருப்புகளை சேமித்து வைத்தல், சூழல் நட்பு பசுமை விவசாயக் கொள்கையின் கீழ் சேதன உரங்களை கொள்வனவு செய்தல் மற்றும் விற்பனை செய்தல், நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்படும் வீட்டுத் தோட்டச் செய்கைக்கான உர வகைகளை நடமாடும் விற்பனை வாகனங்களைப் பயன்படுத்தி விநியோகித்தல்.

3.4. பணிகள்

- உயர் தரத்திலான உர வகைகளை இறக்குமதி செய்தல் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்தல்.
- உயர் தரத்திலான கொம்போஸ்ட் உரங்கள் மற்றும் சேதன உற்பத்திகளை உள்நாட்டில் கொள்வனவு செய்தல்.
- தேசிய உரச் செயலகத்தினால் வழங்கப்படும் சிபாரிசுகளுக்கு அமைவாக அனைத்து பயிர்களுக்குமான இரசாயன உரக் கலவைகளைத் தயாரித்தல்.
- தரத்தில் சிறந்த நேரடி மற்றும் கலவை உர வகைகளை பிராந்திய களஞ்சியசாலைகள், விற்பனை முகவர்கள் மற்றும் விநியோக முகவர்கள் ஆகியோருக்கு ஊடாக இலங்கை முழுவதும் விநியோகித்தல் மற்றும் விற்பனை செய்தல். (சேதன மற்றும் இரசாயன உரங்கள்)
- உரங்களைப் பயன்படுத்துதல் தொடர்பாக விவசாய சமூகத்தை அறிவூட்டும் நிகழ்ச்சிகளை நடத்துதல் மற்றும் விவசாயத் துறையில் எழும் பிரச்சனைகளைத் தீர்த்தல்.
- இந்த நிறுவனத்தின் ஆய்வகத்தை மேம்படுத்தி உர வகைகளைப் பொதியிடும் பொருட்கள் மற்றும் உர மாதிரிகளை பரிசோதித்து சான்றளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

குறிப்பு - ஆண்டுதோறும் இந்த நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

04. கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி

வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனியானது 150 வருட நீண்ட வரலாற்றுக்கு உரிமை கோரும் ஒரு நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஐரோப்பியர்களால் 1872 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் 1997 ஆம் ஆண்டு முதல் அது 100% அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக விவசாய அமைச்சின் மேற்பார்வையின் கீழ் பணிப்பாளர் சபை ஒன்றினால் நிர்வகிக்கப்படுகிறது.

4.1. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

விவசாயத் துறைக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை உடனுக்குடன் உற்பத்தி செய்து விநியோகிப்பதன் மூலம் இலங்கையின் விவசாயத் துறைக்கு நேர்மறை பங்களிப்பை செலுத்தும் அரச துறையின் முன்மாதிரிமிக்க நிறுவனமாக செயற்படல் இதன் தொலைநோக்காகாகக் காணப்படுவதுடன் இலங்கையின் முன்னணி உர உற்பத்தியாளர் மற்றும் விநியோகத்தராக மாறுவதன் மூலம் அரசின் விவசாயத்துறை தொடர்பான தொலைநோக்கில் பெருமைக்குரிய பங்காளராக செயற்பட்டு உற்பத்திப் பல்வகைப்படுத்தல், உயர் தரத்திலான உற்பத்திகளை வெளிக்கொணர்தல் மற்றும் நிறுவனத்தின் பங்காளர்களின் அனைத்துத் தேவைகளுக்கும் வெளிப்படையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சுயாதீன நிறுவனமொன்றாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொள்ளல் இதன் செயற்பணியாகும்.

4.2. பணிகள்

இலங்கையின் நெற் பயிர்ச் செய்கைக்குத் தேவைப்படும் உரத்தின் 40% பகுதியை இறக்குமதி செய்து இலங்கையில் உள்ள கமநல சேவை நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்கு மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சலுகை விலைக்கு தட்டுப்பாடின்றி உரிய நேரத்திற்கு உரத்தை வழங்குதல். அத்துடன், ஏனைய களப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான உரங்களை இறக்குமதி செய்து இலங்கையில் உள்ள கமநல சேவை நிலையங்கள் மற்றும் விற்பனை முகவர்கள் ஊடாக விவசாயிகளுக்கு மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சலுகை விலைக்கு விற்பனை செய்தல்.

4.3. நோக்கங்கள்

அரசின் விவசாயக் கொள்கைகளுக்கு அமைவாக நச்சுத் தன்மையற்ற சூழல் நட்புமிக்க உயர் தரத்திலான சேதன உரங்களை இறக்குமதி செய்தல் மற்றும் உள்நாட்டில் கொள்வனவு செய்து அவற்றை மேலும் மேம்படுத்தி பயிர்ச் செய்கைகளுக்கு உரிய காலத்தில் பற்றாக்குறை ஏற்படாத வண்ணம் சலுகை விலையில் உரங்களை விநியோகம் செய்தல்.

<u>குறிப்பு</u> - ஆண்டுதோறும் இந்த நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

5. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்க சபை (தேசிய உணவு ஊக்குவிப்பு சபை)

5.1. அறிமுகம்

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை எனும் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையானது 1973 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைத் தேசிய பட்டினி ஒழிப்புச் சபைச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டது.

5.2. தொலைநோக்கு மற்றும் செயற்பணி

விவசாயிகளினதும் வசதி குறைந்த மக்களினதும் கௌரவத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக பொருளாதார சுதந்திரத்தையும் தன்னம்பிக்கையையும் ஏற்படுத்தல் இதன் தொலைநோக்காகாகக் காணப்படுவதுடன் பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் விருத்திக்கான ஒத்துழைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துதல் இதன் செயற்பணியாகக் காணப்படுகிறது.

5.3. நோக்கங்கள்

- *அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கிணங்க சமூக, பொருளாதார அபிவிருத்திகளை ஏற்படுத்தும் பொருட்டு உள்நாட்டு, வெளிநாட்டு, அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்*

- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்
- விவசாய, கைத்தொழில் அபிவிருத்தியின்பால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் அச்செயற்திட்டங்களை மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மையை ஊக்குவித்தல்
- சர்வதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதனையொத்த வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது அமைப்புகளுடன் ஒத்துழைத்தல்.

குறிப்பு - ஆண்டுதோறும் இந்த நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

6. தேசிய அறுவடைக்குப் பிந்தைய முகாமைத்துவ நிறுவனம்

6.1. அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க அரச விவசாய அமைப்புச் சட்டத்தின் விதிகளின் கீழ் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 1137/10 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலிற்கு அமைய 2000 ஆம் ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப நிறுவனம் நிறுவப்பட்டது. 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 27 ஆம் திகதிக்குரிய இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2093/26 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இந்த நிறுவனத்தின் பெயர் தேசிய அறுவடைக்கு பிந்தைய முகாமைத்துவ நிறுவனமாக (NIPHM) மாற்றப்பட்டுள்ளது..

விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைப்பதுடன் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள், பயிற்சி, விரிவாக்கம், தொழில்நுட்ப ஆலோசனை சேவைகள் மற்றும் ஆய்வுகூட சேவைகளை மேற்கொள்வதே இந்த நிறுவனத்தின் பிரதான பணிகளாகும்.

6.2. தொலைநோக்கு

தேசிய உணவுப் பாதுகாப்பினை உத்தரவாதபடுத்தும் நிலைபேறான அறுவடைக்கு பிந்திய அபிவிருத்திக்கான சிறப்பு மத்திய நிலையமாகச் செயற்படல்.

6.4. செயற்பணி

வினைத்திறன்மிக்க மற்றும் உற்பத்தித்திறன் கொண்ட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் தலையீடுகளின் மூலம் தேசிய உணவுப் பாதுகாப்பில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு போட்டித் தன்மைமிக்க விலைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு உயர் தரத்திலான பாதுகாப்பான உணவு உற்பத்திகளை வழங்குவதற்கு வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிகளை பலப்படுத்தல்.

6.5. நோக்கங்கள்

மூன்று பிரதான நோக்கங்களின் ஊடாக நிறுவனத்தின் அனைத்துச் செயற்பாடுகளும் வழிநடத்தப்படுகின்றன.

- 2025 ஆண்டளவில் விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை விரைவில் அழுகிப் பழுதடையக்கூடிய பயிர்களில் 5% வரையும் இலகுவில் பழுதடையாத பயிர்களில் 25% வரையும் குறைத்தல்.
- விவசாயத்துடன் தொடர்புடைய தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்தல்
- நிறுவனத்தில் சிறந்த நிருவாக செயற்பாடுகளை ஊக்குவித்தல்

6.6. பிரதான பணிகள்

அமைப்புச் சட்டத்திற்கு அமைவாக பணிகள்

- *இலங்கையில் அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பத்தை மேம்படுதத் தேவையான ஆராய்ச்சிகளை இனங்கண்டு, முன்னுரிமைகளைத் தயாரித்து அவற்றை செயற்படுத்தல். இதன் கீழ், நெல், அரிசி, பிற தானிய வகைகள், காய்கறிகள் மற்றும் பழங்கள், களப் பயிர்கள், வாசனைத் திரவியப் பொருட்கள் மற்றும் அலங்காரப் பூக்கள் என்பவற்றின் அறுவடை, பயன்பாடு, போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல் மற்றும் பாதுகாத்து வைத்தல், முதன்மை மற்றும் இரண்டாம் நிலை பதப்படுத்தல் முறைகள், பக்கவிளை பொருள்களின் பாவனை மற்றும் தரச் சன்றுப்படுத்தல் ஆகியன தொடர்பான தொழில்நுட்பங்களை அடையாளம் காணல் மற்றும் பரவலாக்கல்.*
- *விவசாயப் பயிர்களின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலைப் பதப்படுத்தல் செலவுகளை குறைக்கும் பொருட்டு அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப முறைகளை இயந்திரமயமாக்கல் மற்றும் முறையான அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப முறைகளின் ஊடாக விவசாய பயிர்கலின் போசணைத் தரத்தை அதிகரித்தல் மற்றும் அதனூடாக மக்களின் போசணை தரத்தை உயர்த்துதல்.*
- *விவசாயிகளின் வருமானம் மற்றும் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் வாழ்வாதார வழிகளை விருத்தி செய்வதற்காக கிராமிய மட்டத்தில் நிலைபேறான விவசாயத்துடன் தொடர்பான தொழிற்துறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் விரிவாக்கம் செய்தல்.*
- *உற்பத்தி சந்தைப்படுத்தலின் தரம், அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பம் தொடர்பான புதிய தொழில்நுட்ப முறைகளின் பயன்பாடு மற்றும் பொருட்களை சந்தைப்படுத்தும் வசதிகளை மேம்படுத்தல் உள்ளிட்ட அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்பத் துறையில் மேம்படுத்தப்பட்ட நுட்ப முறைகள் பற்றிய பயனுறுதிமிக்க தொழில்நுட்பப் பரிமாறல்களை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை விவசாயிகள், விவசாய அமைப்புகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுக்கும் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட இலக்குக் குழுக்களுக்கு மத்தியிலும் பிரபல்யப்படுத்தல்.*

மேலே குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் பிரதான பணிகள் பல விடயப் பரப்புகளின் ஊடாக செயற்படுத்தப்படுகின்றது. அவை அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பத்துடன் தொடர்பாக மேற்கொள்ளப்படும், ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள், தொழில்நுட்பங்களைப் பரப்பும் செயற்பாடுகள் (பயிற்சி நெறிகள், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் களச் செயற்பாடுகள்), அபிவிருத்தி செயற்திட்டங்கள் (புதிய மற்றும் பொருத்தமான தொழில்நுட்பங்களை களத்தில் பிரயோகித்தல்), ஆலோசனை சேவை மற்றும் பொறியியல் சேவை மற்றும் ஆய்வுகூட சேவை என்பனவாகும். மேற்கூறிய பிரதான துறைகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் அனைத்து நிகழ்ச்சித் திட்டங்களும் மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு உதவுகின்றன. அதேபோன்று, முறையான தொழில்நுட்ப முறைகளை அறுவடைக்குப் பிந்திய செயற்பாடுகளில் பிரயோகிப்பதன் காரணமாக உணவு வகைகளின் போசணைத் தரம் பாதுகாக்கப்படுவதுடன் விவசாயிகள் மற்றும் வழங்கல் சங்கிலியின் பங்குதாரர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் புதிய தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படுவதற்கு உதவி செய்கின்றது.

கடந்த காலங்கள் முழுவதிலும் மாத்திரமல்லாது தற்போதும் பண்ணையிலிருந்து நுகர்வோர் வரை விவசாயப் பயிர்களின் வழங்கல் மற்றும் பெறுமதி சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை குறைத்து தேசிய உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தும் பணியில் தேசிய அறுவடைக்குப் பிந்திய முகாமைத்துவ நிறுவனம் பாரிய பங்களிப்பை செலுத்தி வருகின்றது.

2022 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு அமைய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் அவ்வத்துறைகளின் கீழ் பின்வருமாறு விரிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

6.7. ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்

ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் 03 பிரதான துறைகளின் ஊடாக செயல்படுத்தப்படுகின்றன.

1. *விவசாய பயிர்களின் அறுவடைக்குப் பிந்திய இழப்புகளை குறைத்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்திய உயிர்ப்பு காலத்தை அதிகரித்தல்.*
2. *அறுவடை பொருட்களுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் உணவுத் தொழில்நுட்பம்*
3. *பாதுகாப்பான உணவு மற்றும் போசனை*

இந்தத் துறைகள் தொடர்பாக காணப்படும் பிரச்சினைகளுக்கு அவற்றுடன் தொடர்புடைய ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ஊடாக தீர்வுகள் காணப்படுகின்றன.

6.8. ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி பயன்படுத்தப்படுவது தொடர்பான செயலாற்றுகை

ஒதுக்கீட்டு வகை	***ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை***		***உண்மையான செலவு (மில். ரூபா)***	***பயன்படுத்தப்பட்ட ஒதுக்கீடு நிறைவு செய்யப்பட்ட இறுதி ஒதுக்கீட்டுத் தொகையின் சதவீதத்தில் (%)***
	ஆரம்ப ஒதுக்கீடு (மில். ரூபா)	***இறுதி ஒதுக்கீடு (மில். ரூபா)***		
மீண்டுவரும்	*149.82*	*149.82*	*131.38*	*87.69*
மூலதன (426-02-03-002-2201)	*30.00*	*30.00*	*5.12*	*17.06*
மூலதன (426-02-03-008-2509)	*22.08*	*4.03*	*4.03*	*100.00*

6.9. 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள் தொடர்பான விபரங்கள்

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	***ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)***	***செலவு செய்த தொகை (மில். ரூபா)***	***பௌதீக இலக்கு***	***பௌதீக முன்னேற்றம்***
2021 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்				
தெரிவு செய்யப்பட்ட பயிர் வகைகளின் அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளின் தற்போதைய நிலையை ஆய்வு செய்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய சேதங்களை மதிப்பீடு செய்தல்.	*2.05*	*1.39*	*4 வழங்கல் சங்கிலிகளில் தெரிவு செய்யப்பட்ட மரக்கறி மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் கண்டறிதல்.*	*சில பயிர் வகைகளில், அதாவது, பப்பாளி, வாழை, மா மற்றும் சிறிய வெங்காயம், கத்திரிக்காய், தக்காளி, வெண்டி, பாசிப்பயறு மற்றும் மிளகாய் ஆகியவற்றின் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளை கண்டறியப்பட்டுள்ளன. 2023 ஆம் ஆண்டும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.*
பொருளாதார ரீதியாக முக்கியதத்துவம் வாய்ந்த தெரிவு செய்யப்பட்ட சில தானியப் பயிர்களின் பல்வேறு அறுவடைக்குப் பிந்தைய காலகட்டங்களில் பொருளாதார	*1.16*	*0.24*	*கள ஆய்வொன்றின் மூலம் தேவையான தரவுகளை பெறுதல்*	*கள ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. நெற் பயிர் தொடர்பான அனைத்து தகவல்களும் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வு 2023 ஆம் ஆண்டிலும் நடத்தப்படும்.*

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பகுப்பாய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் களஞ்சியப்படுத்தல் தொடர்பாக விவசாயிகளின் நாட்டம் பற்றிய ஆய்வு.				
குரங்கு மற்றும் வெளவால்களை விரட்டக் கூடிய உபகரணத்தை வடிவமைத்தல் மற்றும் விருத்தி செய்தல்.	1.55	0.77	கள ஆய்வொன்றை மேற்கொள்ளல் மற்றும் விரட்டும் உபகரணத்தை வடிவமைத்தல்.	உபகரணம் வடிவமைக்கப்பட்டுள்ளது. களத்தில் பயன்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகள் பற்றிய ஆய்வு நடைபெறுகின்றது.
விருத்தி செய்யப்பட்ட அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பப் பாவனையின் மூலம் சின்ன வெங்காயத்தின் அறுவடைக்குப் பிந்திய சேதத்தைக் குறைத்தல்.	0.12	0.12	சின்ன வெங்காயத்தை களஞ்சியப்படுத்துவதற்கான மிகவும் பொருத்தமான நிபந்தனைகள் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய ஆயுட்காலத்தை அதிகரித்தல்.	வெற்றிகரமான பெறுபேறுகளுடன் ஆராய்ச்சி நிறைவிற்றுள்ளது. தொழில்நுட்பங்களைப் பகிரும் நடவடிக்கைகள் எதிர் வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். குறித்த தொழில்நுட்பம் சிறிய வெங்காய விதைகளுக்கு மிகவும் பொருத்தமானது என்று கண்டறியப்பட்டுள்ளது.
உணவுப் பொருட்களைத் தயாரிப்பதற்கு கோதுமை மாவுக்கு பதிலாக பலா மற்றும் ஈரப்பலா மா என்பவற்றை மாற்றீடு செய்வதன் சாத்தியப்பாடுகள் மற்றும் அவற்றின் தரப்பண்புகள் பற்றிய மதிப்பீடு.	0.03	0.03	பலா மா மற்றும் ஈரப்பலா மா என்பவற்றை பதப்படுத்தல் மற்றும் அந்த மா வகைகளை பல்வேறு உணவுப் பொருட்களைத் தயாரிக்கப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிதல்.	பலா மா மற்றும் ஈரப்பலா மா என்பவற்றை கொண்டு சில உணவுப் பொருட்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.
கோதுமை மாவுக்கு பதிலாக இராசவள்ளிக் கிழங்கை மாற்றீடு செய்வதன் சாத்தியப்பாடுகள் பற்றிய ஆய்ந்தறிதல்.	0.3	0.14	இராசவள்ளிக் கிழங்கு மாவைத் தயாரித்தல் மற்றும் அதனை பழுதடையாது பாதுகாத்தல் என்பன தொடர்பான சாத்தியப்பாடுகளை கண்டறிதல் மற்றும் இராசவள்ளிக் கிழங்கு மாவைப் பயன்படுத்தி உணவு வகைகளைத் தயாரித்தல்.	இராசவள்ளிக் கிழங்கு மாத் தயாரிக்கப்பட்டுள்ளது. அதனை பழுதடையாது பாதுகாக்கும் சாத்தியப்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அதனைப் பயன்படுத்தி உணவு வகைகளைத் தயாரிக்கும் நடைவடிக்கை நடைபெற்று வருகிறது.
அரிசி ஆலைகள் மற்றும் பிற விவசாய	0.22	0.22	பல்வேறு மாகாணங்களில்	சில பல மாவட்டங்கள் தொடர்பான தரவுகள்

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
உணவு அரைக்கும் ஆலைகள் தொடர்பான கணக்கெடுப்பு			இயங்கும் அரிசி ஆலைகள் மற்றும் பிற உணவு வகைகளை அரைக்கும் ஆலைகள் பற்றிய துல்லியமான தகவல்களைப் பெறுதல்.	சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வு தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.
நிலக்கடலை எண்ணெய் பிரித்தெடுப்பதற்கான செயல்முறையொன்றை வடிவமைத்தல் மற்றும் அதனை விருத்தி செய்தல்.	0.49	0.46	நிலக்கடலை எண்ணெய் பிரித்தெடுப்பதற்கு தேவையான இயந்திரத்தைக் கண்டறிதல் மற்றும் உற்பத்தி செயல்முறையை விருத்தி செய்தல்.	நிலக்கடலை எண்ணெய் பிரித்தெடுப்பதற்கு தேவையான இயந்திரம் கண்டறியப்பட்டுள்ளது. எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் இதன் தொழில்நுட்பம் களத்திற்கு கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
ஆனைக்கொய்யாவை அறுவடைக்குப் பிந்திய கையாளுகை தொடர்பான விஞ்ஞான ரீதியான வழிமுறையொன்றை விருத்தி செய்தல்.	0.27	0.10	அறுவடை செய்வதற்குரிய உபகரணங்களைப் பயன்படுத்தும் முறைகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரித்தல்	ஆனைக்கொய்யாவுக்கு மிகவும் பொருத்தமான அறுவடைக்குப் பிந்தைய பயன்பாட்டு முறைகள், பழுக்க வைக்கும் தொழில்நுட்பங்கள் என்பன இனங் காணப்பட்டுள்ளன. பெறுமதி சேர்க்கப்பட்ட சில உற்பத்திகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் காலங்களில் இது தொடர்பான தொழில்நுட்பம் களத்திற்கு வழங்கப்படவுள்ளன.
மொத்தம்	**6.19**	**3.47**		
2022 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டிலும் தொடரும் ஆராய்ச்சிச் செயற்திட்டங்கள்				
மாம்பழங்களின் புத்துணர்ச்சியைப் பாதுகாக்க இயற்கை நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல்.	0.37	0.05	மாம்பழங்களைக் கையாளும் போது மற்றும் கொண்டு செல்லும் போது நோய்க்கிருமிகளைக் கட்டுப்படுத்த இயற்கை நுண்ணுயிர் எதிர்ப்பிகளைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.	மாம்பழத்தின் தண்டு முனை அழுகல் நோயை ஏற்படுத்தும் நோய்க்கிருமிப் பூஞ்சையை கறுவா எண்ணெய் அடங்கிய கரைசலைப் பயன்படுத்தி குறிப்பிடதத்தக்க அளவிற்கு கட்டுப்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டது. வேறு பல இயற்கை எண்ணெய்கள் அடங்கிய கலவையைக் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பொருத்தமான தெரிவுகளைக் கண்டறிவதற்கான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
கோதுமை மாவுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்றீட்டு மா	0.32	0.20	பலா, ஈரப்பலா, , வற்றாலை, மரவள்ளி, அரிசி, சோயா	கோதுமை மாவுக்குப் பதிலாகப் பயன்படுத்தக்கூடிய மாற்றீடான பலா, ஈரப்பலா, வற்றாலை, மரவள்ளி, அரிசி,

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
வகைகள் மற்றும் அவற்றின் சேர்க்கைகளின் பண்புகளைப் பகுப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றை தட்டையான பாண்களின் உள்ள கோதுமை மாவின் அரைவாசி அளவுக்கேனும் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆய்வு செய்தல்.			ஆகியவற்றின் மாக்களின் கலவையிலான தட்டைப் பாணை உற்பத்தி செய்தல் மற்றும் அதன் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்தல்.	சோயா ஆகியவற்றின் மாக்களின் நடத்தையை கண்டறிவதற்குத் தேவையான தேவையான பண்புகள் ஆய்வு செய்யப்பட்டன. கலவையிலான தட்டைப் பாணை உற்பத்தி செய்தல் மற்றும் அதன் சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்தல். இந்த வகை மாவுகளைப் பயன்படுத்தி தட்டையான பாண் உற்பத்தி செய்யும் நடவடிக்கை முன் ஆய்வு நிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
அவரையினத் தானியப் பயிர் வகைகளைக் கொண்டு செல்வதற்கு காற்றோட்டமான டிரெய்லர் வண்டியொன்றை வடிவமைத்தல் மற்றும் அதன் பயன்பாட்டின் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்தல்.	*0.69*	*0.50*	தற்போதுள்ள பெறுமதிச் சங்கிலியில் காய்கறிகள்/ பழங்களைக் கொண்டு செல்லும்போது ஏற்படும் வெப்பநிலை ஏற்ற இறக்கம் மற்றும் போக்குவரத்துக்குப் பிறகு காய்கறிகள்/பழங்களின் தரத்துடன் தொடர்பான அடிப்படைத் தரவுகள் என்பவற்றைத் திரட்டல், குறித்த தரவுகள் மற்றும் இதற்கு முன்னர் மேற்கொண்ட பரிசோதனைகளின் முடிவுகளைக் கருத்தில் கொண்டு, காற்றோட்டமான லொறியின் கட்டமைப்பொன்றை வடிவமைத்து உருவாக்குதல் மற்றும் அந்த லொறிக் கட்டமைப்பின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்.	அடிப்படை தரவு சேகரிப்பு நிறைவடைந்துள்ளது. குறித்த தரவுகள் மற்றும் இதற்கு முன்னர் மேற்கொண்ட பரிசோதனைகளின் முடிவுகளைக் கருத்தில் கொண்டு, குறித்த லொறியின் கட்டமைப்பொன்றை வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. லொறிக் கட்டமைப்பின் செயல்திறன் (வெப்பநிலை மாறுபாடு மற்றும் போக்குவரத்துக்குப் பிறகு காய்கறிகள்/பழங்களின் தரம் தொடர்பான பரிசோதனைகள்) மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி *2023* ஆண்டிலும் தொடரும்.
மேலதிக காய்கறி மற்றும் பழ உற்பத்திகளை முறையாகப் பயன்படுத்துவதற்கா	*0.43*	*0.29*	தெரிவு செய்யப்பட்ட சில பயிர்களின் குறைந்த வெப்பநிலை களஞ்சியப்படுத்தலு	தெரிவு செய்யப்பட்ட கொய்யா, ஆனைக்கொய்யா மற்றும் கத்திரிக்காய் ஆகியவற்றின் களஞ்சியப்படுத்தலுக்கு உகந்த

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
ன தீர்வாக குறைந்த வெப்பநிலை சேமிப்பகங்களைப் பயன்படுத்துவதன் செயல்திறனைச் ஆய்வு செய்தல் மதிப்பீடு செய்தல்.			க்கு உகந்த நிலைமைகளை கண்டறிதல்.	நிலைமைகள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ஆராய்ச்சி 2023 ஆண்டிலும் தொடரும்.
அவரையினத் தானியப் பயிர் வகைகளை உலர்த்தல் மற்றும் நீரிழப்பு செய்தல் என்பவற்றுக்கு சூரிய வெப்ப உலர்த்திகளைப் பயன்படுத்தல்.	0.74	0.31	மிளகாய், மிளகு மற்றும் மஞ்சளை உலர்த்துவதற்கு பசுமை இல்லத்தை போன்றதொரு உலர்த்தும் இயந்திரத்தை வடிவமைத்தல்.	பசுமை இல்லத்தை போன்றதொரு உலர்த்தும் இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆராய்ச்சி 2023 ஆண்டிலும் தொடரும்.
இலங்கையில் உணவுப் பயிர்களின் களஞ்சியப்படுத்தலுடன் தொடர்பான பீடை வகைகளைக் இனங் காணல் மற்றும் மூடிய பிளாஸ்டிக் களஞ்சியங்களில் பீடைகளைக் கட்டுப்படுத்த தாவர இரசாயனப் பதார்த்தங்களைப் பயன்படுத்துவது தொடர்பான சாத்தியக்கூறுகளை மதிப்பீடு செய்தல்.	0.19	0.06	தெரிவு செய்யப்பட்ட சில உணவுப் பயிர்களின் பீடைகளை இனங் காணல், தாவரச் சாற்றின் அடிப்படையிலான பீடைக் கட்டுப்பாட்டு முறையொன்றை அறிமுகப்படுத்துதல், பிளாஸ்டிக் மூடிய களஞ்சியங்களில் பீடைகளைக் கட்டுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளைக் கண்டறிதல்.	சோளக் களஞ்சியப்படுத்தலில் காணப்படும் பிரதான பிரச்சினையான சோளத் துளைப்பான்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆராய்ச்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
தெரிவு செய்யப்பட்ட காய்கறிகள், பழங்கள் மற்றும் அலங்கார மலர் வகைகள் ஆகியவற்றை குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையங்கள் மற்றும் பாதையோரக் கடைகளில் விற்பனை செய்யும் போது நிகழும் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளின் அளவு மற்றும் தரம் என்பவற்றை ஒப்பீடு செய்தல்.	0.08	0.07	பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட விநியோக சங்கிலிகளில் ஏற்படும் அறுவடைக்கு பிந்தைய இழப்புகளின் வேறுபாடுகளை இனங்கண்டு பொருத்தமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்ப முறைகளை பாரம்பரிய அறுவடைக்கு பிந்தைய சங்கிலியில் அறிமுகம் செய்தல்.	தெரிவு செய்யப்பட்ட அனைத்து பயிர்கள் மற்றும் அலங்காரப் பூக்களின் அறுவடைக்கு பிந்தைய இழப்புகள் அளவுரீதியான மற்றும் தர ரீதியான அளவுகோல்களின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளன. தற்போது அந்தத் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும், அந்தத் தரவுகளுக்கு அமைவாக, குளிரூட்டப்பட்ட விற்பனை நிலையங்களில் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகள் ஒப்பீட்டளவில் குறைவாகவே காணப்பட்டது.
கடல் மார்க்கமாக	0.58	0.15	தெரிவு	

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
புதிய மரவள்ளிக் கிழங்கை கொண்டு செல்கையில் அவற்றின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதில் பல்வேறு அறுவடைக்குப் பிந்தைய சிகிச்சை முறைகளின் தாக்கங்கள் பற்றிய ஆய்வு.			செய்யப்பட்ட சில அறுவடைக்குப் பிந்தைய சிகிச்சை முறைகளைப் பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கை புதிதாக வைத்திருக்கக்கூடிய காலத்தை அதிகரித்தல்.	மரவள்ளிக்கிழங்கின் ஆயுட்காலத்தை அதிகரிப்பதற்கு உயிரியல் மெழுகைப் பயன்படுத்துவதுடன் சில பொதியிடல்/ நிரப்பு ஊடகங்களின் பயன்பாடு தொடர்பான சாத்தியக்கூற்று ஆய்வு செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி நடவடிக்கை 2023 ஆண்டிலும் தொடரும்.
மொத்தம்	***3.40***	***1.64***		
ஆராய்ச்சிகளுக்கான மொத்த ஒதுக்கீடு	***9.59***	***5.10***		

ஆராய்ச்சிச் செயற்திட்டங்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட முறையான மற்றும் பொருத்தமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை அபிவிருத்திச் செயற்திட்டங்கள், பயிற்சி மற்றும் ஏனைய விரிவாக்க நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம் களத்திற்கு அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். ஆராய்ச்சிக் கட்டுரைகள் உள்நாட்டு மற்றும் சர்வதேச ஆராய்ச்சி சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டுள்ளன. புதிய தொழில்நுட்பங்களுக்குக் காப்புரிமை அனுமதிப் பாத்திரங்களைப் பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

6.10 அபிவிருத்திச் செயற்திட்டங்கள்

விவசாய அமைச்சின் கீழுள்ள *426-02-03-008-2509* செலவுத் தலைப்பின் ஒதுக்கீட்டின் ஊடாக *2022* ஆம் ஆண்டில் *06* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், *02/2022* வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம், அதுவரை பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத செயற்திட்டங்களை நிறுத்த/ இடைநிறுத்த வேண்டியேற்பட்டது. அதன்படி, அதுவரை மேற்கொண்ட செலவுகளுக்கு மாத்திரம் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டது. மேலும் அந்த செயற்திட்டங்களில், *426-02-03-007-1509* செலவுத் தலைப்பின் கீழ் *02* செயற்திட்டங்கள் மாத்திரம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டன. அது தொடர்பான விவரங்கள் தனித்தனியாக கீழே தரப்பட்டுள்ளன.

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பிராந்திய ரீதியாக செயல்படும் பழம் மற்றும் காய்கறி விநியோக வலையமைப்பொன்றை உருவாக்குதல் (ஒரு முன்னோடி செயற்திட்டம்)	*0.06*	*0.06*	ஒரு முன்னோடி ஆய்வாக நுவரெலியாவிலிருந்து கண்டி மற்றும் குருநாகலையை கேந்திரமாகக் கொண்ட விநியோகச் சங்கிலியை நிறுவுதல்.	நுவரெலியாவிலிருந்து வாரியபொலவுக்கு புதிய காய்கறிகளை கொண்டு செல்லும் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது வெற்றியளிக்கவில்லை. இந்த செயற்திட்டம் *426-02-03-007-2201* எனும் செலவுத் தலைப்பின் கீழ் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித் திட்டம் /செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
உள்நாட்டு கிழங்கு வகைகளிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய நடுத்தர அளவிலான வெளியேற்ற எக்ஸ்ட்ரூஷன் அலகுகளை நிறுவுதல்.	3.94	3.94	உள்நாட்டு கிழங்கு வகைகளைப் பயன்படுத்தி எக்ஸ்ட்ரூட் செய்யப்பட்ட பெறுமதி சேர் பொருட்களை உற்பத்தி செய்தல்.	எக்ஸ்ட்ரூடர் இயந்திரத்திற்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது. உணவு வகைகளை உற்பத்தி செய்வதற்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த திட்டம் 426-02-03-007-2201 செலவுத் தலைப்பின் கீழ் மேலும் மேற்கொள்ளப்பட்டது.
கிராமிய ரீதியாக வீடுகளில் அரிசி பதனிடும் தொழில் துறையை அபிவிருத்தி செய்தல்	0.03	0.03	வீடுகளில் அரிசி பதனிடும் தொழில் துறையை உருவாக்குவதை இலக்காகக் கொண்டு பொருட்டு பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.	75 பயனாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.
விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் அரிசி, சோளம் மற்றும் தானியங்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வீடுகளில் களஞ்சியங்களை விருத்தி செய்தல்.	0.01	0.01	வீடுகளில் களஞ்சியங்களை உருவாக்குவது தொடர்பான பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்தல்.	37 பயனாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.
மொத்த தொகை	**4.03**	**4.03**		

வரவுசெலவுத் திட்ட சுற்றறிக்கை 02/2022 இன் பிரகாரம் அமைச்சு ஒதுக்கீடு கிடைக்காமை காரணமாக 426-02-03-007-1509 எனும் செலவுத் தலைப்பின் கீழ் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வந்த 02 செயற்திட்டங்களுடன் தொடர்பான முன்னேற்றம் கீழ் தரப்பட்டுள்ளது.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதீக இலக்கு	பௌதீக முன்னேற்றம்
பிராந்திய ரீதியாக செயல்படும் பழம் மற்றும் காய்கறி விநியோக வலையமைப்பொன்றை உருவாக்குதல்.	0.21	0.04	ஒரு முன்னோடி ஆய்வாக நுவரெலியாவிலிருந்து கண்டி மற்றும் குருநாகலையை கேந்திரமாகக் கொண்ட விநியோகச் சங்கிலியை நிறுவுதல்.	இதனுடன் தொடர்புபடும் வழங்கல் சங்கிலிப் பங்குதார்கள் இனங் காணப்பட்டு அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய அதனுடன் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	ஒதுக்கப்பட்ட தொகை (மில். ரூபா)	செலவு செய்த தொகை (மில். ரூபா)	பௌதிக இலக்கு	பௌதிக முன்னேற்றம்
உள்நாட்டு கிழங்கு வகைகளிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்ய நடுத்தர அளவிலான வெளியேற்ற எக்ஸ்ட்ரூஷன் அலகுகளை நிறுவுதல்.	0.23	0.05	உள்நாட்டு கிழங்கு வகைகளைப் பயன்படுத்தி போஷாக்குமிக்க, உடனடியாக உட்கொள்ளக்கூடிய எக்ஸ்ட்ரூட் செய்யப்பட்ட உணவுப் பொருட்களை அறிமுகஞ் செய்தல்.	உணவு உற்பத்தி செய்வது தொடர்பான அடிப்படை பகுப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
மொத்தம்	**0.43**	**0.09**		

6.11. தொழில்நுட்பங்கள் தொடர்பான பிரச்சார நடவடிக்கைகள்

களத்தில் பயன்படுத்துவதற்கு முறையான மற்றும் பொருத்தமான அறுவடைக்குப் பிந்தைய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அதற்காக வழங்கல் மற்றும் பெறுமதிச் சங்கிலிப் பங்குதாரர்களுக்கு பயிற்சி அளித்தல் என்பன தொழில்நுட்பப் பிரச்சார நடவடிக்கைகள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்காக, வதிவிட மற்றும் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளதுடன், வதிவிட நிகழ்ச்சிகளில் பங்கேற்ற பங்குதாரர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கப்பட்டதுடன் களப் பயிற்சி நிகழ்ச்சிகள் கட்டணம் எதுவுமின்றி நடத்தப்பட்டன.

நிகழ்ச்சித் திட்டம் / செயற்திட்டம்	பௌதிக இலக்கு	பௌதிக முன்னேற்றம்
இடம்-9153:	405,408,000	**மேசை:**	SA 82
கட்டிடங்கள்- 9151:	1,011,525,000	**வருடம்:**	2022
இயந்திரங்கள்-9152:	1,533,779,934	**அறிக்கை திகதி**	2/10/2023 15:25
முடிக்கப்படாத வேலை -9160:	-	**தலைப்பு**	118
கட்புலனாகாத -9154:	132,710		
குத்தகை-9180:	-		

பேரேடு	வகை	சொத்துக்கள்	குறியீட்டு இல	ஆரம்ப நிலுவை	ஆரம்ப நிலுவையை சேர்த்தல்	பறிமாற்றம்	கொள்முதல்	ஒதுக்குதல்	நிலுவை
9151	1.2-குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள்		61112	1,011,525,000	-	-	-	-	1,011,525,000
		அலுவலகக் கட்டிடம்	****6111201	1,011,525,000	-	-	-	-	1,011,525,000
9152	2.1-போக்குவரத்து உபகரணங்கள்		61121	1,241,262,040	2,157,470	-	-	67,000,000	1,176,419,510
		பயணிகள் வாகனங்கள்	****6112101	1,240,137,820	2,157,470	-	-	67,000,000	1,175,295,290
		மோட்டார் சைக்கிள்கள்	****6112109	1,124,220	-	-	-	-	1,124,220
9152	2.2-பிற இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்		61122	345,427,750	386,246	-	15,320,900	3,774,472	357,360,424
		அலுவலக உபகரணங்கள்	****6112201	25,936,467	116,750	-	383,478	307,281	26,129,415
		கணினி உபகரணங்கள்	****6112202	99,594,645	244,678	-	6,568,418	2,291,722	104,116,020
		மின்சார உபகரணங்கள்	****6112203	17,981,769	-	-	2,917,991	964,587	19,935,174
		தொலைதொடர்பு உபகரணங்கள்	****6112204	36,796,329	-	-	4,166,977	2,000	40,961,305
		தளபாடம்	****6112205	164,965,810	24,818	-	1,284,036	208,884	166,065,781
		வர்ணம், செதுக்கள் மற்றும் புராதனப் பொருட்கள்	****6112209	137,100	-	-	-	-	137,100
		நிர்மாண உபகரணம்	****6112213	15,630	-	-	-	-	15,630
9154	5.3 பிற நிதி அல்லாத - கட்புல சொத்துக்கள்		61133	132,710	-	-	-	-	132,710
		கணினி மென்பொருள்	****6113301	132,710	-	-	-	-	132,710
9153	4.1-காணி		61410	405,408,000	-	-	-	-	405,408,000
		காணி	****614100	405,408,000	-	-	-	-	405,408,000

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ஏஆர்ஜ/ஏ/எம்ஓஏ/02/2022/49 2023 மே திகதி

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
கமத்தொழில் அமைச்சு

தலைப்பு 118 – கமத்தொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பறிக்கை

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கமத்தொழில் அமைச்சின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) உறுப்புரையின் பிரகாரம் கமத்தொழில் அமைச்சிக்கு சமர்ப்பிக்கப்படும் இந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 பந்தியின் குறிப்பிடப்படும் விடயங்களிலான தாக்கத்தினை தவிர, நிதிக்கூற்றுக்களினுள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கமத்தொழில் அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியின் குறிப்பிடப்படும் விடயங்களில் மீது எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை

மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டுடன் இணங்கும வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் தொடர்பபான எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

கடந்த ஆண்டில் காணப்பட்ட 03 இராஜாங்க அமைச்சுக்களை இரத்துச் செய்து கமத்தொழில் அமைச்சிற்கு உற்படுத்தி அவற்றின் கூட்டுப் பெறுமதிகளை அமைச்சின் நிதி தகவல்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன. கடந்த ஆண்டில் வெளிப்படுத்த வேண்டிய நிதி தகவல்களிற்கு இரத்துச் செய்த 03 இராஜாங்க அமைச்சுக்களின் தகவல்கள் இன்றி கமத்தொழில் அமைச்சின் நிதித் தகவலகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சின் நிதி செயலாற்றல் கூற்றில், மீளாய்வாண்டு இறுதியில் நிதி நிலைமை கூற்றில் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்படும் ஒப்பீட்டுத் தகவல்கள் இணங்குவதில்லை என அவதானிக்கப்பட்டது.

1.6.1.1 வருமான பெறுவனவு

(அ) மீளாய்வாண்டு ஒக்டோபர் 01 திகதி முதல் அமுலாகும் வகையில் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டை தயாரித்து சமர்பித்ததில் ஆரம்ப பாதீட்டில் குறிப்பிடப்படும் வருமான மதிப்பீட்டை திருத்திக் கொள்ளும் இயலுமை காணப்பட்ட போதும் மீளாய்வாண்டில் அமைச்சின் ஆரம்ப வருமான பாதீட்டிலான ரூபா 310 மில்லியனை மாற்றியிருக்கவில்லை. மீளாய்வாண்டில் ரூபா 219 மில்லியனான வருமானமொன்றை திரட்டியிருந்ததுடன் அதன் பிரகாரம் திருத்திய வருமான மதிப்பீடு மற்றும் உள்ளவாறான வருமானத்திற்கு இடையில் ரூபா 91 மில்லியனான வித்தியசமொன்று ஆனதில் அவ் வித்தியாசத்தை திருத்திய வருமான மதிப்பீட்டின் 29 சதவீதமாக இருந்த காரணத்தால் அமைச்சின் வருமான திரட்டல் வினைத்திறன் ஆக்பூர்வதன்மை பலவீனமான நிலையில் காணப்படுவது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருமான குறியீட்டு இலக்கம் 2003.07.00 அரசாங்க நெல் கொள்வனவு வேலைத் திட்டத்தின் மீளாய்வாண்டு இறுதியில் கடந்த ஆண்டிற்கு முன்னைய ஆண்டுகளிற்குரியதாக ரூபா 12,827,927 தொகையும், கடந்த ஆண்டிற்குரியதாக ரூபா 124,965,567 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரியதாக ரூபா 299,292,219

தொகையுமாக கூட்டுத் தொகை ரூபா 437,085,714 ஆன நிலுவை வருமானம் மீளாய்வாண்டு இறுதியில் அறவிட அமைச்சுக்கு இயலாதிருந்தது. மீளாய்வாண்டில் திரட்டிய மொத்த வருமானம் ரூபா 219,195,185 தொகையாகும். ஆதன் பிரகாரம் மொத்த நிலுவை வருமானம் மீளாய்வாண்டில் திரட்டிய வருமானத்தின் 199 சதவீதமான காரணத்தால் அமைச்சின் நிலுவை வருமானத்தை திரட்டும் வினைதிறன் பலவீனமான நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

(இ) வருமான குறியீட்டு இலக்கம் 2003.07.00 அரசாங்க நெல் கொள்வனவு வேலைத் திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்குரியதாக அறவிட வேண்டிய மொத்த நிலுவைத் தொகை ரூபா 308,968,951 ஆவதுடன் மீளாய்வாண்டில் மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய வருமானத்தில் ரூபா 9,676,732 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் மீளாய்வாண்டிற்குரியதாக மேலும் நிலுவை வருமான மீதி ரூபா 299,292,219 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரியதாக அறவிட வேண்டிய நிலுவை வருமானத்தில் திரட்டிய வருமானம் 3 சதவீதமான குறைத்த சதவீதமான காரணத்தால் அமைச்சின் மேலும் நிலுவை வருமானம் 97 சதவீதமான காரணத்தால் மீளாய்வாண்டிற்குரியதாக வருமானத்தை திரட்டும் வினைதிறன் மிக பலவீனமான நிலையில் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது.

1.6.1.2 குறைநிரப்பு மதிப்பீட்டு மிகை ஏற்பாடு

அமைச்சினால் திருத்திய பாதீட்டு மதிப்பீடுகளினால் ஒதுக்கிய ஏற்பாடுகளிற்கு மேலதிகமாக 05 குறை நிரப்பு மதிப்பீடுகளின் கீழ் ஏற்பாடு பெற்றுக் கொண்டிருந்ததுடன் அக் குறை நிரப்பு மதிப்பீடுகளிலிருந்து 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சளவில் ரூபா 229,652,737 ஆன ஏற்பாடு எஞ்சியிருந்த காரணத்தால் அமைச்சினால் தேவைக்வைக்கு அதிகமாக குறை நிரப்பு மதிப்பீட்டின் கீழ் ஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

1.6.2 நிதி நிலைமை மீதான கூற்று

1.6.2.1 நிதியல்லா சொத்துக்கள்

(அ) அமைச்சின் விவசாய பிரிவிலுள்ள நிதியல்லா சொத்துக்கள் தொடர்பாக பின்னவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கமத்தொழில் அமைச்சின் பயன்பாட்டில் இல்லாத பெறுமதி ரூபா 69,900,000 ஆன 06 வாகனங்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) அமைச்சின் பயன்பாட்டிலுள்ள KS – 6781 கொண்ட வாகனத்தின் மதிப்பீட்டுப் பெறுமதி கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ் வாகனம் மற்றும் மதிப்பீட்டுப் பெறுமதிகளின் கூட்டுத் தொகை ரூபா 179,272,000 ஆன TP – 4769

கொண்ட மோடார் சைக்கில் மற்றும் 14 மோடார் வாகனங்களாக 16 மொத்த வாகனங்களின் பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அவ் வாகனங்களின் 12 இனது பதிவு உரிமை கமத்தொழில் அமைச்சின் கீழ் காணப்படாததுடன் அவ் வாகனங்கள் அமைச்சின் பெயரில் பதிவு செய்யதல் அல்லது திறைசேரி பிரதி செயலாளரின் 2017 திசெம்பர் 21 திகதிய மற்றும் இலக்கம் 2/2017 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் குறித்த அமைச்சிற்கு மீள் ஒப்படைப்பேனும் செய்திருக்கவில்லை.

(iii) கமத்தொழில் அமைச்சிற்கு சட்டரீதியான உரித்தற்ற பெறுமதி ரூபா 24,700,000 ஆன 07 வாகனங்களின் உரிமையை சுவீகரிக்காது அமைச்சின் நடைமுறையல்லா சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) அமைச்சின் கால்நடை வளங்கள் பிரிவிலுள்ள நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னர் இருந்த இராஜாங்க அமைச்சினால் வேறு நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொண்டிருந்த பெறுமதி ரூபா 6,390,000 ஆன PG – 1773 கொண்ட வாகனத்தின் உரிமையை சுவீகரிக்க மீளாய்வாண்டு இறுதியிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) அமைச்சிற்கு சொந்தமான KO – 4865, GF – 9312, PD – 8931, KX – 7664, KX - 8136, KO – 0024, CAA – 0024, CAH – 1634 ஆகிய இலக்கங்களைக் கொண்ட 08 வாகனங்களை வெளி நிறுவனங்களிற்கு விடுவிக்கும் அடிப்படை மற்றும் அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(iii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள கால்நடை வளங்கள் பிரிவிற்கு உரிமையான கூட்டுப் பெறுமதி ரூபா 139,800,000 ஆன மேல் (ஆ) இல் குறிப்பிட்ட 08 வாகனங்கள் கால்நடை வளங்கள் பிரிவில் அல்லது கமத்தொழில் அமைச்சின் வேறு பிரிவுகளில் ஏனும் பௌதீக ரீதியாக காணப்படாததுடன் அவ் வாகனங்கள் தற்போது பயன்படுத்தும் நிறுவனத்திற்கு ஒப்படைத்தல் அல்லது கால்நடை வளங்கள் பிரிவிற்கு மீள் பெற்றுக் கொள்ள இவ்வறிக்கை திகதி வரையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிப்பிரமானம் 1645(அ) மற்றும் நிதிப்பிரமானம் 1647(அ) பிரகாரம் வாகன லொக் புத்தகங்கள் முறையாக மற்றும் ஒழுங்காக தகவல்களை உள்ளடக்கி நாளாதுவரையான நிலைமையில் பேணிச் செல்ல வேண்டிய போதும் பயன்படும் எரிபொருள் அளவு தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.2.2 பண்டக கணிப்பீட்டு அறிக்கை

(அ) அமைச்சின் விவசாய பிரிவிலுள்ள பண்டக கணிப்பீட்டு அறிக்கை தொடர்பாக பின்னவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2022 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 85 வகை பண்டங்களின் 187 உருப்படிக்களில் பற்றாக்குறையும் 45 வகை பண்டங்களின் 83 உருப்படிக்களில் மேலதிகமும் அவதானிக்கப்பட்டன.

(ii) 2022 ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்கிய போதும் அமைச்சு ஆளணி அறையில் பொருட் பதிவேட்டில் உள்ளடங்காத 26 வகை பண்டங்களின் 44 உருப்படிக்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை (2021) ஊடாக திருத்த வேண்டிய (R) 09 பண்டங்களும் அழிக்க வேண்டிய பண்டங்கள் (D) 12 ஆக பரிந்துரைத்திருந்த பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பண்டங்கள் தொடர்பாக அப்பரிந்துரையை நடைமுறைப்படுத்தும் செயன்முறை 2023 ஏப்ரல் 12 வரையும் பூர்த்தி செய்யதிருக்கவில்லை.

(ஆ) அமைச்சின் கால்நடை வளங்கள் பிரிவிலுள்ள பண்டக கணிப்பீட்டு அறிக்கை தொடர்பாக பின்னவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2022 ஆண்டின் பண்டக கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 40 வகை பண்டங்களின் 90 உருப்படிக்களில் மேலதிகமும் 50 வகை பண்டங்களின் 126 உருப்படிக்களில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டன.

(ii) 2022 ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கையில் உள்ளடங்கிய போதும் இன்வென்றி பதிவேட்டில் உள்ளடங்காத 06 வகை பண்டங்களின் 11 உருப்படிக்கள் அவதானிக்கப்பட்டன.

(iii) கடந்த ஆண்டு பண்டக கணிப்பீட்டு அறிக்கை (2021) ஊடாக திருத்த வேண்டிய (R) 21 பண்டங்களும் அழிக்க வேண்டிய பண்டங்கள் (D) 24 ஆக பரிந்துரைத்திருந்த பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள பண்டங்கள் தொடர்பாக அப்பரிந்துரையை நடைமுறைப்படுத்தும் செயன்முறை 2023 ஏப்ரல் 06 வரையும் பூர்த்தி செய்யதிருக்கவில்லை.

2. நிதி மீளாய்வு

2.1 வருமான முகாமைத்துவம்

நி.பி. 128(2)(ஈ), நி.பி. 176(1) இலக்கம் 01/2015 மற்றும் 2015 ஜூலை 20 திகதிய அரச நிதிக்கொள்கை சுற்றறிக்கையின் 08 பந்தி பிரகாரம் இலக்கம் 2003.07.00 கொண்ட வருமான குறியீட்டின் கீழ் அரையாண்டு நிலுவை அறிக்கை அக்கால எல்லை முடிவடைந்து ஒரு மாதத்தினுள் அரச நிதிக்கொள்கை பணிப்பாளரிற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும், 2022 ஆண்டிற்குரியதாக அவ் அறிக்கை எதனையும் தயாரித்து கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2 செலவின முகாமைத்துவம்

பின்னவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2022 ஒக்டோபர் 01 திகதி முதல் இரத்தாகியுள்ள, கமத்தொழில் அமைச்சிற்கு உட்படுத்திய 03 இராஜாங்க அமைச்சுக்கள் கமத்தொழில் அமைச்சின் கீழ் கிராமிய பொருளியல் பரிவு, பசளைப் பிரிவு மற்றும் கால்நடை வளங்கள் பிரிவாக செயற்படுவதாக அவதானிக்கப்பட்டது. அப் பிரிவுகளின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக நிதிப் பிரமாணம் 135 பிரகாரம் கமத்தொழில் அமைச்சின் செயலாளரினால் அதிகாரம் ஒப்படைப்பு செய்துள்ளமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(ஆ) அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 2022/05 மற்றும் 2022 திசெம்பர் 13 திகதிய வழிகாட்டியின் 3.4 பந்தி பிரகாரம் ஒவ்வொறு செலவு விடயங்களையும் குறியீட்டு இலக்கத்தின் கீழ் ஒவ்வொறு செலவு விடயங்களிற்காகவும் மொத்த தேறிய ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவுகளிற்கு இடையிலான வித்தியாசம் மற்றும் அவ் வித்தியாசத்திற்கான காரணங்கள் எஸ்ஏ – 2(ii) படிவத்தில் காட்ட வேண்டும். எனினும் அமைச்சின் எஸ்ஏ – 2(ii) படிவத்தில் ஒவ்வொறு செலவு விடயங்களையும் குறியீட்டு இலக்கமொன்றின் கீழ் அனைத்து செலவு விடயங்களிற்காகவும் மேற்படி நடவடிக்கை எடுக்காது செலவு விடய குறியீட்டு இலக்கம் இரண்டை ஒன்றுசேர்த்து மொத்த தேறிய ஏற்பாடு, உள்ளவாறான செலவுகள் மற்றும் வித்தியாசம் குறிப்பிடப்பட்டிருந்தன.

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாட்டிற்கு உட்படல்

(அ) அமைச்சின் விவசாய பிரிவிலுள்ள பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல் தொடர்பாக பின்னவரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப் பிரமாணம் 94(I) பிரகாரம் இருப்பை விஞ்சி பொறுப்புக்களிற்கு கடப்பட முடியாத போதும், அமைச்சினால் 18 செலவின விடயங்களில் சேமிப்பை விஞ்சி ரூபா 2,312,760,277 ஆன பொறுப்பகளுக்கு உட்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்காக வரவு செலவுத் திட்டத்தில் ஏற்பாடு ஒதுக்கப்படாத 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 01 மூலதன செலவின விடயத்திற்காக கூட்டுத்தொகை ரூபா 8,818,198 ஆன பொறுப்புகளுக்க கடப்பட்டிருந்தன.

(iii) விவசாய் பிரிவு ஆண்டிற்குரியதாக ரூபா 3,585,762 ஆன பொறுப்பக்கள் நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கட்ப்பாட்டு கூட்டில் (iii) ஆம் குறிப்பு இலக்கத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 02/2020 மற்றும் 2022 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்கான வழிகாட்டியின் 6 ஆம் பந்தி பிரகாரம் அதாவது நிதிக்கூற்றுக்கள் தயாரித்தலுக்கு பயன்படத்த வேண்டிய படிவப் பதிவேட்டின் பிரகாரம் 2022.12.31 திகதிக்கு அமைச்சுக்குரிய அனைத்து கடப்பாடு மற்றும் பொறுப்புக்ள் குறிப்பு (iii) கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று ஊடாக வெளிப்படுத்த வேண்டிய போதும் அவ்வாறு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(v) கணக்காய்விற்கு சமர்பித்திருந்த கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் (இணைப்பு iii) இல் காட்டப்பட்ட பெறுமானங்கள் மற்றும் திறைசேரி திரண்ட கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் (SA 92) காட்டப்பட்ட பெறுமானங்களிற்கிடையில் ரூபா 25,030,734,894 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) அமைச்சின் கிராமிய பொருளியல் பிரிவின் 2022 திசெம்பர் மாதத்திற்குரிய சுகாதார சேவைகள் வழங்களிற்காக சமாகா கிலினிக் என்டபிரய்ஸஸ் இற்கு 2023 பெப்ரவரி 01 திகதி செலுத்திய ரூபா 149,950 ஆன கட்டணம் 2022 திசெம்பர் 31 திகதியன்று செலவாக இனங்கண்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	**இணங்காமை**
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை	
(i) நி.பி 104	கிராமப் பிரிவின் இணங்காமைகள்

- இலக்கம் KY-5536 கொண்ட வாகனத்தை கொள்வனவு செய்த திகதி முதல் விபத்து ஏற்படும் சந்தர்ப்பம் வரை தொடர்ந்தும் தேசிய முகவர் நிறுவனத்தினால் சேவை செய்யப்பட்டிருந்ததுடன் விபத்திற்குள்ளான வாகனத்தை திருத்த தேசிய முகவர் நிறுவனமான எசோசியேடட் மோடர்வேஸ் தனியார் நிறுவனத்தினால் ரூபா 5,071,832 ஆன மதிப்பீடொன்று வழங்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த வண்டியை திருத்துவது பொருளாதார ரீதியாக பயனற்றது என குறிப்பிட்ட காப்புறுதி நிறுவனத்தினால் ரூபா 5,480,000 தொகைக்கு வானத்தின் பூரண உரிமையை ஒப்படைத்து தருமாறு கோரியிருந்தது.
- முகவர் நிறுவனத்தினால் வழங்கிய ரூபா 5,071,832 ஆன மதிப்பீட்டை காப்புறுதி கம்பனி அங்கீகரிக்காது விலைமணு கோரி முன்வைக்கப்பட்ட குறைந்தபட்ச விலையான ரூபா 1,700,000 யை அங்கீகரித்திருந்தது. காப்புறுதி கம்பனி மொத்த நட்டம் (Total Loss) செய்ததாக குறிப்பிட்டிருக்கையில் விலைமணு கோரி முன்வைக்கப்பட்ட குந்தபட்ட விலையான ரூபா 1,700,000 யை காப்புறுதி கம்பனியினால் வழங்க இணங்கிமையும் முகவர் நிறுவனத்தினால் வழங்கிய ரூபா 5,071,832 ஆன மதிப்பீட்டை காப்புறுதி நிறுவனத்தினால் செலுத்தாது வாகனத்தை சுவீகரிக்க விடுத்த கோரிக்கையை கவனத்திற் கொள்கையில் இந்த வாகனம் செலுத்துவதற்கு பொருத்தமான நிலைக்கு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பது கணக்காய்வின் போது பிரச்சினைக்குள்ளானது.
- இயந்திர பொறியியலாளரினால் வாகனத்தின் ஒவ்வொறு உருப்படியினதும் தகைமை தொடர்பில் வெவ்வேறாக உறுதி செய்திருக்காததுடன் 2023 ஏப்ரல் 25 திகதி வாகனத்தின் திருத்தங்கள் பொருத்தமான முறையில் மேற்கொள்ளப்பட்டதாக கடிதம் ஒன்று மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இந்த பொறியியலாளரின் கடிதத்தினாலும் வாகனம் செலுத்த பொருத்தமான நிலைமையில்

		உள்ளனவா என்பது கணக்காய்விற்கு பிரச்சினைக்குரியதானது.
(ii)	நி.பி 138(6) மற்றும்(8)	வாகன திருத்தத்திற்காக பணம் செலுத்துகையில் துணை சான்றாக திருத்த வேலைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட்டதாக இயந்திரவியல் பொறியியலாளரினால் பரிந்துரையின்றி 09 வாகனங்களை திருத்தியதற்காக ரூபா 984,827 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 138 பிரகாரம் கொடுப்பனவிற்காக வேரொரு வவுசரை பின்னொரு சந்தர்ப்பத்தில் உறுதி செய்வதனை தடுப்பதற்கு அதிகாரம் வாய்ந்த அலுவலர் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் பெயருள் பட்டியலிற்காக ரூபா 265,008 தொகையும் பட்டியலின் போடோ பிரதியை அடிப்படையாக்க கொண்டு ரூபா 288,484 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.
(iii)	நி.பி 891(1)	பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளிட்ட பிணை பட்டியலொன்றை தயாரித்திருக்கவில்லை.
(iv)	நி.பி 1645(ஆ),(ஈ) மற்றும் நி.பி 1646	வாகனங்களி பயணம் தொடர்பான மாதாந்த பொழிப்புக்களின் மூலப்பிரதி மற்றும் ஓட்டக் குறிப்பு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் 2022 ஆண்டிற்குரியதாக உத்தியோகபூர்வ மற்றும் தொகுதி வாகனங்களின் ஓட்டக் குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு வாகன பொறுப்பு அலுவலரினால் அறிக்கை சமர்பிக்கும் மாதத்திற்கு பின்னர் அடுத்த மாதம் 15 திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் அவ்வாறு செய்திருக்கவில்லை.
(v)	நி.பி 1647	அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவின் ஒரு அலுவலரிடமிருந்து இன்னுமொரு அலுவலரிற்கு வாகனத்தின் பாதுகாப்பை ஒப்படைத்தவுடனே வாகனம் மற்றும் உபகரணங்கள் பற்றி கணிப்பீடொன்றை மேற்கொள்ள வேண்டும். மேலும் வானத்தின் உபகரணங்களின் மற்றும் மேலதி உபகரணங்களின் பாதுகாப்பு தொடர்பாக மாற்றம் ஏற்படும் எவ்வித சந்தர்ப்பங்களின் போதும் அவை அவ்வாறு பொறுப்பேற்றமைக்கு குறிப்பொன்றை லொக் குறிப்பு

		புத்தகத்தில் குறிப்பிட வேண்டும். எவ்வாறாயினும் 07 வாகனங்கள் சாரதிகளிற்கு ஒப்படைக்கும் போது அவ் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
(ஆ)	2020.10.02 திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 05/2020 இன் 02 (அ) பந்தி மற்றும் பொது நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 1 ஆம் பகுதியின் 13.2 பந்திக்குரிய வழிகாட்டி இலக்கம் 03	கால்நடை வளங்கள் பிரிவின் ஓட்ட நிலையில் இல்லாத வாகனங்களை 2020.12.31 முன்னர் பராதீனம் செய்ய வேண்டுமெனவும் பாதீட்டு ஏற்பாடு அல்லது மாகாண நிதியத்தை பயன்படுத்தும் நிறுவனம் அவ்வாகனங்களை பராதீனம் செய்து ஈட்டிக்கொண்ட பணத்தை குறித்த நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும் பராதீன குழுவினால் பராதீனத்திற்காக பரிந்துரைத்திருக்கையில் 2022 மார்ச் 01 திகதியளவிலும் 65 – 6120 பதிவிலக்கம் கொண்ட வாகனம் ஓட்ட நிலைக்கு பொறுத்தமின்றி காணப்பட்டதுடன் 65 – 6120 இலக்கம் கொண்ட வாகனத்திற்கு கடிதக் கோவையொன்று பேணப்படவில்லை என அறிவிக்கப்பட்டிருந்தது.

2.5 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

(அ) நிதிப் பிரமாணம் 371(2) பிரகாரம் உரிய வேலையை முடிவுறுத்திய உடனே பெற்றுக் கொண்ட முற்பணத்தை தீர்க்க வேண்டிய போதும் விவசாய பிரிவின் 06 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 228,080 உப கட்டுநிதியை தீர்கக 30 நாட்கள் முதல் 116 நாட்கள் வரையான காலப் பகுதியும் கால்நடை வளங்கள் பிரிவின் 09 அலுவலர்களுக்கு வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 156,024 உப கட்டுநிதியை தீர்கக 50 நாட்கள் முதல் 240 நாட்கள் வரையான காலமொன்று எடுத்திருந்தது.

(ஆ) கால்நடை வளங்கள் பிரிவில் நிமித்த உபகட்டுநிதி பெற்றுக் கொள்ளும் போது அத்தொகையை பெற்றுக் கொண்ட தேவைப்பாட்டிற்கு செலவிடாது பெற்றுக் கொண்ட அம் மொத்த முற்பணத்தையும் 07 நாட்கள் முதல் 55 நாட்கள் வரையான காலத்தில் மீண்டும் பணமாக தீர்த்த 04 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. அம் முற்பணங்களின் மொத்த பெறுமதி ரூபா 67,740 தொகையானது.

2.6 நட்டம் மற்றும் கைவிடல்

அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவின் நட்டம் மற்றும் கைவிடல் தொடர்பாக பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் பிரகாரம் வாகன விபத்துக்களிற்காக அறவிட வேண்டிய ரூபா 114,343 ஆன நட்டத்தை பொறுப்பு வாய்ந்த இரண்டு சாரதிகளிடமிருந்து அறவிட்டிருக்கவில்லை. அச்சாரதிகள் அமைச்சு ஆளணியிலிருந்து வெளியேரியிருந்த போதும் அறவிட வேண்டிய பணம் தொடர்பில் முன்நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2022 திசெம்பர் 31 திகதியன்று 5 – 10 ஆண்டுகள் இடையிலான காலத்திற்குரிய ரூபா 141,311 ஆன மற்றும் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 430,139 ஆக கூட்டுத் தொகை ரூபா 571,450 ஆன மீதிகள் தொடர்ந்தும் அறவிட அமைச்சினால் இயலாதிருந்தது.

(இ) பதிவிலக்கம் KY -5535 மற்றும் CAV -5064 கொண்ட 02 வாகனங்களிற்கு ஏற்பட்ட விபத்து காரணமாக ரூபா 7,982,290 ஆன நட்டத்தை தொடர்ந்தும் அறவிட அல்லது பதிவழிக்க அல்லது கைவிடவுள்ள நட்டம் தொடர்பாக கூற்றினுள் உள்ளடக்கியிருக்கவில்லை,

(ஈ) அமைச்சினால் கைத்தொழில் அமைச்சின் இலக்கம் KK – 5865 கொண்ட வாகனத்தை 2019 சனவரி 10 திகதி முதல் பயன்படுத்தியுள்ள போதும் 2023 ஏப்ரல் 25 திகதி வரை அதனை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.7 பொது வைப்புக்கள்

(அ) பசளை பிரிவின் வைப்புக் கணக்கொன்றிற்குரிய 2022 திசெம்பர் 31 திகதியன்று 02 ஆண்டுகளை கடந்துள்ள ரூபா 126,000 ஆன வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கால்நடை வளங்கள் பிரிவின் வைப்புக் கணக்கொன்றிற்குரிய 2022 திசெம்பர் 31 திகதியன்று 02 ஆண்டுகளை கடந்துள்ள ரூபா 440,439 ஆன 02 வைப்புக்கள் தொடர்பாக மேற்குறித்த நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.8 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

திறைசேரி செயலாளரின் இலக்கம் BDKBP/01/01/03-2023 மற்றும் 2022 திசெம்பர் 21 திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் 18 ஆம் பிரிவு பிரகாரம் இரத்தான செலவினத் தலைப்புக்களுக்குரிய செயலிழந்த உத்தியோகபூர்வ வங்கி கணக்கு மற்றும் அங்கீகார கட்டுநிதி கணக்கை மூடிவிடும் செயலின் பொறுப்பை இரத்தான அமைச்சுக்களில்

சேவையாற்றிய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளரிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் இரத்தான செலவினத் தலைப்பு 407, 426 மற்றும் 427 இற்குரிய உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு இவ்வறிக்கை திகதி வரையும் மூடிவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. விபரம் பின்வருமாறு.

இலக்கம்	வங்கிப் பெயர்	கணக்கின் பெயர்	கணக்கிலக்கம்	2022.12.31 திகதி வங்கிக் கூற்று பிரகாரம் மீதி (ரூபா)
01	இலங்கை வங்கி யூனியன் பிததேசம்	செயலாளர், கால்நடை வளங்கள் பண்ணை மேம்பாடு மற்றும் பால் மற்றும் முட்டை அன்மித்த கைத்தொழில் இராஜாங்க அமைச்சு	7040733	43,741,749
02	இலங்கை வங்கி பத்தரமுள்ள	செயலாளர், சேதனப் பசளை உற்பத்தி மேம்பாடு மற்றும் வழங்கல் ஒழுங்கமைப்பு மற்றும் நெல் மற்றும் தானியம், சேதனப் பசளை மரக்கறி, பழங்கள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக் கிழங்கு பயிரிடல், விதை உற்பத்தி மற்றும் உயர் தொழிநுட்ப விவசாய இராஜாங்க அமைச்சு	7040749	5,964,644
03	இலங்கை வங்கி தப்ரோபேன்	செயலாளர், பின்தங்கிய கிராமிய பிரதேச அபிவிருத்தி மற்றும் வீட்டு கால்நடை கட்டுப்பாடு மற்றும் சிறு பொருளாதார பயிர் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு	7040184	2,110,851

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ பழவீனங்கள்

அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவிற்கு ஒதுக்கிய இலக்கம் CAV -5064 கொண்ட வாகனத்தை இராஜாங்க அமைச்சரிற்கு இணைத்திருக்கையில் 2021 ஜூன் 21 திகதி மட்டக்களப்பிலிருந்து கொழும்பு ராஜகிரிய பிரதேசத்தில் அதனை இயக்க முடியாதிருந்துள்ளது. அவ் வழுவினை புலனாய்வு செய்ய 03 உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்ட போதும் தொழிநுட்ப அறிவுள்ள ஒரு உத்தியோகத்தர் அதில் உள்ளடங்கவில்லை. அக் குழுவின் அறிக்கையில் வாகனத்தின் வழு தொடர்பாக எவ்வித குறியீட்டையும் முன் திறப்பு பலகையில் காட்டுவதில்லை எனும் சாரதியின் வாக்கு மூலத்தின் மீது புலனாய்வுக் குழுவினால் சாரதியை விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் 2021 ஜூன் 22 திகதி முகவர் நிறுவனத்திடமிருந்து கோரிய அறிக்கையில் நீர் குறைவடைந்தமை, குளிராக்கி இல்லாது தொடர்ந்து செலுத்தல் மற்றும் இயந்திரம் அதிகளவில் வெப்பமடைதல் முன் திறப்பு பலகையின் குறிகாட்டி (Indicators) மூலம் தகவல் பரிமாற்றம் தொடர்பாக கவனிக்காமை எனும் சாரதியின் கவனயீனமான செலுத்துதல் மற்றும் அங்கு உள்ள சிலின்டர் 06 இல் 03 பழுதடைய (Sized) சாரதி நேரடியாக பொறுப்புக் கூற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. 2021 ஜூலை 28 திகதி முகவர் நிறுவனம் அதற்காக ரூபா 3,076,878 ஆன மதிப்பீடொன்றை சமர்பித்திருந்தது. அஞ்சல் திணைக்களத்தின் இயந்திர பொறியியலாளர் 2021 ஜூலை 31 திகதிய கடிதம் மூலம் அதனை பரிந்துரைத்திருந்த போதும் முகவர் நிறுவனத்தினால் 2021 நவமபர் 10 திகதி ரூபா 3,490,517 ஆன புதிய மதிப்பீடொன்றை மீண்டும் சமர்பித்திருந்தது. ஏற்பாடு இல்லாததால் ரூபா 101,412 தொகையை செலவிட்டு 2021 நவம்பர் 24 திகதி அவ் வாகனத்தை அமைச்சு வளவிற்கு மீண்டும் கொண்டு வந்திருந்தது. இன்னுமொறு நிறுவனத்திற்கு வாகனத்தை வழங்கி மீண்டும் விலைமனு கோருகையில் 2021 நவம்பர் 25 திகதி ரூபா 3,896,300 ஆன மதிப்பீடொன்று சமர்பிக்கப்பட்டிருந்த போதும் மீண்டும் ரூபா 18,500 தொகையை செலவிட்டு வாகனத்தை அமைச்சின் வளவிற்கு கொண்டுவரப்பட்டிருந்து. இவ்வாறு அடிக்கடி செலவிட்டு எவ்வித திருத்தமும் இன்றி கணக்காய்வு திகதி வரையும் வாகனத்தை அமைச்சு வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. முகவர் நிறுவனத்தினால் சாரதியால் வாகனத்திற்கு ஏற்பட்ட கணக்கிடாத நட்டத்தை அறவிடவும் நடவடிக்கை எடுக்காமை போன்றே தொழிநுட்ப அறிவின்றிய குழுவொன்றை நியமித்ததில் புலனாய்வு நடவடிக்கைகள் ஒழுங்காக இடம்பெறவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

3.1.1 அறவிடப்படாத வைப்புக்கள்

(அ) 2016 ஏப்ரல் 08 முதல் 2021 ஏப்ரல் 07 திகதி வரை அதாவது 05 ஆண்டு கால எல்லைக்காக கமத்தொழில் அமைச்சிற்கு வாடகை அடிப்படையில் வ/ப டீ.பீ. ஜயசிங்ஹ தனியார் கம்பனியிடமிருந்து பெற்றுக் கொண்ட டீ பீ ஜ டவர்ஸ் எனும் கட்டிட வளவை குத்தகை வழங்குனருக்கு மீண்டும் 2020 சனவரி 31 திகதி ஒப்படைத்துள்ள போதும் கமத்தொழில் அமைச்சினால் அக் குத்தகை

வழங்குனருக்கு செலுத்திய ரூபா 63,000,000 ஆன மீள் செலுத்த வேண்டிய ஆரம்ப வைப்புத் தொகையை இது வரை அறவிட அமைச்சுக்கு இயலாமலிருந்தது. மேலும் குத்தகை வழங்குனர் தரப்பினரால் இவ் வைப்புத் தொகையை சட்டவிரோதமாக நிறுத்தி வைத்துக் கொண்டு இது வரை 02 ஆண்டுகள் கடந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) குத்தகை உடன்படிக்கை முடிவில் இருதரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் நட்ட சேதம் தொடர்பாக அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென குறித்த குத்தகை உடன்படிக்கையில் நிபந்தனையொன்று உள்ளடக்கப்படாத காரணத்தால் கமதொழில் அமைச்சினால் அக்குத்தகை ஆதனத்திற்கு ஏற்பட்டுள்ள சேதம் ரூபா 12,710,236 இற்கும் குத்தகை வழங்குனர் கம்பனியினால் அச்சேதம் ரூபா 28,250,056 இற்கும் மதிப்பிட்டுள்ளது. குறித்த கட்டிடத்திற்கு ஏற்பட்டுள்ள சேதத்தை கணக்கிட்டு அரச மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து அறிக்கையொன்றை பெற்றுக் கொள்வது இதுவரை தாமதித்துள்ளது.

3.1.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் அறவிடப்படாத மீதிகள்

(அ) பேரேட்டு மீதிகளை வகைப்படுத்தும் பொழிப்பில் 2022 திசெம்பர் 31 திகதிக்கு கூட்டுத் தொகை மற்றும் அத்திகதியில் திணைக்கள புத்தகம் பிரகார மீதிக்கிடையில் ரூபா 3,522 ஆன வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நி.பி. 484 (4) மற்றும் நி.பி. 113(6)(அ) பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர்களின் கடன் மீதிகளை மூன்று மாதங்களினுள் தீர்க்க வேண்டிய போதும், இடமாற்றிச் சென்ற போதும் 2022 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்படாத கடன் மீதிகளின் பெறுமதி ரூபா 229,350 ஆனது.

(இ) சேவையை விட்டுச் சென்ற 03 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 140,557 ஆன கடன் மீதியை 05 ஆண்டுகளிற்கு அதிக காலம் பழமையானதுடன் 03 – 04 ஆண்டுகளிற்கு இடையிலான காலத்திற்கு உரிய 04 அலுவலர்களிடமிருந்து ரூபா 443,148 ஆன நிலுவை கடன் மீதியும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பணித் தடைவிதித்த 04 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 537,149 ஆன கடன் மீதி அக் கடன்தாரர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்தேனும் அறவிட 2022 திசெம்பர் 31 திகதியளவிலும் இயலாதிருந்தது.

(உ) ஓய்வுபெற்ற 05 அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளின் பெறுமானம் ரூபா 603,099 ஆனதுடன் அக்கடன் மீதிகளை 03 மாதங்களிலிருந்து 03 ஆண்டுகள் வரையான கால வீச்சளவிற்கு உரியதாக அவதானிக்கப்பட்டது.

4. **செயலாற்றுகை**

(அ) நிதி அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் விவசாய திணைக்களம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் தேசிய பசளை செயலகத்தின் பணிப்பாளரினால் 2009 ஜூன் 26 திகதி இரசாயண பசளை இறக்குமதி செய்யும் போது கடைபிக்க வேண்டிய ஒழுங்கு முறை உள்ளிட்ட இலக்கம் 4/5/6 Quality கொண்ட கடிதத்தை வெளியிடப்பட்டிருந்தது. 2020 மாச்ர் 19 திகதி முதல் மேலே 4/5/6 Quality கொண்ட கடிதத்தினுள் உள்ளிட்ட ஒழுங்கு முறை மற்றும் அது வரை இரசாயண பசளை பரிசோதித்து அங்கீகாரம் வழங்கும் ஒழுங்கு முறையை மாற்றி இரசாயண பசளை விற்பனை செய்ய வர்த்தக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு வர்த்தக அங்கீகாரம் வழங்கிய சந்தர்ப்பம் தொடர்பாக அமைச்சின் பசளை பிரிவில் மேற்கொண்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) இலங்கை தரநிர்ணய நிறுவனத்திற்கு பரிந்துரைத்த தரத்தை மாற்ற அல்லது நிலவும் ஒழுங்கு முறைக்கு மாற்றமாக பிரித்தானியா அல்லது ஐரோப்பிய தரத்தை பயன்படுத்தி இரசாயணகூட பரிசோனை மேற்கொள்ள, சனாதிபதி அவர்கள் அல்லது இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் தவிசாளர் அல்லது அமைச்சரவை அல்லது வேரொறு அதிகார சபையொன்றினால் அங்கீகாரத்தை வழங்காத நிலைமையினுள் கொரோனா தொற்று காலத்தினுள் இரசாயணகூடம் செயற்படாததனால் இரசாயணகூட பரிசோதனையின்றி பசளை கப்பளிற்கு ஏற்றும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொண்ட இரசாயணகூட பகுப்பாய்வு அறிக்கை அடிப்படையில் சந்தைக்கு பசளை விநியோகிக்க தேசிய பசளை செயலகத்தின் பணிப்பாளரினால் கடிதக் கோவை குறிப்பினூடாக மேற்கொண்டுள்ள கோரிக்கைக்கு கமத்தொழில் அமைச்சின் செயலாளர் அங்கீகாரம் வழங்கியிருந்தார்.

அதன் பிரகாரம் 1988 இன் 68 இலக்க பசளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அப்பால், அமைச்சரவை அங்கீகாரமின்றி இறக்குமதி பசளையை இலங்கையினுள் விநியோகிக்க அங்கீகாரம் வழங்குவதாக அறிவித்து தேசிய பசளை செயலகத்தின் பணிப்பாளரினால் அனைத்து இறக்குமதி பசளை கம்பனிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட வகையில் செயற்படுமாறு அறிவித்து 2020 மார்ச் 20 திகதிய இலக்கம் 7/1/2/3/4 NFP கொண்ட கடிதத்தை விநியோகித்திருந்தது.

(ii) மேலும் அதன் போது மேற்கொண்டிருந்த பரிசோதனைகள் பிரகாரம் இலங்கை தரநிர்ணய நிறுவனம் பரிந்துரைத்த தரத்திற்கு இணங்காத எனினும் ஐரோப்பிய தரத்திற்கு இணங்கும் TSP பசளை சந்தைக்கு விநியோகிக்க முடியுமான பசளையாக கருதுவதாகவும் அவ்வாறான இருப்பை சந்தைக்கு விநியோகிக்க அங்கீகாரம் வழங்குவதாக குறிப்பிட்டு தேசிய பசளை செயலகத்தின் பணிப்பாளரினால் 2020 மார்ச் 20 திகதிய இலக்கம் 7/1/2/3/4 NFP கொண்ட "TSP பசளைக்கான அங்கீகாரம்" தலைப்பில் அனைத்து பசளை கம்பனிகளுக்கும் கடிதமொன்றை விநியோகித்திருந்த போதும் முன்னர் பின்பற்றி தரத்திற்கு மாற்றமாக வேறு தரத்தை

தரத்தை பயன்படுத்த எவ்வித அதிகாரி அதிகாரசபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) தெரிவு செய்த மூன்று TSP பசளை உற்பத்தியாளர்களிடமிருந்து மாத்திரம் பசளை இறக்குமதி செய்ய மற்றும் வர்த்தக அங்கீகாரம் வழங்கும் போது இரசாயணகூட பரிசோதனையின்றி கப்பலிற்கு ஏற்றும் போது பெற்றுக் கொள்ளும் பகுப்பாய்வு அறிக்கையை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு இறக்குமதி பசளை இருப்பை சந்தைக்கு விநியோகிக்க தீர்மானித்தாக குறிப்பிடும் தட்டச்சு செய்த கடிதமொன்றை கடிதக் கோவைக்கு இணைத்து அத்திகதி முதல் இரசாயணகூட பரிசோதனையின்றி வர்த்தக அங்கீகாரம் வழங்க நடவடிக்கை எடுத்திருந்த போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்க கமத்தொழில் அமைச்சர், இராஜாங்க அமைச்சர் அல்லது வேறு அதிகார அதிகாரசபையினால் ஒழுங்கான அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) கன உலோகத்திற்காக மேற்கொள்ளும் பரிசோதனை பிரகாரம் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தின் தரத்திற்கு இணங்காத காரணத்தால் வர்த்தக அங்கீகாரம் வழங்க முடியாதிருந்த 2019 ஆண்டில் இறக்குமதி செய்த TSP பசளை 2,905 மெ.டொன் மற்றும் SOA பசளை 2,126 மெ.டொன் உள்ளடங்களாக கூட்டுத் தொகை TSP பசளை 4,830 மெ.டொன், MOP பசளை 1,749 மெ.டொன், SOA பசளை 2,392 மெ.டொன் மற்றும் KIESERITE பசளை 162 மெ.டொன் தேசிய பசளை செயலக பணிப்பாளரின் இலக்கம் 7/1/2/3/4 NFP கொண்ட 2020 மார்ச் 20 திகதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு ஐரோப்பிய தரத்திற்கு இணங்க இலங்கையில் பயன்படுத்த பொருத்தமென தீர்மானித்து சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(v) தேசிய பசளை செயலக பணிப்பாளரினால் விநியோகித்துள்ள இலக்கம் 7/1/2/3/4 NFP மற்றும் 2020 மார்ச் 20 திகதிய கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைக்கு பசளை இருப்பு இறக்குமதி செய்ய வேண்டிய மாதிரி பரிசோதனை ஒன்றின் மூலம் இலங்கை தரநிர்ணய நிறுவனத்தினால் அறிமுகப்படித்தியுள்ள தரத்திற்கு இணங்குவதாக உறுதி செய்து கொள்ளாது, இரசாயண பசளையை கப்பலிற்கு ஏற்றும் போது பெற்றுக் கொள்ளும் பகுப்பாய்வு அறிக்கையை மாத்திரம் கவனத்திற் கொண்டு இரசாயண பசளை 245,448 மெற்றிக் டொன் இலங்கையினுள் பயன்படுத்த அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) 2020 நவம்பர் 16 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இலங்ககை பசளை கம்பனிக்கு சொந்தமான இரசாயணகூடத்தை தேசிய பசளை செயலகத்திற்கு மேம்படுத்தி சுவீகரிக்க 2021 மற்றும் 2022 பாதீட்டின் மூலம் முறையே ரூபா 19 மில்லியன் மற்றும் 20 மில்லயனாக கூட்டுத் தொகை 39 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் கமத்தொழில் அமைச்சினால் அந்த இரசாயணகூடத்தை சுவீகரிக்க அல்லது மேம்படுத்தாத காரணத்தால் ரூபா 39 ஏற்பாடு விளைவற்றுள்ளதுடன் 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் தேசிய பசளை

செயலகத்தினால் மேற்கொள்ள வேண்டிய இரசாயணகூட பரிசோதனைகளை தனியார் இரசாயணகூடத்திற்கு அனுப்ப வேண்டி ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவின் செயலாற்றுகை பரிசோதனையின் போது பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் கால்நடை கட்டுப்பாட்டு பயன்பெறுனர்கள் 808 உம், பயிர் செய்யும் பயன்பாட்டாளர்கள் 15,414 உமாக மொத்த பயன்பெறுனர்கள் எண்ணிக்கை 16,222 ஆனது. கருத்திட்டத்தின் கீழ் இனங்காணும் முடிவுசெய்யப்பட்ட பயன்பெறுனர்களிற்கு பயன்கள் கிடைத்ததா இல்லையா என உறுதி செய்து கொள்ளாது பயன்பெறுனர் பட்டியலின் அடிப்படையில் மாத்திரம் கருத்திட்ட முன்னேற்றத்தை இனங்கண்டிருந்த போதும் கருத்திட்ட பயன்பெறுனர்கள் பொருள் உதவி பெற்றுக் கொண்டமைக்கு எவ்வித எழுத்து மூல சான்றையும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை.

(ii) மேலதிக செயலாளரின் 2022 ஜூன் 10 திகதிய இலக்கம் RECC/DP/04/018 கொண்ட 02/2022 சுற்றறிக்கை கடிதம் பிரகாரம் பயன்பெறுனராக தெரிவு செய்ய வேண்டியது உத்தேச ஆண்டின் கிட்டிய 02 ஆண்டினுள் அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் உழுந்து அல்லது பயறு பயிரிட நிவாரணம் கிடைக்காத குடுப்பமொன்றாக இருக்க வேண்டுமென குறிப்பிட்டிருக்கையில் 2021 ஆண்டில் தெரிவு செய்த சில பயன்பெறுனர்கள் 2022 ஆண்டிலும் தெரிவு செய்திருந்த 11 சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(iii) 2022 செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் இப் பிரிவின் நோக்கமாக "சுகாதார வசதிகளை மேம்படுத்துவதனூடாக சுகதேகியான மக்களை உருவாக்க முயற்சி எடுத்தல்" இனங்காணப்பட்டிருந்தது. 2021 ஆகஸ்ட் 31 திகதி முன்வைக்கப்பட்ட திருத்திய செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் இந்திய அரசாங்க உதவியின் கீழ் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 2,000,000,000 ஆன 3,400 சுகாதார அலகுகளை நிர்மாணிக்க திட்டமிட்டிருந்த போதும் 2023 ஏப்ரல் 25 திகதி வரை கருத்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. செயலாற்றுகை அறிக்கை பிரகாரம் கருத்திட்டத்தை திருத்துவதற்குரிய செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதும் கருத்திட்டத்தை மேற்கொள்வது தொடர்பான திட்டமிட்ட செயற்பாடுகள் 2022 செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கியிருக்கவில்லை.

4.1 திட்டமிடல்

இலக்கம் 01/2014 மற்றும் 2014 பெப்ரவரி 17 திகதிய பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் அமைச்சின் கால்நடை வளங்கள் பிரிவின் 2022 நிதியாண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் அதில் உள்ளடக்க வேண்டிய குறித்த ஆண்டிற்காக திட்டமிட்டுள்ள பிரதான அபிவிருத்தி வேலைத் திட்டத்திற்கான வருடாந்த பெறுகைகள் திட்டம் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

4.2 **செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் குறித்த செயலாற்றுகையை அடைந்து கொள்ளல்**

(அ) இனவிருத்தி பண்ணைகளை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் கீழ் 09 அரச இனவிருத்தி பண்ணைகள் மற்றும் 25 தனியார் இனவிருத்தி பண்ணைகளை நிர்மாணிக்க 2022 ஆண்டினுள் முறையே ரூபா 15.9 மில்லியன் மற்றும் ரூபா 6.25 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்திருந்த போதும் ஆண்டிறுதியில் 28 தனியார் இனவிருத்தி பண்ணைகளை நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் 02 அரச இனவிருத்தி பண்ணைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஆ) சிறிய மற்றும் நடுத்தர அளவு பால் பண்ணை உற்பத்தியாளர் அபிவிருத்தி மற்றும் பால் தொகுதி கிராம அபிவிருத்தியின் கீழ் திருத்திய பாதீட்டின் பிரகாரம் ரூபா 32 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கியிருந்ததுடன் 93 சதவீத நிதி முன்னேற்றத்தை அடைந்திருந்த போதும் திட்டமிட்ட 05 செயற்பாடுகள் தொடர்பான பௌதீக முன்னேற்றத்தை அடைந்து கொள்ளல் 2 சதவீதத்திற்கும் 3 சதவீதத்திற்கும் இடையிலான குறைந்த மட்டத்தில் நிலவியதுடன் அரச செலவின கட்டுப்பாடு தொடர்பான 2022.04.26 திகதிய மற்றும் இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கை பிரகாரம் இக் கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருக்காததுடன் மேற்கொள்ளப்பட்ட செலவு விளைவற்ற செலவொன்றாக அவதானிக்கப்பட்டது.

(இ) கால்நடை வளங்கள் அபிவிருத்தி நடுத்தர வேலைத் திட்டதின் கீழ் பேதுருதுடுவ மிருக வைத்திய அலுவலக கட்டிடத்தை மீண்டும் நிர்மாணிக்க 2022 ஆண்டினுள் ரூபா 21.21 மில்லியனான ஏற்பாடு ஒதுக்கீடு செய்திருந்ததுடன் அவற்றில் ரூபா 6.81 மில்லியன் அதாவது 32 சதவீத நிதி முன்னேற்றத்தை அடைந்திருக்கையில் கட்டிட் மூலப்பொருட்களின் தட்டுபாடு மற்றும் விலை உயர்வடைதல் காரணமாக ஒப்பந்ததாரின் கோரிக்கை மீது இவ் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்யாது கைவிட நடவடிக்கை எடுத்திருந்தாக அவதானிக்கப்பட்டது.

(ஈ) சிறிய மற்றும் நடுத்தர அளவு கோழிப் பண்ணை அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் வாத்து அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் 29 பண்ணைகளை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 510,000 ஆன ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் எவ்வித பண்ணையும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) அண்ணம் கைத்தொழில் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் சூழல் நேய அண்ண பண்ணைகளை நிர்மாணித்தல் எனும் செயற்பாடுகளின் கீழ் 110 பண்ணைகளை அமைக்க இலக்கு வைக்கப்பட்ட போதும் 49 பண்ணைகள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்துடன் அக் கருத்திட்ட பௌதீக முன்னேற்றம் 37 சதவீதமாகும். மேலும் கருத்திட்டத்தின் கீழ் பயிற்சி பெற இலக்கு வைக்கப்பட்ட வேலைத் திட்ட அளவு தொடர்பாக குறிப்பிடாது முன்னேற்ம் 10 சதவீதம் என குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஊ) உற்பத்தித்திறனை மேம்படுத்தலூடாக நடுத்தர அளவு மற்றும் சிறிய பண்ணைகளை மேம்படுத்தும வேலைத் திட்டத்தின் கீழ் இனவிருத்தி முகாமைத்துவத்தின் ஊடாக சிறிய மற்றும் நடுத்தர அளவு பால் பண்ணைகளை உருவாக்கும் கருத்திட்டத்தின் கீழ் 576 பண்ணைகளை அமைக்க இலக்கு வைக்கப்பட்ட போதும் அவற்றில் 100 பண்ணைகள் அதாவது 17 சதவீதம் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

4.3 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டம்

4.3.1 வெளிநாட்டு உதவிக் கருத்திட்டத்தின்/கருத்திட்டங்களின் செயலாற்றுகை

COVID – 19 தொற்று நிலைமை காரணமாக விவசாய துறைக்கு இடம்பெற்றுள்ள தாக்கத்தினை கவனத்திற்கொண்டு உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தல் மற்றும் பயிர் அறுவடைக்காக பொருத்தமான விலையொனறை பெற்றுக்கொடுக்கும் தேசிய வேலை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்காக குறுகிய கால களஞ்சிய வசதிகள் வழங்கும் தேவைபாட்டை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கியின் CERCs கடன் வசதிகளின் கீழ் ரூபா 956 மில்லியனான கிரயமொன்றை செலவிட்டு தீவு முழுவதும் 103 களஞ்சியங்கள் நிர்மாணிப்பதற்கான வேலை திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மேலதிக பயிர்களை களஞ்சியப்படுத்தி பிற்காலத்தில் உயரந்த விலையொன்று பெற்றுக்கொள்ளல் மற்றும் பின் அறுவடை சேதத்தை தடுப்பது கருத்திட்டத்தின் நோக்கமான போதும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் அறுவடை சேதம், மேலதிக அறுவடை அளவு மற்றும் களஞ்சிய தேவைபாடு போன்ற விடயங்கள் தொடர்பாக எவ்வித ஆய்வுமின்றி மற்றும் எவ்வித தர்கரீதியான அடிப்படையுமின்றி ஒவ்வொரு மாவட்டத்திற்குமான களஞ்சிய தேவைப்பாடு மற்றும் அக் களஞ்சியங்களின் கொள்ளளவை தீர்மானித்திருந்தது.

(ஆ) கருத்திட்டத்தின் நோக்கத்தை கவனத்திற் கொள்ளும் போது இக்கருத்திட்டத்தின் ஊடாக நிர்மாணிக்கப்படும் களஞ்சியங்கள், கமத்தொழில் கிராமம் மற்றும் கமநிலங்களின் அருகில், இலகுவாக விவசாய உற்பத்திகளை களஞ்சியபடுத்த முடியுமானவாறு நிர்மாணிக்க வேண்டிய போதும் இலக்கு வைத்த கமத்தொழில் கிராமம் அல்லது கமநிலங்களை இனங்காணாது நகர் அருகாமையில் தாபிக்கப்பட்டுள்ள மாகாண விவசாய திணைக்கள வளவின் 32 களஞ்சியங்களும் விவசாய திணைக்கள வளவில் 13 களஞ்சியங்களும் கமநல மத்திய நிலையங்களில் 12 களஞ்சியங்களும் மற்றும் மாவட்ட செயலக வளவில் 09 களஞ்சியங்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டன.

(இ) மேல் மாகாண விவசாய பணிப்பாளரின் (ப.க) இலக்கம் WP/AG/PD/4/2/7 பொது கொண்ட 2020.10.05 திகதிய கடிதம் மூலம் மேல் மாகாண விவசாய திணைக்களத்திற்கு சொந்தமான நிறுவன வளவினுள் களஞ்சியம் நிர்மாணிப்பதற்காக இடவசதிகள் இல்லை எனவும், களஞ்சியப்படுத்த உற்பத்தி செய்யும் பயிர்களில் மேலதிகம் இல்லை எனவும் அறிவித்திருக்கையில் மேல்

மாகாணத்தில் விவசாய 05 பயிற்சி நிலையங்களில் ரூபா 26.31 மில்லியன ஆன செலவு மேற்கொண்டு 05 களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

(ஈ) ஹொரன மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்திற்கு விதை ஆய்வகமொன்றின் தேவை உள்ளதாக மேல் மாகாண விவசாய திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்த போதும் அப் பயிற்சி நிலையங்களினுள் ரூபா 5.53 மில்லியன் செலவில் 50 மெற்றிக் தொன் கொள்ளளவான களஞ்சியமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(உ) 2022 ஒக்டோபர் 12 திகதியளவில் 29 களஞ்சியங்களின் வேலைகளை பூர்த்தி செய்து விவசாய திணைக்களத்திற்கு ஒப்படைத்துள்ள போதும் அக் களஞ்சியங்கள் விவசாயிகளின் மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்த பயன்படுத்தி இருக்காததுடன் எதிர்காலத்தில் கிடைக்கும் அறுவடைகளை அக் களஞ்சியங்களில் களஞ்சியப்படுத்த திட்டமொன்றேனும் கமத்தொழில் அமைச்சுக்கு இல்லாததனால் மேற் குறித்த கருத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட கிரயம் அதன் நோக்கத்திற்காக ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கருத்திட்ட நிலையங்களை இனங்காணல் 2020 சனவரி மாதத்தில் ஆரம்பித்திருந்த போதும் கருத்திட்ட நிலையங்களை அடிக்கடி மாற்றுதல் மற்றும் பெறுகைகள் செயற்பாடு துரிதமாகாமை காரணத்தால் பொறியியல் மதிப்பீட்டை விட ரூபா 7.5 மில்லியன் மேற்குறித்த கருத்திட்டத்திற்காக இது வரை செலுத்தியுள்ளதுடன் எதிர்வரும் பட்டியலுக்காகவும் அவ்வாறு மதிப்பிடப்பட்ட பெறுமானங்கள் விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளும் அபாயமொன்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

(எ) உச்ச வருமானமொன்று எதிர்ப்பார்ப்பில் தமது மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்தி வைக்க விவசாயிகளுக்கு உண்மையாக களஞ்சிய தேவைபாடு உள்ளதா என சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளாது கொவிட் 19 அவசர நிலைமை மீது உலக வங்கி வழங்கிய ரூபா 956 மில்லியன் ஆன கடன் உதவியிலிருந்து முற்குறித்த கருத்திட்டத்திற்காக கணக்காய்வு திகதியளவில் ரூபா 557.85 மில்லியன் செலவு மேற்கொண்டு களஞ்சியங்கள் தாபித்துள்ள போதும் அக் களஞ்சியம் நிர்மாணிப்பதன் நோக்கம் மற்றும் உண்மையான விவசாய நோக்கங்களிற்கிடையில் இணக்கமின்மை காணப்படாமை மற்றும் பூர்த்தி செய்த களஞ்சியங்கள் விவசாயிகளின் மேலதிக உற்பத்திகளை களஞ்சியப்படுத்த பயன்படாமை கருத்திட்டத்தின் நோக்கத்தை அமைந்து கொள்ள பௌதீக ரீதியான வேலைத்திட்டமொன்று உருவாகியிருக்காத காரணத்தால் மேற்குறித்த செலவு மற்றும் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் விளைவற்றுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

4.3.2 தாமதமான கருத்திட்டங்கள்

2018 ஒக்டோபர் 22 திகதி மதிப்பீட்டு ஏற்பாடான ரூபா 49.61 மில்லியனால் ஆரம்பிக்கப்பட்ட யாழ்பாண திருநேல்வேலி பலநோக்கு கட்டிட நிர்மாணப் பணிகள் 2019 ஜூன் 09 திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2 $^{1}/_{2}$ வருட தாமத்துடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் இறுதி பட்டியல் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் நிதிசார் முன்னேற்றம் ரூபா 13.8 மில்லியன் மாத்திரமானது.

4.4 பெறுகைகள்

அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவிற்கு சொந்தமான இலக்கம் KY – 5535 கொண்ட வண்டியின் ஜிய பொக்ஸ் தொகுதி ஒழுங்காக செயற்படாததை திருத்த ஹாட் ஒடோ வர்க்ஸ் நிறுவனத்தினால் 2022 சனவரி 13 ஆம் திகதி ரூபா 1,109,600 இற்கு சமர்பித்த மதிப்பீட்டை இயந்திரவியல் பொறியியலாளர் பரிந்துரைத்திருந்த போதும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 9.3.1 (ஆ) பிரகாரம் விலைமனுவை அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்பித்து முன்நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

4.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் வழங்காமை

அமைச்சிற்கு வெளியிடப்பட்ட இலக்கம் ஏஆர்ஜ/ஏ/என்எப்எஸ்/2022/46 கொண்ட 2022.11.17 ஆம் திகதிய கணக்காய்வு ஐயவினாவிற்காக 2023 மார்ச் 28 திகதி வரையிலும் பதில் வழங்கப்படவில்லை.

5. நள்ளாலுகை

5.1 உள்ளக கணக்காய்வு

(அ) அமைச்சின் கால்நடை வளங்கள் பிரிவு 2019 சனவரி 12 திகதிய முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இலக்கம் DMA/01/-2019 இன் 5.3 பந்தி பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் குறைந்த பட்சம் காலாண்டிற்கு ஒரு முறை அதாவது ஓராண்டிற்கு 04 எனும் வகையில் நடாத்தப்பட வேண்டிய போதும் 2022 ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் 03 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) அமைச்சின் கிராமிய பொருளாதார பிரிவிற்காக திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்த ஆளணி எண்ணிக்கையினுள் உள்ளக கணக்காய்வு பதவியொன்று இருக்கையில் 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(2) (1) உப பிரிவின் பிரகாரம் சட்டம் அமுலாகும் திகதி முதல் 02 ஆண்டுகளை விஞ்சாத காலஎல்லையினுள் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை.

6. மனித வள முகாமைத்துவம்

மீளாய்வாண்டு இறுதியில் விவசாய, பசளை, கால்நடை வளங்கள் மற்றும் கிராமிய பொருளாதாரம் ஆகிய பிரிவுகள் உள்ளிட்ட அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட உள்ளவாறான மற்றும் மிகை/பற்றாக்குறை ஊழியர்கள் பின்வருமாறு.

பிரிவு	மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடம்/ (மிகை)
விவசாய	சிரேஷ்ட	73	61	12
	மூண்றாம்	9	03	06
	இரண்டாம்	1017	1097	(80)
	ஆரம்ப	129	109	20
	கூட்டுத்தொகை	1228	1270	38
பசளை	சிரேஷ்ட	31	12	19
	மூண்றாம்	03	0	03
	இரண்டாம்	548	817	269
	ஆரம்ப	31	15 (06 அமைய, 09 பலநோக்கு)	16
	கூட்டுத்தொகை	613	844	

(அ) விவசாய பிரிவின் சிரேஷ்ட மட்ட 12 பதவிகளிளும், மூன்றாம் மட்ட 06 பதவிகளிளும், ஆரம்ப பிரிவின் 20 பதவிகளில் பற்றாக்குறையும், இரண்டாம் மட்ட 80 பதவிகளில் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) பசளை பிரிவின் சிரேஷ்ட மட்ட 19 பதவிகளிளும், மூன்றாம் மட்ட 03 பதவிகளிளும், ஆரம்ப பிரிவின் 16 பதவிகளில் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டதுடன் இரண்டாம் மட்ட 269 பதவிகளில் மிகையொன்றும் அவதானிக்கப்பட்டது.

பிரிவு	மட்டம்	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை	உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை	வெற்றிடம்/ (மிகை)
	சிரேஷ்ட	30	19	11

	மூண்றாம்	03	02	01
கால்நடை வளங்கள்	இரண்டாம்	523	502	21
	ஆரம்ப	35	33	02
	ஏனைய	03	03	-
	கூட்டுத்தொகை	594	559	35

